# சித்த மருத்துவம்

## தொகுதி-5 : பித்தம் தொடர்பான நோய்கள்





தமிழ் வளர்ச்சிக் கழகம் சென்னை-600 005.

# சித்த மருத்துவம்

## தொகுதி-5 : பித்தம் தொடர்பான நோய்கள்

மரு. க. இராஜேஸ்வரி

தமிழ் வளர்ச்சிக் கழகம்
சென்னைப் பல்கலைக்கழக வளாகம்
சென்னை - 600 005

2005

# தமிழ் வளர்ச்சிக் கழகம்

சென்னைப் பல்கலைக்கழக வளாகம்

சேப்பாக்கம், சென்னை - 600 005.

நிறுவனர்

திரு தி.சு. அவினாசிலிங்கம்

தலைவர்

டாக்டர் வா.செ. குழந்தைசாமி

துணைத் தலைவர்கள்

டாக்டர் நா. மகாலிங்கம்

டாக்டர் பெ. இராமசாமி

செயலாளர்

டாக்டர் கொடுமுடி சண்முகன்

தொகுப்பாசிரியர்

திரு மா. மதியழகன்

**தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு**

முதற் பதிப்பு 2005

இரண்டாம் பதிப்பு 2007



பதிப்புரிமை உடையது



விலை ரூ. 180/-

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்

சென்னை - 600 014.

## Bibliographical Data


| | | |
|---|---|---|
| Name of the Book | : | Siddha Maruttuvam Vol.5: Pitham Totarpana Noikal |
| Author/Editor | : | Dr. K. Rajeswari |
| Edition | : | First - 2005<br>Second - 2007 |
| Copy Right | : | Tamil Valarchi Kazhagam |
| Language | : | Tamil |
| Subject | : | Siddha Medical system |
| Pages | : | xv+224 |
| Price | : | Rs. 180/- |
| Paper | : | Maplitho |
| Size | : | Double Crown |
| Binding | : | Deluxe |
| Point | : | 10 Pt |
| Wrapper Design | : | Sivagami Printographics |
| Published by | : | Tamil Valarchi Kazhagam<br>University Building<br>Chepauk, Chennai- 600 005.<br>Ph: 25365440 |
| Printed by | : | Pavai Printers Pvt. Ltd.<br>J.J. Khan Road, Royapettah.<br>Chennai-600 014.<br>Ph. 28482441, 28482973 |

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| முகவுரை | ... | vii |
| முன்னுரை | ... | ix |
| Introduction | ... | xiii |
| 1. பித்தம் : வடிவத் தன்மையும் வாழும் இடமும் | ... | 1 |
| 2. பித்த நோய்கள் | ... | 9 |
| 3. சுர நோய் வகை | ... | 41 |
| 4. சுர நோய் மருத்துவம் | ... | 73 |
| 5. சுவையின்மை நோய் | ... | 95 |
| 6. வாய் நோய் | ... | 101 |
| 7. நீர்வேட்கை நோய் | ... | 109 |
| 8. வெளுப்பு நோய் | ... | 113 |
| 9. காமாலை | ... | 131 |
| 10. பெருங்கழிச்சல் | ... | 153 |
| 11. நிணக்கழிச்சல் | ... | 171 |
| சொல்லடைவு | ... | 201 |

# முகவுரை

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டு வரும் சித்த மருத்துவ நூல் வரிசையில் இந்நூல் பித்தம் (அழல்) தொடர்பான நோய்களைப் பற்றிய ஐந்தாம் தொகுதியாகும்.

பித்தம் (அழல்) வாழும் இடம், இயற்கைப் பண்பு, பித்தத்தின் வகைகள், பித்தத் தாது கேடு அடைவதால் தோன்றும் நேரடியான நோய்கள், பித்தத் தாதுவுடன் வாதம் (வளி), கபம் (ஐயம்) என்னும் மற்ற தாதுக்களும் சேர்ந்து குற்றமுறுதலால் பிறக்கும் சுர நோய்கள், சுவையின்மை, வாய் நோய், நீர்வேட்கை, வெளுப்பு நோய், காமாலை, பெருங்கழிச்சல், நிணக்கழிச்சல் நோய்கள், அவற்றுக்கான மருத்துவ முறைகள் ஆகியவை பற்றிய செய்திகள் இத்தொகுதியில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

மருத்துவர் க. இராஜேஸ்வரி அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு, பல சித்த மருத்துவ ஆசிரியப் பெருமக்கள் அடங்கிய குழுவினரிடம் இத்தொகுதியை எழுதும் பணி ஒப்படைக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ குழுவில் அடங்கிய பிற வல்லுநர்களின் பங்களிப்பைப் பெறமுடியாமல் போய், ஒருங்கிணைப்பாளராக அமைந்த மரு.க. இராஜேஸ்வரி அவர்களே தனியாக இந்நூலை எழுதி முடித்துள்ளார்.

மரு.க. இராஜேஸ்வரி அவர்கள் சித்த மருத்துவப் பயிற்சியிலும், மருத்துவ ஆசிரியர் பணியிலும் நீண்ட கால அனுபவம் கொண்டவர். அவர் பெரிதும் உழைத்து, தனிநபராகவே இத் தொகுதியை எழுதி முடித்துள்ளது ஒரு சாதனையேயாகும். கழகம் அவருக்கு நன்றி கூறப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இந்நூலை எழுதுவதில் ஆசிரியருக்கு உறுதுணையாக இருந்த அவரது கணவர் மரு.வீ. சுப்பிரமணியன், இந்திய மருத்துவத் துறையின் முன்னாள் இணை

இயக்குநர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்நூலில் திருத்தங்கள் செய்து நெறிப்படுத்திய மரு. ஜ.ரா. கிருஷ்ணமூர்த்தி, மரு.செ.நெ.தெய்வநாயகம் ஆகியோருக்கும் நன்றி பாராட்டிக் கொள்கின்றோம்.

கணினியில் நூலை வடிவாக்கம் செய்த திரு. க. செல்லதுரை, அச்சிட்ட பாவை அச்சகத்தார் ஆகியோரும் நன்றிக்குரியராவர்.

கழகம் வெளியிட்டு வரும் ஏனைய மருத்துவ நூல்கள் மக்களிடையே பெற்ற அமோகமான வரவேற்பை இத் தொகுதியும் பெறும் என்று நம்புகின்றோம்.

வா.செ. குழந்தைசாமி
தலைவர்
தமிழ் வளர்ச்சிக் கழகம்

# முன்னுரை

பித்தம் (அழல்) நோய்களைப் பற்றிய விளக்கங்களையும் அவற்றின் பரிகார முறைகளையும் விளக்குவதே இந்நூலின் அடிப்படை நோக்கம். அழல் என்னும் தாதின் இயல்பு, வடிவத் தன்மை, அது வாழும் இடங்கள், அதன் இயற்கைப் பண்புகள், தொழில், வகை ஆகியவை பற்றிய கருத்துகளை விளக்குவதோடு, பித்தத் தாது தன்னிடத்தும் பிறவிடத்தும் சீற்றம் அடைதலும் அமைதி அடைதலும் ஆகிய பண்புகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மேலும் பித்த உடலினரின் இயல்பு, பித்தம் மிகு குணம், குறை குணம், உயிரனல் பற்றிய விளக்கம் ஆகியவை பற்றியும் இந்நூலின் தொடக்கத்தில் விளக்கப்பட்டுள்ளன.

சித்த மருத்துவத்தில் நோய்களின் வகைப்பாடு பல வகைகளில் கூறப்படுகின்றன. நோய்களின் பிரிவு 4448 என்று ஒரு சாரார் கூறுகின்றனர். எனினும் மூன்று உயிர்த் தாதுக்களின் அடிப்படையிலேயே நோய்களைச் சித்தர்கள் பெரும்பாலும் பிரிவு செய்துள்ளனர். அதனை அடிப்படையாகக் கொண்டு முத்தாதுக்களில் ஒன்றான அழலின் (பித்தத்தின்) தொடர்பாக வரக்கூடிய நோய்கள் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

*மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று*

என்ற வாக்கிற்கு இணங்க வளி, அழல், ஐயம் (வாதம், பித்தம், கபம்) ஆகியன தம் நிலை மாறிக் காணப்படும் காலத்தில் அவற்றின் தொடர்பான குறிகுணங்களுடன் நோய்கள் தோன்றுகின்றன. இவற்றில் அழல் தாது பாதிக்கப்படுவதால் நேரடியாகத் தோன்றும் அழல் நோய்களை யூகி முனிவர் 42 என வகைப்படுத்தி உள்ளார். அழல் நோய்கள் 42-இல் உடலைச் சார்ந்த நோய்களும், மனத்தைச் சார்ந்த நோய்களும், உடல், உள்ளம் இரண்டையும்

சேர்ந்த நோய்களும் எனத் தனித்தனி நோய்களாக விளக்கியுள்ளார். நவீன மருத்துவக் கொள்கைகளைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்போமானால் ஒவ்வொரு பித்த நோயும், சித்த மருத்துவத்தில் வகைப்படுத்தப்பட்ட சில தனித்தனி நோய்களை ஒத்திருப்பது புலப்படும். எங்கெல்லாம் இவ்வாறு ஒப்பிட்டுக் கூற முடிகிறதோ அங்கெல்லாம் அவை விளக்கப்பட்டு உள்ளன.

இவை தவிர நாடி நிலையின் அடிப்படையில் பித்தத் தாது மிகுதி அடைவதால் உண்டாகும் நோயின் வகைகளைப் பற்றியும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

*உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு*
*உஷ்ணவாயு அத்திசுரம் அதிசாரங்கள்*
*மறதியுடன் கிறுகிறுப்புப் பைத்திய ரோகம்*
*வளர்சோகை அழலெரிவு காந்தல் கைப்பு*
*இருதயத்தில் கலக்கமது மறுப்புத் தாகம்*
*எழுங்கனவு மேயனைவு மயக்க மூர்ச்சை*
*சிறிது பெரும்பாடு இரத்தப் பிரமேகங்கள்*
*சேர்ந்து வெகுபிணி பலவும் சிறக்குந்தானே*

என்று சதகநாடியில் கூறியுள்ளபடி பித்தத் தாது மிகுதி அடையும் பொழுது சுர நோய்கள், அதிசார நோய்கள், வளர்சோகை என்னும் வெளுப்பு (பாண்டு), சுவையின்மை, வாய் நோய், நீர்வேட்கை ஆகிய நோய்கள் தோன்றும் எனக் கூறப்பட்டுள்ளதால் அவற்றின் விளக்கங்கள் தனித் தலைப்புகளில் சொல்லப்பட்டுள்ளன. மேற்கண்ட பாடலில் கூறப்பட்டுள்ள கிறுகிறுப்பு, பைத்திய ரோகம், அழலெரிவு, காந்தல், கைப்பு, இருதயக் கலக்கம், கனவு, மயக்கம், மூர்ச்சை ஆகிய நோய்களைப் பற்றி, யூகி முனிவர் வகைப்படுத்தியுள்ள பித்த நோய்களின் 42 பிரிவுகளிலேயே விளக்கப்பட்டுள்ளன. மேலும் நாடி நூலில் பித்தத்தில் வாதம் சேர்ந்தால் செரியாமை, மந்தம், கிரகணி ஆகிய நோய்கள் உண்டாகும் என்று கூறப்பட்டுள்ளதால் அவையும் தனித்தனியே இங்கு விளக்கப்பட்டுள்ளன. பித்தத்தில் கபம் சேர்ந்து பாதிக்கப்படும் பொழுது "கண், காது நயன மலநீர் மஞ்சள் உண்போது மறுத்தல்" என்னும் குறிகுணங்களை உடைய காமாலை நோயும் உண்டாகும் எனக் கூறப்பட்டதால் அந்நோய் பற்றிய விளக்கங்களும் இந்நூலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

பித்த நோய்கள் தொடர்பாக இங்குக் கூறப்பட்டுள்ள பரிகார முறைகள் அனுபவ அடிப்படையில் மட்டுமல்லாது, பல்வேறு சித்த மருத்துவ நூல்களிலும் கூறப்பட்டுள்ள முறைகளைத் தொகுத்தும் வழங்கப்பட்டுள்ளன. நோய்களுக்கான பொது மற்றும் சிறப்புக் குறிகுணங்களை மிகவும் நுட்ப நுணுக்கமாகக் கண்டறிந்து அவற்றை வகைப்படுத்துவதற்குச் சித்தர்கள் மேற்கொண்ட முயற்சியானது, முறையியல் சார்ந்த சோதனையை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க வேண்டும். அது வெறும் யூகத்தால் மட்டும் சாத்தியப்படக்கூடியதன்று. நோய்களுக்கான பரிகார முறைகளும் மருந்து வகைகளும் குறுகிய அளவில் இல்லாமல், பல வகைப்பட்டதாக விரிவான அளவில் வாந்தியாக்கல், கழிச்சலை ஏற்படுத்தல், கண்ணுக்குக் கலிக்கமிடல், மூக்கில் நசியமிடல், உள்மருந்து, வெளிமருந்து, குடிநீர் வகைகள், இலேகியம், பற்பம், செந்தூரம், சுண்ணம், சூரணம், மெழுகு, மாத்திரை வகைகள், அவைகளுக்குரிய அனுபான வகைகள், பத்திய முறைகள் எனக் கூறி இருப்பது சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்பாகும். மிகுந்த பொருட்செலவு இல்லாமல் மக்களின் இயல்பான வாழ்க்கைச் சூழலில் இருந்தே மேற்கொள்ளப்படும் ஒரு நடைமுறை சார்ந்த இலகுவான மருத்துவ முறையே சித்த மருத்துவம் என்பதில் ஐயமில்லை.

தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வரும் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுத் திட்டத்தில், அழல் (பித்தம்) தொடர்பான நோய்களைப் பற்றிய நான்காம் தொகுதியை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதைப் பெரும் பேறாகவே கருதுகின்றேன். இவ்வாய்ப்பினை அளித்த கழகத் தலைவர் முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரியப்படுத்த மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலை எழுத எனக்கு உறுதுணையாக இருந்த என் கணவர் மரு.வீ. சுப்பிரமணியன் அவர்களுக்கும், திருத்தங்களைக் கூறி நெறிப்படுத்திய மரு. ஜ.ரா. கிருஷ்ணமூர்த்தி, மரு.செ. நெ. தெய்வநாயகம் ஆகியோருக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள். கழகத்தின் செயலர் முனைவர் கொடுமுடி சண்முகன், தொகுப்பாசிரியர் திரு மா. மதியழகன், கணினி ஆளர் திரு க. செல்லதுரை ஆகியோருக்கும் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மரு. க. இராஜேஸ்வரி

# Introduction

The aim of this book is to deal with Pitha Group of Diseases in Siddha System of Medicine. Siddhars classified diseases in different categories. The classifications are symptomwise, organwise and in some places agewise also. Some diseases are grouped on the basis of treatment also. Diseases pertaining to women and children are dealt with separately. So classification of diseases is varied.

Though there are varried types of classifications, all these diseases occur only due to the defective functioning of three basic factors called Vatham, Pitham and Kabam in the body. Hence Tamil Valarchi Kazhagam decided to publish volumes in disease aspect of Siddha Maruthuvam based on the basic factors of Vatham, Pitham and Kabam.

Here in this book the author, Professor Dr. K. Rajeswari M.D. (Siddha) who has vast experience in teaching the subject of Siddha Maruthuvam both, clinical and theory in the State Siddha Medical College for about 30 years has tried to bring about all the information pertaining to the Pitha type of diseases.

In the I chapter, the general and fundamental aspects of Pitham or Azhal are discussed. The factors like formation, distribution, functions in the normal course, changes which occur due to dietetic and environmental aspects, changes in various climates, land forms, seasons etc., are explained here. These factors have to be borne in mind while examining the patient to know whether the abnormality of Pitham is of Physiological or Pathological nature.

Pitham or Azhal Noigal (Diseases) according to **Yugi Vaidhya Chinthamani** are 42 in numbr. Here the Azhal or Pitha thathu gets affected directly. The details about these 42 diseases are explained in the chapter on "Pitha Noigal". Many of the functional disorders of body and mind are discussed here. Many simple remedies for their cure are also given for the benefit of the readers.

The chapter on "Sura Noi Vagai" deals with different kinds of fever that occur due to various internal and external factors. Many of the varieties are comparable to modern theories or diseases.

The Therapeutic aspect of "Sura Noigal" is dealt with separately in the next chapter.

The line of treatment for any disease is important in Siddha System of Medicine. Medicines are prescribed only on the basis of this systematic framework. This scientific procedure is adopted in the treatment aspect of all individual disease in this book.

There are 32 forms or types of internal medicines and 32 forms of external medicines in Siddha System. Here in this book, the following common forms of medicines for different diseases are explained in different formulations.

1. Herbal Juices raw or heated, individually or mixed with other herbs
2. Decoctions (Kudineer)
3. Powders in many varieties like Parpam, Chenduram, Chunnam, Chooranam, Karpam
4. Oil in different varieties (both internal and external)
5. Many other domestic forms of items like Karkam, Vatakam, Pittu, Adai, ghee or butter form
6. Tasty preparations like Manappagu, Leghiyam and Rasayanam
7. Paste like form of Mezhugu and
8. Some form of tablets.

Herbs, metals, minerals and products of animal origin are used in the formulation and preparation of medicines.

However it is important to note that herbal preparations should be considered as first choice of medicine for any disease. If it is not found effective, then we have to go in for other metallic and mineral preparations of medicine.

Here in this book this important aspect is taken for consideration and treatment is given accordingly.

For some diseases Kalikkam, Nasiyam and Agranam type of external medicines are also described.

In Siddha System the metallic and mineral preparations like Parpam, Chenduram, Chunnam, Mezhugu etc., are prepared after purification of the concerned metals and minerals by treating them with many herbal juices and by involving them with various other techniques of purification as mentioned in literature.

These preparations in practice are widely used. A single preparation will be effective for various disorders when it is given with different vehicle or adjuants (Anupanam or Thunai Marunthu). Hence while prescribing the medicine, the practitioner should be very careful in this aspect.

In the same manner, diet is also an important factor in the treatment aspect. The diet suitable for each individual disease is explained with treatment in this book.

Apart from Sura Noi, "Suvai Inmai Noi", "Vai Noigal" with "Akkaram", "Neervetkai Noi", "Veluppu Noi", "Kamalai Noi", "Perunkalichal Noi" and "Ninakkalichal Noi" are dealt with in other chapters. The aetiology, signs and symptoms, treatment and dietetic factors are discussed elaborately in these chapters.

I am very much thankful to Tamil Valarchi Kazhagam for giving me this valuable opportunity to write this book on Pitham (Azhal) and its types of diseases. I feel that this book will be very much useful to the students of Siddha Medical Colleges and all other Siddha Medical Practitioners. As the book is in simple form, all other persons interested in knowing about Siddha Medicine will also get benefited if they go through the book once.

I wish to express my gratitude to Dr. V.C. Kulandaiswamy ex-vice Chancellor of different universities who has given me this assignment and a lot of encouragement in writing this book though many of the co-authors designated, didn't come forward to assist me in undertaking this work.

I wish to express my sincere thanks to my husband Dr. V. Subramaniam M.D. (Siddha) Former Joint Director of Indian Medicine & Homeopathy and former Principal, Government Siddha Medical College, Palayamkottai for his immense help in writing this book.

I wish to express my thanks to Dr. S.N. Deivanayakam and Dr. J.R. Krishnamoorthy for giving their valid suggestions and corrections in bringing out this book in good form.

I am very much thankful to Dr. Kodumudi Shanmugam, Secretary, Tamil Valarchi Kazhagam, Thiru M. Mathialagan, Editor and Thriu K. Selladurai, computer assistant for their valuable support.

Dr. K. Rajeswari

# 1

## பித்தம் : வடிவத் தன்மையும் வாழும் இடமும்

### முன்னுரை

பித்தம் என்பது முத்தாதுக்களில் ஒன்று. இது ஐம்பூதங்களில் 'தீ' பூதத்தின் தன்மையால் ஏற்படுவது. பித்தம் என்ற சொல்லே பெரும்பாலும் சித்த மருத்துவ மூல நூற்களில் கூறப்பட்டுள்ளது. எனினும் தமிழ் வழிச் சொற்களால் நூல் எழுதப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பித்தம் என்ற சொல்லை இயன்ற வரை தவிர்த்து, அழல் என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நூலில் கூறப்பட்டுள்ள அழல், தீ, அனல், பித்தம் ஆகிய சொற்கள் அனைத்தும் ஒரு பொருளையே குறிக்கும்.

### வடிவத் தன்மை

*மண்ணீரனல்கா லென்னு நான்கும்*
*நிரலே நாற்றந் தட்பந் திட்பம்*
*உருவி லூற்ற முடைய வாகி*
*மெய்ப்பொரு ளழிபொரு ளெனவிரு வகைய*
*அணுக்கள் மெய்ப்பொருள் காரிய மழிபொருள்*

இப்பாடலின் மூலம் மண் மணமுடையது; நீர் குளிர்ச்சியானது; அனல் வெப்பமானது; காற்று உருவமற்று ஆற்றல் மயமானது. அணுத்தன்மை வாய்ந்த இவைகள் நிலைத்தன்மை உடையனவாகவும், இவற்றின் காரியம் தோன்றி மறையும் தன்மை உடையனவாகவும் அமைகின்றன. எனவே அழலின் இயற்கை வடிவம் அணுத்துவம் என்று அறிய முடிகிறது.

*கதிரோன் வரைப்பின் கட்டன லுடம்பு*

என்பதால் வெப்பமும் கூர்மையும் அது சேரும் பொருள் வேற்றுமையால் இளகலும், நீராகலும், கட்டலும் ஆகிய தொழில்கள் ஏற்படுகின்றன என்ற உண்மையை அறிய

முடிகிறது. அதாவது உப்பை வெய்யிலில் இட்டால் கட்டலும், வெல்லத்தை வெய்யிலில் இட்டால் இளகலும், நெய் உருகலும் போல நெய்ப்பும் நெகிழ்ச்சியும் உளவெனக் கொள்க. ஒருவர் இயக்க இயங்கும் தன்மையால் இயங்கும் பொருள், இயக்கப்படும் பொருள் என்னும் இரு பொருள்களுள் இயக்கமும் ஒன்றாகலின் பித்தமும் தீயின் வடிவத் தன்மையை உடையதாகும்.

## வாழும் இடம்

அழல் வாழும் இடங்களாகச் சித்தர் நூல்களில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன: பிங்கலை, பிராணவாயு, நீர்ப்பை, மூலாக்கினி, இருதயம், தலை என்னும் இவை அழல் வாழும் இடங்களாகத் தமிழ் வைத்திய சதகம் கூறுகிறது.

இவையன்றிக் கொப்பூழ், உந்தி, இரைப்பை, வியர்வை, உமிழ்நீர், இரத்தம், சாரம், கண், தோல், சிறுநீர், கண்டத்தின் கீழிடம் முதலியனவும் அழல் வாழும் இடங்களாக யூகி, திருமூலர் ஆகியோர் நூல்களின் மூலம் அறியமுடிகிறது.

## இயற்கைப் பண்பு

- செரிப்பாற்றல்
- வெம்மை
- பார்வை
- பசி
- நீர்வேட்கை
- சுவை
- ஒளி
- நினைப்பு
- அறிவு
- வன்மை
- மென்மை

ஆகியவை அழலின் இயற்கைப் பண்புகளாகும்.

## தொழில்

- உடலில் வெப்பம் உண்டாக்கல்
- செந்நிறம் அல்லது மஞ்சள் நிறம் தோன்றச் செய்தல்
- உண்ட உணவுப் பொருள்கள் பக்குவம் அடையும் போதும் செரிக்கும் சமயத்திலும் வெப்பம் உண்டாக்கல்
- வியர்க்கச் செய்தல்
- மயக்கம் ஏற்படுத்தல்
- செந்நீரை அளவில் மிகுவித்தல், அவ்வாறு மிகுந்த செந்நீரை வெளிப்படுத்தல்
- தோல், கண், மலம், சிறுநீர் முதலியவற்றுக்கு மஞ்சள் நிறம் அளித்தல்
- சீற்றம், வணக்கமின்மை, அசைவின்மை, வெறி, மெலிவு, எரிவு உண்டாக்கல்
- எச்சுவையையும் கைப்பாகவேனும் புளிப்பாகவேனும் இருக்கச் செய்தல்

ஆகியவை அழலின் தொழில்களாம்.

### வகைகள்

அழல் தன் இடம், தொழில் வேற்றுமையால் ஐவகைப்படும். அவை வருமாறு:

1. அனற்பித்தம்

பாசகம், ஆக்கனல் என்பன இதன் வேறு பெயர்கள். இது தீயின் பண்புடையது. இது இரைப்பைக்குள் தீயின் குணத்தை மிகுதியாகப் பெற்று, நீர் வடிவமுள்ள பொருள்களை வறளச் செய்து, உண்ட உணவுப் பொருள்களைச் செரிக்கும்படிச் செய்யும். இவ்வழலே செரிமானத்தின் அடிப்படைக் கூறு என்பது பெறப்படுகிறது.

2. இரஞ்சகப் பித்தம்

வண்ண எரி என்பது இதன் வேறு பெயர். இது செந்நீரை (குருதி) மிகுதிப்படுத்தும் பண்புடையது. இரைக்குடலில் இருந்துகொண்டு, உணவிலிருந்து பிரிந்து உண்டான சாற்றுக்குச் செந்நிறத்தைத் தருகிறது.

3. சாதகப் பித்தம்

இது ஆற்றலங்கி என்றும் அழைக்கப்படுகிறது. நிறைவேற்றும் பண்புடையது. இது தமரகத்திலிருந்து (சுவாசக் குழல்) அறிவு, புத்தி, பற்று இவற்றைக் கொண்டு விருப்பமான தொழிலைச் செய்து முடிக்கும்.

4. பிராசகம்

இது ஒள்ளொளித் தீ என்றும் அழைக்கப்படுகிறது. இது தோலுக்கு ஒளியைத் தரும் பண்புடையது. இது தோலில் வாழ்ந்துகொண்டு, தோலுக்கு ஒளியைக் கொடுத்து அதை ஒளிரச் செய்கிறது.

5. ஆலோசகம்

*நோக்கழல் என்றும் அழைக்கப்படும் இது கண்களில் வாழ்ந்துகொண்டு, எல்லாப் பொருட்களின் வடிவத்தையும் அறிதலாகிய செயலுக்கு ஆதாரமாய் உள்ளது.*

அழல் தன்னிடத்தும் பிறவிடங்களிலும் சீற்றமுறுதலும் அமைதியுறலும்

அழலின் குணங்களுடன் குளிர்ச்சி தரும் பொருட்களை உட்கொண்டால் பித்தத்தின் சிறப்பிடங்களில் நோய் காணும். அப்பித்தத்தின் குணங்களுடன் சூட்டைத் தரவல்ல பொருட்களைச் சேர்த்தால் பித்தத் தானங்கள் அன்றியும் பிற இடங்களிலும் சீற்றம் உண்டாகும். அப்பித்த குணத்துடன் மந்தமும் சீதமுமான பண்டங்கள் சேர்ந்தால் பித்தம் தன்னிலை பெறும். வேறு நோய் ஏதும் இல்லை என்பது சித்தர்களின் கோட்பாடாகும்.

அழல் (பித்த) உடலின் இயல்பு

சித்த மருத்துவ நூல்களின்படி அழல் உடலினர்தம் பொதுவான இயல்புகளாகப் பின் வருவனவற்றைத் தொகுத்துக் காணலாம்:

- உடலில் எப்போதும் வெப்பம் பொருந்தி இருக்கும்.
- எலும்பு, கீல் பகுதிகளில் ஊன் குறைந்து இருக்கும்.

2. இரஞ்சகப் பித்தம்

வண்ண எரி என்பது இதன் வேறு பெயர். இது செந்நீரை (குருதி) மிகுதிப்படுத்தும் பண்புடையது. இரைக்குடலில் இருந்துகொண்டு, உணவிலிருந்து பிரிந்து உண்டான சாற்றுக்குச் செந்நிறத்தைத் தருகிறது.

3. சாதகப் பித்தம்

இது ஆற்றலங்கி என்றும் அழைக்கப்படுகிறது. நிறைவேற்றும் பண்புடையது. இது தமரகத்திலிருந்து (சுவாசக் குழல்) அறிவு, புத்தி, பற்று இவற்றைக் கொண்டு விருப்பமான தொழிலைச் செய்து முடிக்கும்.

4. பிராசகம்

இது ஒள்ளொளித் தீ என்றும் அழைக்கப்படுகிறது. இது தோலுக்கு ஒளியைத் தரும் பண்புடையது. இது தோலில் வாழ்ந்துகொண்டு, தோலுக்கு ஒளியைக் கொடுத்து அதை ஒளிரச் செய்கிறது.

5. ஆலோசகம்

*நோக்கழல் என்றும் அழைக்கப்படும் இது கண்களில் வாழ்ந்துகொண்டு, எல்லாப் பொருட்களின் வடிவத்தையும் அறிதலாகிய செயலுக்கு ஆதாரமாய் உள்ளது.*

அழல் தன்னிடத்தும் பிறவிடங்களிலும் சீற்றமுறுதலும் அமைதியுறலும்

அழலின் குணங்களுடன் குளிர்ச்சி தரும் பொருட்களை உட்கொண்டால் பித்தத்தின் சிறப்பிடங்களில் நோய் காணும். அப்பித்தத்தின் குணங்களுடன் சூட்டைத் தரவல்ல பொருட்களைச் சேர்த்தால் பித்தத் தானங்கள் அன்றியும் பிற இடங்களிலும் சீற்றம் உண்டாகும். அப்பித்த குணத்துடன் மந்தமும் சீதமுமான பண்டங்கள் சேர்ந்தால் பித்தம் தன்னிலை பெறும். வேறு நோய் ஏதும் இல்லை என்பது சித்தர்களின் கோட்பாடாகும்.

அழல் (பித்த) உடலின் இயல்பு

சித்த மருத்துவ நூல்களின்படி அழல் உடலினர்தம் பொதுவான இயல்புகளாகப் பின் வருவனவற்றைத் தொகுத்துக் காணலாம்:

- உடலில் எப்போதும் வெப்பம் பொருந்தி இருக்கும்.
- எலும்பு, கீல் பகுதிகளில் ஊன் குறைந்து இருக்கும்.

அழல் இயல்பு நிலை கெட்டுக் குறையுமானால்:

- ❖ மந்தாக்கினி (பசியின்மை) உண்டாகும்.
- ❖ உடல் குளிர்ச்சியுறும்.
- ❖ நிறக்குறைவு ஏற்படும்.
- ❖ ஐய (கபம்) நிலை கேடு அடையும்.

## உயிர் அழல்

உடலுக்கு ஆதாரமாய் உள்ள:

- ❖ முத்தாதுக்கள் (வளி, அழல், ஐயம்)
- ❖ ஏழு உடல் கட்டுகள் [1. சாரம், 2. செந்நீர் (குருதி), 3. ஊன் (தசை), 4. கொழுப்பு, 5. எலும்பு, 6. மூளை, 7. வெண்ணீர் (விந்து)]
- ❖ மலாதிகள் (மலம், சிறுநீர், வியர்வை)
- ❖ ஞானேந்திரியம் (கண், செவி, மூக்கு, நாக்கு,மெய்)
- ❖ கருமேந்திரியம் (வாய், கை, கால், கருவாய், எருவாய்)
- ❖ மனம்
- ❖ தச வாயுக்கள் [பத்து வளிகள்: 1. பிராணன்(உயிர் வளி), 2. அபானன் (மலக் காற்று), 3. வியானன் (தொழில் காற்று), 4. உதானன் (ஒலிக் காற்று), 5. சமானன் (நிரவு காற்று), 6. நாகன் (தும்மல் காற்று), 7. கூர்மன் (விழிக் காற்று), 8. கிருகரன் (கொட்டாவிக் காற்று), 9. தேவதத்தன் (இமைக் காற்று), 10. தனஞ்சயன் (வீங்கல் காற்று)]
- ❖ தச நாடிகள்[பத்து நாடிகள்: [1. இடைகலை (இடப்பக்க நரம்பு), 2. பிங்கலை (வலப்பக்க நரம்பு), 3. சுழுமுனை (நடுநரம்பு), 4. சிகுவை (உள்நாக்கு நரம்பு), 5. புருடன் (வலக்கண் நரம்பு), 6. காந்தாரி (இடக்கண் நரம்பு), 7. அத்தி (வலச்செவி நரம்பு), 8. அலம்புடை (இடச்செவி நரம்பு), 9. சங்கினி (கருவாய் நரம்பு), 10. குகு (எருவாய் நரம்பு)]

ஆகிய இவைகளால் உருவாக்கப்பட்ட உடல் நல்ல நிலையில் இருத்தற்குரிய அளவில் இருக்கும் அழலே உயிர் அழல்.

ஸ்தூல, சூட்சம, பஞ்ச பூத மயமான உடலும் உயிரும் சேர்ந்திருக்கப்பட்ட தேகத்தை நல்ல நிலையில் வைத்திருக்கப் பயன்படும் இது "உயிரனல்",

"உயிரக்கினி", அல்லது "சீவாக்கினி", "குக்கியனல்" என்றெல்லாம் சித்தர்களால் போற்றப்படுகின்றது. உடலில் அமைந்துள்ள வாதாதி முத்தாதுக்களைச் சார்ந்து வருகின்ற நோய்கள் பலவற்றிற்கும் தலைமை உடையது அழலே ஆதலால், இதனைப் "பல பிணிக்கும் இறை" என்றும் கூறுவர். மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களுடன் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் தன்மாத்திரை ஐந்தும் கூடிய புரியட்ட காயம் (சூட்சும சரீரம்) எட்டுக்கும் உயிரனல் துணைவனாக இருக்கிறது.

உடலில் பொருந்தி உள்ள வாயு ஒன்றை ஐந்தாகவும், அவற்றின் உபவாயுக்கள் ஐந்தையும் பிரித்துத் தோற்றுவித்து அன்னை போல் பாதுகாப்பதும் உயிரனலேயாகும். சூதாட்டத்தில் சொக்கட்டான் காய் அடிக்கடி நிலை மாறுதல் போல மாறுகின்ற நவக் கருவிகள் (செவிகள்- 2, கண்கள்-2, நாசிகள்-2, வாய்-1, குய்யம்-ஆண் அல்லது பெண் குறி-1, குதம்-1 ஆக ஒன்பது வாசல் அல்லது நவத்துவாரங்கள்) மற்றும் உயிர்ப்புக்கு ஆதாரமாகிய மற்ற கருவிகள் அனைத்துக்கும் அதனதன் தொழில்களைப் புரிவதற்கு உயிரனல் தந்தையைப் போல் ஆதாரமாய் இருக்கின்றது.

நுண் உருவமாகிய பிராணன் என்கிற உயிர் தங்கி இருத்தற்கு உயிரனலே முக்கிய காரணமாக இருக்கின்றது. அதாவது இருப்பிடம் அளிக்கிறது எனவும் சொல்லலாம். உயிர் உடலை விட்டு நீங்கும், நீங்காது என்பதை அறிவதற்கும் உயிரனலே ஒரு விளக்கைப் போல் அமைந்து தெளிவைத் தருகின்றது.

# 2

## பித்த நோய்கள்

### முன்னுரை

சித்த மருத்துவ மரபில் அழல் அல்லது பித்தம் தொடர்பாக யூகி முனிவரது கோட்பாடுகளே பெரிதும் பயில்வில் இருந்து வருகின்றன. அவருடைய அணுகுமுறையின்படி, உடலில் அழல் குற்றம் மிகுந்து வாய் நீர் ஊறல், வாந்தி, மயக்கம், தலை சுற்றல், குருதி வன்மை கெடல், பித்தமாக வாந்தி செய்யல் ஆகிய பல துன்பங்களை விளைவிக்கும் நோயாம். புளி, காரம், உப்புள்ள பண்டங்களை அளவுக்கு மிஞ்சி உட்கொள்வதாலும்; மனத்தில் துயர்கொள்வதாலும்; நெருப்பு, வெய்யில் இவற்றில் மிகுதியும் ஈடுபடுதலாலும்; அடிக்கடி சினத்தையும், தூங்காது விழித்திருத்தலையும் மேற்கொள்வதனாலும்; வேகாப் பொருள்களை உண்பதாலும்; பெண்போகம் மிகுதியாலும் உண்டான வெப்பமானது உந்தியிலிருந்து எழுந்து கழுத்து வரையும் பாய்ந்து அழல் குற்றத்தைப் பெருக்கும்.

### முற்குறிகள்

வாய் நீர் ஊறல், வாய் கைத்தல், நீர்வேட்கை, விக்கல், ஓக்காளம், உடல் அனலாய் இருத்தல், வியர்த்தல், கற்றாழை நாற்றம், தினவெடுத்தல், சொறி சிரங்கு உண்டாதல், தோல் வறண்டு காணல், கண்ணொளி குன்றல், முகம் வெளுத்தல் அல்லது மஞ்சளித்தல், சிறுநீர்க் கட்டு, எரிச்சல், அடிக்கடி கழிதல் என்னும் குறிகளில் சிலவேனும் பலவேனும் காணும்.

இப்பித்த நோய் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் தன்னளவில் மிகுந்து பொங்கி எழும். மார்கழி, தைத் திங்களில் தணியும். மீண்டும் பங்குனி, சித்திரை மாதங்களில் பெருகி உடல் முழுமையும் பரவும்.

## நோய் வகை

சித்த மருத்துவ நூல்களில் அழல் நோயின் எண்ணிக்கை குறித்து வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. தேரையர் வாகடம் என்னும் நூலில் இருபத்தொரு அழல்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. அவை:

1. அழல் பித்தம்
2. சுழல் பித்தம்
3. மயக்கும் பித்தம்
4. குழல் பித்தம்
5. இருள் பித்தம்
6. சித்த விப்பிரமைப் பித்தம்
7. ஆமலப் பித்தம்
8. அஞ்சகரப் பித்தம்
9. சுளிப் பித்தம்
10. ஆவறுப்பித்தம்
11. நேத்திரப் பித்தம்
12. மவுனப் பித்தம்
13. சுக்கிலப் பித்தம்
14. மதிப் பித்தம்
15. விரணப் பித்தம்
16. ஓடல் பித்தம்
17. அனத்தும் பித்தம்
18. காமாலைப் பித்தம்

19. இளம் பித்தம்

20. சத்தி பித்தம்

21. அறிவழிந்த பித்தம்

என்பனவாகும். ஆனால் யூகி முனிவரோ பித்தங்களை நாற்பத்திரண்டு வகையானதாக அடையாளம் கண்டு, பின்வரும் பெயர்களால் குறிப்பிட்டுள்ளார். அவை:

1. ஆவுரு பித்தம்

2. ஆமிலப் பித்தம்

3. உன்மாதப் பித்தம்

4. தமந்தப் பித்தம்

5. வாதப் பித்தம்

6. வன்னிப் பித்தம்

7. சிலேட்டுமப் பித்தம்

8. சுரோணிதப் பித்தம்

9. விகாரப் பித்தம்

10, விரணப் பித்தம்

11. உரத்தப் பித்தம்

12. இரத்தப் பித்தம்

13. காசப் பித்தம்

14. சுவாசப் பித்தம்

15. செம் பித்தம்

16. கரும் பித்தம்

17. கரப்பான் பித்தம்

18. அசீரணப் பித்தம்

19. அருசிப் பித்தம்

20. எரிப் பித்தம்

21. அழல் பித்தம்

22. துடிப் பித்தம்

23. விடப் பித்தம்

24. அதிசாரப் பித்தம்

25. மூலப் பித்தம்

26. முதிர் பித்தம்

27. கண்டப் பித்தம்

28. ஓடு பித்தம்

29. மூடு பித்தம்

30. நடுக்குப் பித்தம்

31. கபாலப் பித்தம்

32. சர்த்திப் பித்தம்

33. தாகப் பித்தம்

34. விக்கல் பித்தம்

35. க்ஷயப் பித்தம்

36 திமிர்ப் பித்தம்

37. வளிப் பித்தம்

38. சீதப் பித்தம்.

39. கிருமிப் பித்தம்

40. அசாத்தியப் பித்தம்

41. மார்க்கப் பித்தம்

42. மருந்தீடு பித்தம்

என்பனவாகும். சில நூலோர் இதனை நாற்பது எனவும் கூறுவர். இனி இவற்றை ஒவ்வொன்றாகக் காணலாம்:

## 1. ஆவுரு பித்தம்

இந்நோயில் உடல் வெதும்புதல், நீர்வேட்கை, இருமல், சளி வெளியாதல், உடல் பருத்தல், வெப்பமாதல், வாய் புளிப்பு, மலமும் சிறுநீரும் மஞ்சளித்தல், வாய் அதிகம் பேசாமல் அங்கும் இங்கும் பார்த்தல், கூத்தாடுதல், ஆரவாரித்துக் கூவுதல், அடிக்கடி எழுந்தோடல் என்னும் குறிகுணங்கள் காணப்படும்.

இந்நோயில் mania என்று அழைக்கப்படும் மன எழுச்சி நோயின் ஒரு வகையான குறிகுணங்களாகிய பேசிக்கொண்டே இங்கும் அங்கும் உற்றுப் பார்த்தல், கூத்தாடுதல், கொக்கரித்தல், கத்துதல் (கூவுதல்), தூக்கமின்மையால் அடிக்கடி எழுந்திருத்தல் ஆகிய குறிகுணங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

## 2. ஆமிலப் பித்தம்

இந்நோயில் உடல் கறுத்தல், ஆவேசங்கொண்டது போல் தலையைத் திருப்பல், உண்ட உணவு செரியாமல் மறுநாள் அப்படியே வாந்தியாதல், அவை புளிப்பும், கசப்புமாக இருத்தல், கை, கால் சோர்ந்து போதல், அன்றியும் விக்கல், வயிறு உப்புதல் முதலிய குறிகுணங்கள் காணப்படும்.

## 3. உன்மாதப் பித்தம்

இந்நோயில் உடல் மிடுக்குடன் இருத்தல், அதிகப்பசி, தலைகனத்தல், ஒரே இடத்தில் உட்கார்ந்திருத்தல், பிறருடன் பேசாது ஊமை போல் இருத்தல், உறக்கமில்லாது விழித்திருத்தல், வாய்நீர் வடிதல், மனக் கலக்கம் ஏற்படல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

இந்நோயில் விறைப்பு நிலை மனச்சிதைவு நோயின் குறிகுணங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. அவை: சிறப்பாக ஒரே இடத்தில் உட்கார்ந்திருத்தல்,

ஊமை போல் பேசாது இருத்தல், உறங்காது விழித்திருத்தல், மனக்கலக்கம் ஆகியவையாகும். இது வெறியழல் நோய் என்றும் அழைக்கப்படும்.

## 4. தமந்தப் பித்தம்

இந்நோயில் கள் உண்டவனைப் போல் தன்னை மறந்து கிடத்தல், உடல் துடித்தல், நாவறட்சி, நாவடி நரம்பு மஞ்சளித்தல், பலமுறை அழைத்தாலும் பிணத்தைப் போல் பேசாதிருத்தல், அடிக்கடி நீர்வேட்கை, மிகுந்த உணவு உண்ணுதல், மௌனமாக இருத்தல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

## 5. வாதப் பித்தம்

இந்நோயில் கண் புகைந்து இரைச்சலுண்டாகிக் கண்ணை மறைப்பதன்றி, கண்ணை மின்மினிப்பூச்சுப் போலச் சுழலச் செய்து, கண்ணீர் வடித்துக் கலங்கச் செய்யும். மேலும் உடம்பு முழுவதும் வியர்வை, மயக்கம், தயக்கம், வாந்தி, உணவு வேண்டாமை என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

## 6. வன்னிப் பித்தம்

வயிறு நொந்து கனல் போல் எழுந்து மண்டை வரையிலும் சென்று சீதமும் செந்நீரும் சேர்ந்து கழிதல், சிலவேளை அது கறுத்துக் காணல், உடல் வெளுத்து மயக்கமும் தயக்கமும் உண்டாதல், சோறு வேண்டாமை, நாவானது வெந்து, வாய் புளிப்புச் சுவையுடன் இருத்தல் ஆகிய குறிகுணங்களை வன்னிப்பித்தம் காட்டும்.

## 7. சிலேட்டுமப் பித்தம்

இப்பித்த நோயில் ஐயமும் சேர உடல் முழுவதும் வெளுத்துக் குளிர் உண்டாகி உடல் நோதல், சினம் உண்டாதல், மயக்கம், அறிவழிதல் முதலியன காணும். இத்துடன் இருமல், கண்கள் பச்சை நிறமாதல், மிகுந்த பசி உண்டாதல், அடிக்கடி தும்மல், தலை கனத்தல் ஆகிய குறிகுணங்களையும் காட்டும்.

## 8. சுரோணிதப் பித்தம்

இந்நோயில் சுரோணிதம் மிக வெதும்பி உடல் முற்றும் குடைந்து, கீல்களில் நோய் உண்டாகும். உடம்பில் முள் செருகியது போல் குத்தல், நீர்வேட்கை, உடல் நைதல், தலைநோய் மிகுதியாதல், மனச்சோர்வு, வாந்தி கோழை கக்கல் என்னும் குறிகுணங்கள் காணும்.

## 9. விகாரப் பித்தம்

இந்நோயில் தூக்கம் இன்மை, வாய்க்கசப்பு, பேசுவதை விரும்பாமை, கண் சிவந்து கலங்கிக் காணல், உடல் வெளுத்து, கடுத்துத் தீய்தல், வாந்தியாதல், மயக்கம் உண்டாதல், மனம் மயங்கல், வாய் நீர் ஊறல், உணவு கொள்ளாது பட்டினியாய் இருத்தல் என்னும் குறிகுணங்கள் காணும்.

இந்நோய் மன அழுத்தச் சிதைவு நோயில் (Depressive Psychosis) தோன்றும் குறிகுணங்களை ஒத்துள்ளது. அலை, தூக்கம் இன்மை, பேசுவதை விரும்பாமை, மனக் கலக்கம், கண் சிவத்தல், பட்டினி கிடத்தல் மனம் மருகல் ஆகிய குறிகுணங்கள், மேற்கூறிய நோயில் காணும் குறிகுணங்களை ஒத்துள்ளன.

## 10. விரணப் பித்தம்

இதில் உடல் முற்றும் திமிர் உண்டாகி, உடல் கனத்துத் தினவு உண்டாகிப் புண்ணாதல், வாய் கைத்தல், நாடி படபடத்துத் துடித்தல், ஆண்குறி சிவத்தல், திடுக்கிட்டுத் துயில் எழுதல், வாய்நீர் ஊறல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

## 11. உரத்தப் பித்தம்

இந்நோயில் கோபம் மிகுதியாக உண்டாதல், அடிக்கடி சண்டையிடல், மிகுதியாகக் கூச்சலிட்டு இரைச்சலை உண்டாக்கல், வயிறு அடிக்கடி கழிதல், நன்மை, தீமை அறிய முடியாமை, கண் சிவத்தல், தூக்கம் இன்மை, உடல் நாளுக்கு நாள் பருத்துக்கொண்டு வருதல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

## 12. இரத்தப் பித்தம்

இந்நோய் மிகுந்த இருமலை உண்டாக்கி, இரத்தம் கோழையோடு மிகுதியாக வெளியாதல், உடல் மிகுதியாய் நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே வரச் செய்து, அடிவயிற்றைச் சுருங்கி வற்றச் செய்யும். வாய்நீர் புலால் நாற்றம் வீசும். உடலை வாட்டம் அடையச் செய்யும். இடுப்புக் குடைச்சலை உண்டாக்கும்.

## 13. காசப் பித்தம்

இந்நோய் எற்கனவே உள்ள இருமல் நோய் நீடித்து நிலைபெற்றுப் பித்தம் கேடடைந்த நிலையில் அதன் துணையாக விளைவதாகும். இருமலுடன் வயிறு புரட்டல், விக்கல், வாந்தி, உடல் முற்றும் வலி, உடல் வெப்பத்தினால் வெதும்பல்,

குரல் கம்மல், வாய்நீர் ஊறல் இனிப்புப் பொருள்களில் விருப்பம், மனத்துயரம், நெஞ்சு கனமாக இருப்பது போல் தோன்றல் என்னும் குறிகுணங்கள் உண்டாகும்.

### 14. சுவாசப் பித்தம்

இந்நோயில் இரைப்பிருமலின் குறிகுணங்களாகிய மூச்சிரைப்பு, வயிறு ஊதிக்கொள்ளுல், உடல் முற்றும் வலி, வாயில் ஊற்றைப் போல் நீர் ஊறல், மயக்கம், கண் பார்வை மறைத்தல், மார்பில் தாங்க முடியாத வலியோடு இருமல் உண்டாதல், வயிறு பசி இல்லாமை ஆகிய குறிகுணங்கள் காணும்.

### 15. செம் பித்தம்

இந்நோய் வாயில் செம்பின் களிம்பைப் போல் சுவையை உண்டாக்கி வாந்தியைச் செய்விக்கும். வாந்தி செந்நிறமாய் இருக்கும். மலக்கட்டை உண்டாக்கி அவைகளைச் சிவந்த நிறமாய் வெளிப்படுத்தும். மயக்கத்தைப் பிறப்பித்து உடலை வியர்க்கச் செய்யும். அவ்வியர்வையும் செந்நீராய் வெளியாகும். அடிக்கடி திடுக்கிட்டு பயப்படச் செய்யும். உடலை இளஞ்சூரியனைப் போல் சிவக்கப் பண்ணும்.

### 16. கரும் பித்தம்

இந்நோய் தியக்கம் (சோர்வு), தலையோடு உடல் நடுங்கல், தலைவலி உண்டாகிக் கண் உறங்கச் செய்தல், கடைக்கண் சிவந்து மின்மினி போலத் தோன்றுதல், பித்தம் மிகுந்து உடல் கனத்து வருதல், நாச் சுவையினை அறியாமை, பசி இன்மை கறுநிறத்தில் வாந்தியாதல் என்னும் குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

### 17. கரப்பான் பித்தம்

இந்நோயில் உடல் முழுமையும் சொறி உண்டாகி, வலி மிகுந்து கட்டிகளாகி எழும்பும். அத்துடன் அக்கடி கழிதல், வயிறு இரைதல், இருமல், இழுத்துப் பிடித்துக்கொள்ளல், கால் வன்மையற்றுத் துவண்டுபோதல், இடுப்பில் வலி திமிருண்டாதல், உடல் கறுத்துக் கன்றிப்போதல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

### 18. அசீரணப் பித்தம்

இந்நோயில் மந்தம், பசி இன்மை, உடல் கறுத்துக் குளிர் உண்டாதல், மலக்கட்டு, கண் கரித்து நீர் பாய்தல், மிகுந்த தலைவலி, வயிறு இரைதல்,

அடிவயிறு இழுத்துப் பிடித்தாற் போல் நோதல், உணவு வேண்டாமை, கை கால் ஓய்தல், புளித்த தேங்காய்ப் பாலைப் போல் வாய்நீர் ஊறல் என்னும் குறிகுணங்கள் காணப்படும்.

## 19. அருசிப் பித்தம்

இந்நோய் உணவை மறுத்தல், குடலைப் பிரட்டி வாந்தியாதல். சுவையின்மை, மனக் கலக்கம், மயக்கம் உண்டாகித் தலைச் சுற்றலை ஏற்படுத்தும். அடிநாக்கு மிகவும் தடித்து நாவில் உணர்ச்சி அற்ற தன்மை ஏற்படும். மேலும் உறக்கம் இன்மை, வாய் மற்றும் உடல் எரிச்சல் ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

## 20. எரிப் பித்தம்

இந்நோயில் அடித்தொடை, இரு பாதங்கள், கண், உள்ளங்கால், உள்ளங்கை இவைகளில் எரிச்சல் உண்டாகும். இரு காதும் மூக்கும் வறண்டுபோகும். முதுகு, கை, கால் இவைகளில் மிகுந்த விறுவிறுப்பு உண்டாகும் இவைகள் தாங்க முடியாமல் காற்றை மிக விரும்பும்.

## 21, அழல் பித்தம்

இந்நோய் இளமையில் மயிர் நரைத்துப் போதல், உடல் வெளுத்தல், கடைக்கண் மிகச் சிவத்தல், பல கலைகளையும் அறிந்த ஞானியைப் போல் பலவற்றைப் பேசல், பெண் இச்சையில் ஈடுபடல் என்னும் குறிகளைக் காட்டும்.

## 22. துடிப் பித்தம்

இந்நோயில் உடம்பெல்லாம் மிகவும் துடிக்கும். பாண்டுநோய் வந்து உடல் பச்சை நிறமாதல் (அலிமுகப்பாண்டு), வாய் சுவை அறியாமையால் உணவு உண்ண விருப்பம் இன்மை, சிறிது தூரம் ஓடினும் பெருமூச்சு வாங்கல். பெண்களின் மேல் வெறுப்பு, அடிக்கடி எவருடனும் சண்டை இடல், உணவின் மீது வெறுப்பு என்னும் குறிகுணங்கள் காணும்.

## 23. விடப் பித்தம்

இந்நோயில் உடல் சோர்ந்து வீழ்ந்து கிடக்கும். யாரைக் கண்டாலும் தன் நோயின் கொடுமைகளைக் கூறத் தோன்றும். இந்நோயின் விடத் தன்மையானது உள்ளங்காலில் இருந்து உச்சந்தலை வரை இறங்குவதும், ஏறுவதுமாய் இருக்கும். உடல் முற்றும் வலி, உணவு ஏற்றுக்கொள்ளாமை போன்ற குறிகுணங்கள் காணும். இப்பித்தம் தீராது.

## 24. அதிசாரப் பித்தம்

இந்நோயில் வயிறு இரைதல், அடிவயிறு நொந்து பேதியாதல், வயிறு ஊதிக் காணல், விலாப் பக்கத்தில் குத்தலுடன் கூடிய வலி, பொருத்துகளில் வலி, ஈரல்களில் (கல்லீரல், மண்ணீரல்) எரிச்சலும் குத்தலும் உண்டாதல், மிகுந்த நீர் வேட்கை, மயக்கம், மனம் சலித்தல், சுவையின்மை என்னும் குறிகுணங்கள் தோன்றும். இந்நோய் தீராது.

## 25. மூலப் பித்தம்

இந்நோய் வயிறு இரைந்து, உண்ட உணவின் சாரத்தை அப்படியே கழியச் செய்யும். மனம் சலித்துக் கோபம் கொள்ளல், மனத் தடுமாற்றம் உண்டாதல், எருவாயில் முளை வெளி காணல், அடித்தொடையில் கடுப்பு உண்டாதல், உடல் வெளுத்துக் காணல், உடல் ஊதல், தூக்கம் மிகுதியாகிச் சோம்பி இருத்தல், கண் கரித்தல் ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

## 26. முதிர் பித்தம்

இந்நோயில் உடல் முழுமையும் அம்மையால் உண்டாகும் கொப்புளங்களைப் போல் சிறு கொப்புளங்கள் தோன்றி உடல் முற்றும் புண்ணாகும். உடம்பில் புழுதியை அள்ளிப் பூசியது போல் மஞ்சள் நிறம் பெறும். மலமும் நீரும் சுருங்கி வெளியாகும். நாடி மெலிந்து நடக்கும்.

## 27. கண்டப் பித்தம்

கண்டப் பித்தத்தில் அழல் குற்றமானது குரல்வளையைத் தாக்கித் தாபிதப்படுத்தி வீங்கச் செய்யும். மிகுந்த கைப்பாக வாந்தி ஆகும் போது, தொண்டையும், கழுத்தும் புண் போல் நோதல், தொண்டை குழகுழத்துக் காணல், நா வறளல், தாள் அடிகனத்திருத்தல், காதில் கடல் இரைதல் போல இரைதல், மயிர் செம்பட்டை நிறமாதல், புறஇசிவு (நரம்பிழுப்பு) உண்டாதல் என்னும் குறிகுணங்கள் இருக்கும்.

## 28. ஓடு பித்தம்

இந்நோய் பார்ப்பவர்கள் மனம் இரங்குமாறு வெறியனைப் போல் பேசிக்கொண்டும், பிறரை இகழ்ச்சியாகப் பேசிக்கொண்டும், இங்கும் அங்கும் ஓடித் திரிதல், அடிக்கடி பற்களைக் கடித்தல், நெருப்பைப் போல் கண் சிவத்தல், கண்கள் அடிக்கடி சிமிட்டல், பிறரிடம் கோபமாகக் கூச்சலிடல், கொக்கரித்தல், கூத்தாடல்,

உற்றுப்பார்த்தல், ஆண்மையோடு பிறரை எதிர்த்தல் என்னும் வெறிநோயின் குறிகுணங்களைப் பெறும். இந்நோய் தீருவது அசாத்தியமாகும்.

## 29. மூடு பித்தம்

இந்நோயுற்றவர் தம் கையில் கிட்டிய பொன் அணிகள் முதலியவற்றைக் கிடைத்த இடத்தில் புதைத்து வைத்தல், மனிதர்களைக் கண்டபொழுதெல்லாம் இழிவாகப் பேசுதல், தனக்குத்தானே பேசிக்கொள்ளல், கைகால்கள் சும்மா இராமல் ஏதாவது செய்துகொண்டிருத்தல், உணவு வேண்டாமை என்னும் குறிகுணங்களைக் கொண்டிருப்பார்.

இந்நோய் நாட்பட்ட மனச்சிதைவு நோயில் (Chronic Schizophernia) தோன்றும் குறிகுணங்களை ஒத்திருக்கின்றது. அத்துடன் தனக்குத்தானே பேசிக்கொண்டிருத்தல் (Muttering), ஏதாவது செய்துகொண்டே இருத்தல் (Manerism) போன்ற குறிகுணங்கள் மனச்சிதைவு நோயின் குறிகுணங்களை ஒத்திருக்கின்றன.

## 30. நடுக்குப் பித்தம்

இந்நோயில் தலை, மண்டை, நெற்றி, பிடரி, முதுகுத்தண்டு, கழுத்து இவைகளில் மிகுதியாக வெப்பம் உண்டாகி நடுங்கும். அன்றியும் கசப்பாக வாந்தியாதல், சிணுக்கிருமல், தூக்கமின்மை வாய்நீர் ஊறி மார்பில் வடிதல் என்னும் குறிகுணங்கள் காணப்படும்.

## 31. கபாலப் பித்தம்

இந்நோயில் தலை நடுக்கல், குளிர் உண்டாகி உடம்பெங்கும் நோதல், அம்பைக் கொண்டு பாய்ச்சுதல் போல் தலைக்குத்தல், உடல் மஞ்சளித்தல், மூக்குத்தண்டு நோதல், முகம் வீங்கிக் காணல், மூர்ச்சை உண்டாதல், படுக்கையில் தங்காமல் அடிக்கடி எழுந்திருத்தல் என்னும் குறிகள் காணும்.

இந்நோயின் குறிகுணங்கள் பீனிச நோயில் (Sinusitis) காணும் குறிகுணங்களை ஒத்துள்ளன.

## 32. சர்த்திப் பித்தம்

வாந்திப் பித்தத்தில் உடம்பு முழுவதும் திமிருண்டாதல், ஈரலுக்குள் வலித்தல், வாய் கைத்து வாந்தி உண்டாதல், தலையைத் தூக்க முடியாமல்

மயக்கம் உண்டாதல், உடல் மிகவும் வெப்பம் அடைதல், சுவையின்மை, ஆண்மைக் குறைவு, அடிக்கடி மிகுந்த நீர்வேட்கை ஆதல், செரியாமை என்னும் குறிகுணங்கள் காணும்.

## 33. தாகப் பித்தம்

நீர்வேட்கை பித்தமாகிய இதில் அடிவயிற்றில் துன்பம் உண்டாகி, உடம்பெல்லாம் நெருப்பு போல் அழற்சி உண்டாகும். நீர்வேட்கை மிகுந்து, நீரை மிகுதியாகப் பருகச் செய்யும். குளிர்ச்சி தரும் பொருள்களிலும், புளிப்புப் பொருள்களிலும் விருப்பம் உண்டாகும். கழுத்தில் வியர்க்கும். கழுத்தின் அடியிலும், நாவின் அடியிலும் இழுப்பு உண்டாகும்.

இதன் குறிகுணங்கள் மதுமேக நோயில் காணப்படும் நீர்வேட்கை (Polydispsia), அத்துடன் உடல் நெருப்பு போல் எரிதல் (Peripheral Neuritis) என்னும் குறிகுணங்களை ஒத்திருக்கின்றன.

## 34. விக்கல் பித்தம்

இந்நோயில் நீர் வேட்கையும், வாந்தியும் உண்டாகி, அதற்குத் துணையாக விக்கல் எழுந்து தவிப்பை உண்டாக்கும். உடல் குளர்ச்சி அடைந்து, தலைபுரட்டல், படுக்கையில் தங்காமை, பாலைப் போல வாயிலிருந்து நுரை தள்ளுதல், உடல் தணல் போல் வெதும்பித் தளர்ச்சி அடைதல், சோகம், கைகால் ஓய்தல் என்னும் குறிகுணங்களைப் பெறும்.

## 35. க்ஷயப் பித்தம்

இளைப்பிருமல் பித்தம் என்றும் அழைக்கப்படும் இந்நோயில் மிகவும் இருமல் உண்டாகும். வெளியே தெரியா வண்ணம் சுரம் காய்தல் (உட் காய்ச்சல்), உடல் வாடல், நீர்வேட்கை, உடல் பஞ்சு போல் வெளுப்பாதல், தொண்டையில் கோழை சேர்ந்து குருதி கக்கல், சளி கட்டிகட்டியாய் வெளிப்படுதல், நெஞ்செரிச்சல், தூக்கமின்மை ஆகியவை உண்டாகும்.

## 36. திமிர்ப் பித்தம்

இந்நோயில் அழல்குற்றம் மிகுந்து மயக்கத்தையும், வயிற்றிலே முள் சொருகியது போல் குத்தலையும், நாள்தோறும் காலையில் வாந்தியையும் உண்டாக்கும். இதுவுமன்றி தூக்கத்திலும் நினைவு மாறாமல் இருத்தல், உடல் சோர்தல், தனது கருத்தே சரியென்று அதிலேயே பிடிவாதமாய் இருத்தல்,

உடம்பெங்கும் கனத்துத் திமிர் உண்டாதல். உடலில் அழுக்குப் படிதல், வேகமாக நடக்க முடியாமை ஆகியன இந்நோய்க்கான குறிகுணங்களாகும்.

## 37. வளிப் பித்தம்

நடக்க முடியாமை, அடிவயிற்றில் இழுத்துப் பிடித்தாற் போல் நோதல், நா வறளல், தலை கனத்தல், சந்துகள் தோறும் நோதல், ஈரல்குலையில் வலித்தல், பச்சை நிறமாக மலம் கழிதல், உடல் படபடத்து நோதல், வயிற்றில் மிகவும் எரிச்சல் உண்டாதல், மார்பு அடைத்தல் ஆகிய குறிகுணங்கள் இந்நோயில் காணும்.

## 38. சீதப் பித்தம்

உடல் முற்றும் வியர்த்துத் தண்ணி போல் வடிதல், மயக்கம் உண்டாதல், உடல் கனத்துப் பலுவாகத் தோன்றல், புறங்கழுத்து இசிவெடுத்து, வயிறு பொருமி ஊதல், மிகுதியும் இருமல் உண்டாதல், மனம் நோதல், வாய்நீர் உப்புக்கரித்தல், சிறுநீர் சிவந்திருத்தல் என்னும் குறிகுணங்களை இந்நோய் பெறும்.

## 39. கிருமிப் பித்தம்

இந்நோயில் சீதத்தினால் வயிற்றுள் திமிர் உண்டாகி, உடல் முழுமையும் தினவும் வலியும் ஏற்படும். வளி நோயில் காணுவது போன்று சிறுநீரும் எருவும் வற்றிக் கட்டுப்படும். அன்றியும் கைகால்கள் கனத்து வாழைத்தண்டு போலச் சில்லிடுவதன்றி, மலத்தில் கிருமியும் கூடிக் கழியச் செய்யும்.

## 40. அசாத்தியப் பித்தம்

இந்நோயுற்றால் போதைப் பொருட்களை உண்டவர் போன்று உணர்ச்சியற்று, உடை உடுக்கவும் நினைவற்றிருத்தலும், உடல் வெப்பமடைந்து நீர் வேட்கை மிகுதியும் உண்டாகுதலும், பிறரோடு வாதிட்டுப் பல வார்த்தைகளைப் பேசுதலும், கண்கள் சிவந்து வாய் வறளுதலும் ஆகிய குறிகுணங்களைப் பெறும். இந்நோய் நீங்குதல் அருமையே.

## 41. மார்க்கப் பித்தம்

இந்நோயில் தான் கற்றவற்றை எல்லாம் பேசல், உட்காருதல், உடனே எழுந்து ஓடல், தான் உடுத்த துணியைக் கிழித்தல், புலம்பல், வாய்க்கு வந்தவாறு பாடல் முதலியன செய்யும். அன்றியும் தலையிலும் புறங்கழுத்திலும் இசிவு உண்டாகி உடல் வாடும். இன்னும் பற்பல காரியங்களைச் செய்யும். உடலின்

வன்மை எல்லாம் குறைந்து, மனநிலை அழிந்து, பிறரைப் பழித்தல் ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

## 42. மருந்தீடு பித்தம்

இது மருந்தீட்டால் விளைந்தெழுந்த அழல் குற்றத்தால் உண்டாம் நோயாம். இதனில் ஒன்றும் பேசாமல் ஓரிடத்தில் மௌனமாய் இருத்தல், உடல் ஊதிக் காணல், நெஞ்சு வறண்டு போதல், ஊக்கமின்மை, உடல் அசதி, உணவும் தூக்கமும இல்லாமல் எங்கும் சுற்றித்திரிதல், அடிக்கடி திடுக்கிட்டுப் புத்தி தடுமாறல், உந்தியில் கட்டி போல் திரண்டு அடிக்குடலில் வலி உண்டாதல் ஆகிய குறிகள் காணும்.

## நோய்க்கான பரிகார முறைகள்

பித்தமானது உடலிலும், மனத்திலும் செயல் புரியும் தன்மை உடையது. இது உடலில் தீயின் இயல்பைப் பெற்றதாயும் மனத்தில் இரஜோ குணத்தின் இயல்பைப் பெற்றதாயும் தன் செயலைச் செய்கிறது. இதுவே இயல்பான நிலை. ஆனால் உணவாதிச் செயல்களின் பாதிப்பால் நோயை உண்டாக்கிவிடுகிறது. இதனால் உடல் மட்டுமன்றி மனமும் பாதிப்படைகிறது. எனவே பரிகாரம் செய்யும் போது இத்தத்துவத்தை மனத்தில் கொள்ள வேண்டும். தீக்குற்றத்தைச் சமனப்படுத்தக்கூடிய சீதவீரியமுள்ள மருந்தும் உணவு வகைகளும் அமையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் மிகுதி அடைந்த இரஜோ குணத்தைத் தன்னிலைப்படுத்தி, சத்துவ குணத்தை மிகுதிப்படுத்தும் வகையில் பரிகாரம் செய்யவேண்டும். மனத்தைச் சீர்ப்படுத்த சூழ்நிலை இதமானதாய் இருத்தல் அவசியமாகும். பொதுவில் அமைதி, இனிமை, குளுமை நிறைந்த நிலை இருத்தல் வேண்டும். எனவே இந்நோயைப் பரிகரிப்பதற்கும், அழல் குற்றத்தைத் தன்னிலைப்படுத்துவதற்கும், உடலின் வன்மையைப் பெருக்குவதற்குமான மருந்துகளைத் தருதல் அவசியம். முதலில் நெய், பால் இவற்றால் ஆன மருந்துகளையும், குடிநீர் வகைகளையும் கொடுத்துப் பின் "வமனத்தால் பித்தம் தாழும்" என்பதற்கிணங்க வாந்திக்கு மருந்து கொடுத்து, பின் வயிற்றுப்போக்கிற்கு மருந்தீந்து, இறுதியில் சிறுகச் சிறுகப் பெருமருந்தினைக் கொடுக்க வேண்டும். சித்த மருத்துவ நூல்கள் அழல் நோய்களுக்குப் பல்வேறு விதமான மருந்துகளைப் பரிந்துரைக்கின்றன. அவைகளைத் தொகுத்து, வகைப்படுத்திக் காணலாம்:

## சர்த்திப் பித்தத்திற்கு மருந்து

- ❖ சிறுபயிறு, வேம்பின் ஈர்க்கு, கூவிளை வேர் இவை மூன்றும் வகைக்கு 10 கிராம் எடுத்து, 500 மிலி. நீர்விட்டு, எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.
- ❖ வில்வக்காயை நீரில் உரைத்துச் சுண்டைக்காய் அளவு வெந்நீரில் கொடுக்கவும்.
- ❖ துவரைவேரை அரைத்து முள்ளிக்காய் அளவு எடுத்து எலுமிச்சஞ்சாற்றில் கொடுக்கவும்.
- ❖ ஒரு பிடி வெற்றிலையை நறுக்கி எருமைமோரில் பிசைந்து, சர்க்கரை கூட்டி, 1/2 படி மோருடன் குடிக்கவும்.
- ❖ விளாம்பழ ஓடு, வில்வப்பழ ஓடு, சீரகம் இவைகளைச் சேர்த்துச் சூரணம் செய்து, தேனும் சர்க்கரையும் கூட்டி உட்கொள்ள வாந்தி, விக்கல் நிற்கும்.
- ❖ முருங்கப்பட்டையைக் காடியில் அரைத்து உலர்த்தி வேகவைத்து ஒவ்வொரு சிந்து (சிட்டிகை) உண்ணவும்.
- ❖ ஏலரிசியையும், வெற்றிலைக்காம்பையும், எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கொடுக்கவும்.
- ❖ பசலியிலைச் சாற்றைக் காய்ச்சி, மிளகுத்தூள் போட்டுக் குடிக்க நீங்கும்.
- ❖ முற்றிய வாகைப்பட்டையை எடுத்துக் காடியில் பிசைந்து 5 மணி நேரம் ஊறியபின் கோதை நீக்கிவிட்டு அதில் துத்தியிலை ஒரு பிடி. சுக்கு, வெங்காயம், இந்துப்பு, குங்கிலியம் இவைகளைக் காடியில் அரைத்து, மேற்படி காடியில் கரைத்து 3 மணிநேரம் சென்று சீலையில் வடிகட்டிக் குடிக்க வாந்தி, இரத்தப் பித்தம் தீரும்.
- ❖ ஏலம், வெற்றிலைக்காம்பு வகைக்கு 4 கிராம் எடுத்து நசுக்கி, 500 மிலி. நீர் விட்டு, 1/4 பாகமாகக் காய்ச்சி தேன் விட்டு 3 நாட்கள் கொடுக்கவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். வாந்தி நீங்கும்.
- ❖ மாங்கொட்டையை அரைத்துக் கஞ்சித்தண்ணீருடன் கொடுக்க வாந்தி நீங்கும்.

- குளவிக் கூட்டை அரைத்துத் தயிரில் கொடுக்க நீங்கும்.
- ஏலம், நெற்பொரி, நாணற்புல், நல்லசந்தனம், இலவங்கம், இலந்தைப்பட்டை, முத்தக்காசு, பச்சைக்கற்பூரம் இவைகளைச் சம எடை எடுத்துச் சூரணித்து 1 கிராம், குளிர்ந்த நீரில் கொடுத்தால் தீரும்.
- சுக்கு, மிளகு, திப்பிலி, நெற்பொரி இவைகளைச் சம எடை எடுத்து, சூரணித்து 1 கிராம், தேனில் கொடுக்க வாந்தி நிற்கும்.
- வில்வவேர், கொத்துமல்லி, சுக்கு, நெற்பொறி இவற்சை சம எடை எடுத்துச் சர்க்கரை சேர்த்து உட்கொண்டால் வாந்தி நிற்கும்.
- திப்பிலி, ஏலம், தாளிசப்பத்திரி, விளாம்பழம், இலந்தைப்பழம், நெற்பொரி, கிராம்பு இவைகளைப் பொடிசெய்து 4 கிராம் எடுத்து, ஆடாதோடை பூச்சாற்றுடன் தேன் சேர்த்துச் சாப்பிட தீரும்.

இப் பொடியைச் சீந்தில் கொடிச் சாற்றிலும் உட்கொள்ளலாம்.

- கரிப்பான் வேரை அரைத்து இளவெந்நீரில் கொடுக்க வாந்தி நிற்கும்.
- பச்சை மூங்கிலிலை, கறிவேப்பிலை ஈர்க்கு, சூளவிக்கூடு இவைகளைச் சேர்த்து அரைத்துக் கொடுக்கலாம்.
- கட்டிவெல்லத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் குழப்பிக் கொடுக்க வாந்தி நிற்கும்.

## இரத்தப் பித்தத்திற்கு மருந்து

- ஒரு படித் தண்ணீரில் மூன்று வயல் மீன்களைப் போட்டு ஊறவைத்து இறுத்துச் செங்கழுநீர்ப்பூக்கிழங்கு ஒரு பிடி அரைத்துக் கரைத்து நல்ல கருப்புக்கட்டி சேர்த்து, 3 நாட்கள் கொடுக்க இரத்தப் பித்தம் தீரும்.
- முசுமுசுக்கை இலையை அரைத்து வெண்ணெயில் கூட்டி விழுங்கவும்.
- சங்கம் வேரை விளாங்காய் அளவு அரைத்து எருமைத்தயிரில் அல்லது வெண்ணெயில் விட்டு, வெல்லமும் நான்கு பேயன் வாழைப்பழமும் கூட்டிப் பிசைந்து நான்கு நாட்கள் கொள்ள நோய் தீரும்.

- ❖ பலாக் கொட்டையை நசுக்கிப் பலாச்சுளையையும் கூடப் போட்டு மூடிவைக்கத் தண்ணீராக விழும். இதைப் பானகமாகச் சாப்பிட நோய் தணியும்.

- ❖ கோவைத் தண்டைப் பெருந்தண்டாக வெட்டி மேல்தோல் சீவிப்போட்டு, பாசிப்பயறு கூட்டி, 2 லிட்டர் நீர்வார்த்து, 500 மிலி. யாகக் காய்ச்சி வடித்து, சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும்.

- ❖ குருவிச்சித்தண்டு, இலை இவைகளை இடித்துப் பசுவின்பால் விட்டுப் பிசைந்து, காய்ச்சி வடிகட்டி, வட்டு கருப்புக்கட்டியுடன் கொடுக்க, இரத்தப் பித்தம் தீரும்.

- ❖ ஆடாதோடை யிலைச்சாறு - 2 லிட்டர், நெய் - 2லிட்டர், பால் - 2 லிட்டர், நிலவேம்பு, குடசப்பாலைப்பட்டை,முத்தக்காசு, அதிமதுரம், சந்தனம் விலாமிச்சம் வேர், இலுப்பைப்பூ, தேற்றான், நன்னாரி, நெய்தல் கிழங்கு, கம்பந்திராய், அறுகு,பெருங்குரும்பை. இவை ஒவ்வொன்றும் எலுமிச்சங்காய் அளவு அரைத்து, காய்ச்சி பதத்தில் வடித்துத் தேன், சர்க்கரை கூட்டி சாப்பிட இரத்தப் பித்தம் தீரும்.

- ❖ புளியிலைச்சாறு, நல்லெண்ணெய் இவை இரண்டையும் சம அளவு கலந்து கொடுக்க இரத்தப் பித்தம் தீரும்.

- ❖ கருப்பஞ்சாறு, அறுகம்வேர்ச்சாறு, சீந்தில் கொடிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நெருஞ்சில்வேர், சிறுபீளைவேர், இளநீர் சம அளவு எடுத்துக் கலந்து, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சந்தனம் சம எடை எடுத்துப் பசுவின் பால், நெய் சேர்த்துக் கலந்து உண்ண, இரத்தப் பித்தம், பெரும்பாடு, க்ஷயப்பித்தம் தீரும்.

- ❖ கடுக்காயையும், தாமரைப்பூவையும் பொடி செய்து தேனில் கொள்ள, இரத்தப் பித்தம் தீரும்.

- ❖ மூங்கிலிலை, மாதுளைமொட்டு, கோரைக்கிழங்கு, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், முசுமுசுக்கை, சுக்கு இவைகளைச் சம அளவு எடுத்துக் குடிநீரிட்டு, 3 நாள் கொடுக்கவும்.

- ❖ ஆடாதோடை சமூலச்சாறு, தேன் இரண்டையும் சம அளவு கூட்டி உண்ண இரத்தப் பித்தம் தீரும்.

- ❖ சிலாசத்து 5 கிராம் எடுத்து, பச்சரிசிக் கழுநீரில் அரைத்துச் சர்க்கரை கூட்டிக் கலந்து சாப்பிட, இரத்தப் பித்தம் தீரும்.
- ❖ நாவற்பட்டை, அத்திப்பட்டை, கருங்காலிப்பட்டை, தேங்காய்ப்பூ, கருவாழைக் கிழங்கு இவைகளைக் குடிநீரிட்டு, தேன் சேர்த்துக் கொடுக்க, இரத்தப் பித்தம், பெரும்பாடு தீரும்.
- ❖ விஷ்ணுகிரந்தி சமூலத்தைப் பசுவின்பாலில் பிசைந்து, சீனி போட்டுக் கொடுக்கவும்.
- ❖ செங்கழுநீர்க் கிழங்கைப் பால் விட்டரைத்து, உலரஉலர அடிக்கடி அடிவயிற்றில் தடவினால் இரத்தப் பித்தம் தீரும்.
- ❖ பூவரசம்பூவை அரைத்துக் சுழற்சிக்காய் அளவு உருண்டை செய்து சாப்பிட்டால் இரத்தப் பித்தம் தீரும்.
- ❖ தேற்றான் கொட்டையை மெல்லியதாய்ச் சீவி மைபோல் அரைத்து, எலுமிச்சம்பழத்தில் வைத்துப் புடமிட்டு எடுத்து, எலுமிச்சம் பழச்சாற்றில் அனுபானமாகச் சாப்பிட்டால் இரத்தப் பித்தம் தீரும்.
- ❖ தேற்றான் கொட்டையைப் பாலில் அரைத்துக் கொடுக்கவும்.
- ❖ இலுப்பைப் பூவைப் பாலில் அரைத்துக் கொடுக்கவும்.
- ❖ மிளகரனை வேரைத் தண்ணீரில் அரைத்துக் கொடுக்கவும்.
- ❖ நெல்லிவேரைக் கழுநீரில் அரைத்துக் கொடுக்கவும்.
- ❖ தாமரைப்பூவைக் கழுநீரில் அரைத்துக் கொடுக்கவும்.
- ❖ தாமரைப்பூ, அகில் இவை இரண்டையும் தண்ணீரில் அரைத்துக் கொடுக்கவும்.
- ❖ தாமரைக்கிழங்கு, அதிமதுரம், சந்தனம், சிறுகீரைத்தண்டு, சீந்தில் தண்டு இவைகளைப் போட்டுக் குடிநீரிட்டுத் தேன், சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும்.
- ❖ சிறுகீரை வேரைப் பச்சரிசிக் கழுநீரில் அரைத்து, அதே பச்சரிசிக் கழுநீரில் அனுபானமாகக் கொடுக்கத் தீரும்.
- ❖ மூங்கில் சுட்ட சாம்பல், நெல்லிமரம் சுட்ட சாம்பல் இவைகளை மோரில் கலந்து கொடுக்கத் தீரும்.

- ❖ கடுக்காயையும், தாமரைப்பூவையும் பொடி செய்து, தேனில் கொடுக்கவும்.
- ❖ இலவம்பிசினும், மகிழும் தேனில் கொள்ள நோய் தீரும்.
- ❖ சிறுகீரை வேர், நெய்தற்கிழங்கு இவைகளை வெள்ளாட்டுப்பாலில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.
- ❖ சாதிக்காய், சாதிப்பத்திரி, காசுக்கட்டி இவை மூன்றையும் எருமைத்தயிரில் கலந்து கொடுக்க, இரத்தப் பித்தம் தீரும்.
- ❖ செருப்படைச் சாற்றில் சீரகம் பொடி செய்து போட்டுக் கொடுக்கத் தீரும்.
- ❖ வெள்வேம்பட்டையைச் சிறுக நறுக்கி, 2 லிட்டர் பசுவின்பாலில் போட்டுப் பிசைந்து, காய்ச்சி வடித்து, சர்க்கரை கலந்து கொடுக்கவும்.
- ❖ குட்டிப்பிராய் வேர்ப்பட்டை, சிறுகுமிழ் வேர்ப்பட்டைகளைப் பொடித்து நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் ஆகியவற்றில் போட்டுக் காய்ச்சி வடித்துச் சாப்பிட இரத்தப் பித்தம் தீரும்.
- ❖ இரத்தப் பித்தப் பெரும்பாட்டிற்கு 500 மிலி. பொன்மெழுகைச் சேலையில் பொட்டலமாகக் கட்டி, 2 லிட்டர் பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.
- ❖ ஏலம், இலவங்கம், தாமரைப்பூவிதழ், அல்லியிதழ், இலந்தைக்கொட்டைப் பருப்பு, நெற்பொரி, அதிமதுரம், முத்தக்காசு, பச்சைக்கற்பூரம் இவைகளைச் சம எடை எடுத்துத் தேனில் குழைத்துக் கொடுக்க நோய் தீரும்.
- ❖ ஆடாதோடைச்சாறு ஒரு லிட்டர், பசுவின்பால், நெய் வகைக்கு 1/2 லிட்டர் இவைகளை ஒன்றாகக் கலந்து; அதில் நிலவேம்பு, கோரைக்கிழங்கு, சந்தனம், இலுப்பைப்பூ, அதிமதுரம், குடசப்பாலை, கொடிவேலி, வெட்டிவேர், நன்னாரி வேர், தாமரைக்கிழங்கு, ங்கம்பட்டை, செங்கழுநீர்க் கிழங்கு, அறுகன் வேர், மருக்கொழுந்து வகைக்கு 15 கிராம் எடுத்துச் சூரணம் செய்து பால் விட்டரைத்து; மேற்படிச் சாறு, பால், நெய் இவற்றுடன் கலந்து தேன் 200 மிலி., சர்க்கரை 200 கிராம் சேர்த்துக் காய்ச்சி

மெழுகுபதத்தில் இறக்கவும். இதனை வேளை ஒன்றிற்கு 5 கிராம் கொடுக்கவும். இதனால் இரத்தப்பித்தம்,சுவாசப்பித்தம், க்ஷயப்பித்தம், காசப்பித்தம், வாந்திப்பித்தம் ஆகியன தீரும்.

- ❖ நன்னாரி வேர், இருவேலி வேர், விலாமிச்சம் வேர், சந்தனம், நெய்தற்கிழங்கு, கொத்துமல்லி, அதிமதுரம், விழாலரிசி, கொட்டைப்பாக்கு வகைக்கு 5 கிராம் எடுத்துப் பொடித்துக் குடிநீரிட்டு அதில் 100 மிலி. எடுத்து, அதில் 5 கிராம் கிராம்பு பொடித்துப் போட்டு, காலையிலும் மாலையிலும் கொடுக்கவும்.
- ❖ ஆடாதோடை மூலம், சிறுவழுதலை வேர், கண்டங்கத்திரி வேர் இவை சம அளவு எடுத்து கற்கடகசிங்கி, சிறுதேக்கு, யானைத்திப்பிலி, செவ்வியம், கோஷ்டம், சடாமாஞ்சில், சுக்கு, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், இந்துப்பு, வெட்பாலை அரிசி, சங்கம் வேர், தூதுவளை வேர், இம்பூறல் வேர் இவைகளைச் சம எடை எடுத்துப் பால் விட்டரைத்து நெய், பால் சேர்த்து இலேகியமாகக் கிண்டி உண்ண, இரத்தப் பித்தம் சுவாசப் பித்தம், காசப்பித்தம், க்ஷயப்பித்தம் தீரும்.

## விக்கல் பித்தத்திற்கு மருந்து

- ❖ வளையலுப்பு, சோற்றுப்பு, இந்துப்பு சமன் கூட்டி நெய்யில் குழைத்துக் கொடுக்கவும்.
- ❖ காவிக்கல்லும், குளவிக்கூடு மண்ணும் சமன் கூட்டி, கழுநீரில் கொடுக்கத் தீரும்.
- ❖ வில்வ வேர், கொத்துமல்லிவிதை, சிற்றாமுட்டிவேர், சுக்கு, நெற்பொரி, பச்சைப்பயிறு இவைகளைக் குடிநீரிட்டுத் தேன், சர்க்கரை கலந்து கொடுக்கப் பித்தம் நிற்கும்.
- ❖ சீந்திலிலையைக் குடிநீரிட்டு, குமட்டி மாதுளம்பழச் சாறு கூட்டித் தேன், சர்க்கரை கூட்டிக் கொடுக்க நிற்கும்.
- ❖ குமட்டி மாதுளம்பழச் சாற்றில் பொடி செய்த திப்பிலி, சர்க்கரை அதிமதுரம், அஞ்சனக்கல் கூட்டித் தேன் கலந்து கொடுக்கப் பித்தம் நிற்கும்.
- ❖ வில்வவேரைக் குடிநீரிட்டு நெற்பொரி, சர்க்கரை, தேன், குமட்டி மாதுளம்பழச் சாறு கூட்டிக் கொடுக்கலாம்.

- ❖ பருத்தி விதைப்பொடி, நெற்பொரி, விளாயிலை, வில்வ விதை, திரிகடுகு, ஏலம், வேப்பம்பூ, சீரகம், இந்துப்பு இவைகளைச் சமன் சேர்த்து, மாதுளம் பழச்சாற்றில் அரைத்துத் தேன், சர்க்கரை கலந்து கொடுக்க மேற்கூறிய நோய்கள் தீரும்.
- ❖ நெற்பொரி, அதிமதுரம், ஏலம், திராட்சை, நற்சீரகம், திப்பிலி இவைகளை வறுத்துப் பொடியாக்கிக் குமட்டிமாதுளையின் உட்சதை, தேன், சீனி இவைகளுடன் கூட்டி ஒன்றாகப் பிசைந்து வைத்துக்கொண்டு உட்கொள்ள வாந்தி, விக்கல் தீரும்.
- ❖ விக்கலுக்கு வேப்பம் பிசின் சுட்டு, பிராயிலையும் கூட்டி உண்ண நிற்கும்.
- ❖ சுக்கை அரைத்துக் காடியில் கொடுக்கவும்.
- ❖ பாகல் இலைச்சாற்றைக் காய்ச்சி, மிளகுபொடி போட்டுக் குடிக்கவும்.
- ❖ வெங்காரத்தைத் தேற்றான் விதை அளவு பொரித்து அத்துடன் திப்பிலிப் பொடி, மயிலிறகு சுட்ட சாம்பல் இவைகளை ஒன்று சேர்த்துத் தேனில் குழைத்துக் கொடுக்க விக்கல் நிற்கும்.
- ❖ ஒரு பிடி நெற்பொரியைப் பொடித்துக் காய்ச்சிய பசும்பாலுடன் கலந்து கொடுக்கலாம்.
- ❖ நெற்பொரியைப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்கலாம்.
- ❖ கற்கடகசிங்கி, சிறுதேக்கு, இம்பூறல்வேர் வகைக்கு 2 கிராம் எடுத்து உலர்த்திப் பொடித்து வாழைச் சாற்றில் கலந்து சாப்பிடவும்.
- ❖ சிறுதேக்கு, சித்திரமூலம் வகைக்கு 10 கிராம் எடுத்து உலர்த்திப் பொடித்து வாழைப்பூச் சாற்றில் கலந்து சாப்பிடவும்.
- ❖ அதிமதுரம், மயிலிறகு சுட்ட சாம்பல் ஆகியவற்றை நண்டுவளைத் தண்ணீரில் கலந்து கொடுக்கவும்.
- ❖ வெள்ளரி விதையை அரைத்துப் பசுவெண்ணையில் குழைத்து நெஞ்சிலும், ஈரல்குலை மேலும் தடவவும்.
- ❖ பாசிப்பயிறு 500 மிலி, நெற்பொரி 1 லிட்டர் சேர்த்து, குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

- ❖ நண்டுவளை நீரைக் காய்ச்சிக் கொடுக்கலாம்.
- ❖ அதிமதுரம், திப்பிலி, நெற்பொரி இவைகளைப் பொடி செய்து தேனில் குழைத்து விழுங்கவும்.
- ❖ நண்டோடு, அதிமதுரம், கொத்துமல்லி, ஏலம், விலாமிச்சம் வேர், மூக்குத்திப் பூண்டு, பாலை, வில்வவேர் இவைகளைச் சமனாக எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்க விக்கல், வாந்தி தீரும்.
- ❖ சிற்றரத்தை, பாலை, கருவப்பட்டை, ஏலம், விலாமிச்சம் வேர், அதிமதுரம், வில்வவேர் இவைகளைச் சம எடை எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்கத் தீரும்.
- ❖ சுக்கு, பெருங்காயம், திப்பிலி, அதிமதுரம் இவைகளைச் சம எடை எடுத்துத் தாய்ப்பாலில் அரைத்து நாக்கினில் தடவியும், நாசியில் நசியம் செய்யவும் விக்கல் தீரும்.
- ❖ பால், நெற்பொரி, தேன், திப்பிலி, மாதுளம்பழச் சாறு, சர்க்கரை இவைகளை ஒன்று கலந்து குழம்பாகக் காய்ச்சிப் பருகிட விக்கல் தீரும்.
- ❖ மாதுளம்பூச் சதை, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி இவைகளை ஒன்று சேர்த்து, தேனில் கலந்துண்ண சர்த்தி (வாந்தி) தீரும். பொரித்த திப்பிலி, சுக்கு, மிளகு, ஏலம், நல்ல சீரகம் இவைகளைச் சம எடை எடுத்துப் பொடித்துத் தேனில் குழைத்து நாக்கில் தடவ விக்கல் மாறும்.

## அருசிப் பித்தத்திற்கு மருந்து

- ❖ அதிமதுரம், அக்கிராகாரம், கோஷ்டம், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், சம எடை எடுத்துப் பொடித்துக் கல்வத்திலிட்டுக் கோவையிலைச் சாற்றால் அரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து, தாய்ப்பாலில் கொடுக்கத் தீரும்.
- ❖ சீனாக்காரம், பொட்டிலுப்பு, வெங்காரம், இந்துப்பு வகைக்கு 15 கிராம், கற்பூர சிலாசத்து 50 கிராம் எடுத்து ஒன்றாகச் சேர்த்தரைத்து, புடம்போட்டெடுத்து உண்ண, சுவை உணர்வு உண்டாகும்.
- ❖ சீரகம், வேப்பீர்க்கு இவை இரண்டையும் பொன்னிறமாக வறுத்து, 500 மிலி. நீரிலிட்டுக் குடிநீராக வடித்துச் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும். 3 நாள், 6 வேளை கொடுக்கவும்.

- சுக்கு, திப்பிலி, உப்பு, பச்சைகறிவேப்பிலை, புளியீர்க்கு, வேப்பீர்க்கு இவைகளை வெந்நீர் விட்டரைத்து, வாய் கொப்பளிக்கவும்.

- ஏலம், திப்பிலி, பருத்தி விதைப் பருப்பு, நெற்பொரி இவைகளை எடுத்துச் சூரணித்துச் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க, அருசிப்பித்தம் தீரும்.

- நல்லசீரகம், ஏலம், சுக்கு, வில்வவேர், நெல்லிப்பருப்பு, கோரைக்கிழங்கு, நன்னாரி, விலாமிச்சைவேர், இலவங்கப்பட்டை, சர்க்கரை ஆகியவைகளைச் சூரணித்துக் கொடுக்கவும்.

- சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், சீரகம், சித்திரமூலம் சதகுப்பை, செவ்வியம், திப்பிலிமூலம், வளையலுப்பு, பொட்டிலுப்பு, சத்திச்சாரம், கல்லுப்பு, இந்துப்பு, எலாச்சாரம், பெருங்காயம் இவைகளைச் சூரணித்துக் கொடுக்கவும்.

## எரிப் பித்தத்திற்கு மருந்து

- சந்தனம், கோஷ்டம், நெல்லிப்பருப்பு, சன்னநாகேசுரம், உலர்ந்த திராட்சை, விலாமிச்சம் வேர், கோரைக்கிழங்கு, செங்கழு நீர்க்கிழங்கு, அதிமதுரம், இலுப்பைப்பூ, பேரிச்சம்பழம், கோரோசனை இவைகளைச் சம எடை எடுத்துச் சூரணித்து, இச்சூரணத்திற்குச் சம எடை வங்காளச்சர்க்கரை கூட்டிக் கலந்து காலையில் 2 கிராம் கொள்ள, எரிப்பித்தம் தீரும்.

- ஏலம், இலுப்பைப்பூ, கறுஞ்சீரகம், சீந்தில்சர்க்கரை, சீரகம், உலர்ந்த திராட்சை, அதிமதுரம், சுக்கு, திப்பிலி, நன்னாரி வேர், நீர்வள்ளிக்கிழங்கு, அமுக்கரா வேர், கோரைக்கிழங்கு, சாதிப்பத்திரி, நிலவேம்பு, கொத்துமல்லி, தாமரைப் பூவின் உள்ளிருக்கும் அரும்பு, நற்பாலை வேர்ப்பட்டை, கூகை நீறு, கோஷ்டம், அகில், சடாமாஞ்சில், விலாமிச்சைவேர், இருவேலி வேர், சந்தனம், கஸ்தூரி மஞ்சள், இலவங்கப்பட்டை, சாதிக்காய், நெருஞ்சிவேர், நெருஞ்சிக்காய், பூனைக்காலி பருப்பு, இலவம்பிசின் இவைகளைச் சம எடை எடுத்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்து காலையில் தேனிலோ, வெண்ணெயிலோ கொடுக்க, எரிப்பித்தம் தீரும்.

- ❖ சீந்தில் நெய், தண்ணீர்விட்டான் நெய், வல்லாரை நெய் இவற்றைத் தனித்தேனும், மற்ற பற்ப, செந்தூரங்களுக்குத் துணையாகவேனும் கொடுக்கலாம்.
- ❖ பற்பத்தில் குக்கில், சிலாசத்து, முத்து, பவழம், மாணிக்கம் முத்துச்சிப்பி, நத்தை, கறுங்குங்கிலியம், அயநாகம், வெள்வங்கம் ஆகியவைகளைத் தக்க துணை மருந்துகளுடன் கொடுக்கவும்.
- ❖ குக்கில் வெண்ணெய் கொடுக்கலாம். அயச்செந்தூரம், அயக்காந்தச் செந்தூரம், அன்னபேதி செந்தூரம் ஆகியவற்றையும் தேனில் கொடுக்கலாம்.

## கால் எரிவுக்குப் பூச்சு

மருதோன்றி பூச்சு அல்லது அறுகன் தைலம், இலந்தை இலை, சீயக்காயிலை, முசுமுசுக்கையிலை, கறிவேப்பிலை, நெய்யிலை இவைகளைச் சம எடை எடுத்து இடித்து, ஒரு பானையில் குளிர்ந்த நீர் விட்டு இடித்தவைகளைப் போட்டு இரவு முழுவதும் வைத்திருந்து காலையில் மத்து கொண்டு கடைந்தால், மேலே நுரை போலும், வெண்ணெய் போலும் வரும். அதை எடுத்துக் கை, கால்களில் பூசவும். இவ்வாறு மூன்று நாள் செய்ய, கைகால் எரிவு போகும்.

## மற்றொரு முறை

மேற்கூறிய பச்சிலைகளின் சாறுகளைப் பசுவின் பால் விட்டுக் காய்ச்சி இரவு உறைகுத்தி வைத்திருந்து, காலையில் மத்துகெண்டு கடைந்து வெண்ணையை எடுத்துப் பூசலாம்.

## விகாரப் பித்தத்திற்கு மருந்து

இலந்தை இலையைப் பறித்துக் காடியில் பிசைந்து வடிகட்டிக் கொடுக்கத் தீரும்.

## மருந்தீடு பித்தத்திற்கு மருந்து

பூசனிக்காய்ச்சாறு 500 மிலி. எலுமிச்சம்பழச்சாறு 500 மிலி. இவைகளை ஒன்றாகக் கலந்து, அதில் பாதாள பேதியையாவது, சாரணை வேரையாவது ஒரு எலுமிச்சங்காய் அளவு விழுதாக அரைத்துக் கரைத்து, 3 நாள் உள்ளுக்குக் கொடுக்க மருந்தீடு பித்தம் தீரும்.

## உன்மாதப் பித்தம், மார்க்கப் பித்தத்திற்கு மருந்து

### அசுவகந்தாதி இலேகியம்

அமுக்கராக் கிழங்கு 1 கிலோ; ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, கொத்துமல்லி, உலர்ந்த திராட்சை, சந்தனம், கற்கடகசிங்கி, காட்டெருமைப்பால், சுக்கு, மிளகு, திப்பிலி, வெட்டிவேர், கிராம்பு, திப்பிலி மூலம், செவ்வியம் இவை வகைக்கு 15 கிராம் எடுத்துச் சூரணித்துப் பசுவின்பால் 8 லிட்டர் சட்டியில் விட்டு, சர்க்கரை 1.75 கிலோ போட்டுப் பாகு காய்ச்சி, அதில் மேற்படி சூரணத்தைப் போட்டு இலேகியமாகக் கிண்டி, பசுவின் நெய் 4 லிட்டர், தேன் 2 லிட்டர் விட்டுக் கலந்து வைத்துக் கொண்டு கொடுக்க மேற்கூறிய நோய் தீரும்.

### கர்ச்சூராதி சூரணம்

கர்ச்சூர்
கொத்துமல்லி
உலர்ந்த திராட்சை
நீர்முள்ளி விதை
நெல்லிமுள்ளி
இலுப்பைப் பருப்பு
நற் சந்தனம்
அதிமதுரம்
நெருஞ்சிக்காய்
பூமிசர்க்கரைக் கிழங்கு
பெரும்பூசணி விதை
தண்ணீர்விட்டான் கிழங்கு
இலவங்கம்

இவைகளைச் சம எடை எடுத்துச் சூரணித்து, 5 கிராம் அளவு தக்க அனுபானத்தில், காலையில் வெறும் வயிற்றில் உட்கொள்ள மேற்கூறிய நோய் தீரும்.

### வில்வாதி லேகியம்

சிற்றாமுட்டி வேர், கருவேப்பிலைத் தண்டு, முக்காவேளை வேர் இவைகளைச் சம அளவு எடுத்து இடித்துக் குடிநீர் விட்டு, அதில் பழைய வெல்லம் மேற்கூறிய சரக்குகளுக்குச் சம அளவு சேர்த்துக் கம்பிப்பாகு பதத்தில் எடுக்கவும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், சித்திரமூலம், ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ. சீரகம், இந்துப்பு, இலவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி இவை அனைத்தையும் முதலில் கூறிய சரக்குகளுக்குப் பாதி எடுக்கவும்.

தக்கோலம், இலவங்கப்பத்திரியை இரண்டாவதாகக் கூறிய சரக்கில் 24ல் ஒரு பங்கு எடுக்கவும். பொன்னிறமாக வறுத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து, மேற்படிப் பாகில் இட்டு லேகியமாகச் செய்து இவ்விரு சரக்குகளையும் பதத்தில் இறக்கி, 5 கிராம் இருவேளை கொள்ளவும்.

பத்தியம்

பால், தயிர், மோர், நெய், கூட்டவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

## அசுவகந்தி இரசாயனம்

அமுக்கரா கிழங்கு 1 கிலோ.

ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கொத்துமல்லி, உலர்ந்த திராட்சை, சந்தனம், சன்ன இலவங்கப்பட்டை, கடற்கடகசிங்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, வெட்டிவேர், திப்பிலிமூலம் செவ்வியம் இவை வகைக்கு 15 கிராம் எடுத்துச் சூரணித்துப் பசுவின் பால் 8 லிட்டர், சர்க்கரை 1 1/2 கிலோ போட்டு பாகு காய்ச்சி, அதில் மேற்படி சூரணத்தைக் கலந்து, பசுநெய் 4 லிட்டர், தேன் 2 லிட்டர் விட்டுக் கலந்து வைத்துக் கொண்டு உண்டுவர, உன்மாதப் பித்தம் தீரும்.

## மகா தாளிகைச் சூரணம்

தாளிசப்பத்திரி
இலவங்கப்பட்டை
கடுக்காய்
சுக்கு
இலவங்கப்பத்திரி
நெல்லிக்காய்
மிளகு
வாய்விடங்கம்

தான்றிக்காய்
திப்பிலி
செவ்வியம்
அகில்
சிறுநாகப்பூ
அரத்தை
சந்தனம்
ரேணுகம்
கிராம்பு
கோரைக்கிழங்கு
கொடிவேலி
சடாமாஞ்சில்
விலாமிச்சம்வேர்
பூலாங்கிழங்கு
கிரந்திதகரம்
கொத்துமல்லி
தக்கோலம்

இவை வகைக்குச் சம அளவு எடுத்துச் சூரணித்து, அதற்குச் சம அளவு சர்க்கரை சேர்த்து, 5 கிராம் அளவு இரண்டு வேளை, பூரணசந்திரோதயம் 100 மி. கிராம் கலந்து உண்ணப் பித்த நோய்கள் தீரும்.

வேறு

வில்வவேர், பேய்ப்புடல், பச்சைப்பயறு, காட்டுப்பயிற்றம் வேர், முசுமுசுக்கை இவை வகைக்கு 35 கிராம் எடுத்துச் சூரணித்து நீர்விட்டு, அதில் 35 கிராம் சீரகத்தைப் பொடித்துத் துணியில் முடிந்துபோட்டுக் குடிநீரிட்டு ஆறிய பின், சீரகத்தை அந்தக் குடிநீர் விட்டு அரைத்துக் கஷாயத்துடன் கலந்து, 60 மி.லிட்டர் இரவு படுக்கும் முன் கொடுக்கவ .

வேறு

எலுமிச்சம்பழம் 3, நெல்லிக்காய் 70 கிராம், இஞ்சி 100 கிராம், சீரகம் 35 கிராம், சர்க்கரை 50 கிராம். முதலில் கூறிய மூன்றையும் சுரசம் செய்து (சாறு பிழிந்து) அதில் சீரகம், சர்க்கரை பொடித்துப்போட்டுக் கலந்து கொடுக்கவும்.

## ஓடு பித்தம், அழல் பித்தத்திற்கு மருந்து

- முற்றிய கோவைத்தண்டு, முற்றிய முடக்கறுத்தான் தண்டு இவைகளை எடுத்து இடித்து அவித்துப் பிழிந்து சாறு 500 மிலி. யுடன், சம அளவு பழைய காடியும் கூட்டி சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கவும்.
- பசும்பால் 1/4 படி எடுத்துக் காய்ச்சி, குன்றியிலைச்சாறு 2 லிட்டர், முசுறுமுட்டை 2 லிட்டர், பேயன் வாழைப்பழம் 40, வட்டுக்கருப்பட்டி 40, சர்க்கரை 500 கிராம் இவைகளை 4 லிட்டர் அரிசியுடன் சேர்த்துச் சமைத்துத் தேவையான அளவு மூன்று நாட்கள் கொடுக்கவும்.
- பேய்ப்புடல், முசுமுசுக்கை, பாசிப்பருப்பு இவை மூன்றையும் ஒரு புதுச்சட்டியில் 1லிட்டர் தண்ணீர் விட்டு ஒருநாள் முழுவதும் ஊறப்போட்டு, மறுநாள் உரைத்துக் கழுவி, தண்ணீரை இறுத்து, எலுமிச்சம்பழம் 2 பிழிந்து, நற்சீரகம் 5 கிராம் பொடித்துப் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.
- முசுமுசுக்கை சமூலத்தை எருமைப்பால், பசும்பால் இரண்டும் விட்டு இடித்துச் சாறு 4 லிட்டர் எடுத்து, பசுவெண்ணெய் 1 தேங்காய் அளவு, எருமை வெண்ணெய் 1 தேங்காய் அளவு, தேன் 1 லிட்டர், கழுதைப்பால் 1 லிட்டர், இஞ்சிச்சாறு 1 லிட்டர் இவைகளை ஒன்றாய்க் கலந்து, 100 கிராம் கருப்பட்டிக் கட்டி போட்டுக் குழம்பாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு, காலையிலும் மாலையிலும் மூன்று எலுமிச்சங்காய் அளவு சாப்பிடவும்.
- கூகை நீறு 5 கிராம், சர்க்கரை 70 கிராம், நெய் 2 லிட்டர், சந்தனக் குடிநீர் 2 லிட்டர் இவைகளை ஒரு மண்பாண்டத்தில் இட்டுப் பக்குவமாகக் காய்ச்சி வடித்துக்கொண்டு, அதில் மறுபடியும் கூகைநீறும் சர்க்கரையும் போட்டுக் கிண்டி வைத்துக்கொண்டு, காலை மாலை இரண்டு நேரமும் சிறுகரண்டி அளவு சாப்பிட்டு வரவும்.

- மலாக்காய் சந்தனத்தை அரைத்த விழுது 15 கிராம் எடுத்து, 15 கிராம் வெண்ணெயில் மத்தித்து விழுங்கவும். இவ்வாறு 5 நாட்கள் கொள்ளவும்.
- ஊமத்தை விதை 5, மிளகு 10 இவை இரண்டையும் இளஞ்சூடான வெந்நீர் விட்டரைத்து, அந்த விழுதிற்குச் சமன் எருமை வெண்ணெயில் வைத்து 10 நாட்கள் கொடுக்கவும். பிறகு 10 ஊமத்தை விதையும் 15 மிளகும் அரைத்து எருமை வெண்ணெயில் வைத்து 35 நாட்கள் கொடுக்கவும். பத்தியம் பால்சாதமும், பயத்தங் கஞ்சியும் உப்பிட்டுக் கொடுக்கவும்.
- தேற்றான் கொட்டைப்பழம் 5 கிராம் வெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும்.
- பச்சரிசியும், பச்சைப்பயிறும் போட்டுக் கஞ்சி கொடுக்கவும்.
- முடக்கறுத்தான் இலையை விழுதாக அரைத்து, சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும்.
- சீரகத்தில் எலுமிச்சம் பழச்சாறு விட்டு பாவனை செய்து, சர்க்கரை சேர்த்துக் காலையில் கொடுக்கவும்.
- முசுமுசுக்கையை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து 5 கிராம் எடுத்து, சர்க்கரை சேர்த்துப் பசும்பாலுடன் கொடுக்கவும்.
- கற்றாழைச் சோற்றுடன் பசுவின் பாலும் சார்க்கரையும் சேர்த்துப் பிசைந்து கொடுக்கவும்.
- இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, பேய்ப்புடல்சாறு, நரிபயத்தஞ்சாறு இவற்றை ஒன்று கூட்டி, சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும்.
- வில்வ வேர், சிற்றாமுட்டிவேர், சுக்கு இவைகளைப் பொடித்துப் போட்டு குடிநீர் செய்து, தேன்விட்டுக் கொடுக்கக் கொடுமையான வாந்தி தீரும்.
- நெற்பொரி, பருத்திக்கொட்டைப்பருப்பு, திப்பிலி, ஏலம், கிராம்பு, திப்பிலி மூலம், பேரரத்தை இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து, சர்க்கரை கூட்டி வைத்துக்கொண்டு, தேனில் கொடுக்க வாந்தி நீங்கும்.

❖ பாவட்டம் புல், சீரகம், பருத்திக்கொட்டை, சுக்கு, மாதுளம்பூ வகைக்கு 5 கிராம், வில்வவேர் தோல் சீவியது 10 கிராம் எடுத்துக் குடிநீர் இட்டு இரவில் கொடுக்க, வாந்தி தீரும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

❖ கூவிளம் வேர் 100 கிராம், சுக்கு 10 கிராம் எடுத்துக் குடிநீரிட்டு இரவில் கொடுக்க, வாந்தி நிற்கும்.

❖ நொச்சிக் கொழுந்தை வாய்பேசாமல் பறித்து வந்து வெற்றிலையுடன் கொடுக்கத் தீரும்.

❖ பொன்னாங்கண்ணி வேரையும் பாலில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

❖ ஒரு பிடி வேப்பீர்க்கு, அரிந்த துண்டு இஞ்சி, ஒரு துண்டு சாரணைக்கிழங்கு, பூண்டு 4 திரி, வெந்தயம் 100 கிராம் எடுத்து இளவறுப்பாய் வறுத்துக் குடிநீர் இட்டு மூன்று வேளை கொடுக்க, வாந்தி நிற்கும்.

❖ கொத்துமல்லி, மாம்பட்டை, மாந்தளிர், விலாமிச்சம்வேர் வகைக்கு 10 கிராம் எடுத்து அரைத்துக் குடிநீரிட்டு 200 மிலி. எடுத்துத் தேன் கலந்து கொடுக்கவும். இரு வேளை வீதம் ஏழு நாட்கள் கொடுக்கவும். சர்த்தி, விக்கல், அருசி பித்தத்திற்கு நல்லது.

❖ மாதுளங்காயை உலர்த்திப் பொடி செய்து தேனில் கொள்ளத் தீரும்.

❖ இஞ்சிச்சாற்றை வாயில் வைத்துக் கொப்பளிக்க வாந்தி, விக்கல் தீரும்.

❖ சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், சாதிக்காய், சிறுநாகப்பூ, ஏலம், பச்சிலை இவைகளைச் சம எடை எடுத்துத் தேனிலாகினும், நெய்யிலாகினும் குழைத்துச் சாப்பிட நீங்கும்.

❖ எலுமிச்சம்பழச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, குமட்டிமாதுளைச்சாறு, புளியிலைச்சாறு, வில்வப்பத்திரிச்சாறு, இஞ்சிச்சாறு, இவை வகைக்கு 1 லிட்டர்; ஏலம், சீரகம், திப்பிலி, இலவங்கம், அதிமதுரம், நெற்பொரி இவை வகைக்கு 50 கிராம்; சர்க்கரை 150 கிராம்; தேன் 200 மிலி. இவைகளைச் சேர்த்து இலேகியமாகச் செய்து உட்கொள்ள விக்கல், சர்த்தி, அருசிப் பித்தம் தீரும்.

## உணவு

அழல் குற்றத்தை மிகுதிப்படுத்தாததும், அதனைத் தன்னிலைப்படுத்தி உடலுக்கு ஊட்டத்தைத் தரக்கூடியதுமான உணவுப் பொருட்களைக் கொடுத்தல் வேண்டும். பித்தக் குற்றத்தைச் சமப்படுத்தும் பொருட்களாகப் பதார்த்த குண சிந்தாமணியில் கூறியபடி:

- மொச்சை, கடலை, பச்சைப்பயிறு, உளுந்து, ஏலம், வெந்தயம், கப்பைக்கிழங்கு, கோவை, கறிவேப்பிலை, சீரகம், ஆகியவற்றைச் சேர்க்கலாம். வெள்ளரி, சிறிய, பெரிய பாகல், புடல், பீர்க்கு, அவரை, முள்ளிப்பூ, கத்தரி, முருங்கை, மா, களாக்காய், வாழைக் கச்சல், வள்ளிக்கிழங்கு, வாழைப்பூ, வெங்காயம், பூண்டு இவற்றைக் குழம்பாக வைத்துப் பயன்படுத்தலாம்.
- புளியாரைக் கீரை, கோவைக் கீரை, முருங்கைக் கீரை, பசலைக் கீரை, பொன் முசுட்டை, ஓரிதழ் தாமரை இலை, பாலைக் கீரை, முசுமுசுக்கை, தூதுவளை, சுரை இலை, வல்லாரை, சிறுகீரை, மணத்தக்காளி இவை பித்த உடலினர்க்கு ஆகும் கீரை வகைகளாம்.
- அத்துடன் பித்த உடலினர் பச்சை மிளகு, இஞ்சி, தூதுவளைக்காய், நாரத்தங்காய், தமரத்தங்காய், மாகாளிக்கிழங்கு, கொளுஞ்சிக்காய் இவற்றை ஊறுகாயாகச் செய்து பயன்படுத்தலாம்.
- மணக்கத்தை அரிசி, குறுவை அரிசி, காரரிசி முதலியவற்றைக் கொண்டு சமைத்த சோறு சிறந்தது.
- இலவம்பஞ்சு படுக்கை மிகவும் நல்லது.

## ஆதார நூல்கள்

இந்நூலில் கூறப்பட்டுள்ள பித்தம் (அழல்) தொடர்பான நோய்கள் - அவற்றிற்கான மருந்துகள் பற்றிய செய்திகள் யாவும், சித்த மருத்துவ நூல்களையும், அந்நூல்களின் அடிப்படையில் வழக்கில் இருந்து வரும் அனுபவ மருத்துவ முறைகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டனவாகும். மேற்கொண்டு பித்தம் (அழல்) தொடர்பான செய்திகளை அறிந்துகொள்ள விரும்புவோர்க்குப் பின் வரும் நூல் பட்டியல் உறுதுணையாக அமையும்:

1. சித்த மருத்துவாங்கச் சுருக்கம்.
2. சித்த மருத்துவம்.
3. சித்த வைத்தியத் திரட்டு.
4. நோய் நாடல் நோய்முதல் நாடல்.
5. யூகி வைத்திய சிந்தாமணி.
6. தேரன் கரிசல்.
7. தேரன் யமக வெண்பா.
8. தேரன் மருத்துவ பாரதம்.
9. தேரன் வெண்பா.
10. தேரன் சேகரப்பா.
11. சுர வாகடம்.
12. அகத்தியர் சுரநூல்-300.
13. அகத்தியர் குணவாகடம்.
14. அகத்தியர் வைத்திய சிந்தாமணி.
15. அகத்தியர் அட்டவணை வாகடம்.
16. நோய்களுக்குச் சித்த பரிகாரம்.
17. பால வாகடம்.
18. சத சுலோகம்.
19. தேரையர் வாகடம்.
20. பதார்த்த குண சிந்தாமணி.
21. யூகிமுனி வாத வைத்திய விளக்கம்-2000.
22. சதக நாடி.
23. சரபேந்திரர் வைத்திய இரத்னாவளி.
24. புலிப்பாணி வைத்தியம் -500.
25. அனுபவ வைத்திய தேவரகசியம்.
26. கண்ணுசாமி பரம்பரை வைத்தியம்.
27. சிகிச்சா இரத்ன தீபம்.
28. அனுபவ வைத்திய நவநீதம்.
29. சபாபதி கையேடு.
30. வைத்திய சதகம்.
31. தேரையர் குண வாகடம்.

- வியர்வை துர்நாற்றத்துடன் வெளிப்படும்.
- தோல் சுருங்கித் திரையுடன் காணப்படும்.
- முகம், உள்ளங்கை, உள்ளங்கால் ஆகியன மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறத்தைப் பெறும்.
- கண் இமைகள் மெல்லியதாய் இருக்கும்.
- வெயில், சினம், கட்குடி, பசி ஆகியவைகளால் கண்கள் சிவந்து காணும்.
- தலையில் சிறிது மஞ்சள் நிற முடியும், அதிக அளவில் நரையும், மேனியில் குறைந்த அளவு முடியும் இருக்கும்.
- முகப்பருவும் உடலில் கறுத்த மச்சங்களும் மிகுந்து காணும்.
- இனிப்பு, துவர்ப்பு, கைப்பு ஆகிய சுவைகளிலும் குளிர்ந்த பொருள்களிலும் நாட்டம் மிகும்.
- மிகுதியான உணவு தேவைப்படாது.
- பசி, நீர்வேட்கை, சினம், சூடு, அச்சம் ஆகியவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாது.
- நறுமண மலர், சந்தனப் பூச்சு போன்ற ஒப்பனைகளில் விருப்பம் மிகும்.
- காம இச்சை குறைவுபடும்.
- வீரம், துணிவு, ஆற்றல், மரியாதை, தெளிந்த அறிவு, இரக்கம், நாவடக்கம், ஒழுக்கம், அன்பு, கல்வி ஆகிய நற்பண்புகள் மிகுந்திருக்கும்.
- தூக்கத்தில் பூக்கள் நிறைந்த மரங்களும், பற்றி எரியும் தீயும் கனவாகத் தோன்றும்.
- பெரும்பான்மையும் உடல் ஆரோக்கியமாகவும் அறுபத்தைந்து ஆண்டுகள் வரையிலான வாழ்நாளும் பெறுவர்.

அழல் இயல்பு நிலை கெட்டு மிகுமானால்:

- கண், தோல், சிறுநீர், மலம் ஆகியன மஞ்சள் நிறத்தை அடையும்.
- பசியும் நீர்வேட்கையும் மிகுதிப்படும்.
- உடலில் எரிச்சல் மிகுந்து தோன்றும்.
- தூக்கத்தின் அளவு குறையும்.

## வேறு பெயர்

வெம்மை, வெப்பு நோய், காந்தல், காங்கை, காய்ச்சல், சூடு, அனல், பிறப்பிலும் இறப்பிலும் தொடரும் நோய், பம்ம நோய் எனப் பல பெயர்கள் உண்டு.

## குறிகுணம்

உடலின் இயற்கைச் சூடு (உயிரனல்) தன்னளவை விட மிஞ்சி எழுந்து கண் எரிதல், வாய் குமட்டல், உடல் நோதல் வாந்தியாதல் ஆகிய பல குறிகளைத் தோற்றுவிக்கும்.

## நோய் தோன்றும் வழி

- ❖ எரு (மலம்) தடைபடல்
- ❖ நாட்பட்ட ஐயம் (கபம்)
- ❖ உண்டியால் ஏற்படும் கெடுதிகள்
- ❖ மிஞ்சிய கலவி
- ❖ பலவகைப்பட்ட நஞ்சுகள்
- ❖ துயிலின்மை
- ❖ கடுமையான ஓட்டம்
- ❖ அதி சுவையுள்ள பொருளை உண்ணல்
- ❖ அதிகோபங் கொள்ளல்
- ❖ இளவெயில், கடுவெயில்களில் நடத்தல்
- ❖ தாங்கொணாப் பசியைப் பொறுத்தல்
- ❖ உண்டிமேல் உண்டி உண்ணல்
- ❖ தாங்க முடியாச் சுமை சுமத்தல்
- ❖ கதறிக்கூவல்
- ❖ உடலில் எழும் பதினான்கு வேகங்களை அடக்குதல்
- ❖ எண்ணெய் தேய்த்து நீராடிய பின் கலவி புரிதல்
- ❖ தடியடியை (சிலம்பம் முதலியன) மேற்கொள்ளல்

- படுக்கை வேறுபடுதல்
- தான் செய்த பழவினைகள் சூழ்தல்
- மிக்க பசியில் வயிறு நிறைய உண்ணல்
- அதி குளிர்ந்த நீரைப் பருகுதல்
- நாடுகளின் வேற்றுமையான் வாழல்
- கெட்ட எண்ணம் கொள்ளல்
- உள்ள மாறுபாடடைதல்

முதலிய செயல்கள் சுர நோய் தோன்றுவதற்கான வழிகள் எனச் சித்த மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

## முற்குறிகள்

- உண்ணும் எப்பொருளிலும் விருப்பம் இல்லாதிருத்தல்
- உடம்பு கனமாய் இருத்தல்
- உடல் நிறம் மாறல்
- உடல் துவைத்தது போல் இருத்தல்
- எப்பொருள் பட்டாலும் பல் கூசல்
- உணவு செரியாமை
- எப்பொருளிலும் வெறுப்பு
- கொட்டாவி, மயக்கம், பிதற்றல் முதலியன உண்டாதல்
- நாச் சுவை அறியாமை
- உடல் நடுங்கல், குளிர்தல்
- இரவில் தூக்கமின்மை
- தொடை கெண்டைச் சதை நோதல்
- உடல் முற்றும் குத்தல்
- குடைச்சல்
- அண்டையில் இருப்பவர்கள் மேல் வெறுப்பு

- கண்களில் நீர் முட்டிமுட்டி வெளிப்படல்
- உடல் கடுப்பு
- உடம்பு முறுக்குதல்
- நா வறண்டு போதல்
- ஊக்கமின்மை
- இளைப்பு
- இனிப்பு, புளிப்பு, உவர்ப்புச் சுவை உள்ள பொருட்களிலும் அவைகளைப் பற்றிப் பேசுதலிலும் விருப்பம் இல்லாமை
- மனைவி, மக்களிடத்து வெறுப்பு
- தலை கிறுகிறுத்தல்
- உடலில் வியர்வை தோன்றல்
- பாட்டொலி, வாத்திய ஒலி, காற்று, நீரின் வெம்மை, தண்மை, நிழல் இவைகளில் யாதொரு காரணமுமின்றி ஒருமுறை விருப்பும் மற்றொரு முறை வெறுப்பும் உண்டாதல்

ஆகிய இக்குறிகளில் பலவேனும், சிலவேனும் சுரம் உண்டாவதற்கு முன்னர் காணப்படும்.

## நோய் வகை

சுரத்தின் பிரிவு பலவாம். ஆயினும் எல்லாச் சுரங்களும் வளி முதலான முத்தாதுக்களில் ஒடுங்கி, தனித் தாது அளவாகவும், கலந்த குற்றங்களின் அளவாகவும் அறுபத்துநான்காக விரியும். இவ்வறுபத்துநான்கையும், வாதத்தில் இருபது, பித்தத்தில் இருபத்து நான்கு, ஐயத்தில் இருபதுமாய்ப் பிரிப்பர். இவற்றுள் வாதத்தில் எட்டு, பித்தத்தில் பத்து, கபத்தில் ஒன்பது சுரங்கள் எளிதில் தீரக் கூடாதனவாம்.

இவ்வாறாகத் தொகை கூட்டிய அறுபத்துநான்கு வகைகளும், தன் வழியாகப் பிறப்பது ஐம்பத்திரண்டும், பிறவழியாகப் பிறப்பது பன்னிரண்டும் ஆகுமென்ற கொள்கையும் உண்டு.

## தன் வழியில் பிறக்கும் சுரங்கள்

1. வாதச்சுரம்
2. பித்தச்சுரம்
3. கபச்சுரம்
4. வாதபித்தச்சுரம்
5. வாதகபச்சுரம்
6. பித்தவாதச்சுரம்
7. பித்தகபச்சுரம்
.8. கபவாதச்சுரம்
9. கபபித்தச்சுரம்
10. கலப்புச்சுரம்
11. மந்தச்சுரம்
12. நளிர்சுரம்
13. வெஞ்சுரம்
14. மேனிச்சுரம்
15. உள்சுரம்
16. வெளிச்சுரம்
17. விட்டுவிட்டுவரும் சுரம்
18. விடாச்சுரம்
19. சாரற்சுரம்
20. செங்கறைச்சுரம்
21. ஊன்சுரம்
22. கொழுப்புச்சுரம்
23. என்புச்சுரம்

24. மூளைச்சுரம்
25. விந்துச்சுரம்
26. துன்பச்சுரம்
27. முறைச்சுரம்
28. மயக்கச்சுரம்
29. பிதற்றல்சுரம்
30. புழுச்சுரம்
31. மஞ்சள்சுரம்
32. காலைச்சுரம்
33. பகல்சுரம்
34. மாலைச்சுரம்
35. இராச்சுரம்
36. அதிகாலைச்சுரம்
37. தீவறட்சிச்சுரம்
38. அனல்சுரம்
39. ஏப்பச்சுரம்
40. வாந்திச்சுரம்
41. கொட்டாவிச்சுரம்
42. விடவிக்கல்சுரம்
43. வியர்வைச்சுரம்
44. தூங்காச்சுரம்
45. இருமல்சுரம்
46. பழஞ்சுரம்
47. கட்டிச்சுரம்
48. சீழ்ச்சுரம்

49. பல்கொப்புளச்சுரம்
50. நடுக்கல்சுரம்
51. வீக்கச்சுரம்
52. கழிச்சல்சுரம்

## பிற வழிச் சுரங்கள்

1. மோதுச்சுரம் (அடி முதலியவைகளால் பிறக்கும் சுரம்)
2. நாவேறு (சாபம்) சுரம்
3. ஏவல் சுரம்
4. சேர்க்கைச்சுரம்
5. பூதச்சுரம்
6. மருந்துவேகச்சுரம்
7. நச்சுச்சுரம்
8. சினச்சுரம்
9. பயச்சுரம்
10. துக்கச்சுரம்
11. காமச்சுரம்
12. தெய்வச் சினச்சுரம்

மேலும் அழல் முதலான தாதுக்கள் தத்தம் மாத்திரையில் மிகுதல், குறைதல்களால் உண்டான வேறுபாடுகளாலும், கால வேறுபாடுகளினாலே உண்டாகும் தட்பவெப்பங்களின் பலனாலும் நச்சுச்சுரங்கள் தோன்றும். அவைகள் பலவாயினும் முக்கியமானவற்றை ஈண்டு காணலாம்:

1. உணவுச்சாரத்தின் வழியே எழுந்து உட்சுரமாகக் காய்கின்ற விடாச்சுரம்.
2. குருதி வழியே எழுந்த விடாச்சுரம். இது புறம்பாக வீசும்.
3. ஊனனப் பற்றி எழும் சுரம். தினமுறையாகக் காயும்.

4. கொழுப்பைப் பற்றி எழும் சுரம். மூன்றாம் முறையாக வரும்.

5. மூளையிலும் என்பிலும் உண்டாகும் சுரம். நான்காம் முறையாகத் தொடரும்.

அகக் காரணங்களாலும், புறக்காரணங்களாலும், அடிபடுதல் முதலியவைகளாலும் எழும் சுரமனைத்தையும் அறுபத்துநான்காகப் பிரித்தும், அவைகளில் முத்தாதுக்களின் திரிபால் விளையும் சன்னியைப் பதின்மூன்றாக வகுத்தும் கூறி இருக்கின்றனர். ஆயினும்,

*உற்றதோர் உடலின் கூறு*
*உறுப்புடன் விரவி நின்று*
*முற்றுமே நோய்கள் எல்லாம்*
*முதல்தனில் தோன்றும் போது*
*பற்றுமே வாத பித்த*
*சிலேற்பனந் தன்னில் ஒன்றைப்*
*பற்றியே தோன்று மென்று*
*பகர்ந்தனர் முனிவர்தாமே*

என அகத்தியர் குரு நாடியில் கூறியபடி, நோய்கள் பிறப்பதற்கான வழிகள் பலவாயிருப்பினும், அவை தோன்றும்போது அழல் முதலாகிய தாதுக்களில் ஒடுங்குமாதலின், தாதுக்களின் அளவாயெழும் சுரங்களையும் அவைகளின் பத்திய பரிகாரங்களையும் மட்டுமே கூறுவாருமுளர்.

மற்றும் சில நூலோர் சுர நோயை அறுபத்துநான்கு வகையாக வகுத்து, அவைகளுக்கான பெயர்களையும் அவைகளில் தோன்றும் குறிகுணங்களையும், மருத்துவ வகைகளையும் கூறுவர். ஈண்டு சித்தர்கள் கூறியதைத் தொகுத்துக் காண்போம்:

## வளிச்சுரம் (வாதச்சுரம்)

- ❖ உடல் முழுமையும் கருநிறமடைதல், முகம் நீர் கொள்ளல், சந்துகள் தோறும் குத்தலுண்டாதல், உணவு வேண்டாமை, தலையானது நீர் நிறைந்தது போலக் கனத்திருத்தல் ஆகிய குறிகளைக் காட்டி மிகு காய்ச்சல் உண்டாம்.

- உடல் முழுமையும் கறுத்து நொந்து துடித்து ஆறாத தீயைப்போல் கொதிக்கும். சுரம் விட்ட பின் உடல் வியர்த்துத் திமிர் உண்டாகும். வயிற்றுள் மிகுந்த மந்தம் உண்டாகி, வயிறு உப்பி வாயால் மூச்சுவிடப்பண்ணும் என்னும் இக்குறிகள் வளிச் சுரத்திற்கு உரியன.
- வாத சுரத்தில் குடலில் சீதமுறல், சிந்தை கலங்குதல், மார்பு நோதல், சந்துகள் வாளால் அறுப்பது போல வலித்தல், மலம் வறளுதல் முதலிய குறிகளைக் காட்டும்.
- இதனில் உடல் நடுங்குவதன்றியும் உடலை நறுக்கித் துவைத்தது போலிருத்தல், சோறு வேண்டாமை, நஞ்சென உணவில் அருவருப்பு, வாந்தி, இரவும் பகலும் துயில் இல்லாமை, கை, கால் கடுப்பு, பூட்டுகளில் மிக்க வலி முதலிய குறிகுணங்கள் காணும்.
- இந் நோயில் மயிர் சிலிர்த்துப் பாம்பு விடம்கொண்டவனுக்குள்ள தாகத்தைப் போன்று தாகம் உண்டாகும். களைப்பும் தோன்றி தெளியாது. அசதியும் ஏற்படும்.
- முகம், உதடு கறுத்துக் காணல், உடல் முழுமையும் துடித்து நோதல், மிகு தாகம், உடல் நடுக்கல், திமிர், வெப்பம், உடல் பாரித்தல், உடல் குளிர்ந்து மயிர்க்கூச்செறிதல், எரு (மலம்) கடினப்பட்டு நிறத்தில் வேறுபாடடைதல் ஆகிய குறிகள் வளிச் சுரத்தைக் குறிக்கம்.
- உடல் நடுக்கல், வாய் பிதற்றல், குளிர், மயிர்க்கூச்செறிதல், இடுப்பு பூட்டுகள், நெற்றி இவைகள் நோதல், அடுத்தடுத்து (வாய் ஓயாத) இருமல், சோம்பல் இவைகள் வாதச்சுரத்தின் குறிகளாகும்.

  கண்களில் நீர் சொரிதல், தலை நோய், வயிற்றிரைச்சல், கைகால் முடக்கல், அதிசோம்பல், கொட்டாவி, விக்கல் என்பவைகள் தீர்ப்பதற்கரிய வளிச் சுரத்தின் குறிகுணங்களாம்.

மேற்குறித்த குறிகுணங்களை ஒருங்கு திரட்டிக் கூறில்: வாதச் சுரத்தில் சோறு வேண்டாமை, நஞ்சென உணவை அருவருத்தல், மந்தம், வாந்தி, இரவும் பகலும் துயிலாமை, உடல் முழுமையும் கறு நிறமடைதல், சாம்பல் படிந்தாற் போல் உடல் வெளுத்து வறளல், முகத்தில் நீர் கொள்ளல், தலை நோய், சந்துகளிலும் தோலிலும் குத்தலும் குடைச்சலும் உண்டாதல், உடல் துடித்தல். மயிர்க்கூச்செறிதல், குளிரல், ஆறாத தீயைப் போல் உடல் முழுமையும்

கொதித்தல், வாயால் மூச்சு விடல், மிகுசினம், மூக்கில் எரிச்சல், கண்விழி, தொடை, இடுப்பு இவைகள் குடைந்து குடைந்து நோதல், புறந்தாள் வீங்கல், வாய் ஓயாது இருமல், உடல் வறளல், பல் விறுவிறுத்து உளைதல், வயிற்றில் காற்று மேல் கொண்டு சேருதல், கொட்டாவி உண்டாதல், சுரம் விடுமுன் வியர்த்தல், திமிர், மிகுந்த மந்தம் ஆகிய குறிகளைப் பிறப்பிக்கும் என அறியக்கிடக்கும். இந்நோயில் எரு (மலம்) தீய்ந்து வறளுதலும், நீர் சுருங்கி, வெள்ளாட்டு நீரின் நிறத்தை ஒத்திருத்தலும் உண்டு. அன்றியும், தேரன் மருந்துப் பாரத நாடகத்தில் கூறியது போல், வளி வெப்பு நோயின் கால அளவாகிய பத்து தினத்திற்குள், எந்த வினைகளும் கலக்கும் என்பதால் மேற்கூறிய குறிகளல்லாமல் பல்வேறு நோய்களும் இச்சுரத்தில் தொடரக் கூடும் என்பதையும் அறியலாம்.

## வளியழற்சுரம் (வாதபித்தச் சுரம்)

❖ மிகு ஒலியுடன் (சப்தம்) வயிறு இரையும். நாவும் கண்ணும் மஞ்சளித்துக் குளிர் மிகுந்து விடாச்சுரமாகக் காயும். ஓக்காளம் உண்டாகும். அடிக்கடி தூக்கமெழும். அன்றியும் இவ்வளியழல் சுரத்தில் ஐயமும் கூடிடில் மனக் கலக்கத்தையும் உண்டாக்கும்.

❖ இன்னும் இச் சுரத்தில் சோம்பல், திமிர், பெருமூச்சு, திகைப்பு, வாந்தி, குளிர், உடல் சிலிர்ப்பு, வாய் பிதற்றல், விடாக்காய்ச்சல் இவைகளும் உண்டாகும்.

❖ உடம்பு நொந்து குளிரோடு சுரம் தோன்றி வருவதும் போவதுமாக இருந்த பின்பு இவைகள் தணிந்து, வயிறு மிகக் கழிச்சலை உண்டாக்கி அத்துடன் சீதமும் கூடிவிழுவதுண்டு. மேலும் உடல் வற்றி (இளைத்து) வியர்த்தலும், விடாச்சுரம் காய்தலும், பல்லும் கன்னமும் சிலிர்த்தலும் ஆகிய இக்குறிகள் வளி அழல் சுரத்தின் குறிகளாகும்.

❖ சில வேளையில் உணர்ச்சி இராது. வாய் இனிக்கும். ஆனால் பெரும்பான்மையும் கசக்கும். விடா அழலை உண்டாக்கும்.

❖ உடல் முழுமையும் அசைவது போல் வலியுண்டாம். மேலும் நாக் கறுத்தல், அடிக்கடி தூக்கமுண்டாதல், வாய் கைத்தல், உடல் வடிவு குன்றல், உடல் தினவெடுத்தல், மனம் கலங்கி தயங்கி, கண்டது கண்டவாறாகப் பேசல், மலம் வெண்மை நிறத்தோடிழிதல் ஆகிய இக்குறிகளைப் பெறும்.

இக்குறிகுணங்களை ஒருங்கு திரட்டி நோக்குங்கால், வளியழல் சுரத்தில் நாவும், கண்ணும் மஞ்சள் நிறமடையும் . சோம்பல், ஓக்காளம், உடல் சிலிர்ப்பு, குளிர், விடாச்சுரம் (காய்ச்சல்), வாய் பிதற்றல், அடிக்கடி தும்மல், பெருமூச்சு, மனக்கலக்கம், பல்லும் கன்னமும் சிலிர்ப்பு, சுரம் தணிந்த பின் வயிறு கழிதல், சீதம் விழல் ஆகிய குறிகள் ஏற்படுமெனக் கொள்ளலாம்.

## வளிஐயச் சுரம் (வாதகபச் சுரம்)

- ❖ வாந்தி, பெருமூச்சு, கை,கால் வீக்கம், இருமல், இரைப்பு, காதடைப்பு, விடாச்சுரம், நடுக்கல் இவைகள் உண்டாகி நீங்காத் துன்பம் தரும்.
- ❖ இச் சுரத்தில், தொண்டையும் உடம்பும் நோதல், முகம் வெளுத்தல், உப்பிசம், விக்கல், மயிர்க்கூச்செறிதல், வாய் உலர்தல், சோர்வடைதல், வெருண்ட பார்வை, கை, கால்களில், பூட்டுகளில் நோதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.
- ❖ முகமும் நாவும் வறளுவதன்றி, வாந்தி, அதிகத் தூக்கம், குளிர் முதலியன உண்டாகும். மலமும் நீரும் வெளிறும். மூக்கில் நீர் பாயும். வாயில் நீர் ஊறும். கண் வெளிறும். சுரம் காயும். அனலையும் வெய்யிலையும் விரும்பும். இந்நோய் தீர நாட்செல்லும்.
- ❖ வளி ஐயச்சுரத்தில் உடம்பெல்லாம் நோதல், இழுப்புண்டாதல், இருமல் வருதல், நா வெளுத்தல் ஆகியவைகளும், மயிர்க் கூச்செறிதல், கழுத்து நோதல், நீர் வேட்கை, கலக்கம், சஞ்சலம், வாய் பிதற்றல், மிரளல், வியர்வை உண்டாதல் முதலியனவாகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

இக்குறிகளைத் தொகுத்துக் கூறின் வளிஐயச் சுரத்தில் விடாச்சுரம், வாந்தி, தொண்டையும் உடம்பும் நோதல், முகம் வெளுத்தல், கை, கால்களின் சந்துகள் வீங்கி உளைதல், இருமல், இளைப்பு, காதடைப்பு, உப்பிசம், விக்கல், மயிர்க்கூச்செறிதல், வாய் உலர்தல், சோர்வு, வெருண்ட பார்வை, முகமும் நாவும் உலர்தல், அதிகத் தூக்கம், மூக்கில் நீர் பாய்தல், வாயில் நீரூறல், கண் வெளிறல், அனலையும் வெய்யிலையும் விரும்பல், மலமும் நீரும் வெளுத்தல், மயக்கம், தாபம், தயக்கம், சஞ்சலம் உண்டாதல், வாய் பிதற்றல், மிரளல், வியர்வை இவைகள் உண்டாகுமென்று அறியலாம்.

அழற்சுரம் (பித்தச்சுரம்)

- அரக்கர்கள் தமது வல்லமையாகிய மாயா வித்தையினால் யாவருடைய மனத்தையும் எவ்வாறு வஞ்சகமாகத் துன்புறுத்துவார்களோ அவ்வாறே இவ் அழற்சுரமும் யாவரையும் வருத்துவதாகும்.
- இது ஊழி வடவாமுகாக்கினியைப் போலக் காய்ந்து, பித்தச் சுரம் என்கிற பெயர் கொண்டு, பேய் பிடித்தவர்களைப் போல ஆட்டிவருவதுடன், குதிரையைப் போலப் பெருமூச்செறிதலும், முள்ளம்பன்றியைப் போல மயிர்க் கூச்செறிதலும், யானையைப் போல மிரண்டு மிரண்டு பார்த்தலும், குரங்கைப் போல மனநிலை மாறுதலும், பருந்தின் கண்களைப் போலச் சிந்தை சுழலலும், பகைவர்களைப் போல நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து, செம்மை நிறத்தை உடைய பொருளை உடல் முழுமையும் பூசியதுபோல், கண்டவர் திகைக்குமாறு உடல் சிவத்தலும், உயிர் உடலைவிட்டு நீங்குவது போல் பலவான விதத்தில் மனங்கலங்குதலும், கண்ணும் மூக்கும் பாதிரிப் பூ போன்ற நிறத்தை அடைதலும், உடல் நடுங்குதலுமான குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.
- உடல் சிவந்து, வாய் கைத்துத் தலை சுற்றி, எண் திசைகளும் ஆடி நடுங்குதல் போன்ற தோற்றம் உண்டாதல், வாயில் நீர் சுரந்து வடிதல், உடல் வன்மை குறைந்து, இளைப்பும் களைப்பும் தோன்றல், நாச்சுவை குறைதல் ஆகிய இக் குறிகளைக் காட்டும்.
- இந்தச் சுரத்தில் படபடவென்று பேசல், வாய் பிதற்றல், கண் சிவந்திருத்தல், வயிறு கழிதல், நீர்வேட்கை, நாத்தடுமாறல், உடல் வாடல், புத்தி மயங்கல், முகங் கறுத்தல், உடல் புண்ணாதல் முதலியன உண்டாகும்.
- உள்ளம் கொதித்தல், நீர்வேட்கை மிகுதல், உடல் நெருப்புப் போல எரிதல், கை, கால்கள் முதலியன மஞ்சள் நிறத்தைப் பெறுதல், வாய் கைத்தல், மனம் கலங்குதல் ஆகியவைகள் அழற் சுரத்தின் குணங்களாகும்.
- இந்நோயில் விக்கல், தூக்கமின்மை, வயிறூதல், வாந்தி, வாய் உலர்தல், சிறுநீர் சிவந்திறங்கல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

❖ அழற்சுரத்தில் நா வறளல், சிறுநீர் சிவந்திழிதல், வாய் பிதற்றல், வாந்தி, ஓக்காளம், வாயில் கசப்பு உண்டாதல், மெய்வாடல், தொண்டை, வாய் இவைகள் புண்ணாதல், உடல் வெப்பம் கொள்ளல், மிகுதியும் கழிதல், மலமும் கண்ணும் மஞ்சள் நிறம் பெறுதல், முகங்கறுத்தல், நீர்வேட்கை மிகுதல், உடல் குளிர்ந்து சிலிர்த்தல், அன்னம் வேண்டாமை முதலிய குறிகள் காணும்.

❖ அழல் சுரத்தில், மிக்க உறக்கம் கொள்ளல், அடிக்கடி கழிதல், நீர், எரு, உடல் இவைகள் சிவந்திருத்தல், வாய் கைத்தல், பிதற்றல், மிக்க மயக்கமொடு நீர் வேட்கை உண்டாதல், தன்னறிவு இன்றி எழுந்தெழுந்து படுக்கையை விட்டோடல், விக்கல், தவித்தல், வெப்பமடைதல் என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

பித்தச் சுரத்தின் குறிகுணங்களைத் தொகுத்துக் கூறின், இச்சுரத்தில் வாய் பிதற்றல், படுக்கையில் தங்காமை, மனக்கலக்கம், மயக்கம், உடலும், கண்ணும், சிறுநீரும் செம்மை நிறம் அடைதல், வாய் நீர் அதிகமாக வடிதல், இளைப்பு, சுவையின்மை, ஓக்காளம், வாய்க்கசப்பு, வயிறு கழிதல், நீர்வேட்கை, நாத் தடுமாறல், இடைவிடாமல் சுரம் காய்தல் முதலியன உண்டாகுமென அறியலாம்.

அழல் வளிச்சுரம் (பித்தவாதச் சுரம்)

❖ அழல் வளிச் சுரத்தில் மிகு சுரம், பொருமல், உடல் மிகவும் மஞ்சள் நிறமடைதல், வாந்தி, கண்ணோய், கண் வெளுப்பு, மந்தம் முதலியனவும், குளிர்தல், கழுத்து, வயிறு, தலை இவ்விடங்கள் வறண்டு காணுதல், உடலின் ஒளி குறைதல், மயக்கம், உடலில் தினவு, தாகம், வெய்யிலில் விருப்பம், உணவில் வெறுப்பு, நெஞ்செரிவு, சுரம் விட்டுவிட்டுக் காய்தல், வியர்வை உண்டாதல், அரைக்கண் தூக்கம், படுக்கையில் புரளல், தூக்கத்தில் பற்களைக் கடித்தல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

## அழல்ஐயச்சுரம் (பித்தகபச்சுரம்)

❖ இச் சுரத்தில் மனம் தளர்ந்து அறிவு மாறாட்டம் உண்டாகும். புகைந்து புகைந்து இடைவிடாத இருமலும், விடாச் சுரமும் தோன்றி, மலமும் நீரும் மஞ்சளித்துத் தூக்கம் வராது செய்யும்.

- ❖ மேலும் புறங்கை, கால், முகம், வீங்கிப் பெருமூச்சு உண்டாகும். இளைப்பு, களைப்பு, விக்கல், வாய் பிதற்றல், நீர்வேட்கை, நெஞ்சும் விலாவும் படபடவென்று அடித்துக்கொள்ளல், மேன்மேலும் சுரம் காய்தல் ஆகிய இவைகள் உண்டாகும்.

- ❖ இந்நோயில் தொண்டை கட்டி இருமல் உண்டாதல், இளைப்பு, நா வழுவழுத்தல், வறட்சி, அடிக்கடி அலறிப் பயப்படுதல், மிகுந்த வியர்வை என்னும் குறிகளைக் காட்டி இடைவிடாது சுரம் காயும்.

- ❖ இருமல், நீர்வேட்கை, மிகுந்த தூக்கம், வயிறு பொருமல், வியர்வை, வாய் பிதற்றல், மயிர் சிலிர்த்தல், உடல் நோதல் என்னும் குறிகளோடு சுரம்காயின் அது அழலையச் சுரமெனக் கொள்க.

- ❖ இதில் அளவு கடந்து உடல் வியர்த்தல், மிகுந்த தூக்கம், மயிர்க்கூச்செறிதல், இருமலால் மார்பு நோதல், வெப்பம் மிகுதல், தலை புறங்கழுத்து இவை வலித்தல், நாவும் மூக்கும் நன்னிலை மாறல் இவைகள் இந்நோயின் குறிகளாம்.

- ❖ பித்த கபச்சுரத்தில் உடல் வலித்து, வாடல், வற்றுதல் ஆகிய இக்குறிகள் உண்டாகும். மெல்லென மூச்சு வாங்கும். இருமலும் நாவரளும் அடிக்கடி வியர்வை விடுதலும் பிதற்றலும் ஏற்படும். தலையும் கழுத்தும் எப்போதும் வியர்க்கும். கண்கள் எரியும்.

## ஐயச்சுரம் (கபச்சுரம்)

- ❖ அச்சத்தையும் மன வேற்றுமையையும் முகத்தில் உண்டாக்கும். மத்தள ஒலியையும் வானம் குமுறும் ஒலியையும் போன்ற ஒலிகள் எப்போதும் செவியில் ஒலித்துக்கொண்டே இருக்கும். பின்பு உடலின் மயிர்க்கால்கள் தோறும் வியர்வையைத் தோன்றச் செய்து, நீர்ப்பசையை உண்டு பண்ணி, வடவாமுகாக்கினையைப் போன்ற சுரத்தை உண்டாக்கிய ஒரு நாழிகைக்குள் உடல் வெண்மை நிறத்தை அடையச் செய்யுமாகிய இக்குறி குணங்களை ஐயச்சுரம் பெறும்.

- ❖ ஆயிரம் கண்ணுடையவனான இந்திரன் ஊர்தியாகிய வெள்ளை யானையின் நிறம் போல் உடல் வெளுத்து, வலி, இருமல், தளர்ச்சி, கோழை கக்கல், இளைப்பு, மேல் மூச்சு, மூச்சுத்திணறல், உடல்

வன்மை குறைதல், அதட்டிப் பேசுதல், செருக்கு, வாய் குளறல், உடல் வீங்குதல், அடிக்கடி களைத்துப் போதல், நீர் வேட்கை, இடைவிடாக் காய்ச்சல், என்னும் குறிகுணங்களைக் காட்டி, முப்பிணியை (சன்னி நோயை) வருவிக்கும். அப்போது மண்டையில் மிகுந்த சூடு, வாய் பிதற்றல், தன்னிலை அறியாமை, பிசுபிசுத்த வியர்வை, காது இரைதல், காது கேளாமை முதலிய முப்பிணியின் குணங்கள் தொடரும்.

❖ இருமல், விக்கல், மெய்குளிரல், வியர்வை, உடல் வெதும்பல், முகம், கை, கால் இவைகள் வெளுத்தல், தயக்கம், பெருமூச்சு, மார்பில் கோழை கட்டிக் கொண்டு குறுகுறுத்தல், மிக்க பேதி இவைகளை உடைய ஐயச் சுரமானது மருத்துவர் கைக்கு வசப்படாதென்று சித்தர் நூல்கள் கூறுகின்றன.

❖ ஐயச் சுரத்தில் உடல் நொந்து அழற்றல், இருமல், இளைப்பு, களைப்பு, நெஞ்சு இளகுதல், மனம் துவளல், ஊண் கொள்ளாமை, மலமும் நீரும் கழிதல், எப்பொருளிலும் வெறுப்படைதல், தூக்கமின்மை, மிகச் சுரம் காய்தல், பின்பு தணிதல், இரு கண்களிலும் பீளை சாரல், வயிறு கழிதல், உடல் வெப்பமாதல், சுரம் மிகுந்தெழுதல் முதலிய குறிகுணங்கள் உண்டாகும்.

❖ ஐயச்சுரத்தில் முகம் வெளுக்கும். உண்ணும் உணவை நாச் சுவையறியாது, இருமல், விக்கல், உண்டாகும். மார்பும் தொண்டையும் நோகும். உடல தினவு, வாய்நீர் ஊறல் முதலியன ஏற்படும்.

பல நூலோர்களும் கூறிய குறிகுணங்களைத் தொகுத்துக் கூறுமிடத்து:

இந் நோயில் சுரம் தோன்றும் முன்னரே, காதிரைந்து, மத்தள ஒலியைப் போன்றும், இடி இடிப்பது போன்றும் காதில் ஒருவித ஓசை கேட்டுக்கொண்டே இருத்தல் போன்றும், தலையில் ஏதோ ஊருதலைப் போலிருத்தலுமான முற் குறிகளைக் காட்டிச் சுரம் வரும். அச்சுரம் பெரிய நெருப்பில் எழும் சூட்டைப் போலக் காணும். சுரத்தின் பெயருக்குக்கேற்ப உடல் வெளுத்தல், இருமல், கோழை கக்கல், மேல் மூச்சு, மூச்சு தடுமாறல், மார்பு உளைதல், அடிக்கடி களைத்துப் போதல், உடல் வீங்குதல், வாய் குழறல், நீர்வேட்கை, விக்கல், தயக்கம், பிசுபிசுத்த வியர்வை, மார்பில் கோழை கட்டிக் கொண்டு குறுகுறு என்று ஒருவகை

ஒலி எழுதல், அடிக்கடி கழிதல் என்னும் குறிகுணங்களைக் காட்டி, முப்பிணியின் (சன்னி) குறி குணங்களாகிய ஆடல், பாடல், அலைதல், புரளல், வாய் பிதற்றல் முதலியவற்றையும் உண்டாக்கிக் கொல்லுவதுமுண்டு.

## ஐயவளிச்சுரம் (கபவாதச் சுரம்)

- கபவாதச் சுரத்தில், தலை நடுக்கல், உடல் விறைத்தல், அடுத்தடுத்து இருமுதல், கை கால் குளிர்தல் முதலியன தோன்றும்.
- இந் நோய் பசியின்மை, உடல் வேறுபாடாதல், மிகக் குளிர் வந்து அதன் பின் சிறிது சுரம் தோன்றுதல், மார்பு, ஈரல், நெற்றி இவைகளில் துடிப்புண்டாதல், உடல் மெலிதல், பெருமூச்சு, இருமல், கோழை கக்கல், இனிப்பு, புளிப்பு இவைகளை விரும்பல், உடல் சோர்வடைதல், இளைத்தல் என்னும் குறிகளைக் காட்டும்.
- ஐயப் பெருக்கோடு கூடிய வளியால் வரும் சுரத்தில் முப்பிணி (சன்னி) தொடரும். இன்னும் இந்நோயில் கையும் காலும் நெஞ்சும் நோகும். வயிறு நொந்து கழிவதாகும்.

ஐயவளிசுரத்திற் காணும் குறிகுணங்களைத் தொகுத்துக் கூறின்: இச்சுரத்தால் தலைநடுக்கல், உடல் விறைத்துக் கொள்ளல், அடுத்தடுத்து இருமல் வருதல், கைகால் குளிர்தல், சுவையின்மை, உடல் நிறமும் வன்மையும் கெடல், ஈரல் இருக்கும் இடத்திலும் நெற்றி நடுவிலும் துடிப்புண்டாதல், உடல் மெலிந்து நோதல், பெருமூச்சு வாங்குதல், அடிக்கடி கோழை கக்கல், இனிப்பிலும் புளிப்பிலும் விருப்பு உண்டாதல், உடல் சோர்வடைதல் முதலியனவாகும்.

## ஐயஅழல்சுரம் (கபப்பித்தச் சுரம்):

- இதில் சுரம் இருந்து விட்ட உடனே வியர்த்தலும், நா வெந்து உலர்தலும், கசத்தலும், தொண்டை கட்டலும் ஆகிய குறிகுணங்களைக் காட்டிச் சுரம் விட்ட சில நாட்களுக்குப் பின் தலை மயிர் நரைக்கும்.
- இச்சுரத்தில் நாவின் மேற்புறத்தில், அரத்தைப் போல் சுரசுரத்தும், கீழ்ப்புறத்தில் வழுவழுத்தும் காணும். சுரம் விட்டவுடன் உடல் முழுவதும் சில்லிட்டும், உடல், கை, விலா, நெஞ்சு இவைகள் வெப்பங்கொள்ளுதலோடு முகவாய்க்கட்டை தொங்கிவிடும். அன்றியும் கோழை கோழையாக வாந்தி எடுத்தல், மிகுந்த நீர்

வேட்கை, பசி இருப்பினும் உணவு செல்லாமை, வெளுப்பாக அடிக்கடி கழிதல் என்னும் குறிகளோடு விடாச் சுரமும் காயும். சுரத்தின் கொடுமையால் குருதி பெருக்கடைந்து, அது மூக்கு, நா, எருவாய் முதலியவைகளின் வழியாய் வெளிப்பட்டுக் கசியும்.

❖ இந்நோயில் மூக்கு நீர் பாய்தல், வெள்ளோக்காளம் உண்டாதல், பெருமூச்செறிதல், நா இனித்து உலர்தல், சோம்பி இருத்தல், கண் சிவத்தல், நெஞ்சு எரிதல், கொடிய இருமல் வருதல், படுக்கையை விட்டு அடிக்கடி எழுந்து ஓடல், உரத்துப் பேசல், பெண்களின் மேல் இச்சை கொள்ளல், சில வேளை உடல் வாடியும், மனம் தளர்ந்தும் இருத்தல், கை, கால் வலித்தல், கண்கள் வாடிப் பஞ்சடைதல், படுக்கை பொருந்தாதிருத்தல் என்னும் முப்பிணியின் (சன்னி) குறிகுணங்களும் தொடரும்.

## முப்பிணிச்சுரம்

கலப்புச்சுரம், தொந்தச்சுரம், சன்னிபாதச்சுரம் என்பன இதன் வேறு பெயர்கள்.

❖ இது வாய் பிதற்றல், வாந்தியாதல், பிரமை உண்டாதல், நாவறண்டு போதல், மிகுந்த நீர் வேட்கை ஆகியவற்றுடன் உடலின் கண்ணமைந்த முக்குற்றங்களும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டதைப் போற் கூடி மருவிவரும் நோயாம். இதில் காயும் சுரம் மிகுந்த வெப்பமாகக் காய்ந்து வியர்வையை உண்டாக்கும். குளிரும் நடுக்கலும் ஆகிய குறிகளையும் காட்டும்.

❖ அன்றியும் முக்குற்றக் கலப்பால் உண்டாகும் சுரம் பிறப்பிதற்கு முன்பே குளிர்தல், நடுக்கல், உடல் முழுமையும் வியர்த்தல், மார் துடித்தல் என்னும் குறிகளைக் காட்டி, பின்பு சுரம் உண்டான உடனே, அது மிகுதிப்பட்டு வாய் பிதற்றல், படுக்கையில் இருக்கவொட்டாமை, அரட்டல், புரட்டல், அறிவு, மயங்கல், ஆடல், பாடல், சிரித்தல், துணியை அவிழ்த்து எறிதல், கண் சிவத்தல், கண் நெருப்பு போல் எரிதல் என்னும் குறிகளைக் காட்டும்.

❖ சுரம் விட்டபின் பகலில் தூக்கம், இரவில் விழித்துக்கொண்டே இருத்தல், அடிக்கடி உடல் வியர்த்தல், தலை சுற்றல், தலையில் ஏதோ ஊருவது போன்ற உணர்ச்சி ஏற்படல், கண்ணிமை துடித்தல்,

காதிரைதல், கழுத்தில் முள் செருகியது போன்றிருத்தல், நாத்துவண்டது போல் காணல் அல்லது சிவந்திருத்தல், உமிழ்நீர் சுரந்து கைத்தல் அல்லது சிவந்திருத்தல், உடல் முழுமையும் நோதல், கை, கால்களின் பூட்டுகள் வலித்து அசைக்க முடியாமலிருத்தல், உடல் சத்தற்றுப் போதல், சோம்பல் என்னும் குறிகள் காணும்.

❖ சுரம் வருவதும் கொஞ்சம் விடுவதுமாகக் காட்டி, ஐயப் பெருக்கை உண்டாக்கி, மிகுந்த சுரத்தோடு மார்பு நோதல், தொண்டையில் சளி கட்டல், முகம் உதடு கறுத்தல், குறுகுறுவெனும் ஒலி எழுதல், மூக்குத் தண்டு நீண்டு சில்லிடுதல், காது கேளாமை, கை, கால் சில்லிடல் என்னும் குறிகளைக் காட்டிக் கொல்வதுமுண்டு.

இவ்வாறு முத்தாதுக்களால் எழுந்த சன்னி நோயைச் சில நூலோர், திரிந்த முத்தாதுக்களுள் எத்தாது முதலிலிருந்து மற்ற தாதுக்களைத் தனக்குத் துணையாகக் கொண்டதோ, அத்தாதை முன்னிட்டு அதற்குப் பெயர் மூன்று வகை என வகுத்தனர். ஈதன்றி, திரிந்த தாதுக்களின் வன்மையால் காணும் குறிகுணங்களைக் கொண்டோ, அல்லது நோயுண்டான இடங்களைக் கொண்டோ ஒவ்வோர் பெயரினை அமைத்துப் பதிமூன்று என யூகிமுனி வகுத்தார். இந்நோயைப் பத்தெனக் கூறினார் தேரர்.

## மந்தச் சுரம்

இந்நோயில் வயிறு மந்தமாக இருப்பதோடு, மார்பும் தொடையும் வலிக்கும். புளியேப்பம், வாந்தி, தாங்கமுடியாத நீர்வேட்கை, பெருமூச்சு உண்டாகும். வயிறு நொந்து பொருக் கொண்டு, சுரம் உண்டாகி, இளைப்பையும் விக்கலையும் எழுப்பி, ஐயம் மூண்டு கொண்டாற் போல உடல் எங்கும் சில்லிட்டுத் திமிர் உண்டாகும்.

## நளிர்சுரம் (குளிர்சுரம்)

இச்சுரம் உண்டாவதற்கு முன்பே மயிர் சிலிர்த்து, கண் குவிந்து, கொட்டாவியும் வாந்தியும் எழும். பின்பு குளிரும் நடுக்கலும் உண்டாய் சுரம் காயும். அத்துடன் தலைநோய், கண்களில் நீர் வடிதல், வயிற்றுள் ஒருவித வேதனை, சில வேளை கழிச்சல் உண்டாதல், பீத்தம் பித்தமாக வாந்தியாதல், சுரம் கொடுமையாகக் காய்தல், மயக்கம், வாய் பிதற்றல் என்னும் குறிகளைக் காட்டி

சுரம் விட்டுவிடும். மீண்டும் ஒருநாள் விட்டு மறுநாள் மேற்கூறியவாறே முற்குறிகளைக் காட்டிச் சுரம் வரும்.

இந்நளிர் சுரத்திலேயே மூன்று நாளைக்கு ஒரு முறை வருவதும் நான்கு நாளைக்கு அல்லது ஒன்பது நாளைக்கு ஒரு முறையாக வரும் சுரமும் உண்டு.

## வெஞ்சுரம்

இந்நோயில் தாங்க முடியாத தலைநோய், சிவந்து எரிதல், வாய் நீர் ஊறல், மயிர் சிலிர்த்தல் என்னும் குறிகளைக் காட்டி மிக்க கடுமையாகச் சுரம் காயும். சுரம் விட்டபின் உடல் வியர்த்து, உடல் வன்மை பெரிதும் குறைந்து, மூக்குத் துளையில் அக்கி பீச்சியது போல் சிறு கொப்புளங்கள் உண்டாய் புண்ணாகும்.

## மேகச்சுரம்

இதில் உடம்பு முழுமையும் சிவந்து சுரம் உண்டாம். இதனோடு வாந்தியாதல், வயிறு கழிதல், உடம்பெல்லாம் எரிதல், நமை உண்டாதல், தோல் தடித்தல், தலை சுற்றல், மயக்கம் என்னும் குறிகுணங்களும் காணும்.

## உட்சுரம்

இச்சுரம் உடல் வன்மை குறைந்தவர்க்கு வெளிக்குத் தெரியாமல் உடலின் உள்ளேயே தகித்து, சுரம் இருப்பது போன்று காணப்பட்டு, சோகம், மனத்தளர்ச்சி, கை, கால் ஓய்ச்சல், உணவில் விருப்பமின்மை, வாய் குமட்டல், உடல் வெளுத்துத் தலைநோதல், எப்போதும் சுரம் காய்வது போலிருத்தல், வெள்ளோக்காளம், உடல் நாளுக்கு நாள் மெலிந்து போதல் என்னும் குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

## வெளிச்சுரம்

இதில் வாய் கைத்தல், வாய் குமட்டல், உண்ட உணவு செரியாமை, நீர் வேட்கை என்னும் குறிகள் உண்டாகும். ஈதன்றியும் எப்பொழுது பார்த்தாலும் உடல் சுடுவது போலிருப்பினும், சுரநோயில் படுக்கையில் இருப்பதுபோல் இல்லாமல், தன் தொழிலைச் செய்ய இடந்தரல் என்னும் குறிகள் இடம் பெறும்.

## விட்டுவரும் சுரம்

இந்நோயில் உடல் கறுத்துக்கொண்டே வருவதுடன், உடலில் குருதியும் குறைந்து, நித்தமும் சுரம் காயும். இச்சுரம் நாள்தோறும் வருவதும், காலையில்

சுரம் காய்ந்து பின்பு விட்டு, சிறிது நேரம் கழித்து மீண்டும் வருவதுமாயிருக்கும். இவ்வாறு நாள் ஒன்றுக்கு ஒரு முறைக்குமேல் சுரம் காய்ந்து உடலை மெலியச் செய்யும். அன்றியும் கைகால் சூம்பி, வயிறு பெருக்கும்.

## விடாச்சுரம்

சுரம் உண்டாகும் முன் காட்டும் குறிகளாகிய கண் சிவத்தல், நாவுலரல், நீர்வேட்கை, கைகால் நோதல் என்னும் குறிகளைக் காட்டிச் சுரம் பிறக்கும். அச்சுரம் சிறிது சிறிதாக மிகுந்து, சுரம் இறங்காமலே சில நாட்கள் வரை காய்ந்து பின்பு இறங்கும். இதற்குள் இது பல துன்பங்களையும் விளைவிப்பதுண்டு. சுரத்தின் வன்மைக்கேற்ப உடல் வன்மையும் கெடும்.

## சாரற்சுரம் (இரத்தத் தாது சுரம்)

இந்நோயில் மனக்கலக்கம், விடா வியர்வை, மிகுந்த நீர் வேட்கை, உடல் நோதல், அடிக்கடி மூர்ச்சை ஆதல் முதலியன உண்டாகும். ஈதன்றியும் உடல் கன்றினது போல் தோன்றல், நா வழுவழுத்து மஞ்சள் நிறமாதல், நெஞ்சில் கோழை கட்டல், தூக்கமின்மை, வெளிக்குப் போகாமை (மலங் கட்டல்) என்னும் குறிகுணங்களையும் காட்டிச் சுரம் காயும்.

சில நூலோர் இந்நோயில் இரசக்கட்டு (இரசத்தாது) கேடடைதல், உடலின் நீர் வற்றி உடம்பெல்லாம் எரிதல், உடல் நோதல், நீர் வேட்கை, தூக்கமின்மை, உடல் வன்மை குறைதல், நாச் சுவை அறியாமை, வாந்தி, பெருமூச்செறிதல், அடிக்கடி விக்கலுண்டாதல், தலைவலி, இளைப்பு, உடல் வியர்த்தல், என்னும் குறிகளோடு ஐயம் மிகுந்து நாடியும் தளர்ந்து காணுமெனக் கூறுவர்.

## செங்கறைச் சுரம் (இரத்தத் தாதுகதச் சுரம்)

இந்நோயில் சுரம் மிகுதியாகக் காய்தல், சுரம் உள்ளபோது உடலெங்கும் சிவந்து வீங்கினதுபோலக் காணல், மிகுந்த நீர்வேட்கையும், பிசுபிசுத்த வியர்வையும் உண்டாதல், உடல் முழுமையும் நோதல், தோல் கன்றிப்போதல், நா வழுவழுத்தல், மஞ்சள் நிறமாதல், பூட்டுகளை எளிதில் மடக்கவும் நீட்டவும் முடியாதிருத்தல் என்னும் குறிகளைக் காட்டி ஐயம் மிகுந்து, தலைநோதல் மூக்கில் நீர் பாய்தல், மனக்கலக்கம், வாய் பிதற்றல், கைகால் சில்லிடல், தலை கிறுகிறுத்தல், ஆடல், பாடல் ஆகிய முப்பிணியையும் (சன்னி) தொடரச் செய்யும். அன்றியும் அடிக்கடி மலம் கழியும்.

## ஊன்சுரம்

இந்நோயில் மிகுதியான சுரம் காய்வதுடன், பெருமூச்செறிதல், வியர்த்தல், உடல் எங்கும் நோதல், உதடு உலர்தல், ஆலாபித்தல், மயிர்க்கூச்செறிதல், மனக்கலக்கம், அடிக்கடி கண்ணீர் வடிதல் என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

அன்றியும் உடல் வறட்சி, படுக்கையில் தானறியாமலே கைகால்களைத் தூக்கிப் போடல், தோல் மினுமினுத்தல், உடல் ஊதல், கொட்டாவி, விக்கல் உண்டாதல், வன்மை குறைதல் என்னும் குறிகளோடு ஐயம் கூடி, நோயின் வன்மையைப் பெருக்கும் எனக் கூறுவாருமுளர்.

## கொழுப்புச்சுரம்

இச்சுரம் தொடங்கும் முன்பே உணவில் விருப்பமின்மை, உண்ணினும் அது எளிதில் செரியாமை என்னும் முற்குறிகளைக் காட்டி, சுரத்தோடு தலையில் ஊசியால் குத்துவது போல நோதல், தலை புரளல் அல்லது தலை நடுக்கல் என்னும் குறிகளையும் காட்டும்.

## என்புச்சுரம்

எலும்பைப் பற்றி வரும் சுரத்தில் மிகுந்த நீர்வேட்கை காணல், உடலின் மேல் தொடுகைக்குக் குளிர்ச்சியாய் இருப்பது போலத் தோன்றினும், மிகுந்த சுரம் காய்தல், நோய் நெடுநாட்களுக்குத் தொடருமாயின், உடல் வெளுத்து இளைத்துப் பஞ்சு போல் ஆதல், செரியாமை, அடிவயிறு நோதல், அளவு கடந்து கழிதல் என்னும் குறிகுணங்களைக் காட்டும். ஈதன்றியும் நரம்புகள், கீல்கள் நோதல், உடல் உறுப்புகளில் சுருக்கம் ஏற்படல், உடலின் நிறம் மாறுபடல், கண் மஞ்சளித்தல், தலையை அசைக்க முடியாமை, அசைத்தால் உடல் நோதல் என்னும் குறிகளையும் காட்டும் என்பர்.

## மூளைச்சுரம்

இந்நோயில் உடல் மந்தமடைந்து, ஐயத்தைப் பெருக்கி, உண்ட உணவு செரியாமை, புளியேப்பம், கொட்டாவி, விக்கல், கைப்புடன் வாந்தியாதல், சில வேளைகளில் மிகுதியாக வயிறு போதல், வயிறு உப்பிசம் என்னும் குறிகளைக் காட்டும். மேலும் மிகுந்த சுரம் காய்ந்து, மனம் கலங்கல், தலை நடுங்கல், உடல் வெளுத்து இளைத்துப் போதல், உடல் வன்மை கெட்டு, நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வருதல், மூச்சு வாங்கவும் விடவும் முடியாமல் தடுமாறல், தொண்டை,

முழங்கால் பூட்டுகள் நோதல், உடலின் நிறம் வேறுபடல் ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

## விந்துச்சுரம்

உயிர் நிலைகளெனக் கூறப்படும் உச்சி, புருவம், உதடு, கழுத்து, மார்பு, மார்புக்குழி, உந்தி, முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலில் பெருவிரல், தோல், விரை, என்னும் இருப்பதினான்கு இடங்களில் வலி உண்டாகித் தலை நோதல், தலை அசைதல் அல்லது நடுங்கல், பல் வலி, சுரம், சுவையின்மை, பசியின்மை, உண்ணினும் அது செரியாது விக்கல் உண்டாதல் என்னும் குறிகளைக் காட்டி வாந்தி, அடிக்கடி கழிதல், வாய் எப்போதும் இனிப்பாகவே இருப்பது போலத் தோன்றல் ஆகிய இக்குணங்களையும் காட்டும். பின்பு வாய் ஓயாது இருமச் செய்து, பெருமூச்செறிதல், தூக்கமின்மை, உடல் வெளிறடைந்து வீங்கல், உடலின் குருதி வன்மை குறைதல், மனக்கலக்கம், மயக்கம், கை கால் சில்லிடல் என்னும் கொடிய குறிகளையும் உண்டாக்கும், அன்றியும், ஆண்குறி சுருங்கும். நோய் முதிர்ச்சி அடையின் முப்பிணி (சன்னி) தொடர்ந்து தன்னை மறந்து பேசல், பிரலாபித்தல், வாய் பிதற்றல் முதலியனவும் ஏற்படும்.

## துன்பச்சுரம்

திடீரென உண்டாகும் துன்பத்தால் மனமும் உடலும் அதிர்ந்து, உடலில் கொதிப்பேறி, மயக்கம், மூர்ச்சை, அறிவு கலக்கம் முதலியவைகள் உண்டாகிக் கண் சிவந்து மிகுந்த சுரம் உண்டாகும். அத்துடன் வாந்தியாதல், கைகால் நடுங்கல், கண்டவாறு பேசல், ஆடல், பாடல் என முப்பிணி சுரத்தில் காணும் குறி குணங்களும் தோன்றும்.

## முறைச்சுரம்

முறைச்சுரத்தில் குளிர் உண்டாய் நடுங்கிக் கைகால் விறைத்துக் கொண்டு, கண்களில் எரிச்சல் உண்டாகிச் சுரம் காயும். சுரம் விடுகையில் உடல் வியர்த்து, தாங்க முடியாமல் தலையில் குத்துவது போல் நோகும். இவ்வாறாகச் சுரம் ஒரு நாள் விட்டு ஒரு நாளாகவும் இரண்டு, மூன்று, நான்கு நாள் கணக்காகவும், திங்கள் கணக்காகவும், ஆண்டு கணக்காகவும் விடாமல் வருவதுண்டு.

அன்றியும் இந்நோயில் பூட்டுகள் தோறும் நோதல், மயிர்க்கூச்செறிதல், நெஞ்சு நோதல், அடிக்கடி கொட்டாவி விடல் என்னும் குறிகளையும் காட்டும்.

## மயக்கச்சுரம்

இச்சுரம் தலை சுற்றல், வாந்தியாதல், மயக்கம் என்னும் குறிகளைக் காட்டி, அறிவைக் கெடுத்து, வலி போல் வலித்துக் காயும். இச்சுரம் உள்ள வரையில் அறிவற்று கிடக்கச் செய்யும்.

## பிதற்றல்சுரம்

இந்நோயில் சுரம் வரும் முன்பே மயிர் சிலிர்த்து, கண் சிவந்து, கைகால்களின் பூட்டுகள் நொந்து சுரம் உண்டாகும். இச்சுரம் மிகுதியாகக் காய்ந்து, நோயாளரின் அறிவை அழித்து, கண்டது கண்டவாறாகப் பிதற்றல், படுக்கையில் தங்காமல் அங்குமிங்கும் ஓடல் என்னும் குறிகளைக் காட்டும்.

## புழுச்சுரம்

இது பெரும்பான்மையும் சிறுபிள்ளைகட்கு வயிற்றில் புழு சேருவதால் வரும் நோயாம். இந்நோயில் சுரம் உண்டாகி, இழுப்பு பிறக்கும். பிள்ளைகளின் கையையும் காலையும் வலித்து இழுக்கும். கண் சொருகும். பெருமூச்சு உண்டாகும்.

## மஞ்சள்சுரம்

இச்சுரம் விடாச் சுரமாகக் காய்ந்து, உடல் முழுமையும் மஞ்சளித்தல், வாய் ஓயாது வாந்தியாதல், வாந்தியோடு பித்து வெளியாதல், குருதி வன்மை குறைதல், உடல் ஊதிப்போதல் என்னும் குறிகளைக் காட்டும்.

## தோல்சுரம்

இச்சுரமானது தோலைப் பற்றி வருதலோடு எலும்பையும் பற்றித் துன்புறுத்தி, பெருஞ்சுரமாகக் காய்ந்து, மக்களை மிகவும் வாட்டிக் கெடுக்கும். அன்றியும் இந்நோயில் நாடி மெலிந்து நடத்தல், பிணத்தைப் போல் உடல் வெளுத்தல், வாய் பிதற்றல், வாய்நீர் ஊறல், புண் போல உடம்பு நோதல், அடிக்கடி மயக்கம் உண்டாதல் என்னும் குறி குணங்களையும் காட்டும். இதனால் இது தீவிரச் சுரம் எனவும் வழங்கலாயிற்று.

இச் சுரம் ஒரு நாள் விட்டு ஒரு நாளும், இரண்டு நாள் விட்டு மற்றைய நாளும் வருவதுமாக மாறி மாறி வரும் நோயாம். சில வேளை நாளைக்கு ஒரு முறையாகச் சுரம் வருவதும் உண்டு. இந்நோயில் முத்தாதுக்களும் (வளி, அழல்,

ஐயம்) ஒன்று கூடிப் பல துன்பங்களையும் நன்கு விளைவிக்கக் கூடுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாகச்சுரம்

இச் சுரத்தில் பெருந் தீயே போல் மிகுந்த அனலுடன் சுரம் காயும். இடைவிடாது நீர்வேட்கை உண்டாகும். வயிறு கைகால் முதலியவைகளில் எரிச்சல் தோன்றிப் பற்களைக் கடித்தல், வாய் பிதற்றல், படுக்கையில் கிடவாமல் புரளல் அல்லது எழுந்து திரிதல், நா வறளல், பெருமூச்செறிதல் என்னும் குறி குணங்களையும் காட்டும்.

## கழிச்சல்சுரம்

இது அதிசாரச்சுரம், பித்த அதிசாரச்சுரம் என்றும் அழைக்கப்படுகிறது. கழிச்சல், கண்களை உருட்டி விழித்துப் பார்த்தல், உடல் கறுத்துப் போதல், பிரலாபித்தல், மிக்க உணவை விரும்பல், எப்பொருளும் வேண்டுமென ஆசைப்படல், வாய் பிதற்றல், ஆடல், பாடல்களைச் செய்தல், மயிர்க் கூச்செறிதல், மிக்க உறக்கம் கொள்ளுதல் என்னும் குறிகுணங்கள் உண்டாகும்.

அன்றியும் இச்சுரத்தில் மிகுந்த உரத்த ஒலியோடு சீறிப்போய் தலையிடிப்பு, பேச முடியாமல் அடிக்கடி மயக்கமாதல், உடல் கனத்தல், உடல் தவிப்பு, மிகுந்த நீர் வேட்கை, உடல் நெருப்புப் போல் காய்தல், வியர்த்தல், கண்கள் சிவத்தல், மூக்கு கோபக் குறியைக் காட்டல், பெருமூச்சுத் தோன்றல், வயிறு கழிதல் முதலிய பல குறிகுணங்களையும் காட்டும்.

மேலும் ஒன்றுமின்றியே அழுதல், நகைத்தல், குமரகண்ட வலியைப் போல் இழுத்தல், கண்களை உருட்டி விழித்தல், உடல் முழுமையும் நோதல், குத்தல், அல்லது எரிதல், ஏப்பம், விக்கல், கொட்டாவி, மனத் தடுமாற்றம் என்னும் குறிகுணங்களையும் காட்டும். இப்பிணியில் முக்குற்றங்களும் கூடி முப்பிணியைத் தொடரச் செய்து, உடல் முழுமையும் வியர்த்துச் சில்லிட்டுக் கொல்லும் எனச் சில நூல்கள் கூறுகின்றன.

## மருந்து வேகச்சுரம்

நஞ்சுத் தன்மைகளை உடையதான இரசம், கந்தகம், தாளகம், நாபி, சேங்கொட்டை முதலியவைகளைக் கொண்டு செய்த மருந்துகளை நோய் வன்மைக்கும், உடல் வன்மைக்கும் தக்கவாறு கொடாததினால் உண்டாகும் சுரம்

வீரியம் மிக்கதாம். இதனால் குருதி கேடடைந்து, வாய் புண்ணாய், உடல் வீங்கிச் சுரம் வரும். இத்துடன் இருமல், தும்மல், கழிதல், வாந்தியாதல், உடல் வெளுத்தல் என்னும் குறிகுணங்களும் காணும்.

## நச்சுச் சுரம் (விடச்சுரம்)

இது நஞ்சுத் தன்மை உடைய சிறு பூச்சிப் புழுக்களின் கடியால் வருவதாகும். இந்நோய் கடித்த இடத்தில் வீங்கல், நமை உண்டாதல், எரிதல், என்னும் குணங்களைக் காட்டி உடல் முழுமையேனும் அல்லது முகத்திலேனும் நீர்க்கோத்து உப்புதல், சுரம் காய்தல், அதனோடு விக்கல், ஏப்பம், செரியாமை, பச்சை நிறத்தோடு வாந்தியாதல், மயக்கம், மூர்ச்சை என்னும் குணங்களைக் காட்டும். அன்றியும் கைகளிலும் கால்களிலும் சுரத்தைப் போல் சூடுண்டாகி, நாவறண்டு உலரும். கண்டவர்களை எல்லாம் கட்டியணைத்து 'நான் செத்துப் போய் விடுவேன்' என்று அழுதல், காற்சந்தும் நோதல், பேச்சும் தடுமாறல், மிக்க சுரம் விட்டுவிட்டுக் காய்தல், உடல் மிகுதியாக ஊதல், மயக்கத்தை உண்டாக்குதல், அம்மயக்கம் தெளிந்து மீண்டும் மயக்கம் உண்டாக்குதல் ஆகிய குறிகளையும் காட்டும்.

## சினச்சுரம்

அழல் தாது தன்னளவில் மிகுந்து குருதியை வெம்மை படுத்தியுள்ளபோது, அடக்கமுடியாத சினம் எழுந்து கண்டது கண்டவாறு பேசல், சினம் அடங்காது தலை இடித்து, கண் இருண்டு, மயக்கம் உண்டாகிச் சுரணையற்றுக் கீழே விழச் செய்யும். இதனால் மிக்க சுரம் உண்டாகும்.

## பயச்சுரம்

இந்நோயில் எதுவுமின்றித் திடீரென அச்சம் உண்டாகித் திடுக்கிட்டு உடல் நடுங்கி, வியர்த்துத் தலை கனத்துச் சுரம் எழும். அதனொடு வயிறு எரிதல், கண் சிவத்தல், தலை சுற்றல், மயக்கம், மயிர் சிலிர்த்தல், பெருமூச்சு விடல், சத்தற்றுச் செத்தை போலக் காணல், மார்பு துடித்தல், வயிற்றில் ஒன்றும் இல்லாதது போன்ற தோற்றம், பல்கடித்தல் என்னும் குறிகுணங்களும் காணும்.

## வருத்தச்சுரம்

மனவருத்தம் உண்டாதல் காரணமாகச் சுரம் உண்டாகி, அதில் மனம் வேற்றுமை அடைந்து, தன்னிலை அறியாமல் வாய் பிதற்றல், ஆடல், பாடல், அழுதல், என்னும் குறிகள் உண்டாகும்.

## இச்சை (காமச்) சுரம்

இச்சை மிகுதியால் எழுந்த இச்சுரம் அறிவினை மயக்கி, தன் பண்புகளை இழந்து, உடல் எரிச்சல், கண் எரிச்சல், மயக்கம், நா வறளல், நீர்வேட்கை, மார்பு துடித்தல் என்னும் குறிகளைக் காட்டி, மிகுந்த சுரம் காயும்.

## தெய்வச்சுரம்

இது கடவுளுக்குப் படைப்பதற்காகச் செய்யப்படும் பொருளைப் படைப்பதற்கு முன்பு திருடித் தின்னல், கடவுளைப் பழித்தல் என்பவைகளால் பிறக்கும் சுரமாம். இச்சுரமானது மேற்கூறிய செயலைத் துணிந்து செய்தபின், தன் குற்றத்தை அறிந்து வருந்துவதால் வருமாகையால் இந்நோயில் தான் கொண்ட வருத்தத்தின் அளவிற்குத் தக்கவாறு சுரம் வரும். அச்சுரத்தின் அளவாகத் தலை நோதல், மயக்கம், வாந்தி, தலை சுற்றல், பிரமை முதலியன உண்டாகும்.

## வாந்திச்சுரம் (சர்த்திச் சுரம்)

வாந்திச் சுரத்தில் உடல் வியர்த்துக் கழிச்சல் உண்டாகும். வயிறு பொருமல், உடல் புண்போல் நோகுதல், வயிறு இரைதல், அடிக்கடி வாந்தியாதல், காது கேளாமை, நா வறண்டு உணவு கொள்ளாது, கீழ்வாய் கடுத்துக் கழிச்சல் உண்டாதல் என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

## ஊறுவாய் நீர்ச்சுரம்

சுர நோயில் வாயில் எப்போதும் நீர் ஊறும், வயிறு பொருமும், வாந்தி பண்ணும், மலம் கழியும், பூங்கொடியைப் போன்று உடல் துவளும், வாய் புளித்தல் அல்லது கசத்தல் பெற்றுத் துன்புறும், இரு கண்களும் கறுத்த மேகம் போன்று கறுக்கும். கால் கைகள் சில்லிட்டு வியர்வை உண்டாகும். நீர் வேட்கை மிகுந்து, நீர் குடிக்கில் வாந்தியாகும்.

## காலைச்சுரம், பகல்சுரம், மாலைச்சுரம், இராச்சுரம், அதிகாலைச் சுரம், நடுக்கல் சுரம்

இச்சுரங்களின் குறிகுணங்கள் சற்றேறக் குறைய மற்ற சுரத்தினைப் போலவே காணப்படுமாயினும், சுரம் வருகின்ற வேளையை ஒட்டி இவ்வாறு பெயரிட்டனர் போலும். கடையது சுரத்தில் உண்டாகும் நடுக்கலைக் கொண்டு பெயர் அமைந்தது.

## ஏப்பம், கொட்டாவி, விக்கல் சுரங்கள்

இவை வளிக் குற்றத்தின் அளவாக வருதலின், இவைகள் வளிச்சுரத்துள் அடங்கும்.

## வியர்வைச்சுரம், தூங்காச்சுரம்

இவைகள் அழல் (பித்த) குற்றத்தால் எழுமாதலின் அச்சுரத்தில் அடங்கும்.

## இருமல்சுரம், கட்டிச்சுரம், பலகொப்புளச்சுரம், சீழ்ச்சுரம், கலவிச்சுரம், செயற்கைச்சுரம்

இவைகள் ஐயத்தால் வருவன ஆகையால் ஐயச்சுரத்தில் அடங்கும்

இவை தீவிரச் சுரம் என்னும் தொகுப்பில் அடங்கும் ஆதலின் இந் நான்கு வகுப்பில் கூறிய சுரங்களைத் தனித்துக் கூறவில்லை. ஆக அறுபத்து நான்கு சுரங்களாகும்.

## முத்தாதுக்களின் வேறுபாடுகள்

அறுசுவை உண்டியின் வேற்றுமைகளாலும், தகாத நடத்தைகளாலும் வளி முதலான முத்தாதுக்களில் ஒன்று தனித்தேனும், இரண்டும் கூடியேனும், மூன்றும் கூடி ஒன்றாக இணைந்தேனும் அவைகளின் இயற்கை அளவைக் கடந்து நிற்கும். மெல்லியதாகவும், சற்றுக் கடின வடிவோடும் இரைப்பையின் உட்புறம் படிந்துள்ள அடையை அந்த மிகுந்தெழுந்த தாதுக்கள் தம் வன்மைக்குத் தக்கவாறு இளக்கி உப்பச் செய்விக்கும். இரைப்பையில் இளகிப் பெருத்த அந்த ஐய அடையானது, உடலுக்கு வன்மை தரும் உணவைச் செரிக்காதபடி செய்யும். அவ்வாறு சரிவரச் செரியாத உணவுக்குழம்பானது அதைச் செலுத்துகின்ற துளைகளையும் மயிர்க் கால்களின் கண்ணையும் மறைக்கும். அதன்பின் குடலுக்குச் சென்று, அங்கு இயற்கையாய் இயங்கும் உடல் தீயை விசிறி, மேலெழுப்பி உடல் முற்றும் அவ்வனலைப் பரவச் செய்யும். இவ்வாறு கதித்தெழுந்த அனலே "சுரம்" எனபது சித்தர் கோட்பாடாகும்.

இச்சுர நோயில் உடலின் உணவுப்பையும் குடலும் இயற்கைத் தன்மையிலிருந்து கெடுவதால், உணவின் சாரம் (இரசம்), குருதி, நிணம், சதை முதலான உடற்கட்டுகளும் மற்றும் சிறுநீர், மலம் ஆகிய இவ்விரண்டும் கேடு அடையும்.

புறவழியே உண்டாகும் நச்சுச்சுரம், மருந்துகளின் தீங்கால் பிறக்கும் சுரம், வேகச் சுரம், காதல்சுரம், மருட்டுச்சுரம், வருத்தச்சுரம் சினச்சுரம், நச்சுச் சொல் சுரம், பேய்ச் சுரம், அடிப்பட்டு வரும் சுரம் என்னும் இப்பத்து வகைச் சுரங்களில், மற்றச் சுரங்களைப் போல் இரைப்பையில் உண்டாகும் வேற்றுமைகள் உண்டாகாமலே சுரம் எழுந்து பின் உடற்கட்டுகளையும், கழிவுப்பொருட்களையும் தாக்கி, உயிர்த்தாதுக்களையும் அகட்டையும் (இரப்பை) பற்றும்.

## நாடி நடை

நாடியின் நடையைக் கொண்டு நோய் நாடல் சித்த மருத்துவத்தின் அடிப்படைச் செயலாகும். அழல் குற்றத்தின் அடிப்படையாகத் தோன்றம் சுரநோய் வகைகளைக் கண்டறியவும் சித்தர் நூல்களில் பின்வருமாறு வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன:

- வளி நாடியும் ஐய நாடியும் ஒன்று மற்றொன்றைச் சார்ந்து நடக்கின் அதைச் சுரம் எனத் தெளியலாம்.
- அழல் நாடியானது வன்மையாக நடந்தோடின் அதை என்புச்சுரம் என அறிதல் வேண்டும்.
- அழல் நாடியும் வளி நாடியும் சேர்ந்து நடக்கக் காணில் முறைக்காய்ச்சல் நோய் என அறியக்கிடக்கும்.
- வளி நாடியானது திரண்டுருண்டு பந்து போல் ஓடின் குடலில் மந்தம் பற்றிச் சுரம் உண்டாகும். அச்சுரம் இடைவிடாது காயும். அன்றியும் உடற் கட்டுகளின் வன்மை குறைந்து அறிவையும் மயக்கும்.
- வளி நாடி சிலும்பி நின்று மெதுவாக நடக்கில் தோன்றும் சுரம், பெரும் காய்ச்சலாகத் தோன்றாமல், மாலையில் வரும் சுரங்களில் ஒன்றாகிய என்புச்சுரமாகும்.
- அழல் நாடி இட, வலம் பிசகாமல் நேராகப் பச்சைப் புழு தயைாலூர்ந்து பின் பாகத்தைச் சற்று முன்னிறுத்தி உடலை மேலுக்காக வளைத்து ஊர்ந்து செல்லுவது போல் நடக்கின், உடலில் வறட்சி உண்டாகி, உடம்பு உலர்ந்தால் அதை என்புச் சுரமெனக் கொள்ளலாம்.
- வளி நாடி தன் இயற்கை வன்மையிலிருந்து மிகுந்து நிற்குமாயின் ஊனத்தை விளைக்கும் நோய்களை வருவிக்கும். அவ்வேளையில்

அழல் நாடியானது வன்மை பெற்று நடக்குமாகில் சுரம் மிகக் கடினமாகத் தோன்றும்.

சுரநோய்களின் துணை நோய்கள்

சுர நோய்கள் தம்மளவில் தோன்றி, நீங்கும் தன்மை உடையனவல்ல. அவை அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பல்வேறு துணை நோய்களையும் தோற்றுவிப்பதாகச் சித்தர்கள் கண்டறிந்து கூறியுள்ளனர். அகத்தியர் சுர நூல்-300 என்னும் நூலில் சுர நோய்களைச் சார்ந்து வரும் நோய்கள் எவை என்று விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவை பின் வருமாறு:

- சுரமதே கனலதாகும்: சுரம் வந்து துன்புறுத்துங்கால் அழல் தாது மிகுந்து, செந்நீர் முறிந்து குறைந்து நின்ற நிலையில் சுரம் உண்டாய் கொழுமை கெட்டு, நீர்க்கடுப்பு, என்புருக்கி முதலிய வெப்பு நோய்கள் தொடர்ந்து தோன்றும்.
- சுரமதே சீதமாகும்: சுரநோய் உள்ள காலத்து அழல், வளி தாதுக்கள் ஒன்றுகூடி மிகுதலாலும் அல்லது ஐயம் மிகுதலாலும் வெப்பம் குறைந்து, வளியின் சேர்க்கையால் குரல் கம்மல், சீதம் கண்டு, வாதம் முதலிய ஐயக்கூட்டின் நோய்கள் தோன்றும்.
- சுரமதே தோடமாகும்: சுரம் உள்ள பொழுது மேற்கொள்ளப்படும் ஆகாத உணவுகள், தகாத செயல்கள் ஆகியவற்றில் குற்றமெழும். சுரம் நீங்கிய பின் பத்து நாட்கள் வரையில் குளிர்ந்த நீரைப் பருகுதலும், புளிப்பு, உப்பு, கைப்பு, துவர்ப்பு உள்ள பொருட்களை உண்ணுதலும், சந்தனம், புனுகு போன்ற நறுமணங்களைக் கொள்ளுதலும், மிக்க காற்று, பனி, நிலவு உள்ள இடங்களில் படுத்தலும், விரைந்த நடை, ஊர்தி ஏற்றம், சினம், அழுகை, பெண் இச்சை இவற்றை நிகழ்த்தலாலும் மிகுந்த சுரம் மீண்டும் வருமென அறிக. இதனையே சன்னிதோடம் எனக் கூறுவர்.
- சுரமதே சோகையாகும்: வளிச் சுரம், மாறல்சுரம், குளிர்சுரம், தாதுகதச் சுரம் ஆகியவைகள் நீடித்து நிற்குமாயின், அழல் மீறி, குருதி நீர்த்துவிடும். அதனால் காமாலை, சோபை, பாண்டு, கல்லீரல் மலர்ச்சி, மண்ணீரல் மலர்ச்சி இவைகள் உண்டாகும்.

- சுரமதே மேகமாகும்: பித்தச்சுரம், வெஞ்சுரம், உட்சுரம், என்புச்சுரம், வறட் சுரம், வேனில் சுரம், விடாச்சுரம், அம்மைசுரம் ஆகிய சுரங்கள் வெப்பத்தையே முதன்மையாகக் கொண்டு, அதற்குரிய பண்புகளையே வெளிப்படுத்தலால், முடிவில் அடிவயிற்றிலும், குறிநாளத்திலும் அவ்வெம்மையின் கொடுமையால் புண்கள் உண்டாகி, நீர்க்கடுப்புடன் வெளிப்பட்டு, புண்பட்ட நாளத்தின் வழியாய் வெள்ளை வீழ்தல் அல்லது நீரிழிவு முதலிய மேகநோய்கள் வந்து சேரும்.

- சுரமதே கபமதாகும்: ஐயச்சுரம், ஐயவளிச்சுரம், இருமற்சுரம், வறட்சுரம், உட்சுரம் முதலிய சுரங்களால் குருதி குறையப் பெற்று, நுரையீரல் வெப்பமடைந்து, அதன் தன்மையும் செயலும் கெட்டு, ஐயத்தை வெளிப்படுத்தாமல், ஈளையைத் தங்கச் செய்து ஐய நோய்களைப் பிறப்பித்து, உடலை வற்றச் செய்யும்.

- சுரமதே சாரமாகும்: வளிச்சுரம், கழிச்சல்சுரம், வளிஐயச் சுரம், மாறல்சுரம் ஆகிய சுரங்கள் நாட்பட்டு நிற்குமானால், உடல் வலிமையையும், கொழுமையையும் குன்றச் செய்யும். அவை பின் குணமடையினும், உண்ணும் உணவு செரியாது. மூலத்தில் வாயு தங்கி இடைவிடாக் கழிச்சல் நோயை உண்டாக்கும்.

- சுரமதே தாகமாகும்: அழல் சுரம், அழல் வாதச்சுரம், விடாச்சுரம், சாரற் சுரம், கறைச்சுரம் முதலிய உடற்கட்டுகளைப் பற்றி வரும் சுரங்கள் நீடித்திருந்து நீங்கினும், உடற்கட்டுகள் இளைத்து, நா, கழுத்து, தாடை நரம்பு இவைகளில் வெப்பமுண்டாய் வருத்தலால், நீர் வேட்கை அதிகப்படும்.

- சுரமதே வறட்சியாகும்: வெஞ்சுரம், உட்சுரம், வறட்சுரம் மருந்து வேகத்தால் வருஞ்சுரம், விடாச்சுரம் முதலிய சுரங்கள் கண்டு நீங்கிய பின், சுர வேகங்களைத் தணிக்கும் மருந்துகள் கொடாமையின், அவ்வெப்பம் ஏழு உடற் கட்டுகளிலும் பரவி அவைகளை வாட்டி உலர்த்தி விடுமாதலால் குருதி வறளும். அதனால் சோகையும், என்பு சத்துக் குறைவதால் என்புருக்கி நோயும் உண்டாகும். அழலை முன்னிட்டு வரும் அழல் சுரம் மற்றும் அழலையச் சுரம் எவ்வழியிலேனும் குருதியை வெளிப்படுத்தும். இத்தகைய

நோய்க்குக் குருதி அழல் (ரத்தப் பித்தம்) என்று பெயர். இக்குருதி அழல் நோயானது காசம், இளைப்பு ஆகிய நோய்களை எளிதில் உண்டாக்கும்.

❖ **சுரமதே சீழுமாகும்:** மந்தச் சுரத்தில் உணவு செரியாது, ஊண் சாரம் கெட்டு, அதன் வழியால் மற்றைய உடற்கட்டுகளும் கெடுதியடைந்து, கட்டி முதலிய நோய்களைத் தோன்றச் செய்து, அவற்றினின்று சீழை வடியச் செய்யும்.

❖ **சுரமதே மஜ்ஜையாகும்:** வறட்சுரம், காமச்சுரம், இருமல்சுரம் ஆகிய சுரங்களில் என்பிலும் மூளையிலும் வெப்பு கொதித்தெழுந்து மூளையைக் கரைக்கும்.

❖ **சுரமதே கணையதாகும்:** குழந்தைகளுக்குத் தோன்றுகிற என்புச்சுரம் அழல்சுரம். மாந்தச்சுரம் ஆகியவைகள் குழந்தைகளை வருத்தமடையச் செய்து, பின் கணை நோயைப் பிறப்பிக்கும். இந்நோய் பன்னிரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகட்கே வருவதுண்டு.

❖ **சுரமதே இருமலாகும்:** ஐயச்சுரம், ஐயவளிச்சுரம் என்புச்சுரம். உட்சுரம் இத்தகைய சுரங்கள் உண்டாய் நீங்கும் தருவாயில் ஐய உறுப்புகளில் வெப்பு உண்டாகில் இருமல் நோய் உண்டாகும்.

❖ **சுரமதே க்ஷயமதாகும்:** மேற்கண்ட சுரங்களேனும், வறட்சுரம். விப்புருதி சுரங்களேனும் உண்டாய், சுரம் தணிந்தும் அதன் வேகம் தணியாது உடலைப் பற்றி நிற்குமாயின், குருதியைக் கெடுத்து, உடலை இளைக்கச் செய்து இளைப்பு நோயாகிய ஷயநோயை வரவழைக்கும்.

❖ **சுரமதே சூலையாகும்:** வளிஐயப் பெருக்கால் எழுந்த சுரங்களில் குருதி கெட்டு சந்துகளில் நீர் தங்கிக் கலங்குவதால், முட்டிகளில் குத்துவது போன்ற சூலை நோய்கள் தோன்றும்.

❖ **சுரமதே சொறியதாகும்:** நாளும் வரும் சுரம், ஒவ்வொரு நாள் விட்டு விட்டு வரும் சுரம், மாறல் சுரம் இவைகள் வளி அல்லது வளிஐயம் அல்லது அழலையம் இவற்றுள் எவ்வகைச் சுரமேனும் மிகுதியாய் வந்து, உணவைச் செரியாவண்ணம் செய்து குருதியைக் கெடுத்துச் சொறியை உண்டாக்கும்.

❖ சுரமதே விரணமாகும்: மேற்கூறியவாறு நாட்பட்டு உள்ள சுரங்களில், சுரத்தின் கொடுமையால் உடற்கட்டுகளின் வன்மை குறைந்து, அச்சுரம் நிற்கும் காலத்து, அசைவற்றுப் படுத்த படுக்கையில் இருக்க நேர்தலால் இடுப்பு, முதுகு, தொடை, என்பு முதலிய இடங்களில் புண்கள் உண்டாகும்.

❖ சுரமதே பித்தமாகும்: பித்த மிகுதியால் ஏற்படும் அழல் சுரம், அழல் வளிச் சுரம், வெறிச்சுரம் முதலிய சுரங்கள் நீடித்த காலம்வரை இருப்பின், சுரம் நீங்கிய பின்னும் நோயின் வன்மையால், அறிவு கலங்கின பித்தன் எனக் கூறுமாறு பைத்திய நோயைப் பிறப்பிக்கும்.

❖ சுரமதே வாதமாகும்: ஐயச்சுரம், ஐயவளிச்சுரம் என்னும் இச்சுரங்களில், ஐயத்தை விலக்கக்கூடிய மருந்துகளின் வேகம் மிகுதிப்பட்டால், ஐயத்தைத் தணித்து, வளியைப் பெருகச் செய்யும். அக்காலத்தில் மலமும் நீரும் கட்டுப்பட்டு, வளி நோய்களை விளைவிக்கும். குடலில் வாயுவை அதிகப்படுத்தும்.

❖ கரமதே ஈளையாகும்: ஐயச்சுரம், ஐயவளிச்சுரம் ஆகியவைகளில் ஐயத்தின் பெருக்கால் வளித்தாது குறைந்து, வளியின் செயலாகிய மலங்களை வெளித் தள்ளும் செயல் குன்றுவதால், நுரையீரலின் மலமாகிய சளியை வெளித் தள்ள முடியாது தங்கி, ஈளை நோயைப் பிறப்பிக்கும்.

❖ சுரமதே இழுப்பாகும்: மேற்கூறிய சுரங்களில் வளி குறையும். அவ் வளியின் குறைவால், மலம் கெட்டு, கபமும் கூடி, இழுப்பு (வலிப்பு) நோய் தோன்றும்.

# 4

## சுர நோய் மருத்துவம்

### முன்னுரை

பொதுவாகச் சுரம் வருவதற்குஉணவு முறையில் உள்ள கோளாறுகளே முதன்மைக் காரணமாய் அமையும் என்பது சித்தர்களின் கொள்கை. எனவே இந்நோய்க்குரிய மருத்துவத்தில், முதன்மையாய் நின்ற கோளாறுகளைப் போக்கித் தன்னிலை திரிந்த முத்தாதுக்களையும் தத்தம் வழி மீண்டும் நிகழச் செய்யப் பட்டினி, கழிச்சல் (பேதி), வாந்தி முதலியவைகளைச் செய்வித்து நோயைத் தீர்க்க வேண்டும். இவைகளிலும் நீங்காத இடத்தில் குடிநீர், பொடி, மாத்திரைகள், மெழுகு, பற்பம், செந்தூரங்கள் முதலியன கொடுத்தும், நோயில் அப்போதைக்கப்போது எழும் துணை நோய்கட்கு மூக்குப்பொடி, மூக்குத்திரி, கண் மருந்து முதலியன கொடுத்தும், வியர்வை உண்டாகுமாறு செய்தும் குணப்படுத்துவது சித்த மருத்துவ முறையாக அமைகின்றது.

### பட்டினி

நோய்கட்கு ஏற்பப் பட்டினி இடும் நாள் அளவுகள் பற்றி சித்த மருத்துவ நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

வளிச் (வாத) சுரத்திற்கு ஏழு நாளும், அழல் (பித்த) சுரத்திற்கு ஆறு நாளும், ஐயச் (கப) சுரத்திற்கு ஒன்பது நாளும், முக்கூட்டு (சன்னி) சுரத்திற்குப் பத்து நாளும் பட்டினி இட சுரம் தணியும். அதிலும் தணியாவிடில் மருந்து, கஞ்சி முதலியன முறைப்படி கொடுத்துவர சுரம் விட்டுவிடும்.

கடும் பட்டினியாய் இருக்க விடாமல், வளிச் சுரத்தில் மூன்று நாட்களுக்கு உணவு கொடாது வைத்தலும், அழல் சுரத்தில் குடிநீரும் சிறு உணவும், ஐயச் சுரத்தில் கஞ்சியும் மருந்தும் கொடுத்துவர சுரம் தணியும் என்னும் ஒரு கொள்கையும் உண்டு.

சுரம் தோன்றிய அன்றே பட்டினி வைத்து, இரண்டாம் நாள் காலையில் பல் விளக்கி, நா வழித்து, வாயை வெந்நீரால் கொப்பளித்துப் பின் முகத்தைக் குளிரக் கழுவி, உடலையும் தலையையும் துணியினால் சுற்றி, இடக்கை கீழாகப் படுக்குமாறு செய்யவும். இவ்வாறக மூன்று நாட்களும் கழித்த பின்னர், நான்காம் நாள் காலை காய்ந்து ஆறிய வெந்நீரைப் பருகச் செய்து, ஒரு தேற்றாங் கொட்டையை மென்று சுவைத்துத் தின்னும்படி செய்ய சுரம் நீங்கும்.

இவ்வாறாய்ப் பட்டினியின் நாள் அளவை உணவு முறையில் உள்ள கோளாறுகளைத் தடுத்தற்கும், கோளாற்றால் தன்னிலை திரிந்த உயிர்த்தாதுக்களைத் தத்தம் வழி மீண்டும் நடக்கச் செய்தற்கும் ஏழு நாட்கள் முதற்கொண்டு பத்து நாட்கள் வரை விதித்திருக்க, சித்த மருத்துவ நூலோர்களில் சிறந்தவரான தேரர் பட்டினியைக் குறை கூறியுள்ளார்.

பட்டினி முறையைத் தேரர் இகழ்ந்து கூறியது எதற்கென நோக்கின், தென்னாட்டு மக்களின் உணவு எளிதில் செரிக்கக் கூடியதும், அறிவைப் பெருக்கி உயிருடன் உடல் நிலைத்தற்கான வன்மையை மட்டும் கொடுக்கக் கூடியதுமாக இருத்தலின், இம் மக்கள் மிக்க பருமனும், மிக்க உயரமும், மிக்க வன்மையும் இல்லாது இருக்கும் நிலையில், இவர்கட்கு ஏழு நாள் முதற்கொண்டு பத்து நாட்கள் வரையில் இடப்பட்ட பட்டினி தகுதி உடையதன்று, இச்செயல் இம்மக்கட்குக் கெடுதிகளை விளைவிக்குமேயன்றி நன்மையைப் பயவாது எனக் கருதியே போலும்.

ஆயினும் சுரமுற்ற காலத்தும், சுரமற்ற காலத்தும் உணவின் பகுதிகளை எப்பொழுதும் உண்பது போன்றே உண்ணலாம் என்பதும் தேரர் கருத்து அன்று. சுர நோயில் சுரத்தின் வன்மைக்குத் தக்கவாறு உணவை அளவிடல் வேண்டும். நடைமுறைப் பயிற்சி அனுபவமின்றி வெறும் நூலறிவு மாத்திரம் கொண்டு பட்டினி (Diet) முறையை நிர்ணயிப்பதையே தேரர் குறை கூறுகின்றார். அவ்வாறு அல்லாமல் மருத்துவ நூல் தெளிவும், பயிற்சி அனுபவமும் பெற்று, மருத்துவத்தின் நுணுக்கங்களைக் கண்டறிந்த மருத்துவர், நோயாளியின் வாழும் இடம், பருவம், உடல் வன்மை முதலியவற்றை ஆராய்ந்து, அதற்குத் தகுந்தாற்போல் உணவு முறையை வகுப்பதை அவர் மறுக்கவில்லை என்றே கொள்ளல் தகும்.

உலகில் உள்ளவர்கள் "லங்கணம் பரமாவிழ்தம்" (பட்டினி பெரு மருந்து) என்று சொல்வது வழக்கமாக இருத்தலின் அதனை முறைக்காக நூலில் கூறவேண்டி இருப்பினும், நோயாளிகளின் நிலைமைக்கு ஏற்றவாறு எளிதில்

செரிக்கக்கூடிய சிறு உணவுகளைக் கொடுத்து, நோயை நீக்குதல் மருத்துவர்களின் கடமையாகும். உணவு முழுதும் இல்லாது இருப்பினும், அளவுக்கு விஞ்சினும், நோய்களைப் பெருக்கி, உடம்பினுக்குக் கெடுதியைச் செய்வதாகும் என்பதும் தேரர் கருத்தாகும்.

அதிக உணவு கொடாமல், சிறு உணவு கொடுக்க வேண்டும் என்பதும், ஏழு நாள் சென்ற பின் பொருந்தின வண்ணமாய்ச் சிறுகச் சிறுக உணவைப் பெருக்கிக் கொண்டே வருக என்பதும், சுரம் நீங்கும் மட்டும் சோறு காட்டக் கூடாது என்பதும் திருமூலரின் கொள்கையாகத் தெரிகிறது.

மேலும் "சிறு உணவு பெரு மருந்து" என்னும் மருத்துவப் பழமொழியாலும் சுரம் தீரும் வரைக்கும் சோறு முதலிய பெரு உணவைத் தராமல், கஞ்சி கொடுத்து வருதலே நலம் எனத் தெரிகிறது.

மிகு உணவால் உடல் பருத்த நிலையில் மந்தம் உண்டாதலால் அதன் அளவாகத் தன்னிலையில் திரிந்த தாதுக்களைத் தன்னிலைப் படுத்தி, பசித் தீயைத் தூண்டி, உடலில் தோன்றும் கனத்தைக் குறைத்து, சுரத்தைத் தணிக்க, உடலின் தன்மைக்குத் தக்கவாறு பட்டினியைக் கையாளுதல் நன்மை பயக்கும். அளவு கடந்து பட்டினி இடின் உடலின் வன்மை குன்றி, வறளும். சோம்பல், வாய் குமட்டல், களைப்பு, தூக்கம், மயக்கம், தாகம், வாந்தி, இருமல், கடின மூச்சு, விக்கல், மிகுசுரம் இவைகள் உண்டாகும். ஆதலின் உடலை இளைக்கச் செய்யும் சுரங்களிலும், சுரத்திற்கு முன் வேறு நோய்களால் மெலிந்த நிலையிலும், காதல், சினம், வருத்தம், பயம் போன்றவைகளால் உண்டாகும் சுரங்களிலும் பட்டினியை அறவே நீக்கல் வேண்டும்.

## கழிச்சல் (பேதி)

வளிச் (வாத) சுரத்தில் இயல்பாகவே எரு (மலம்) கட்டுப்படும். அதனை நீக்க சஞ்சீவி மாத்திரை, கோடாசூரி மாத்திரை, அட்டபயிரவம், தாழம்பூ மாத்திரை, இலவங்காதி மாத்திரை, அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு முதலிய வளி அடக்கி மருந்துகளை உடல் வன்மைக்குத் தக்கவாறு அளவு படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

அழல் (பித்த) சுரத்தில் தானாகவே சிறுகச் சிறுக வயிறு கழிதல் இயற்கை ஆதலால் கழிச்சலை உண்டாக்கும் மருந்துகளைக் கொடுப்பது நன்றன்று. இச்சுரத்தில் அப்படி வெளிப்படாதிருப்பின், வெளிக்குப் போக அதிமதுரம்,

பற்பாடகம், சீமை சாமந்தி, நிலவாகை ஆகிய இவைகளை வகைக்கு 1/4 பலம் கொண்டு, அரைப்படி நீரில் இட்டு, அரை ஆழாக்காய்க் காய்த்து வடித்த குடிநீரைக் கொடுக்க, ஒன்று அல்லது இரண்டு முறை கழியும்.

ஐய (கப) சுரத்தில் முற்றும் வெளிக்குப் போகாமல் இருத்தல், தானாகவே சிறுகச் சிறுகக் கழிதல், சில வேளை கட்டுப்படுதல் போன்ற கவலையை உண்டு பண்ணும். இதற்கு அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு போன்றதை நோய்க்குத் தக்கவாறும் நோய் வன்மைக்குத் தக்கதாகவும் அளவிட்டுக் கொடுத்து, எருவைக் கழித்தல் வேண்டும். சில வேளை வெளிப் போக்குக்கான மருந்தைக் கொடுக்க வேண்டி இருப்பினும் நோயினர் இருக்கும் நிலையில், வாயின் வழியே பேதி மருந்தைக் கொடுக்க முடியாத காலத்தில், பல்லில் தடவுவதும், பற்றிடுவதும், மூச்சில் முகரச் செய்வதுமான முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

## வாந்தி

வளிச் (வாத) சுரத்திலும், அழல் (பித்த) சுரத்திலும் வாந்தி எடுக்க மருந்து கொடுப்பது நன்றன்று. ஐயச் (கப) சுரத்தில் இயற்கையாக நுரையீரலிலும் சமை களத்திலும் (இரைப்பை) கோழை கட்டிக் கொள்வது இயல்பாகையால், நோயின் வன்மைக்குத் தக்கபடியும் நோயாளியின் உடல் வன்மைக்குத் தக்கபடியும் வாந்தி மருந்தைக் கையாள வேண்டும். கூடுமாயின், வாந்தி மருந்தும், வயிறு கழியும் மருந்தும் ஒரே மருந்தாக இருத்தல் நலம். அல்லது கழிச்சல் செய்யும் மாத்திரைகட்குத் துணையாகக் கொள்ளும் வகையில், வாந்தி செய்யக் கூடிய பச்சிலை வகைகளையேனும் கடைச் சரக்குகளையேனும் சேர்த்துக் கொள்ளலாம். சான்றாகச் சஞ்சீவி மாத்திரைகளை இலைக் கள்ளிச் சாறு அல்லது உத்தாமணிச் சாறு இவற்றுள் ஏதேனும் ஒன்றில் இழைத்துக் கொடுக்க, வாந்தியை உண்டாக்குவதுடன் கழிச்சலையும் உண்டுபண்ணும். வெண்காக்கட்டான் மாத்திரையும் கோரோசனைப் பொடியும் கொடுக்க, வாந்தியையும் கழிச்சலையும் பிறப்பிக்கும்

## வியர்வை பிடித்தல்

நஞ்சால் பிறந்த சுரங்கள் ஐயத்தால் தலையிலும் உடலிலும் நீரேற்றம் கொண்டு தலைவலி ஏற்படுத்தல், தலைக்குத்தல், உடல் முழுமையும் கனமாய் இருப்பது போன்ற தோற்றம் உண்டாதல் முதலியவைகட்கு, வியர்வை பிடித்தலால் நன்மை ஏற்படும்.

வியர்வை பிடித்தலால் ஐயத்தால் உடலில் ஏற்படும் கொடுமையான தலைபாரம், மிகுந்த வெப்பம், விடாக் காய்ச்சல் ஆகிய இவை யாவும் நீங்கும். உடல் நலமடையும். வெறுந் துணியையாகிலும், கரித் துணியையாகிலும் சுருட்டிக் கொளுத்தி அதனின்று எழும் புகையை மூக்குத் துளைக்குள் செல்லும்படி செய்ய, நீர் வடிந்து அரந்தையுடன் கூடிய பிணிகளாகிய நெஞ்சுவலி முதலியவைகள் நீங்கும். உடல் சுடர் போல் விளங்கும்.

குளிர்சுரங்களில் ஐயத்தால் பிறக்கும் சுரங்களிலும் வியர்வை பிடிக்கில் நன்மை உண்டாகும். வியர்வை வெளி வருதலால் உடலில் தங்கிய கெட்ட நீர்கள் வெளியாகி, உடல் குடைதல், கனமாக இருத்தல் ஆகியன குறையும். அன்றியும் சுரத்தின் கொடுமையும் குறையும்.

நொச்சித் தழை நான்கு பிடி, மஞ்சள் 1/2 பலம் இவைகளை ஒன்றிரண்டாக இடித்து, குடிநீர் செய்வது போலக் காய்ச்சி வடித்து, மீண்டும் நன்றாகக் காய வைத்து, அடுப்பில் செங்கல் துண்டுகளைப் போட்டுப் பழுக்கக் காய வைத்து, ஒவ்வொரு கல்லாக அதில் இட்டு வியர்வை பிடிக்கவும்.

## கண் மற்றும் மூக்கில் மருந்திடல்

பெரும்பாலும் ஐயத் தாது பாதிப்பாலும், முப்பிணித் தொடர்பினாலும் வரும் சன்னி நோயாளர்களுக்குக் கண்ணிலும் மூக்கிலும் மருந்திட்டுத் தன்னிலை திரிந்த உயிர்த்தாதுக்களைத் தன்னிலை படுத்தல் வேண்டும்.

கண்ணில் இடும் மருந்து வகைகளாகிய மை, கலிக்கம், மூக்கிலிடும் பொடி, திரி வகைகள் ஆகிய இவற்றின் செய் முறையும், வழங்கும் வகையும் சித்த வைத்திய திரட்டு, தேரன் வெண்பா, சேகரப்பா முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளன.

## கண் மருந்துகள் (கலிக்கம்)

- ❖ தாய்ப் பாலில் ஒரு இல்வங்கத்தை இட்டு ஊற வைத்துத் துணியில் முடிந்து கண்ணில் பிழிய முப்பிணியில் காணும் சேட்டைகள் போம்.
- ❖ இலிங்கம், அரிதாரம், பீதரோகணி இம்மூன்றையும் எலுமிச்சம் பழச்சாற்றினால் அரைத்து, உலர்த்தி, தக்கபடி கண்ணில் இடவும்.
- ❖ தும்பைவேர், சுக்கு, மிளகு, திப்பிலி, இவைகளைச் சம அளவில் தாய்ப்பாலில் அரைத்து, அதை மீண்டும் தேனிலும் அரைத்து

உருண்டை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு, துளசிச் சாற்றில் குழைத்துக் கண்ணில் இடலாம்.

## மூக்கு மருந்து

- திப்பிலி, மஞ்சள், ஓமம், மிளகு இவைகளை நுண்ணிய பொடியாக்கிச் சீலையில் தூவி திரியைப் போல் சுருட்டி வேப்பெண்ணெயில் துவைத்துக் கொளுத்தி, அப்புகையை மூக்கில் இரு துளைகளுக்கும் செல்லும்படியாகச் செய்வதால் மூக்கினின்று மழைத்துளி போன்று நீர் சொட்டி, உடலில் தங்கிய நீர் வடிந்து, சுரம் போம். தலையின் பாரம் அறும். அப்புகையை உடல் முழுமையும் படும்படியாகச் செய்தலும் நன்று. தும்பைச் சாற்றையும் மூக்கில் விடலாம்.

## பற்று இடல்

- வேலிப்பருத்தி இலையின் சாறு, வெள்ளுள்ளி, மூங்கிலரிசி, மூங்கிலுப்பு, வெடியுப்பு, ஆகிய இவைகளை நீரிலிட்டு, அரைத்துக் கொதிக்க வைத்து மேலுக்குப் பற்றிட சுர நோயேயன்றி உடலில் உண்டான குத்தல், குடைச்சல் முதலியனவும் நீங்கும்.
- கை,கால் சந்து கடுத்தல், முப்பிணிநோய் இவைகட்கு வெடியுப்பு, நாவல்கொட்டை, நேர்வாளச் செடியின் வேர் ஆகியவைகளைப் பொடித்து புன்னை நெய்யில் பற்றிடப் போம்.
- தேற்றாங்கொட்டையைப் பொடித்து வேப்பெண்ணெயில் குழைத்துப் பற்றிடச் சுர நோயில் உண்டான மார்படைப்பு, பிடிப்பு, வளிநோய், வல்லை முதலியவைகளைப் போக்கும்.

## படுக்கை

பலநாட்கள் நோயுற்றார் படுக்கையிலேயே இருக்க வேண்டி இருத்தலால், அப்படுக்கை இளைத்த உடலை உறுத்திப் புண்படுத்தாதபடி அமைதல் வேண்டும். அதிலும் இதைச் சுர நோயில் முக்கியமாய் நோக்குதல் வேண்டும். ஆதலால் சுர நோயுற்றாருக்குப் படுக்கை இலவம் பஞ்சால் ஆகிய மெத்தையாக இருப்பின் நலம் தரும்.

இக்கருத்தைக் கொண்டே தேரையர் "இலவின் பஞ்சப்படுக்கைக் கேகும் அனலம்" எனவும் ஔவையார் "இலவம் பஞ்சில் துயில்" எனவும் கூறினர் போலும்.

இலவம் பஞ்சுப் படுக்கையைப் பெற முடியாத எளியோர்கட்குச் சிற்றீச்சம்பாய் நன்மையைத் தரும்.

***சிற்றீசுப் பாயில் தினமும் படுப்பவருக்***
***கற்றிடுமே காந்தல் உடம்புலருஞ்–சுற்றிய தோர்***
***வாயுவறும் பித்தமறும் மற்றுங் கபந்தீரும்***
***தாயகமா மிக்குணத்தைச் சாற்று.***

எனத் தேரையர் குணவாகடத்தில் கூறப்பட்டுள்ளது.

## விசிறி

சுரத்தின் வன்மை, வெப்புத் தணிந்த பின்னர் வியர்த்தலும், ஆயாசம், இரைப்பு முதலியன தொடர்தலும் சுரத்தின் இயல்பாதலால் இவைகளைத் தணித்தற்பொருட்டு விசிறி கொண்டு விசிறி, தூய்மையான காற்று நோயினர் உடலில் படுமாறும் உள்ளுக்குச் செல்லுமாறும் செய்ய வேண்டும். அழல் நோயினருக்கு மயில் விசிறியும், வளி, அழல், ஐயமாகிய முத்தாது நோயினர்க்குப் பனை விசிறியும், அழல், எரிச்சல் முதலிய நோயாளிகளுக்கு வெட்டிவேர் விசிறியும் நன்று எனத் தேரையர் குணவாகடத்தின் மூலம் அறியலாம்.

## மயில் விசிறியின் குணம்

மயிலின் தோகையால் கட்டிய விசிறியைக் கொண்டு வீசின், முப்பிணி (சன்னி), குன்மம், தலைச்சுற்றல், விக்கல், வியர்வை, அழல், வளிக்குற்றம் உட்டிணம் இவைகளால் உண்டாகும் துன்பங்கள் குணப்படும். அறிவும் ஒளிரும்.

## பனை விசிறியின் குணம்

பனை விசிறியின் காற்றால் மிகுந்த வளி, அழல், ஐய நோய்களும், நாவின் சுவையின்மையும் குணப்படும்.

## வெட்டிவேர் விசிறியின் குணம்

வெட்டிவேர் விசிறியால் அழலின் பெருக்கு, எரிச்சல், தாகம், மோகம் இவை தீரும்.

## போர்வை

குளிர் சுரத்திலும், கபங்கூடிய சுரத்திலும் போர்வைகள் முக்கியமானவை. மேலும் சுரத்தால் உடல் இளைத்த காலத்துக் குளிர்வாடையால் உடனே

நீர்கோத்துக் கொள்ளும் ஆதலால், நோய் நீங்கும் மட்டும் உடலைக் காத்தல் முக்கியமானது. இதற்குக் கம்பளப் போர்வைகள் சிறந்தனவாகும்.

## குடிநீர் மருந்து வகைகள்

சித்த மருத்துவ நூல்களில் சுரநோய் வகைக்குக் குடிநீர்களும் அவற்றோடு இணைத்து உட்கொள்ள வேண்டிய மருந்து வகைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றைத் தொகுத்துக் காணலாம்:

வளிச்சுரம்

- ❖ சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறுகாஞ்சொறி வேர், சீந்தில்தண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம் வகைக்கு ஒரு பலமாகக் கொண்டு முறைப்படி குடிநீரிட்டுக் காலை மாலைகளில் கொடுக்கவும்.
- ❖ சிறுமணி நெற்பொரி ஒரு படியுடன், மேல்தோல் சீவிய சுக்கு, கணு நீக்கிய அறுகன்வேர் இவைகளைச் சீலையில் முடிந்து, குடிநீரிலிட்டு முடிக்கஞ்சாகக் காய்ச்சி, சுரம் தொடங்கிய நாள் முதல் ஏழு நாள் கொடுத்து வரவும். எட்டாம் நாள் முதற்கொண்டு சோறும் மிளகு நீரும் (ரசம்) கொடுக்கவும். முற்கூறிய குடிநீர் இரண்டு படியுடன், கொன்றைத் தோல், இந்துப்பு, சுக்கு, விலாமிச்சம், சிறுகாஞ்சொறி, சீந்தில், பங்கம்பாளை, பேய்ப்புடல், சேவகன்பூண்டு, கடுகுரோகணி, திரிபலை வகைக்கு ஒரு கழஞ்சு இடித்துப் பொடித்து அதை உழக்காகக் காய்ச்சி, அதில் சிறிது திப்பிலிப் பொடி கூட்டிக் காலை, மாலைகளில் குடிக்க, வாதச் சுரமும் அதனுடன் கிளைக்கும் குறிகளாகிய கீல்களில் குத்தல், நெஞ்சுளைவு, குளிர் முதலியனவும் போம்.
- ❖ சுக்கு இரண்டு கழஞ்சு, சாரணைவேர் இரண்டு கழஞ்சு, பேராமுட்டி வேர் ஒரு கழஞ்சு, வெள்ளுள்ளி இரண்டு கழஞ்சு இவைகளைக் கூட்டி ஒன்றிரண்டாக இடித்து, இரண்டுபடி நீரிட்டு உழக்காகக் காய்ச்சி வடித்து, திப்பிலிப் பொடி கலந்து மாலைகளில் ஆழாக்கு அளவாகச் சாப்பிடவும்.
- ❖ தேவதாரம், கோரைக் கிழங்கு, கண்டங்கத்திரி, சுக்கு, மிளகு, கோட்டம், சிறு தேக்கு, பற்பாடகம், திப்பிலி, கடுக்காய் வகைக்கு ஒரு கழஞ்சாகக் கூட்டி, எட்டுப்படி நீரிட்டு, ஒருபடி நீராகக் காய்ச்சி வடித்து,

அதில் ஓர் ஆழாக்கு நீருடன், புதிய தேனும் சிறிது திப்பிலியும் கூட்டிக் காலை, மாலைகளில் கொடுக்க, வளிச்சுரம் போம்.

❖ கண்டங்கத்திரி, சீந்தில்தண்டு, சுக்கு, முத்தக்காசு, கோட்டம், சிறுகாஞ்சொறிவேர், நிலவேம்பு, திப்பிலி, பற்பாடகம், சிறுதேக்கு இவை வகைக்கு மூன்று கழஞ்சாகக் கொண்டு, இரண்டு படி நீரிட்டுக் கால் படியாகக் காய்ச்சி எடுத்து, அதில் காலை, மாலைகளில் ஆழாக் காகக் கொள்ள, வளிச்சுரம், வாய்நீர் சுரப்பு முதலியவை தீரும்.

❖ சிற்றாமுட்டி, நிலவேம்பு, கண்டங்கத்திரி, பேய்ப்புடல், பற்பாடகம், வேலிப்பருத்தி, சுக்கு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தாமரைத்தண்டு, பெருங்குரும்பை, மிளகு, உள்ளி, திப்பிலி, கடுக்காய், சிறுதேக்கு வகைக்கு ஒரு கழஞ்சு, இவைகளப் பொன் வறுவலாக வறுத்து, இரண்டு படி நீரிட்டு, ஒரு படி நீராகக் குறுக்கி, அதில் இந்துப்பு, திப்பிலித்தூள், தேன் சிறிது கூட்டிக் கொடுக்க, வளிச்சுரத்தோடு வாய்நீர்ச் சுரப்பும் போகும்.

❖ ஆடாதோடை, கோரைக் கிழங்கு, பொன்னாங்காணி வேர், இலுப்பைப்பூ, பேரீந்து, கொட்டைத்திராட்சை, தாமரைவளையம், பெருங்குரும்பை, மகிழம்பூ, வில்வ ஓடு, சிறுபஞ்சமூலம், தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், மிளகு, திப்பிலி, சுக்கு, வேப்பம்பிசின், செவ்வியம், அம்மான் பச்சரிசி, சீதேவிசெங்கழுநீர்க்கிழங்கு, அதிவிடயம் இவைகளை ஒருநிறையாகக் கொண்டு, முறைப்படி நீரிட்டு எட்டொன்றாகக் காய்த்து, அரை ஆழாக்கு அளவு காலை, மாலைகளில் கொடுக்கக் குளிர்ச்சுரம், வாந்தி இவை போம்.

❖ நெற்பொரி, சிறுபயறு, தேவதாரம் வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்துப் பொடித்து, இரண்டு படி நீரிட்டுக் காய்த்து, ஒரு படியாக வடித்து அதில் தினம் ஒரு ஆழாக்கை வெள்ளைப்பாடாண பற்பத்திற்குத் துணையாக ஏழுநாள் கொடுக்கவும். சீந்தில் தண்டு ஆறு கழஞ்சு, கொத்துமல்லி, கோரைக் கிழங்கு, சுக்கு, தேவதாரம் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, ஒன்றிரண்டாக இடித்து, நீர் இரண்டு படி கூட்டி, எட்டிலொன்றாக வடித்து அதில், சிறிது திப்பிலிப்பொடி கூட்டி காலை, மாலைகளில் ஆழாக்கு அளவு உட்கொள்ளவும்.

- சுக்கு, செவ்வியம், கடுகுரோகணி, சீந்தில்தண்டு, பற்பாடகம், விலாமிச்சு, மரமஞ்சள், சிறுகாஞ்சொறி, தேவதாரம், கரிய சீரகம் வகைக்கு இரண்டு கழஞ்சாகக் கொண்டு, நீர் இரண்டு படி விட்டு உழக்காகுமாறு காய்ச்சி வடித்து அதில், சிறிது திப்பிலியும் இந்துப்பும் பொடித்துக் கூட்டி விடியற்காலையில் சாப்பிடவும்.

## வளியழல்சுரம்

- கீழ்க்காய்நெல்லி, பேய்ப்புடல், கோட்டம், சீந்தில், சிறுதேக்கு (கண்டுபாரங்கி), வேம்பின் ஈர்க்கு, சிறுநாகப்பூ, மலைதாங்கி, பங்கம்பாளை, சிறுகாஞ்சொறி, தேவதாரம், மிளகு, கோரைக்கிழங்கு, இவற்றை இரண்டு கழஞ்சாகக் கொண்டு, இரண்டு நாழி தண்ணீர் விட்டு முறைப்படி குடிநீரிட்டு, நோய்க்குத் தக்கபடி அளவிட்டு, அதில் கோரோசனைப் பொடி, திப்பிலிப்பொடி, சிறிது தேன் இவற்றைக் கலந்து கொடுத்துவர வளியழல்சுரம் போம்.
- கொத்துமல்லி, சிறுகாஞ்சொறி, அதிமதுரம், சரக்கொன்றைப்பட்டை, சிறுமூலம், கோரைக் கிழங்கு, பற்பாடகம், நன்னாரி, இருவேலி, குதிரைவாலிவேர், பேய்ப்புடல், தேவதாரம், முட்காய் வேளைவேர், விலாமிச்சம் வேர் வகை ஒன்றுக்கு அரைக் கழஞ்சாகக் கொண்டு, இரண்டு படி நீர் விட்டு, உழக்காகக் காய்ச்சி வடித்து அதில் விடியற்காலையிலும், மாலையிலும் ஆழாக்குக் குடிநீரில் திப்பிலியும் தேனும் கூட்டிக் கொடுக்கவும். இதனால் வளியழல்சுரம் போம்.

## வளியையச்சுரம்

- இச் சுரத்தில் இரண்டு நாட்கள் வரையில் இருமுறை வடித்த சோற்றின் கஞ்சியைக் கொடுத்த பின் மூன்றாம் நாளில் சுக்கு, பாசிப்பயறு நெற்பொரி இம்மூன்றுங் கூட்டி, முறைப் படி குடிநீராக்கிக் கொடுத்து, ஏழாம் நாளில் மேற்படியாகவே குடிநீர் செய்து அதில், சீந்தில், மாதுளை வேர், கருந்துளசி வேர், கோரைக் கிங்கு, சுக்கு வகைக்கு மூன்று கழஞ்சு கூட்டிப் போதுமான நீர் விட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்து அத்துடன் சிறிது திப்பிலிப் பொடி கூட்டிக் கொடுக்க, வளியையச் சுரம் போம்.
- தேவதாரம், செவ்வியம், கடுகுரோகணி, மரமஞ்சள், திப்பிலி ஒவ்வொன்றும் இரு கழஞ்சு கொண்டு, முறைப்படி குடிநீரிட்டு அதில்,

திப்பிலியும் இந்துப்பும் பொடித்து இரு சிட்டிகை இட்டுக் கலக்கிக் கொடுக்க, நோய் தீரும்.

❖ கோட்டம், பெருங்குரும்பை, சந்தனம், பேய்முசுட்டை, கடுகு, கோரோசனை, வேப்பம் ஈர்க்கு, சிறுதேக்கு, அதிமதுரம், சீந்தில்தண்டு, அதிவிடையம், பெருங்குமிழ் வேர், இவைகளை ஓரளவாய்க் கொண்டு முறைப்படி குடிநீர் செய்து அளவுப்படி கொடுக்க, வளியையக் காய்ச்சல் குணமடையும்.

❖ தேவதாரம், சுக்கு, பற்பாடகம், கொத்துமல்லி, வசம்பு, மிளகு முந்திரிகை (திராட்சை), திப்பிலி, கோரைக்கிழங்கு இவற்றை வகைக்கு மூன்று கழஞ்சாகக் கொண்டு, ஒன்றிரண்டாகப் பொடித்து இரண்டு படி நீர் விட்டு, உழக்காகக் காய்த்து வடித்து அதில் கால் கழஞ்சு பெருங்காயம் பொடித்துக் கூட்டி, காலை, மாலையாக ஆழாக்குக் குடிநீரைக் கொள்க. அது குடலில் வளியும் ஐயமும் கூடிச் செய்யும் கேடுகளைப் போக்கி, சுரத்தைத் தணிக்கும்.

❖ கொடிக்குமிழ்வேர், கடுக்காய், சீந்தில், பேய்ப்பீர்க்கு, இலுப்பைப் பூ, சுக்கு, ஆடாதோடை வேர் இவற்றை வகைக்கு மூன்று கழஞ்சாகக் கொண்டு, இடித்துக் கடத்திலிட்டு, இரண்டு படி நீர் விட்டுக் காய்த்து உழக்காக வடித்து, அதில் சிறிது திப்பிலி, இந்துப்பு, தேன் இவைகளைக் கூட்டிக் காலை,மாலையாகக் குடிக்கில் வளியையச்சுரம் போம்.

## வளி முக்குற்றச் சுரங்கள்

❖ கோரைக்கிழங்கு, சாணாச்சிக் கீரை, பொன்னாங்காணி, மாம்பூ, வெட்டிவேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சிறுபயறு, திப்பிலி, குறுவை நெல் இவற்றைச் சமனெடை கொண்டு, சிறிது கொத்துமல்லி, மணலிக் கீரையும் சேர்த்து, முதலில் நெல்லைச் சட்டியிலிட்டு வறுத்துப் பொரித்திடும்போது, அதில் வெண்ணெய் போட்டுத் தக்க அளவு நீர் கூட்டி, மற்றவைகளைச் சேர்த்துக் காய்ச்சி வடித்து, அத்துடன் சிறிது பற்பாடகம் கலந்து தக்க அளவில் காலை, மாலை கொடுக்க இச்சுரத்தோடு தொடரும் நீர்வேட்கை, உடல் எரிச்சல் நீங்கும்.

❖ வேலம் பட்டையைப் பொடியாக நறுக்கி இடித்து, நீர் விட்டுப் பிசைந்து காய்ச்சி வற்றிய பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும். பின்பு அதிமதுரம், ஏலம், சுக்கு, இந்துப்பு, கொத்துமல்லி, மிளகு, கடுக்காய் இப்பொருட்களை ஓர் அளவாகக் கொண்டு கூட்டி, புளியம்பட்டையை இடித்துப் பிழிந்த சாற்றாலரைத்து, முன் செய்த குடிநீரில் கூட்டிக்காய்த்து, திரண்டு மெழுகு பதம் வருகையில் எடுத்து நாவில்விட்டுச் சுவைக்கவும். இதனால் ஐய, அழல் தாதுக்களால் உண்டாகும் வாய் நீர் சுரப்பு, நாவறட்சி நீர்வேட்கை இவைகள் போம். முப்பிணி நீங்கும். உணவாக அரிசியை வறுத்துச் சுக்கைத் தட்டிச் சீலை முடிந்து கட்டிக் கஞ்சி காய்ச்சி ஏழு நாள் கொடுத்துவர, வளிமுப்பிணி நோய் போம்.

❖ சிற்றாமுட்டி, சிறுகாஞ்சொறி, நன்னாரி, பேராமுட்டி, வேம்பு, கோரைக் கிழங்கு, சீந்தில் வகைக்கு இரண்டு கழஞ்சு கூட்டி, இரண்டு படி நீரிட்டு எட்டொன்றாகக் காய்ச்சி, ஆழாக்காகக் காலை மாலை கொடுக்கும் போது திப்பிலிப் பொடியும் தேனும் கூட்டிக் கொடுக்க வளி முப்பிணி சுரம் தீரும்.

❖ சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், பேய்ப் பீர்க்கு, விலாமிச்சு, வெட்டிவேர், கொத்துமல்லி, பற்பாடகம், கொட்டை முந்திரிகை, பேரீந்து, தேவ்தாரம், இலுப்பைப்பூ, கோரைக்கிழங்கு, கடுகு ரோகணி, பங்கம்பாளை, சிறுகாஞ்சொறி ஆகியவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சாக எடுத்து, இவைகளை ஒன்றிரண்டாக இடித்து, இரண்டு படி நீரிட்டு, எட்டிலொன்றாகக் காய்ச்சி வடித்து, ஆழாக்குக் குடிநீரில் திப்பிலியும் தேனும் கூட்டிக் கொடுக்க வளிச்சுரம், வளி முப்பிணி சுரம் முதலிய ஏழுவகையான சுரங்களும் நீங்கும்.

## அழல் சுரம்

❖ சிற்றாமுட்டி, சுக்கு வகைக்கு மூன்று கழஞ்சாக எடுத்துப் பொடித்து, முறைப்படி நீர் கூட்டிக் காய்த்து, வடித்துக் கொடுக்கவும். வழுக்குடைய இளநீரைக் கொண்டு உலைநீராக்கிச் செய்த சோற்றைத் தரவும். இவ்வாறு எட்டு நாள் கொடுத்து, ஒன்பதாம் நாளிலிருந்து வில்வ வேர், சிற்றாமுட்டி வேர், பாதிரி வேர், சுரைத்தண்டு வகைக்கு இரு கழஞ்சாகக் கொண்டு, அதில் கொத்து மல்லியும், பச்சைப் பயறும் வகைக்கு இரண்டு பிடியாக எடுத்துக் கூட்டி,

இரண்டு படி நீர் விட்டு, உழக்காகக் காய்த்து வடித்ததில் காலை மாலையுமாகக் கொள்ளும் போது தேன் கூட்டவும். இதனால் அழல் சுரம் நீங்கும்.

❖ சீந்தில், பற்பாடகம், சந்தனம், விலாமிச்சம்வேர், சுக்கு, இருவேலி, சிற்றாமுட்டி, கோரைக் கிழங்கு வகைக்கு இரண்டு கழஞ்சாகத் தட்டி இட்டு, நீர் இரு நாழி விட்டு உழக்காக வற்றக் காய்ச்சி அருந்த, அழல் சுரம் நீங்கும்.

சுக்கு, இருவேலி, விலாமிச்சு, அரசம்பட்டை, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொறி, பங்கம்பாளை (ஆடு தீண்டாப்பாளை), கோட்டம் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, நீர் இரண்டு நாழி விட்டு, உழக்காகக் காய்த்து வடித்ததைக் காலை மாலையாக உண்ணின், உடல் ஊனை உருக்கும் அழல் சுரமும், அதில் காணும் கழிச்சலும் விட்டோடும்.

❖ அதிமதுரம், சிற்றாமுட்டி, பேரீந்து, சந்தனம், சுக்கு, இருவேலி, வேம்பீர்க்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், தாமரைக்கிழங்கு, தேவதாரு, திராட்சை, எலுமிச்சம்பூ, பேய்ப்புடல், விலாமிச்சு வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, நீர் இரண்டு படி கூட்டி, உழக்காகக் காய்ச்சி வடித்துத் தேனும் சர்க்கரையும் சேர்த்து, காலை மாலை குடிக்கச் சுரம் தணியும்.

❖ இலுப்பைப்பூ, வெட்பாலையரிசி, பற்பாடகம், நன்னாரி, செங்கழுநீர்க் கிழங்கு, சுக்கு, திராட்சை, தாமரை வளையம் வகைக்கு ஒரு கழஞ்சு கொண்டு, அதற்குப் பாதி தாய்ப்பால் கூட்டிக் காலை, மாலையாகக் குடிக்கச் சுரம் போம்.

❖ கடுக்காய், கொத்துமல்லி, சிவதை, சிறுபயறு, சுக்கு, கடுகுரோகணி இவைகளை முறைப்படி கூட்டிக் குடிநீராக்கித் தக்க அளவில் கொள்ள வயிறு கழியும். அதற்குமேல் மறுநாள் கோட்டம், பேய்ப்பீர்க்கு, சிறுகாஞ்சொறி, சந்தனம், நிலவேம்பு, பற்பாடகம், ஆடாதோடை வேர், சிற்றாமுட்டி, திராட்சை, கோரைக்கிழங்கு வகைக்குக் கழஞ்சு கொண்டு நீர் இரண்டு படி விட்டு, உழக்காகக் காய்ச்சி வடித்து, சிறிது சர்க்கரை கூட்டிக் காலை, மாலையாகக் குடிக்கவும்.

## வாந்திச் சுரம்

❖ வில்வவேர், சுக்கு, விலாமிச்சு, வெட்டிவேர், சிறுகாஞ்சொறி, இருவேலி வகைக்கு ஒரு கழஞ்சும், நெற்பொரி ஆறு கழஞ்சும் கூட்டி, நீர் ஒரு படி சேர்த்து, எட்டொன்றாகக் காய்ச்சி வடித்த நீரில், தேன் கூட்டிக் கொடுக்கச் சுரம் போம்; வாந்தி நிற்கும்.

## அழல்வளிச் சுரம்

❖ சிற்றரத்தை, குரும்பை, மிளகு, சிறுபயறு, கொத்துமல்லி இவைகளைப் பொன் வறுவலாக வறுத்து, நீர் ஒரு படி கூட்டிக் காய்ச்சி வடித்ததில் திப்பிலியும் தேனும் கூட்டி மூன்று நாள் கொடுத்து, கஞ்சி முதலிய சிறு உணவுகளைக் கொடுத்து வரவும்.

❖ உத்தாமணி, குதிரைவாலி, தூதுவளை, கண்டங்கத்திரி, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, நெரிஞ்சில், வில்வவோடு, சிற்றாமுட்டி, அதிமதுரம், சதகுப்பை, நெல்லி, தான்றி, ஓமம், இலுப்பைப்பூ, மிளகு, முந்திரிப்பழம், பேரீந்து வகைக்குக் கழஞ்சு கொண்டு, இரண்டு படி நீர் விட்டு, நாலில் ஒன்றாகக் காய்ச்சி வடித்து அதில் திப்பிலி, தேன் கூட்டிக் கொடுக்கச் சுரம் போம்.

❖ சுக்கு, கொத்துமல்லி, இரண்டையும் சீலையில் முடிந்து நீரிலிட்டுக் காய்ந்தபின் இறக்கும்போது அதில் ஒரு பிடி நெற்பொரி இட்டுக் கொள்ளவும். இவ்வாறு ஏழு நாட்கள் இதனை சாப்பிட்ட பின் சீந்தில், முப்பலை, வெட்பாலை அரிசி, செங்கழுநீர்க் கிழங்கு வகைக்கு மூன்று கழஞ்சாகக் கொண்டு, நீர் விட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி வடித்ததில் ஆழாக்கு அளவு காலை, மாலையாகக் கொடுத்துவர சுரம் தீரும்.

❖ முதிர்ந்த வேம்பின் பட்டை, பேய்ப்புடல், சந்தனம், இருவேலி, அதிமதுரம், சீந்தில் தண்டு, மலைவெட்பாலை அரிசி, சுக்கு, நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய், கடுகுரோகணி, தேவதாரம், கோரைக் கிழங்கு, விலாமிச்சு வகைக்கு ஒரு கழஞ்சு, நீர் இரு நாழி கூட்டி உழக்காகக் காய்த்து வடித்ததில், ஆழாக்கெடுத்துக் காலை, மாலைகளில் சிறிது தேன் கூட்டிக் கொடுக்கச் சுரம் தணியும்.

- ❖ சுக்கு, கொத்துமல்லி, கோட்டம், வேப்பம் ஈர்க்கு சீந்தில் கொடி, மரமஞ்சள், கறிப்பாலைத் தண்டு, அதிமதுரம், சிறுகாஞ்சொறி, திப்பிலி, திப்பிலிமூலம் இவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, இரு நாழி நீர் விட்டு, எட்டொன்றாகக் காய்த்து வடித்ததில், ஆழாக்களவு உண்ணவும்.

## முப்பிணிக்கு

- ❖ நிலவேம்பு, விலாமிச்சு, சாரணைவேர், தும்பைவேர், கண்டங்கத்திரிவேர், சிற்றரத்தை, கள்ளிவேர், கொடிவேலி வகைக்குப் பலம் ஒன்றெடுத்துக் குடிநீராக்கிக் காலை, மாலை சாப்பிடவும்.

## ஐயச்சுரம்

- ❖ ஐயச்சுரம் கண்ட நாளே கண்டங்கத்திரி, சுக்கு, வில்வவோடு இவற்றை ஓர் எடையாகக் கொண்டு, இரண்டு படி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சிய குடிநீரைக் காலை, மாலை கொடுக்கவும்.

- ❖ இக்குடிநீரையே உலையாகக் கொண்டு சோறு வடித்து, அதை நோயினருக்குக் கொடுக்கவும். இவ்வாறாகக் குடிநீரையும், குடிநீரால் வடித்த சோற்றையும் எட்டு நாள் வரையில் கொடுக்க நோய் போம். அதிலும் தீரவில்லை என்றால் இரண்டு நாள் பட்டினி விட்டு மறுநாள் சுக்கு, திப்பிலி, சந்தனம், திராட்சைப்பழம், கடுக்காய், தான்றி, நெல்லி இவற்றை வகைக்கு நான்கு கழஞ்சாகக் கொண்டு, இரண்டு படி நீர் விட்டு, எட்டொன்றாகக் காய்த்து வடித்து, அதில் பெருங்காயமும் தேனும் திப்பிலியும் கூட்டிக் கொடுக்க, நோய் போம்.

- ❖ சீந்தில்தண்டு, பற்பாடகம், சிறுமூலம் (சிறுபஞ்ச மூலம்), சுக்கு, முட்காய், வேளை வேர் ஆகியவற்றை வகைக்கு அரைக் கழஞ்சு கொண்டு, இரண்டு படி நீர் விட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்ததில், தேன், திப்பிலி கலந்து கொடுக்கச் சுரம் தீரும்.

- ❖ சுக்கு, கடுக்காய், கடுகுரோகணி, செவ்வியம், மரமஞ்சள், தேத்தான்கொட்டை வகைக்கு இரண்டு கழஞ்சு எடுத்து, நீர் இரண்டு படி விட்டு உழக்காகக் காய்ச்சி வடித்து, தேனும் இந்துப்பும் கூட்டிக் கொடுக்க நோய் குணமாகும்.

- நன்னாரி, தூதுவேளை, சிறுகாஞ்சொறி ஆகியவைகளின் வேர், ஆடாதோடை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு இம்பூறல், பங்கம்பாளை வகைக்கு இரு கழஞ்சு, நீர் இரு நாழி கூட்டி எட்டிலொரு கூறாகக் குறுக்கி வடித்து, இந்துப்பும் தேனும் கூட்டிக் கொடுக்க ஐயச்சுரம் தணியும்.

- உத்தாமணி, நொச்சி, கண்டங்கத்திரி, வரள்முள்ளி, இஞ்சி, ஆடாதோடை இவற்றைக் கொண்டு பிட்டவியலாக அவித்துப் பிழிந்த சாற்றில் சிறிது திப்பிலிப்பொடி கூட்டி, ஒரு பூபதி மாத்திரையோடு தக்க அளவில் கொடுக்க, ஐயச்சுரம் தீரும்.

## ஐயவளிச்சுரம்

- சுரம் கண்ட நாளிலே ஐயம் பெருகாதபடி செய்தற்கு நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் இவை ஓரெடையாக் கூட்டிக் குடிநீரிட்டுக் காய்த்து வடித்து, வேண்டிய அளவுகொண்டு அதில் சிறிது திப்பிலியைப் பொடித்துக் கூட்டி மூன்று நாள் சாப்பிட்ட பின், தூதுவளை, செம்முள்ளி, சிவனார்வேம்பு வேர், அதிமதுரம், கோட்டம், சிவப்பு சந்தனம், தேற்றான் கொட்டை, கோரைக்கிழங்கு வகைக்கு ஒரு கழஞ்சாகக் கூட்டி இரு நாழி நீர் விட்டு வற்றக் காய்ச்சிச் சீனிகூட்டிக் குடிக்கவும்.

- புதிய சந்தனம், அகில், கடுக்காய், நெல்லி, சீந்தில், கண்டங்கத்திரி, பற்பாடகம் வகைக்கு இரண்டு கழஞ்சு கூட்டிக் குடிநீராக்கியதில், கூகை நீறிட்டுக் குடிக்கச் சுரம் தணியும்.

- கரிசாலை, சிவனார் வேம்பு, தூதுவளை, வில்வ இலை, பேரிச்சம்பழம், சிவகரந்தை, கோட்டம், சுக்கு, விலாமிச்சு, கொத்துமல்லி, பச்சைத் திப்பிலி, நெல்லிக்காய், தேற்றான் கொட்டை வகைக்குக் கழஞ்சு இரண்டாகக் கூட்டிக் குடிக்க ஐயவளிச் சுரம் போம்.

## ஐயவழல்சுரம்

- மண்புழு (நாக்குப்பூச்சி), நீர்முள்ளி வேர், நன்னாரி இவற்றை ஓரளவாகக் கொண்டு, அதற்குத் தக்கனவாக நீர் விட்டுக் காய்த்து வடித்து, அந்நீரை உலையாகக் கொண்டு சோறு வடித்து, அதனை மிளகு நீரோடு கலந்து ஏழு போதுக்கு உண்டுவர, ஐயத்தின் தீங்கு

நீங்கும். அதன்பின் பங்கம்பாளை (ஆடுதீண்டாப்பாளை), கொத்துமல்லி, தேற்றான்கொட்டை, சுக்கு, தூதுவளைப்பூ, கத்திரிப்பூ, கைவாசிப்பூ, இலுப்பைப் பூ, மகிழம்பூ, கோட்டம், சீரகம், பிச்சிப்பூ, சடா மாஞ்சில், செண்பகப்பூ, வெள்ளைப்பூண்டு, மதுரம், சன்னிநாயகத்தின் விரை இவைகளை ஒவ்வொரு கழஞ்சாகக் கூட்டி இடித்து, இரண்டு படி நீரிட்டுக் காய்த்து வடித்து அதில் திப்பிலி, இந்துப்பு, கோரோசனை இவற்றை ஓர் அளவாக எடுத்துப் பொடித்ததில் சிறிது கூட்டிக் கொடுக்கச் சுரம், இளைப்பு, ஈளை, சோர்வு, சுவாசம், ஐயவழல் காய்ச்சல் முதலியன யாவும் விரைவில் மாய்ந்துபோகும்.

## குளிர்ச்சுரம்

❖ கறிப்பாலைத் தண்டு, குதிரைவாலி (அவ்வையார் கூந்தல்), குமிழ், சுக்கு, அதிவிடயம், சிறுதேக்கு, கோட்டம், பெருங்குரும்பை, நிலவேம்பு, கீழாநெல்லி, விட்ணு கிராந்தி, கொத்துமல்லி, நெல்லி, அதிமதுரம், மரமஞ்சள் இவற்றை வகைக்கு ஒரு கழஞ்சாகக் கொண்டு, ஒரு படி நீர் விட்டு, எட்டொன்றாகக் காய்த்து வடித்ததில், இந்துப்பு, திப்பிலி, தேன் இவைகள் சிறிது கூட்டிக் காலை, மாலையாகப் பங்கிட்டுக் கொடுக்க, குளிர்ச்சுரம் தீரும்.

❖ அத்திமரத்தின் வேரை வெட்டி, அதன் அடியில் மட்கலத்தை வைக்க நீர் சொட்டும். அந்நீரில் சிறிது கற்கண்டும் பேயன் பழத்தையும் கூட்டிப் பிசைந்து வைத்து, ஒரு நாள் சென்றபின் பிழிந்து எடுத்து வடித்த நீரைக் கொடுத்துவரக் குளிர்ச்சுரம் போம்.

❖ பேய்ப்புடல், பேய்ச் சீந்தில், பற்பாடகம், நிலவேம்பு, நிலாவாரை, வெட்டிவேர், விலாமிச்சு, சந்தனம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, நீர் படி இரண்டு விட்டு, சுண்டக்காய்த்து வற்ற வைத்ததை இரு பங்காக்கி, காலை, மாலைகளில் கொடுக்கவும்.

## முறைச்சுரம்

❖ பேராமுட்டியும் சுக்கும் நீர் அளவாகக் கூட்டி முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க, முறைச்சுரம் நீங்கும்.

❖ வெட்பாலை அரிசி, சீந்தில்தண்டு, பற்பாடகம், கண்டங்கத்திரி, பேய்ப்புடல், சிறுகாஞ்சொறிவேர், கோட்டம், கோரைக்கிழங்கு,

நிலவேம்பு வகைக்கு ஒரு கழஞ்சு கொண்டு இடித்து, இரண்டு படி நீரிலிட்டு, உழக்காகக் காய்த்து, காலை, மாலைகளில் கொள்ளவும்.

- ❖ பெரிய ஆவாரை வேர், புன்னைவேர், பெருங்குமிழ், நெரிஞ்சில், வில்வவேர், பேராமல்லி, சிற்றாமல்லிவேர், கண்டங்கத்திரி, பாதிரிப்பட்டை, வழுதலை வேர், கோட்டம், மிளகு, உள்ளி, சுக்கு, திப்பிலி இவைகளை ஒரே அளவாகக் கூட்டி முறைப்படி நீர் விட்டு எட்டொன்றாகக் காய்த்துக் குளிரவைத்து, தேன் கூட்டிக் குடிக்க உடலைப் பற்றிய வெப்ப நோய்கள் விலகி நலமுண்டாகும்.

## கற்க வகைகள்

- ❖ எருக்கம் கொழுந்து, வெள்ளைப் பூண்டு, பச்சை வசம்பு, மிளகு, சுக்கு, பச்சை முருங்கைப்பூ இவைகளை ஓரெடையாக எடுத்து அரைத்து புன்னைக்காய் அளவு உருட்டி உண்டு வெந்நீர் பருகவும்.
- ❖ குப்பைமேனி வேர் அரை பலம், வெள்ளுள்ளி ஐந்து பலம், மிளகு ஒன்றரை பலம் ஆக இவற்றை எடுத்து மைபோல் அரைத்து புன்னைக்காய் அளவு காலை, மாலை சாப்பிட்டு வெந்நீர் கொள்ளவும்.

## சுரத்திற்குப் பற்று

- ❖ இளநீரை வயிறு நிறைய குடிக்கும்படி கொடுத்து வாந்தியை உண்டாக்கிய பின், சந்தனத்தைப் பன்னீர் விட்டரைத்து, உடம்பு முழுமையும் பூசிப் போர்த்து வைத்தால் உடல் எரிதல், நீர்வேட்கை, மிகுதியாகக் காயும் சுரம் இவைகள் போம்.இப்பரிகாரத்தால் முப்பிணியும் தொடரவொட்டாமல் தடுக்கப்படும்.

## பெரு மருந்துகள்

இவ்வாறாகக் கூறிய குடிநீர், கற்கம், பற்று முதலிய மருத்துவங்களால் நோய் நீங்காவிடில் பெரு மருந்துகளாகிய மாத்திரை, பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலிய மருந்துகொண்டு அவைக்கான துணை மருந்துகளைக் கூட்டிக் கொடுத்தல் வேண்டும்.

## கழிச்சலை உண்டாக்க

சஞ்சீவி மாத்திரை, அட்ட பயிரவ மாத்திரை, தாழம்பூ மாத்திரை, கோடாசூரி மாத்திரை, இலவங்காதி மாத்திரை, அகத்தியர் குழம்பு போன்றவைகளில் குற்றத்திற்குத் தகுந்தாற்போல் ஒன்றினை, நோய் வன்மைக்கும், நோயாளியின் உடல் வன்மைக்கும் தகுந்தவாறு அளவிட்டுத் தக்க துணை மருந்தோடு கொடுக்கலாம்.

## உள்ளுக்கான மருந்து

சுர நோய்களுக்கான உள் மருந்துகளாக மாத்திரை, பற்பம், செந்தூரம், கருப்பு என்னும் வகைகளில், நோயின் தன்மைக்கும் நோயினரது உடலின் வன்மைக்கும் ஏற்றவாறு ஏதேனும் ஒன்றைத் தக்க அனுபானத்துடன் பயன்படத்தலாம் என்று சித்த மருத்துவ நூல்கள் பரிந்துரைக்கின்றன.

## வளிச் சுரத்திற்கு

மாத்திரை

- ❖ வசந்தகுசுமாகர மாத்திரை ஒன்றைத் தேனில் இழைத்துக் கொடுத்து, நொச்சிக் குடிநீர் பருகச் செய்யவும்.
- ❖ பிரமானந்த பயிரவம் ஒன்றும் இஞ்சிச் சாறும் கூட்டிக் கொடுக்கலாம்.
- ❖ விட்ணு சக்கர மாத்திரையை இஞ்சியும் தேனும் கூட்டியும்
- ❖ வாதராக்கதன் மாத்திரையோடு தேன் கூட்டியும்
- ❖ எமதண்ட மாத்திரையோடு தாய்ப்பால் கூட்டியும் கொடுக்கலாம்.

இவைகளுடன் முற்கூறிய குடிநீர்களில் ஒன்றினை நோய்க்குத் தக்கவாறு கொடுத்தல் நலம்.

பற்பம்

- ❖ செம்பு பற்பத்தைக் கற்றாழைச் சாற்றிலும்
- ❖ வெண்ணெய்ப் பற்பத்தை இளநீரிலும்
- ❖ அயநாகப் பற்பத்தைத் தேனிலும்
- ❖ இலிங்கப் பற்பத்தைக் குறுவால் இலைச்சாற்றிலும்
- ❖ கந்தகப் பற்பத்தை மிளகுத் தைலத்திலும்

- வெள்ளிப் பற்பத்தினைத் திப்பிலி இரசத்திலும்
- அப்பிரகப்பற்பத்தைப் பசுவின் நெய்யிலும்
- கிளிஞ்சல் பற்பத்தைப் பசுவின் தயிரிலும்
- சங்கு பற்பத்தைப் பசுவின் வெண்ணெயிலும்
- பொன் பற்பத்தைச் சருக்கரையிலும்
- பவழப் பற்பத்தோடு பசு வெண்ணெய் கூட்டியும்
- தாளகப் பற்பத்தில் காடிநீர் கூட்டியும்
- பெருங்கோட்டான் இறகு பற்பத்தில் வெண்ணெயும்
- ஆள் காட்டிக் குருவி இறகின் பற்பத்தில் தாய்ப்பாலும் கூட்டிக் கொடுக்கவும்.

செந்தூரம்

- கந்தகச் செந்தூரத்தைக் குளிர்ந்த நீரிலும்
- தாளகச் செந்தூரத்தை மிளகு இரசத்திலும்
- முத்துச் செந்தூரத்தைப் பசுவின் வெண்ணெயிலும்
- வெள்ளி செந்தூரத்தைப் பசு நெய்யிலும்
- பலகரை செந்தூரத்தைத் தும்பைச் சாற்றிலும்
- வெள்ளீயச் செந்தூரத்தைச் சருக்கரையிலும் கொடுக்கலாம்.

## அழல் சுரத்திற்கு

மாத்திரை

- வசந்தகுசுமாகர மாத்திரையைத் தேனிலும்
- சாந்த சந்திரோதய மாத்திரையைப் பற்பாடகச் சாற்றிலும் கொடுக்கவும்.

பற்பம்

- அப்பிரகப் பற்பத்தைப் பசுவின் தயிரிலும்
- காரீயப் பற்பத்தைத் தேனிலும்

- அயப் பற்பத்தைக் கள்ளிலும்
- கிளிஞ்சற் பற்பத்தை எருமைத் தயிரிலும்
- செம்பு பற்பத்தைத் தேனிலும்
- தாளகப் பற்பத்தைச் செம்பருத்தியிலைச் சாற்றிலும்
- வெண்ணெய்ப் பற்பத்தைக் கள்ளிலும்
- காடை இறகு பற்பத்தை வெண்ணெயிலும்
- இலிங்கப் பற்பத்தைக் கல்லாலிலைச் சாற்றிலும்
- பொன் பற்பத்தைச் சருக்கரையிலும்
- வெள்ளீயப் பற்பத்தைத் தேனிலும்
- பலகரை பற்பத்தைத் தேனிலும்
- பெண் புள்ளிமான் கொம்பு பற்பத்தைத் தாய்ப்பாலிலும்
- முத்துப் பற்பத்தை வெண்ணெயிலும்
- வெள்ளிப் பற்பத்தைத் திப்பிலிச் சாற்றிலும் கொடுக்கலாம்.

செந்தூரம்

- காந்தச் செந்தூரத்தைக் கள்ளிலும்
- பலகரை செந்தூரத்தைப் பசுப் பாலிலும்
- ஈயச் செந்தூரத்தைத் தேனிலும்
- வெள்ளிச் செந்தூரத்தை நெய்யிலும்
- இலிங்கச் செந்தூரத்தை ஏலரிசிப் பொடியோடு தாய்ப்பாலிலும் கொடுக்கலாம்.

## ஐயச் சுரத்திற்கு

மாத்திரை

- எமதண்டக் குளிகையைக் கற்பூரவல்லிச் சாற்றிலும்
- வசந்தகுசுமாகர மாத்திரையை வெள்ளாட்டுப் பாலிலும்
- பிரமானந்த பைரவ மாத்திரையை இலைக்கள்ளியை வதக்கிப் பிழிந்த சாற்றிலும் கொடுக்கவும்.

பற்பம்

- ❖ காந்தப் பற்பத்தை வெள்ளைப் பூண்டு தைலத்திலும்
- ❖ இலிங்கப் பற்பத்தைப் பசுவின் தயிரிலும்
- ❖ கிளிஞ்சல் பற்பத்தை ஆட்டுத் தயிரிலும்
- ❖ சங்கு பற்பத்தைக் கடப்பஞ் சாற்றிலும்
- ❖ சிறு கோட்டான் இறகு பற்பத்தைத் தேனிலும்
- ❖ பொன் பற்பத்தைச் சருக்கரையிலும்
- ❖ தாளகப் பற்பத்தைத் திருநீற்றுப்பச்சை இலைச் சாற்றிலும்
- ❖ செம்பு பற்பத்தைச் சருக்கரையிலும்
- ❖ பவழப் பற்பத்தைப் பசுவின் பாலிலும்
- ❖ வெள்ளீயப் பற்பத்தைத் துளசிச் சாற்றிலும்
- ❖ வெண்ணெய் பற்பத்தைச் சீந்திலிலைச் சாற்றிலும் கொடுக்கலாம்.
- ❖ மார்பில் கோழை மிகுதியாகக் கட்டிக் கொண்டு இருந்தால் உளுந்து எடை அளவு தாளகப் பற்பத்தை இலைக்கள்ளிச் சாற்றில் அனுபானம் செய்து கொடுப்பது நல்ல பலனைத் தரும்.

செந்தூரம்

- ❖ காந்தச் செந்தூரத்தைச் சீந்தில் இலைச்சாற்றிலும்
- ❖ பலகரை செந்தூரத்தைப் பசுவின் மோரிலும்
- ❖ வங்கச் செந்தூரத்தைக் கற்கண்டுடனும்
- ❖ வெள்ளி செந்தூரத்தைப் பசுவின் நெய்யிலும்
- ❖ வீரச் செந்தூரத்தை எள் அளவு தாய்ப்பாலிலும்
- ❖ இரசச் சுண்ணத்தை அரிசி எடை தும்பைப்பூச் சாற்றிலும் கொடுக்கலாம்.

கருப்பு

- ❖ கத்தூரிக் கருப்பைத் தும்பைச் சாற்றிலும்
- ❖ கோரோசனைக் கருப்பைக் கொத்துமல்லிக் குடிநீரிலும் கொடுக்கலாம்.

# 5

## சுவையின்மை நோய்

### முன்னுரை

சுவையின்மை நோயானது சுவை கேடு, உருசியின்மை, அரோசகம் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

இது உடலைப் பற்றி வருவதோடல்லாமல் மனத்தின் கேட்டாலும் எழும் நோயாகும். இது உண்ணக்கூடிய பொருட்களின் சுவையை அறிந்து கொள்ள முடியாமை, உண்ணக்கூடிய பொருட்களின் மீது விருப்பமின்மை என்னும் இயல்பினை உடைய நோயாகும்.

உடலைப் பற்றி வரும் சுவையின்மை நோய் வளி (வாதம்), அழல் (பித்தம்), ஐயத் (கபம்) தாதுக்களின் பாதிப்பினால் ஏற்படுவதாகும். மனத்தைப் பற்றி வரும் சுவையின்மை நோய் மனக்கலக்கம், பீதி, மிகுந்த மனமகிழ்ச்சி ஆகிய மனத்தின் வேறுபாட்டால் ஏற்படுவதாகும்.

### குறிகுணம்

இந்நோயில் வாய்நீர் ஊறல், அந்நீர்ச் சுவையின்றி இருத்தல் போலத் தோன்றுதல், உண் பொருள் எதைக் கண்டாலும் அதன் மீது வெறுப்பு போன்ற குறிகுணங்கள் தோன்றும்.

### நோய் வகை

இந்நோய் உயிர்த்தாதுக்களின் அளவாக நான்கு பிரிவாகவும், மனவேற்றுமையால் வருவது ஒன்று எனவும் ஐந்து வகையாகப் பிரிக்கப்படுகிறது.

### 1. வளிச் சுவையின்மை

வளித் தாதுவினால் வரக்கூடிய சுவையின்மை நோயில் வாய் எப்பொழுதும் துவர்ப்பாகத் தோன்றுவதுடன், உண்ணும் எப்பொருளும் துவர்ப்பாகவே இருக்கும். மேலும் பல் கூச்சம், ஓக்காளித்தல் முதலிய குறிகுணங்களும் காணும்.

### 2. அழல் சுவையின்மை

அழல் தாதுவினால் ஏற்படும் சுவையின்மை நோயில் வாய் கைத்தல் அல்லது புளித்துக் காணுதல், உண்ணும் பொருட்களும் இச்சுவையுடனே காணப்படுதல், வாய் குமட்டிக் குமட்டி ஓக்காளித்தல் என்னும் குறிகுணங்களுடன் காணும்.

### 3. ஐயச் சுவையின்மை

ஐயச் சுவையின்மை நோயினர் வாய் புலால் மணத்தோடு, கோழை கூடி, ஒருவித வெறுப்பு தோன்றுவதுடன், கோழையும் வாய்நீரும் இனிப்புச் சுவையுடன் காணும். அடிக்கடி ஓக்காளமும் காணும்.

### 4. முத்தாதுச் சுவையின்மை

மூன்று தாதுக்களும் கேடு அடைந்து உண்டாகும் முத்தாதுச் சுவையின்மை நோயில் முன் சொன்ன குறிகுணங்கள் அனைத்தும் ஒருங்கு சேர்ந்து காணும். ஓக்காளம் மிகவும் அதிகமாகத் தோன்றும்.

### 5. மனச் சுவையின்மை

ஐந்தாவதாகக் கூறப்படும் மனச் சுவையின்மை மனக் கலக்கம், துயரம், சினம், பீதி, இவைகளால் மனநிலை மாறி, எப்பொழுதும் வாய்நீர் ஊறல், உண்ணும் உணவில் வெறுப்பு, ஒருவகைச் சுவையும் காணாமை ஆகிய குறிகளுடன் காணும்.

## மருத்துவம்

உயிர்த்தாதுக்களின் பாதிப்பால் ஏற்படும் சுவையின்மை நோய் தக்க மருத்துவத்தில் தீர்க்கப்படக் கூடியவையாகும். மனச் சுவையின்மை, மனத்தளவே ஏற்பட்ட பாதிப்பு நீக்கப்பட்ட உடனே நீங்கும் தன்மையதாகும்.

சுவையின்மை நோய்க்கு மருத்துவம் செய்ய முனையும் முன்னர், எந்த உயிர்த்தாதுவினால் இந்நோய் ஏற்பட்டது என்பதை அறிந்து அதற்கேற்றாற் போல்

மருத்துவம் செய்ய வேண்டியது அவசியம். பொதுவாக அழல் தாது பாதிக்கப்பட்டு இந்நோய் தோன்றும் போது, அழல்தாது பாதிக்கப்படுவதுடன் மேல்நோக்குக்காலும் (உதானன்) பாதிக்கப்படுவதால் வாய்நீர் ஊறல், ஓக்காளம் போன்ற குறிகுணங்கள் ஏற்படும். எனவே அழல் தாதுவைத் தன்னிலைப்படுத்துவதும், பாதிக்கப்பட்ட கால்களைத் (வாயுக்களை) தன்னிலைப் படுத்துவதுமான மருத்துவங்களைச் செய்வதுடன், மனச் சுவையின்மை நோயில் மனக் கவலைகளை மாற்றுவதற்கான வழிகளைத் தேடுதலும் வேண்டும்.

- ❖ பாதிக்கப்பட்ட உயிர்த்தாதுக்களைத் தன்னிலைப் படுத்த பற்பாடகம், சீந்தில், ரோசாமொக்கு, கொட்டை முந்திரி, நிலாவாரை ஆகியவற்றைச் சம பாகம் எடுத்து முறைப்படி குடிநீர் செய்து கொடுக்க வேண்டும். இதனால் இரண்டு மூன்று முறை பேதியாகி, அதனால் உயிர்த்தாதுக்கள் தன்னிலைக்கு வரும்.
- ❖ அதன்பின் நோய்க்கான மருந்துகளான மாதுளை மணப்பாகு, நவரசத் துவையல், பாவனக் கடுக்காய், பிரண்டைச் சூரணம், தாளிசாதி வடகம் போன்றவைகளில் ஏதேனும் ஒன்றைத் தக்க அளவில் வழங்க வேண்டும்.
- ❖ சீரகச் சூரணம், சுக்குச் சூரணம், இஞ்சி இலேகியம், கேசரி இலேகியம் போன்றவற்றையும் இந்நோய்கு வழங்கலாம்.
- ❖ மூன்று உயிர்த்தாதுக்களும் சேர்ந்து பாதிக்கப்பட்ட நோயில் அவற்றை சமனப்படுத்தும் பைரவ மாத்திரைகள், கட்டு மாத்திரைகள் போன்ற பெருமருந்துகளைக் கொடுத்து, அத்துடன் முன்னால் சொன்ன நேர் மருந்துகளையும் வழங்கலாம்.
- ❖ மனக் கலக்கத்தால் ஏற்பட்ட சுவையின்மை நோய்க்கு, மனக் கலக்கம் எதனால் ஏற்பட்டது. என்பதை அறிந்து, அதைச் சரிப்படுத்துவதற்கான மாற்று வழிகளைக் கையாள வேண்டும்.

## சாவுக் குறி அறிதல்

சுவையைக் கொண்டு சாதல் குறி அறிதல் தொடர்பாகச் சித்த மருத்துவ நோய் நாடல் பகுதி சில முக்கிய செய்திகளைத் தெரிவிக்கிறது. நோயாளி ஒருவர் எந்த நோயிலாவது நோய் முற்றிய நிலையில் இருக்கும்பொழுது, அவருடைய நாவின் சுவையில் மாறுபாடுகள் ஏற்பட்டால், அவை சாதல் குறியின் அறிகுறி எனக் கூறப்படுகிறது. அவை பின்வருமாறு:

- ❖ கசப்பான பொருட்கள் கைக்காமல், ஏனைய சுவையுள்ள பொருட்கள் கைத்தால் ஒரு வாரத்திலும்,
- ❖ இனிப்பான பொருட்கள் இனிக்காமல், மற்றச் சுவையுள்ள பொருட்கள் இனித்தால் ஒரு மாதத்திலும்,
- ❖ புளிப்புச் சுவையுள்ள பொருட்கள் புளிக்காமல், மற்றச் சுவையுள்ள பொருட்கள் புளித்தால் 15 நாட்களிலும்,
- ❖ காரமான பொருட்கள் காரமாய் இல்லாமல், ஏனைய பொருட்கள் காரமாக இருந்தால் அரை நாளிலும்,
- ❖ உப்புக் கரிக்கும் பொருட்கள் உப்புக் கரிக்காமல், ஏனைய பொருட்கள் உப்புக் கரித்தால் ஒரு நாளிலும்,
- ❖ துவர்ப்புள்ள பொருட்கள் துவர்க்காமல், ஏனைய பொருட்கள் துவர்த்தால் ஒரு நாழிகையிலும்

இறப்பார்கள் எனத் தேரையர் யமக வெண்பா நூலில் கூறப்பட்டுள்ளது.

## சுவையின்மையால் நோய் அறிதல்

வாய்நீர் அல்லது எச்சிலின் தன்மையைக் கொண்டு பல நோய்களைக் கணிக்க முடியும் என்பதையும் சித்த மருத்துவ நோய் நாடல் முறை விளக்குகிறது. அது அட்டவணை ஒன்றில் விளக்கப்படுகிறது.

வாய்நீரின் தன்மை எவ்வாறு இருப்பது நலம் பயக்கும், எவ்வாறு இருக்கக் கூடாது என்பதையும் தேரையர் யமக வெண்பா வரிசைப்படுத்தியுள்ளது. அது அட்டவணை இரண்டில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை-1

| எண் | வாய்நீரன் தன்மை | நோய் |
|---|---|---|
| 1. | கள் போன்று இருத்தல் | வளிச் (வாத) சுரம் |
| 2. | நெய் போல் இருத்தல் | அழல் (பித்த) சுரம் |
| 3. | எண்ணெய் போல் இருத்தல் | ஐயச் (கப) சுரம் |
| 4. | வாய்நீர் வித்தியாசமான சுவையில் இருத்தல் | கால்கை (காக்கை) வலிப்பு |

| | | |
|---|---|---|
| 5. | வாய்நீர் தண்ணீர் போல் இருத்தல் | வளிச் சன்னி |
| 6. | வாய்நீர் குழம்பு போல் ஆதல் | அழல் சன்னி |
| 7. | வாய்நீர் மெழுகு பதம் போல் ஆதல் | ஐயச் சன்னி |
| 8. | எச்சிலை உமிழும் பொழுது ஆட்டு வாயில் இருந்து ஒழுகும் உமிழ்நீர் போல் ஆனால் | வளிச் சன்னி |
| 9. | எச்சிலை உமிழும் பொழுது மானைப் போல் பாய்ந்தால் | அழல் மாரகச் சன்னி |
| 10. | எச்சில் உமிழும் பொழுது முள்ளம் பன்றி போல் ஆனால் | ஐயச் சன்னி மூர்ச்சை |
| 11. | வாய் நீர் மயிலிறகு வர்ணம் ஆனால் | வளி மூலம் |
| 12. | கிளியிறகு வர்ணத்தில் வாய்நீர் இருந்தால் | அழல் மூலம் |
| 13. | வாய்நீர் கொக்கின் நிறம் ஆனால் | ஐய மூலம் |
| 14. | எச்சில் உமிழும் பொழுது கீழே குறுக்கிட்டு விழுந்தால் | சயரோகம் |
| 15. | நீண்டு கிடந்தாற் போல் இருந்தால் | அரோசகம் |
| 16. | உருண்டையாக விழுந்தால் | உருத்திரவாயு ரோகம் |

அட்டவணை - 2

| எண் | வாய்நீரின் தன்மை | நிலை |
|---|---|---|
| 1. | இளநீர் போன்று இருத்தல் | உத்தமத்தில் உத்தமம் |
| 2. | பாலைப் போல் வெண்மையாகவும் சற்றுக் குழம்பாகவும் இருத்தல் | உத்தம மத்திமம் |

| | | |
|---|---|---|
| 3. | வெண்ணெய் போல் அழுந்தி வெண்மையாய் இருத்தல் | மத்திம உத்தமம் |
| 4. | தயிரைப் போல வெண்மையும் சற்று அழுந்தியும் நீர் கலந்தும் இருத்தல் | மத்திம மத்திமம் |
| 5. | குதிரை வாயில் இருந்து ஒழுகும் நுரையைப் போன்று இருத்தல் | அதம உத்தமம் |
| 6. | களியைப் போன்று கடினமாய் இருத்தல் | அதம மத்திமம் |
| 7. | ஓட்டில் சுடப்பட்ட அடையின் கடினத்தை ஒத்து இருத்தல் | அதமாதமம் |
| 8. | மாவைப் போல் வறட்சியாய் இருத்தல் | அதமாதமத்திலும் அதமம் |

# 6

## வாய் நோய்

### முன்னுரை

சித்த மருத்துவ முறைகளில் வாய் நோய் என்ற பிரிவில் 11 வகை நோய்களும், நாக்கு நோய் என்ற பிரிவில் 7 வகை நோய்களும் கூறப்பட்டுள்ளன. இவற்றுடன் குழந்தைகளுக்கு வரக்கூடிய அக்கரம் என்ற 7 வகை நோய்களும், மேலும் நாமுள், நாநாற்றம் என வேறு இருவகை நோய்களும் கூறப்பட்டுள்ளன.

### உதட்டு நோய்

வாய்நோய் வகையில் உதட்டில் வரும் நோய்களாக வளி, அழல், ஐயம், முக்குற்றக் கலப்பு, சதை, நீர், மினுமினுப்பு, குருதி, குட்டம், வெடிப்பு, அடிபட்ட வீக்கம் என்ற பிரிவுகளாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்வுதட்டு நோய்களுக்கான மருத்துவமாக ஈருள்ளி எண்ணெய் பயன்படுகிறது. இது வெங்காயச் சாறு, நொச்சிச்சாறு, கர்ப்பூரவள்ளிச் சாறு, எள்நெய் இவைகளுடன் வேப்பம்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், குக்கில், கீழாநெல்லி இவைகளைக் கற்கமாகச் சேர்த்துத் தைலமாகக் காய்ச்சிச் செய்யப்படுகிறது. இது சதை உதடு, நீர் உதடு நோய்களுக்குப் பயன்படும்.

உதட்டுப் புண்ணுக்குத் துத்தம் 2 பங்கு, வேப்பம் பிசின் 1 பங்கு இரண்டையும் பழச்சாற்றால் அரைத்து ஆமணக்கு நெய்யில் கலந்து உதட்டில் பூச்சாகப் பூசலாம்.

உதட்டின் எரிச்சலுக்கு வெண்ணெயையேனும், குக்கில் வெண்ணெயையேனும், பசலைக் கீரையை அரைத்து வெண்ணெயுடன் கலந்தேனும் பூச, எரிச்சல் தணியும்.

சுட்ட உதட்டுக்குக் கடுக்காய்க் குடிநீருடன், இருவேலி, சதகுப்பை, கோட்டம் இவைகளையும் சேர்த்துக் குழம்பு செய்து பூசலாம்.

## நாக்கு நோய்

நாக்கில் வரக்கூடிய நோய்கள் நாக்கரணை, நாக்குப்புற்று, நாக்குப் பிளவை, நாக்குக் கிரந்தி, நாக்குப்புண், நாக்குச் சிலந்தி, உள்நாக்கு என்பவையாகும். இந்நோய்கள் ஆண்களுக்கு நாக்கின் வலப்புறத்திலும், பெண்களுக்கு இடப்புறத்திலும் தோன்றில் தீர்வது அரிதாகும்.

நாக்கரணை, நாக்குப்புற்று, நாக்குப் பிளவை ஆகிய நோய்களில் நாக்கின் கீழ் சோறு போல் வெளுத்த நிறத்தோடு குருக்கள் தோன்றும். இது தோன்றின பின் காதில் குத்தல் ஏற்பட்டுத் தலைவலி உண்டாகும். வாயில் நீர் ஊறி வடியும். ஓக்காளம் உண்டாகும். பிடரி திமிர்க்கும். உடல் வியர்வை கொள்ளும். முக்குற்றங்களில் ஐயக் குற்றம் மிகுந்து காணும். ஐயம் மிகாமலும் வியர்வை, ஓக்காளம் இல்லாமலும் இருப்பின் நோய் விரைவில் ஆறும். ஐயத்தின் குறிகுணங்கள் மிகுதிப்பட்டிருப்பின் நோய் தீராது. மிக்க நாள் செல்லும். நாவின் ஒரு புறத்தில் தடித்து, சுண்ணாம்புப் பட்டு வெந்தது போல் புண்ணாகிப் பிறகு குமிழம்பழம் போல் உருண்டு புண்ணாகும். நாத்திமிர்த்து நாடி விறைக்கும். மிடறு வறளும். பேசும்பொழுது நாக்கு தடுக்கும்.

நாக்கரணை, புற்று, பிளவை, கிரந்தி, புண் இவற்றுக்குச் சுட்டிகை (சூடு இடும்) முறைகள் கூறப்பட்டுள்ளன. பொன்னால் செய்யப்பட்ட ஆழி சூட்டுக் கருவி, பொட்டு சூட்டுக் கருவி இவற்றால் சுட்டிகை செய்ய வேண்டும்.

வத்திராஞ்சனப் புகை, அட்டசூதப் பற்பம் முதலிய மருத்துவ முறைகளும் இந்நோய்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

## அக்கரம்

குழந்தைகளுக்கு ஏற்படும் அக்கரம் எனப்படும் வாய்ப்புண் நோயானது மூலத்தில் கிளம்பும் ஆவியின் சூடானது நாவில் ஏறி, அந்நாவுக்கு வேக்காட்டை உண்டாக்கி, மாவைப் போல் நீறுபூத்து அதனால் குழந்தைகளுக்குப் பல துன்பங்களை நிலைக்கச் செய்யும். உண்ணும் பால் முதலியவற்றை உண்ண ஒட்டாமல் அதில் வெறுப்பை விளைவிக்கும் எனப் பாலவாகடம் என்னும் நூல் குறிப்பிடுகிறது.

## குறிகுணம்

இந்நோயில் பொதுவான குறிகுணங்களாகத் தலையில் வலித்தல், நாடிநடை மிகவும் துடித்து நடத்தல், குலைவேக்காடு, நாவேக்காடு, குளிர்தல், வாயிலிருந்து சொள்ளு வடிதல், நா வெளுத்தல், நாநீர் குழம்பல், கண்டத்தின் உட்பக்கம் வேதல், மிளகின் காரத்தையும் தாங்கமுடியாமை போன்றன காணப்படும்.

## அக்கர வகை

சிறப்புக் குறிகுணங்களாக ஒவ்வொரு வகை அக்கரத்திலும் பல்வேறு குறிகுணங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பிரித்தறியும் பாங்கினைச் சரியாக அறிவது அவசியமாகிறது.

1. சூலியக்கரம் என்பது நாவில் உண்டானால் அந்த நாவானது வெந்து மாப்போல் வெளுத்து அடையாகப் பற்றுதல், சூலி என்னும் பேருக்கு ஒப்பாகச் சூலத்தால் குத்துதல் போலக் குத்துதல், அந்நாவில் வழுவழுப்பான வெண்மையான நீர் சுரத்தல், வெள்ளாவி வைக்கும்போது வீசும் உவர்மண்ணின் நாற்றம் போன்ற நாற்றம் நாவிலிருந்து வெளியே வீசுதல், வாந்தியாதல், வெள்ளோக்காளம், நீர்வேட்கை, கால்கள், கைகள், உடம்பு இவைகளில் எல்லாம் கருமை நிறம் உண்டாதல், தலைநோதல், கொடிய சுரம் காய்தல், இடுப்புக் கறுத்தல் என்பவைகள் உண்டாகும்.

2. நீதியக்கரம் என்பது அடுத்த வகை. இந்நோயில் நீதி என்னும் பெயருக்கேற்ப நாவானது மிகுதல் குறைதல் இல்லாமல் நடுத்தரமாய் உட்பக்கம் வேக்காட்டால் சிவந்து, அதன் மேல் வெண்மையான மாவைப் போல் ஒரு பொருள் படர்தல், அம்மாவும் ஈரப்பசை இல்லாமல் உலர்தல், வாய் வறளல், வாய் கைத்தல், நெஞ்சு எரிதல், குளிர்தல், தலைவலித்தல், மிகுசுரம் வீசல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

3. சோதியக்கரம் என்பது நாவில் உண்டானால் நாக்கு வேக்காடு அடைதல், அதைத் தொடர்ந்து நாவின் நிறமானது பல்லின் அழுக்கு நிறம் போன்று இருத்தல், வாத, பித்த, கப நாடிகள் உடலில் இருக்கும் நோயின் துன்பத்தால் துடிதுடித்த நாடியாக நடத்தல், தலை இடி இடிப்பது போல் இடித்தல், தலை வலித்தல், கால், கணுக்கால் மற்றும் மூட்டுகள் யாவும் துளைத்தலால் உண்டாவது

போல் நோதல், சுரம் காய்தல், வயிறு கழிதல், வாந்தியாதல், வயிற்றில் எரிதல் என்னும் குறிகுணங்களை உடையதாக இருக்கும்.

4. வீமியக்கரம் என்னும் நோயில் நாக்குத் தடித்தல், தாழைக் குருத்தை மென்றால் உண்டாகும் செந்நிறம் போல் நா சிவத்தல், வாய் வேக்காடு அடைதல் உடல் கருமை நிறம் அடைதல், மிக்க நீர் வேட்கை, நெஞ்சு அடைப்பு, ஈரல் வெந்து நோதல், மிகக் குளிர்தல், தலை மிகுதியும் நோதல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

5. குண்டியக்கரம் என்னும் நோயில் ஈரல் வெந்து, அதனால் நாக்கும் வெந்து மிகவும் சிவப்படைதல், வாய் கூசுதல், இருமல், வயிறு கழிதல், உடல் மிகக் கடுத்தல், நெஞ்சு கரித்து ஓக்காளித்தல், விலாவின் ஒரு பக்கம் நோதல், நீர்வேட்கை ஆகிய குறிகுணங்கள் காணும். இதே நோயில் சில குழந்தைகளுக்கு இடுப்புக்கு மேல் சுரமடித்தல், உடம்பு மீன் உடம்பு போன்று வெள்ளை நிறம் ஆதல், சிறு நீர் மஞ்சள் நிறமாய் இறங்குதல், எச்சவாய் திடீரென்று சுறுக்கெனக் குத்தல், உடம்பு இளைத்தல், உடம்பு கடுத்தல், மழலைச் சொல்லானது பேச முடியாதபடி குரல் கடுத்தல் என்னும் இக்குறி குணங்களையும் கொண்டு காணும்.

6. கபாலியக்கரம் என்னும் நோயில் குடல், ஈரல் இவ்விடங்கள் வெந்து நோதல், தொண்டையில் காடிச்சோறு பொங்குவது போல் பொங்குதல், அபாயகரமாக நா வேதல், பிறகு ஐந்தாம் நாளில் அவ்வேக்காட்டில் வெடித்தல், அவ்வெடிப்பிலிருந்து இரத்தம் வடிதல், தலை நோதல், உடல் வலித்தல், உடல் பளுவாய்த் தோன்றல், விடாச் சுரம் அடித்தல், நெஞ்சு நோதல், வயிறு நொந்து இளைத்து பேதி ஆதல் என்னும் இக்குறிகுணங்கள் காணும்.

7. குமரியக்கரம் என்னும் நோயில் எந்தப் பொருளை உண்ணக் கொடுத்தாலும் அதை உண்ண முடியாமல் நாக்குக் கூசுதல், நா தடித்தல், உடம்பின் சதையில் நோதல், அதனால் துன்பம் மிகுதல், இரண்டு கண்களும் நோதல், சுரம் அடித்தல், வாய் கைத்தல், வேகமாய் அடிக்கடி வாந்தி எடுத்தல், உள்நாக்கு வளர்தல், பல் மஞ்சள் நிறம் ஆதல், தலையில் இருந்து மூக்கின் வழியாக மூன்று நாள் வரைக்கும் இரத்தம் வடிதல் என்னும் இவை தோன்றும்.

8. உள் அக்கரம் என்பது உந்தியின் உட்பக்கம் வெந்து புண்ணாகி அதினின்றும் ஆவி தோன்றல், அந்த ஆவி மேலுக்குக் கிளம்புவதால் அது தலையில் முட்டி நீராகி, அந்நீர் மூக்கின் வழியாக ஒழுகுதல், அந்நீர் முகம் முதலிய மேல் நோக்கு உறுப்புகளில் கோத்துக் கொள்வதனால் குருதி கெட்டு,

அம்முகம் முதலியவற்றின் செந்நிறம் நீங்கி வெளுத்தல், நாக்கு வெளுத்தல், அதில் வெண்ணீறு பூத்தல், தூக்கம் உண்டாதல், சுரம் அடித்தல், திடீரென்று தண்ணீர் தாகம் உண்டாதல் ஆகிய குறிகுணங்களை உடையதாகும்.

## நாமுள்

நாமுள் என்னும் நோயானது குழந்தைகள் பிறக்கும்பொழுதே தொடர்கின்ற தோடத்தினாலும் (மாசு), தாயின் பசியினால் உண்டாகும் உடல் வருத்தத்தினாலும் குழந்தைகளுக்கு உண்டாகும். இந்த நோயானது மிக்க வன்மையானது. நோயால் இருமல், மேல் மூச்சு, இரண்டு கண்களிலும் நீர் சொரிதல், தலைவலி, சுரம், கனவு போல் மயங்கிப் பொறிகள் கலங்கி அதனால் பால் பிடித்து உண்ணாமை, இரண்டு விலாக்களும் அள் எடுத்தல், வாயிலுள்ள மற்ற இடங்களிலும் நாவிலும் தொண்டையிலும் முள் உண்டாதல், அது சொரசொர என்று வலியாய் இருத்தல், தலைநடுக்கல், வாய்பேச வொட்டாமை, தொண்டையில் கபம் மிகுதல், இரண்டு கண்களும் திறந்து கொண்டே இருத்தல் என்னும் இவைகள் உண்டாகும். இது ஒரு பெரிய நோய் என்று எண்ணி, உள்ளம் அடங்கிப் பொறுமையாக இருந்து அறிவின் வன்மையால் நோய்களை ஆராய்ந்து காண வேண்டும். இந்நோய் தீராத ஒரு நோய் என்றே கருதப்படுகிறது.

இக்குறிகளன்றி வேப்பம் பூ நிறம் போன்ற கழிச்சல், கை, கால்களில் தளர்ச்சி ஆகிய குறிகுணங்களும் காணும்.

## நாநாற்றம்

நாவில் உண்டாகும் மற்றொரு நோயான நாநாற்றம் என்னும் நோயில் மிடறு நோதல், பால் குடியாமை, நாப்புண்ணாகி நாற்றம் வீசுதல், சுரம் காய்தல், கோழை நீர் சூடாக இருத்தல், மலம் தீய்ந்து கறுப்பாக இருத்தல் முதலிய குறிகுணங்கள் காணும்.

## மருத்துவம்

❖ அக்கரத்திற்குப் பொதுவான மருந்தாகக் கறுஞ்சீரகம், கடுகுரோகணி, கடுக்காய்த் தோல், காட்டு மல்லிகை வேர் இவை வகைக்கு ஒரு வராகன் எடை; ஈயக்கொழுந்து ஒரு பிடி, வெள்ளை வெங்காயம் இரண்டு பலம், சிற்றாமணக்கு நெய் அரைக்கால் படி, முலைப்பால் அல்லது பசும்பால் வீசம் படி இவற்றில் கடைச் சரக்குகள் நான்கையும் இடித்தும், ஈயக்கொழுந்தை அரைத்தும், வெங்காயத்தைப் பொடியாக

அரிந்தும் மேற்படி சிற்றாமணக்கு நெய்யில் கலந்து, அத்துடன் பாலையும் ஊற்றி அடுப்பேற்றி, சிறுக எரித்துப் பக்குவ பாகத்தில் வடித்து, அதில் கோரோசனம் இரண்டு வராகன் எடை பொடி செய்து தூவிக் காலையில் மாத்திரம் ஐந்து அல்லது ஏழு நாள் வேளைக்கு ஒரு உச்சிக் கரண்டி அளவு சாப்பிட, வயிற்றில் உண்டாகும் வேக்காடு, நா வேக்காடு, சுரம் முதலியன நீங்கும்.

- ❖ குண்டியக்கரத்திற்குச் சுண்டைவேர்த்தோலை ஒரு சிறு எலுமிச்சங்காய் அளவு அரைத்து, அதே அளவு பசுவின் வெண்ணெயுடன் கூட்டி மூன்று அல்லது ஐந்து நாள் காலை, மாலை இரண்டு வேளையாக உண்ணலாம்.
- ❖ கரிசிலாங்கண்ணி இலையை அரைக் கொட்டைப்பாக்கு அளவு அரைத்து வீசம்படி பசுவின் பாலுடன் கூட்டி, மூன்று அல்லது ஐந்து நாள் காலை மாலை இரண்டு வேளையாக உண்டாலும் குண்டியக்கரம் தீரும். இந்நோய்க்குப் பச்சரிசி சோற்றைப் பசுவின் பாலுடன் கூட்டி உண்டு பத்தியம் இருக்க வேண்டும்.
- ❖ உள் அக்கரத்திற்கு அதிமதுர நெய் செய்து வழங்கப்படுகிறது. இம்மருந்தில் அதிமதுரம், மணிப்புங்கன்பழம், பசும்பால், பசுநெய் முதலியன சேரும். மெழுகு பதமாய்க் காய்ச்சி இறக்கிக் காலை, மாலை இரு வேளை வராகன் எடையாக ஐந்து நாள் கொடுக்கலாம்.
- ❖ கௌசிகர் குழம்பும் கூட இந்நோய்க்கு வழங்கலாம் என மருத்துவ நூலில் கூறப்பட்டுள்ளது.
- ❖ அட்சரமாந்தச் சுரத்திற்குப் பூவரசம் எண்ணெய் மருந்தாகப் பயன்படுகிறது. இதில் பூவரசு இலை, காய், பூ இவைகளைத் தனித்தனியாக அரைத்து, பலம் ஒன்றாக எடுத்து ஒன்று சேர்த்து அடையாகத் தட்டிச் சிற்றாமணக்கு நெய் ஒரு சேர் சேர்த்து அடை சிவந்து மிதக்குமட்டும் காய்ச்சி, அடையை நீக்கி அதில் ஏலம், சாதிக்காய், சாதிப் பத்திரி மூன்றும் வகைக்கு அரை வராகன் எடை பொடித்துக் கூட்டிக் கலக்கிக் காலை, மாலை காசு எடை வீதம் கொடுத்துவர, நோய் நீங்கும்.

- நாமுள் நீங்குவதற்குக் கற்றாழஞ்சாறு மருந்தாகப் பயன்படுகிறது. ஒரு கடுக்காயை விதை நீக்கித் தோலைப் பொடி செய்து, ஒரு வராகன் எடை சீரகப்பொடி கூட்டி, ஒரு சங்கு கற்றாழஞ்சாற்றில் சேர்த்து, நாள் ஒன்றுக்கு இரண்டு வேளையாக மூன்று நாள் வழங்க, நாமுள் நீங்கும்.
- நாநாற்றம் என்னும் நோய்க்குப் பழம்பாசி, வல்லாரையிலை, வெங்காயம் இவைகளைச் சமமாக எடுத்து இடித்துச் சாறு பிழிந்து, உச்சிக் கரண்டி அளவு எடுத்து, அந்தச் சாற்றின் அளவு வெள்ளாட்டுப்பால் கூட்டி, சீரகம் கால் வராகனெடை வறுத்துப் பொடி செய்து அதில் அரைத்துக் கூட்டி, காலை, மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள் கொடுக்க, நோய் நீங்கும்.
- வாய்ப்புண் என்னும் அக்கர நோய்க்குக் குக்கில் பற்பம், சிலாசத்து பற்பம், மாசிக்காய் சூரணம், குக்கில் வெண்ணெய், திரிபலா சூரணம் முதலிய மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன.
- வெங்காரமதுவை வாய்ப்புண்ணுக்குத் தடவளாம். உள்நாக்கு வளர்ச்சிக்குப் பூண்டுத்தேன் தடவலாம். சுரம் இருந்தால் வசந்தகுசுமாகர மாத்திரை, கோரோசனை மாத்திரை முதலியவற்றைத் தேனில் கலந்து கொடுக்கலாம்.

# 7

## நீர்வேட்கை நோய்

முன்னுரை

இது நாவறட்சி நோய், தாக நோய் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

இந்நோயில் அடிக்கடி நீரைப் பருக வேண்டும் என்னும் உணர்ச்சியை உண்டாக்குவது இதன் இயல்பாகும். அழல் நீர்வேட்கை நோயானது உணவுப் பழக்க வேறுபாடுகளால் தனி நோயாக வருவதுண்டு. இது நோய்ப் பிரிவுகளில் 'தாகப் பித்தம்' என்ற பிரிவில் அடங்கும். இது தவிர வேறு சில நோய்களுக்குத் துணையாகவும் வருவதுண்டு. அதாவது எளிதில் செரிக்காத உணவுகளை மிகுதியாகப் புசிப்பதால், அவ்வுணவு சரிவர செரிக்கும் மட்டும் நீர்வேட்கையை உண்டாக்கும். அல்லது அழல்தாது பெருக்கால் வரும் நோய்களிலும் உடலின் நீர் மிகுதியும் வறளல், வெளியாதல் ஆகியவற்றை உண்டாக்கும். பேதி, வாந்தி, நீரிழிவு முதலிய முப்பிணிகளிலும், மிகுதியான ஆடல், பாடல், ஓடல் என்னும் செயல்களிலும் நீர் வேட்கை இயற்கையாக எழும்.

குறிகுணம்

இந்நோயில் நா வறண்டு போதல், நீரைப் பருகவேண்டும் என்னும் இச்சை, நீரைப் பருகினும் தாகம் அடங்காமை, இளைப்பு, மயக்கம் முதலிய குறிகள் காணும். அன்றியும் உடல் நடுங்குவது போன்ற ஒரு தோற்றம், உடல் எங்கும் எரிச்சல், உதட்டை நாவினால் நனைத்தல், குரல் கம்மல் முதலியவைகளும் ஏற்படும்.

நோய் வகை

நீர்வேட்கை நோய் ஆறு வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை:

வாத நீர்வேட்கை, பித்த நீர்வேட்கை, ஐய நீர்வேட்கை, முக்குற்ற நீர்வேட்கை, இரசக்குற்ற நீர்வேட்கை, செரியாமை நீர்வேட்கை என்பனவாகும்.

1. வாத நீர்வேட்கையில் உடல் வாடிக் கறுத்தல், தலை சுற்றல், மனக் கலக்கம், சுவையறியாமை, காது கேளாமை, மிகுந்த தூக்கம், உடல் வன்மை குறைதல், குளிர்ந்த நீரைப் பல முறைப் பருகினும் நீர்வேட்கை நீங்காமை ஆகிய குறிகுணங்கள் காணும்.

2. பித்த நீர்வேட்கை நோயில் எப்பொழுதும் வெப்பமாக இருத்தல், நா, உதடு, அண்ணாக்கு வறண்டு போதல், தொண்டை, நா இவைகள் சிவந்து முள்போல் காணல், நா எரிதல், தொண்டை புகைதல் என்னும் குறிகுணங்கள் காணும்.

3. கப நீர்வேட்கை நோயில் தொண்டை அடைத்துக் கொண்டதுபோன்ற ஒரு தோற்றம், வாய் இனித்தல், வயிறு பொருமல், பசியின்மை, தலைநோய், உடல் குளிர்தல், வாய் சுவையறியாமை, உண்ட உணவு செரியாமை என்னும் குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

4. முத்தாது நீர்வேட்கையானது சுரம், முப்பிணி (சன்னி), நீரிழிவு, இளைப்பு நோய் முதலிய நோய்கள் முற்றி, முத்தாதுக்களும் ஒன்று கூடிய காலத்தில் பிறப்பதாகும். இது மருந்து முதலியவைகளால் அவ்வளவு எளிதில் தீரா நோயாகும்.

5. இரசக்குற்ற நீர்வேட்கையானது உடல் கட்டுகளில் இரசம் என்னும் உடல் தாது, இரத்தத் தாதுவாக மாறும்பொழுது உண்டாகும். அன்றியும் குருதி அளவுக்கு மிஞ்சி வெளியானால் மிகுந்த நீர்வேட்கை, நா வறண்டு போதல், மூளை கலங்கி அடிக்கடி இளைப்பு உண்டாதல் முதலான குறிகுணங்களைத் தோற்றுவித்து, சிலவேளை கொல்வதும் உண்டு.

6. செரியாமை நீர்வேட்கையானது மிகுதியும் இனிப்பு, உப்புப் பொருள், எளிதில் செரிக்கக் கூடாத உணவு முதலியவற்றைக் கொள்வதாலும், நோயுற்ற காலத்தும் மிகுந்த நடையினால் இளைப்படைந்த காலத்தும், மிக்க உணவை உண்பதாலும் பிறக்கும்.

மேற்சொன்ன நீர்வேட்கை நோய்களில் வளி, தீ, என்னும் உயிர்த்தாதுக்களால் வரும் நீர்வேட்கையும், செரியாமை நீர்வேட்கையும் எளிதில் தீரும். முக்குற்ற நீர்வேட்கையும், இரசக்குற்ற நீர்வேட்கையும் எளிதில் தீராது.

## நீர்வேட்கையில் உயிர்த்தாதுக்களின் வேறுபாடுகள்

உடல் வறட்சியை உண்டாக்கக் கூடிய உணவுச் செயல்கள் அழல்தாதுவைப் பெருக்கி, மேல்நோக்குக் காலைத் (உதானன்) தூண்டி, இந்நோயை உண்டாக்கும். கேடடைந்த அழல்தாது மற்றைய தாதுக்களைத் துணை கொள்ளின், துணை கொண்ட அத்தாதுவின் பெயரால் நோய் வழங்கப்படும். இந்நோயில் உடல்கட்டுகளில் இரசமும் இரத்தமும் கெடும். இந்நோயில் நாடி நடை, பித்தநாடி மிகுந்து நடப்பதாகத் தோன்றும்.

## மருத்துவம்

இந்நோய் உண்டாவதற்கான காரணங்களை அறிந்து, அவற்றிற்குரிய பரிகாரம் செய்தல் வேண்டும். வாந்திபேதி, நீரிழிவு, முப்பிணி, இரத்தப்போக்கு ஆகியவற்றின் தொடர்பால் உண்டானால் அந்நோய்களுக்கான மருத்துவமும் செய்ய வேண்டும்.

- ❖ அழல்தாதுவால் உண்டாகும் நீர்வேட்கையைப் போக்கக் குளிர்ந்த நீரும், அக்குற்றத்தைத் தன்னிலைப்படுத்தும் குடிநீர்களையும் வழங்கலாம். இதற்குப் பற்பாடகம், சீந்தில் குடிநீர் கொடுக்கலாம்.
- ❖ ஆற்றுமணல் 1 பிடியும், 2 ஏலமும் கூட்டி சிவக்க வறுத்து மணலைக் கொட்டிவிட்டு, அச்சட்டியில் நீர்விட்டுக் காய்ச்சி வடித்த நீரைக் கொடுக்கலாம்.
- ❖ கொத்துமல்லிக் குடிநீர் வழங்கலாம்.
- ❖ நெற்பொரியை நீர் விட்டுக் காய்ச்சித் தெளிய வைத்துத் தரலாம்.
- ❖ அதிமதுரக் குடிநீர் 30 மிலி. 3 மணிக்கு 1 முறை தரலாம்.
- ❖ மண்புழுக் குடிநீர் 30 மிலி. தரலாம்.
- ❖ நண்டுவளை நீர் தரலாம்.
- ❖ வரப்பு நண்டுச் சாறு 1 தேக்கரண்டி தரலாம்.

- விக்கலுடன் கூடிய நீர் வேட்கையாக இருந்தால் மயிலிறகாதி சூரணத்தைத் தேனில் குழைத்துத் தரலாம்.
- ஓக்காளம் கலந்த நீர்வேட்கையாயின் சாதிசம்பீரக் குழம்பை நாக்கில் தடவலாம்.
- கண்டாவிழ்தம் என்னும் மருந்து செய்து கொடுக்க, தீரா நீர்வேட்கை நீங்கும்.
- அக்கரகாரம், திப்பிலி, கோஷ்டம், சீரகம் வகைக்கு 10 கிராம் எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்கலாம்.
- நன்னாரி மணப்பாகு 1 தேக்கரண்டி சாப்பிட்டு வந்தாலும் நீர்வேட்கை குணமாகும்.
- நவரசத் துவையல், பாவனக் கடுக்காய் போன்ற மருந்துகளும் இதற்குப் பயன்படும்.
- கஸ்தூரிக் கருப்பு 60 முதல் 120 மி. கிராம் வரை ஏலாதிச் சூரணத்துடன் கலந்து தேனில் குழைத்து வழங்கலாம்.
- இந்நோயில் எளிதில் செரிக்கக்கூடிய உணவு வகைகளையே உண்ண வேண்டும். மிகுதியான காரம், புளிப்பு தவிர்க்கப்படுதல் வேண்டும்.

8

## வெளுப்பு நோய்

### முன்னுரை

வெண்மை நோய், பாண்டு என்ற பெயர்களும் இதற்குண்டு. குருதியில் உள்ள இரத்தத் தாதுக்கள் தம்மளவில் குறைந்து காணப்படுவதால் உடல் இயற்கை நிறம் மாறி வெளுத்து, கண்கள், நகக்கண்கள், நாக்கு முதலியன வெளுத்துக் காணப்படும்.

### நோய் வரும் வழி

குருதியின் வன்மையைக் குறைக்கக்கூடிய புளிப்பு, உப்புச் சுவையுள்ள பொருட்களை மிகுதியாகப் புசித்தலாலும், தாம்பூலம் (வெற்றிலைப் பாக்கு, புகையிலை) அதிகமாகத் தரித்தலாலும், கள், சாராயம் போன்றவற்றை மிகுதியாகக் குடித்தலாலும், அதிசார நோயால் துன்புற்றவர்களுக்கும், அக்கினியின் இடத்தில் இருந்து வேலை செய்பவர்களுக்கும், பகல் நித்திரை கொள்வோர்க்கும் பாண்டு நோய் வந்து அவதியை ஏற்படுத்தும்.

அத்துடன் பஞ்சு திருடினோர்க்கும், கோயில் சொத்தில் உண்பவர்களுக்கும், பசுவை வதைத்துப் பட்டினி இட்டோருக்கும், அவரவர் மறைவழி நடக்காதவர்களுக்கும், வழிபறி செய்தோருக்கும், கண்ணால் காணாதவற்றைக் கண்டதாகப் பழிசொல்லிப் பிறர் குடியைக் கெடுக்கும் பாவியருக்கும் இந்நோய் வரும் என்று யூகிமுனிவர் சொல்லி உள்ளார்.

சரியாகச் செய்து முடிக்காத நிலையில், அந்த மருந்துகளைத் தேவைக்கு அதிகமாக உட்கொண்ட நிலையிலும், குறிப்பிட்ட நாள் அளவிற்குமேல் நீண்ட நாட்கள் மருந்து உட்கொண்ட நிலையிலும் பாண்டு காணும்.

குருதியை உடலிலிருந்து சிறுகச்சிறுகவோ அல்லது அளவிற்கு அதிகமாகவோ வெளிப்படுத்தும் நிலையிலும் இந்நோய் ஏற்படும். வெட்டுப்படுவதாலோ அல்லது அடிபடுவதினாலோ எற்படும் குருதி இழப்பு அத்துடன் குருதிவாந்தி, குருதிகழிச்சல் நிணக்கழிச்சல், குன்மம், இரத்தமூலம், எருவாய் சிறுமூலம், செண்டுமூலம், பெருமூலம், தமரகமூலம், சித்த மூலம், முக்குற்றமூலம், சுருக்கு மூலம் அத்துடன் உணவுக் குழல், வயிறு, குடல் பகுதிகளில் ஏற்படும் புற்றுநோயைத் தொடர்ந்தும் குருதி இழப்பு ஏற்படும்.

அழல் நீர்ச்சுருக்கு நோயில் குருதியானது சிறுநீருடன் அடிக்கடி வெளிப்பட்டு பாண்டு நோய் ஏற்படும்.

குருதி அழல் நோயில் மேல்நோக்கு, கீழ்நோக்கு, இருநோக்கு, அளவிலா நோக்கு என்று கூறப்படும் நோய்களில் குருதி இழப்பு ஏற்பட்டுப் பாண்டுநோய் உண்டாகும். குருதி மூக்கடைப்பு, இளைப்புநோய் இவற்றிலும் குருதியானது சளியுடன் வெளிப்பட்டு, நாட்பட்ட நிலையில் பாண்டுநோய் தோன்றும். குருதிவெள்ளை, பெரும்பாடு ஆகிய நோய்களைத் தொடர்ந்தும் பாண்டு நோய் ஏற்படும்.

உணவில் ஊட்டச்சத்துள்ள பொருட்களையும், அயச்சத்துப் பொருட்களையும் தேவையான அளவில் உண்ணாத நிலையிலும் பாண்டு நோய் வரும்.

சிலவகை மருந்துப் பொருட்களை, உதாரணமாக வங்கம் போன்ற மருந்துப் பொருட்களைச் சரிவர செய்து முடிக்காத நிலையிலும், நீண்ட நாள் அருந்துவதாலும் இந்நோய் வரும்.

## நோய் வகை

முக்குற்றத்தால் வருவன நான்கும், நஞ்சால் வருவன ஒன்றும் கூடி ஐந்தாகும். 1. வளிப் (வாதப்) பாண்டு, 2. அழல் (பித்தப்) பாண்டு, 3. ஐயப் (கபப்) பாண்டு, 4. முக்குற்றப் (திரிதோஷ) பாண்டு, 5. நஞ்சு (விடப்) பாண்டு என்பன அவை. இன்னும் மண்ணுண் வெளுப்பு (பாண்டு) நோய் என்ற ஒன்று உள்ளது என்றும் சில நூலோர் கூறுவர். அன்றியும் குருதிக் குறைவால் உடற் கட்டுகள் மெலிந்து, உடல் வீங்கி, நிறம்மாறி, மஞ்சள் அல்லது நீலநிறம் பெற்று, மிகுந்த நீர்வேட்கை, அடிக்கடி மயக்கம் வருதல், மனச்சோர்வடைதல், அறிவு தடுமாறல், ஆண்மைக் குறைதல் என்னும் குறிகளைக் காட்டும் நோயினை நீலப்பாண்டு, அலசப்பாண்டு,

அலிமுகப் பாண்டு என மூவகையாக வழங்குவாரும் உளர். இவைகள் வெளுப்பு (பாண்டு) நோயில் காணும் குறிகுணங்களையே பெறுமாதலின் இவற்றைத் தனித்துக் கூறவேண்டுவதில்லை.

## 1. வளிப் பாண்டு

வளி வெளுப்பு நோயில் குடல் புரட்டி, அடிவயிறு வலித்து, நீர்வேட்கையும் பசியும் அற்று, குருதி நாளங்கள் கறுப்பாகி பரபரத்துக் காணும். உடல் நடுக்கம் கொள்ளும்; கண் சிவக்கும்; உடல் வெளுத்து வீங்கும்; வீங்கிய இடங்களில் வலியும் உண்டாகும்; எரு (மலம்) தீய்ந்து கட்டும்; தலைவலி இருக்கும்.

## 2. அழல் பாண்டு

இந்நோயில் உடல் எல்லாம் மஞ்சள் நிறமடைந்து நா, கை, கால்கள் வெளுத்து, கண் பார்வை மங்கும். மிகுந்த நீர்வேட்கையோடு, மயக்கம், வாய் காரச்சுவையோடு இருத்தல், சிலபோது கைப்புச் சுவையும் காணல், நெஞ்சை இறுக்கிப் பிடித்தது போல் மூச்சு முட்டுவதோடு, தலை கிறுகிறுக்கும்.

மேலும் குளிர்ச்சி தரும் பொருட்களில் விருப்பு, புளியேப்பம், வாய்நாற்றம், உடல் வெளுத்து மஞ்சளித்தல், வாய் புண்ணாதல், அடிக்கடி மஞ்சள் நிறத்தோடு கழிதல் என்னும் குறிகளையும் காட்டும்.

## 3. ஐயப் பாண்டு

இந்நோயில் மேற்கூறியபடி தோல் மிக வெளுத்து, நரம்புகள் புடைத்து, நா உப்புக் கரித்தல், மயிர் சிலிர்த்தல், வாந்தியாதல், குரல் கம்மல், அடிக்கடி தும்மல், இருமிக் கோழையைக் கக்கல், மயக்கமடைதல், இடுப்பு நோதல், ஆண்மைக் குறைதல், அடிக்கடி சீறி சினங் கொள்ளல், சோர்வும், தளர்வும் உண்டாதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

## 4. முக்குற்றப் பாண்டு

இந்நோய் சுவையின்மை, இரைப்பு, மேல்மூச்சு வருதல், மிகுதியாக இளைப்பு உண்டாதல், உடல் வன்மை குறைதல் இதயம் மிகுதியாகத் துடித்தல், உடல் அழல் கொண்டு சிறுநீர் அடிக்கடி இழிதல், வெப்பமும் தயக்கமும் உண்டாதல், தும்மல், உடல் முழுமையும் ஊதல் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு வரும்.

## 5. நஞ்சு பாண்டு

உடலுக்கு ஒவ்வாப் பொருட்களை உண்டதால் பிறந்த நஞ்சின் அளவாக உடல் வெளுக்கும். இந்நோயில் மிகுந்த நீர்வேட்கை, சுவையின்மை, வாந்தி, விக்கல், இருமல், பெருமூச்செறிதல், உடல் முழுமையும் வீங்கல் என்னும் குறிகளோடு, நரம்பும் புடைத்து, உடல் சூடாகத் தோன்றும்.

## 6. மண்ணுண் பாண்டு

இது சிறு குழந்தைகளும், சிறுவயதினரும், கருவுற்றவரும் மண், சாம்பல், செங்கல், திருநீறு, கற்பூரம் இவைகளின் மீது தனித்த இச்சை கொண்டு, அளவு கடந்து உண்பதால் காணும் நோயாகும். இந்நோயில் கொண்ட பொருட்களுக்கு ஏற்ப வயிறு ஊதல், செரியாமை, வாந்தி, கழிச்சல், சுரம், வயிற்றுப்புழு முதலிய நோய்கள் காணும், உடல் மெலிந்து குருதி வற்றி, வெளுத்து, வீங்கி, இதயம் மிகுதியாகத் துடித்தல் முதலிய குறிகளைக் காட்டும்.

## தீராத் தன்மை

நஞ்சால் பிறந்த வெளுப்பு நோயும், இடைவிடாத வாந்தி அல்லது கழிச்சல், மிகுதியான உடல் வீக்கம், நீர்வேட்கை, விக்கல், இருமல் என்னும் குறிகளைக் கொண்டவையும் எளிதில் தீராத் தன்மை வாய்ந்தவைகளாகும்.

## குறிகுணங்கள்

உடல் சோர்வு, நாளுக்குநாள் எடை குறைதல், இதயம் படபடத்தல், சிறிது கடின வேலை செய்தாலும் மூச்சுவிட சிரமம், தலைவலி, மயக்கம், பார்வைக் குறைவு, தூக்கமின்மை, கை, கால் விரல்களில் மதமதப்பு, மார்புவலி, தோல், கை, கண்ணின் வெள்விழி, நாக்கு இவை வெளுத்துக் காணுதல், நா வெடித்துப் புண்ணாதல், நா சிவந்து இருத்தல், நா பட்டுத்துணிபோல் வழுவழுத்துக் காணல், உணவு விழுங்குவதற்குச் சிரமம், பசித் தீ கெடுதல், இதய ஒலி மாறுபட்டுக் காணல், உடல் வீக்கம் முதலிய குறிகுணங்கள் காணப்படும்.

மண், சாம்பல், கரி போன்ற பொருட்களைச் சுவைப்பதற்கு விருப்பம் மிகும். இந்நோய் பெண்களுக்கு உண்டாயின் சூதகத்தில் வெளியாகும் குருதியின் நிறம், எடை, நாள், அளவு முதலியன குறைந்து வெளியாகும். சில வேளை மாதவிடாய் உண்டாகாமல் இருக்கக்கூடும்.

அழல் உடலோர்க்கு இந்நோய் பிறக்குமாயின் முதலில் பசித்தீ கெடும். செரியாமை உண்டாகும். உடல் எரிவு, சுரம் போல் வெப்புத் தோன்றல், நா வெளுத்துச் சிவந்து அல்லது வழுவழுத்துக் காணப்படல், உணவை மெல்லவும் விழுங்கவும் முடியாமை, பித்த நீர் கலந்து வாந்தியாதல், வாய் கைத்தல், வயிற்று நோய், வயிறு கடுத்து நுரை நுரையாய்க் கழிதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும். அன்றியும் நாள்படின் உடலில் குருதியின் அளவு, எடை, நிறம் யாவும் குறைந்து, உடல் மஞ்சள் பூத்தது போலாகி, மஞ்சள் காமாலை நோயினைப் போலக் காணும்.

நோய் பெருகிய நிலையில் ஆயாசம், இளைப்பு, பெருமூச்சு, கழிச்சல், உணவில் வெறுப்பு, வன்மை இழத்தல், உடல் ஊதல், என்னும் கொடிய குறிகுணங்கள் தொடரும்.

## மருத்துவ முறைகள்

இந்நோயில் உடல் வன்மை குறைந்து, பசித்தீ கேடடைந்து, உண்ட உணவு சரியாகச் செரியாத காரணத்தால் இரசக் குருதிகள் ஊட்டம் பெறா. இவைகளுடன் அழல் தாது கெட்டுத் தோலுக்கு நிறத்தைக் கொடுக்கும் இரஞ்சகப் பித்தமும் மெலிந்து, நிறத்திலும் எடையிலும் குறைந்து, தீக்குற்றத்தைப் பெருக்கும். அதன் காரணமாக மற்ற இரு தாதுக்களும் தன்னிலை மிகுந்து, பரவுகாலின் (வியானன்) வன்மையைக் கெடுத்து, வெளுப்பு நோயை உண்டாக்குகின்றன.

ஆதலால் இந்நோயில் தன்னிலை திரிந்த தாதுக்களைத் தன்னிலைப் படுத்துவதற்குக் கழிச்சல் மருந்துகளை வழங்க வேண்டும். அப்பால் பசித்தீயைத் தூண்டும் மருந்துகளையும், உண்ட உணவு சரிவர செரிக்கக் கூடிய மருந்துகளையும், குருதியின் வன்மையைப் பெருக்கக் கூடிய மருந்துகளையும் கொடுத்தல் வேண்டும். இனி சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ள கழிச்சலுக்கான பரிகார முறைகளைத் தொகுத்துக் காணலாம்:

## குடிநீர்

- ❖ அங்கூர் திராட்சை, பேரீந்து (கச்சூர்), பன்னீர்ப்பூ, சிவதை வேர் இவை வகைக்குச் சம எடை சேர்த்து, முறைப்படி குடிநீரிட்டுத் தக்க அளவில், தினம் காலையில் ஒரு வேளை அல்லது அவசியமானால் மாலையிலும் கொடுத்துவர மலம் ஒழுங்காய்க் கழியும்.

- ❖ அகத்திக் கீரையை வேகவைத்து வடித்த நீரில் சிறிது பனங் கற்கண்டு கூட்டி 1/2 முதல் 1 ஆழாக்கு, காலையில் மட்டும் கொடுத்து வர மலம் கழியும். வயிற்றுப்புழுவும் வெளியாகும்.
- ❖ வயிற்றுப்புழு நீங்க முருக்கன் விதை மாத்திரை 2 ஐக் காலையில் கொடுக்கவும்
- ❖ நாக்குப்பூச்சிக் குடிநீர்-100 மிலி. காலையில் கொடுக்கவும்.
- ❖ நிலவிளா, பற்பாடகம், சீந்தில் கொடி, நிலாவாரை, சிவதை வேர் இவை சம எடை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு வடிகட்டித் தக்க அளவில் பேதியுப்பும் கூட்டி காலையில் மட்டும் கொடுக்கப் பேதியாகும். பித்த நீர் அகலும்.
- ❖ அழற்சி எண்ணெய், மூலக்குடார மெழுகு, தித்திப்பு பேதிலேகியம், மூலக்குடார நெய், அத்திப்பழ மணப்பாகு இவைகளில் ஒன்றைத் தக்க அளவில் காலையில் மட்டும் கொடுத்து வர மலம் நன்றாய்க் கழியும். பசி எடுக்கும்.

## அழற்சி எண்ணெய்

முள்ளங்கிச் சாறு, மணத்தக்காளிச் சாறு, சோற்றுக் கற்றாழைச் சாறு, வெள்ளறுகுச் சாறு, வல்லாரைச் சாறு, சிறுகீரைச் சாறு, சிற்றாமணக்கெண்ணெய் இவை வகைக்கு ஒரு படி வீதம் சேகரித்து ஒன்றாய்த் தைலம் காய்ச்சும் பாண்டத்தில் இட்டுக் காய்ச்சி, கடுகு திரள் பதத்தில் வடிகட்டிப் புட்டியில் அடைக்கவும். இதில் 1 முதல் 2 தேக்கரண்டி அளவு காலையில் மட்டும் கொடுத்துவர, மலம் கழியும். சிறுநீரும் நன்றாய் வெளியாகும். உடல் காந்தல், எரிச்சல் தணியும். அழல் குற்றம் தன்னிலைப்படும். பாண்டு, சோகை, காமாலை, பெருவயிறு ஆகியவற்றில் இதனை இலகு விரேசனமாகக் கொடுக்கலாம். வாய்ப்புண், வயிற்றுப்புண். குடற்புண், மூலநோய் இவற்றில் மலம் கழிவதற்கு இந்த எண்ணெயை அளவறிந்து ஒரு வேளை காலையில் அல்லது இரவில் படுக்கைக்குப் போகும்போது சிறிது பாலில் அல்லது ஆரஞ்சு பழச்சாற்றில் கலந்து கொடுத்து வரலாம்.

பிறகு பசித்தீயைத் தூண்டவும், உண்ட உணவைச் செரிப்பிக்கவும் கீழ்க்கண்ட பொடி, இலேகியம் முதலியவற்றை உபயோகிக்கவேண்டும்.

திரிகடுகுச் சூரணம், இலேகியம்; பஞ்ச தீபாக்கினிச் சூரணம், இலேகியம்; அட்ட தீபாக்கினிச் சூரணம், தாளிசாதிச் சூரணம், ஏலாதிச் சூரணம், சௌபாக்கியச்

சுண்டி, சுண்டை வற்றல்சூரணம்; தாளிசாதி வடகம், இஞ்சி ரசாயனம், இலேகியம்; சீரகாதிச் சூரணம், இலேகியம்; மந்தவாயுச் சூரணம், கண்டாத்திரி இலேகியம், பித்த வாயு இலேகியம், வில்வாதி இலேகியம், கறிவேப்பிலைச் சூரணம் இவைகளில் ஒன்றைக் காலை, மாலை தனித்தும், மற்ற பற்பச் செந்தூரங்களுக்கு அனுபானமாகவும் உபயோகித்துவர, நல்ல பசித் தீபனம் உண்டாகும். உண்ட உணவு நன்றாய்ச் செரிக்கவும் செய்யும்.

இதற்கு மேல் குருதியின் வன்மையைப் பலப்படுத்துவதற்கு இரும்பு, காந்தம், மண்டூரம், தங்கம், வெள்ளி, முத்து, பவழம் முதலான பற்பச் செந்தூரங்களைக் கொடுத்துவர வேண்டும்.

## கரிசாலை இலேகியம்

இதில் புன்னைக்காய் அளவு காலை, மாலை ஒரு மண்டலம் வரை சாப்பிட்டுவர, பித்தப் பாண்டு தீரும். மற்றும் வெட்டை, கை, கால் ஓய்ச்சல், எரிவு, மயக்கம், வாந்தி, அரோசகம் (உணவில் வெறுப்பு), கிராணி (அசீரணபேதி), நீர்ச் சுரப்புடன் கூடிய வீக்கம் முதலியன குணமாகும். இதனை உண்பவர்கள் அசுவகெந்தி தைலத்தில் தலை முழுகுதல் நல்லது.

பொற்றலைக்கையான், கடுக்காய், லோகமண்டூரம் ஆகியவற்றைச் சேர்த்துக் குடிநீர் செய்து 60 முதல் 90 மிலி. வரை காலை, மாலை கொடுத்து வர, குருதியின் வன்மை பெருகும்.

## அயச்சம்பீரக் கற்பம்

சுத்தி செய்த அயப்பொடி 350 கிராம் சேர்க்கும்படி சில நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப்படியும் சேர்க்கலாம். ஆனால் சிறந்த குணம் பெற வேண்டுமானால் வெகு நன்றாய் முடிவு பெற்ற அயச் செந்தூரம் (மாதுளம்பூ நிறமுடைய செந்தூரம்) 175 கிராம் சேர்த்தால் மிக்க நலமாய் இருக்கும். மிளகுப்பொடி 350 கிராம் சேர்க்க வேண்டும். பூண்டுத்திரி 500 கிராம் எடுத்துக்கொள்ள வேண்டும். இம்மூன்று சரக்குகளையும் முறைப்படி நன்றாய் இடித்துக் கலந்துகொள்ளவும்.

எலுமிச்சம் பழம் 40 எண்ணிக்கை எடுத்து, ஒவ்வொன்றையும் நான்கு பிளவாக நறுக்கவேண்டும். ஊறுகாய்க்கு உப்பு வைப்பது போல் ஒவ்வொரு எலுமிச்சம் பழத்திலும் மேற்கண்ட கலவைப் பொடியை 40 கூறாகப் பொதித்து ஒரு

ஜாடி அல்லது மட்பாண்டத்தில் அடுக்கி வைத்து, நல்லெண்ணெய் 25 பலம் எடையை அதில் மூழ்கும்படி விட்டு, மேல் மூடி சீலைமண் செய்து பூமி பந்தனம் வைத்திருந்து, 40 நாட்கள் சென்ற பின் அதனைத் திறந்து, வேளைக்கு ஒரு பிளவு வீதம் காலை, மாலை சாப்பிட்டுவர, வெளுப்பு நோய், ஊதல் நோய் மஞ்சள் நோய் ஆகிய இவை குணமாகும்.

## அயப்பிருங்கராஜ கற்பம்

அயப்பொடிக்குப் பதிலாக முன்கூறியது போன்ற நயமான அயச்செந்தூரம் 150 கிராம் எடுத்துக்கொள்க. நன்றாய் முடிவு பெற்ற மண்டூரச் செந்தூரம் 200 கிராம் எடுக்கவும்.

பொற்றலைக்கையானை அம்மியில் இட்டுப் பொற்றலைக் கையான் சாறு தெளித்து நன்றாய் விழுது போல் அரைத்து வில்லைகளாகத் தட்டி இரவியில் (வெய்யில்) உலர்த்தவும்.

வில்லைகள் நன்றாய் உலர்ந்த பின் மீண்டும் அம்மியில் அல்லது கல்வத்தில் இட்டுப் பொற்றலைக் கையான் சாறு விட்டு, இரண்டு நாள் அரைத்து வில்லைகள் செய்து வெய்யிலில் உலர்த்தவும்.

இம்மாதிரியாக மொத்தம் ஐந்து முறை சாறு விட்டரைத்து வில்லைகள் செய்து உலர்த்திப் பொடித்த பொற்றலைக்கையான் சூரணம் 400 கிராம் எடுத்துக் கொள்ளவும்.

பிறகு இம்மூன்று சரக்குகளையும் கல்வத்தில் ஒன்றாய்க் கலந்து பொற்றலைக்கையான் சாறு விட்டு ஒரு நாள் அரைத்து மறுநாள் கல்வத்துடன் இரவியில் வைத்து உலர்த்தவும்.

நன்றாய் உலர்ந்த பின் மீண்டும் மேற்படி சாறுவிட்டு ஒருநாள் அரைத்து மறுநாள் வெய்யிலில் உலர்த்தவும். இவ்விதமாக மொத்தம் மூன்று முதல் ஐந்து தடவை அரைத்து உலர்த்தவும். அதன்பின் முன் செய்த மாதிரியே எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு நாள் கல்வத்தில் அரைத்து மறுநாள் வெய்யிலில் உலர்த்தவும்.

இவ்விதமாக மொத்தம் மூன்று முதல் ஐந்து தடவை அரைத்து உலர்த்தவும்.

அதன்பின் முன் செய்த மாதிரியே எலுமிச்சம் பழச்சாறுவிட்டு ஒரு நாள் கல்வத்தில் அரைத்து மறுநாள் இரவியில் உலர்த்தவும்.

இதனைத் திரும்பவும் மூன்று முதல் ஐந்து தடவை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து உலர்த்தி இறுதியாகப் பொடித்துப் பாட்டிலில் வைக்கவும். இதுவே மிகச் சிறந்த முறை. மேன்மையான குணமளிக்கும்.

இதனை 1 முதல் 3 சிட்டிகை அளவு காலை, மாலை தேன், நெய், வெண்ணெய், பாலேடு, பழச்சாறு, தயிர் முதலான அனுபானங்கள் ஒன்றில் வைத்துச் சாப்பிட்டுவர பாண்டு, சோபை, காமாலை, வழலை, பிலீக வீக்கம் முதலியவை குணமாகும். இது மிகச் சிறந்த மருந்துகளில் ஒன்று.

குறிப்பு: இதனை மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்திக் காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டு வரலாம். முன் மருந்துகளை இறுதியாக அரைத்து முடித்தவுடன் அதனை வெய்யிலில் உலர்த்தாமல், சிறு இலந்தை விதை அளவு மாத்திரையாக உருட்டி விடலாம்.

## அயப்பற்பம், செந்தூரம்

அயப்பற்பத்தை 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை தேன், சர்க்கரை, திப்பிலி, மிளகு இவற்றில் ஒன்றில் அல்லது வேறு தக்க அனுபானங்களிலேனும் கலந்து கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை, பெருவயிறு, மேக நோய், வாயுக்கள், பழைய சுரங்கள், மேகப் புண்கள் முதலியன குணமாகும். பொதுவாக அயப்பற்பச் செந்தூரங்களால் பலவீனத்தைக் கொடுக்கக் கூடிய நோய்கள் யாவும் விரைவில் குணமாகும்.

அயச் செந்தூரத்தை ஒரு குன்றி அளவு காலை, மாலை தேன், நெய், வெல்லம் முதலிய அனுபானங்களில் கொடுக்க மேற்குறிப்பிட்ட நோய்கள் யாவும் குணமவதோடு. தேகத்திற்கு மிக்க பலத்தைத் தரும். வில்வாதி இலேகியம், மகாவில்லாதி இலேகியம், ஆகியவை அனுபானமாக உபயோகிக்க மிகவும் நல்லது.

பத்தியம்: அயம், காந்தப் பற்பச் செந்தூரங்களைச் சாப்பிடும்போது பூசனிக்காய், கொள், கடுகு, காடி இவை ஆகா. நெய், சர்க்கரை, பால், கோதுமை இவைகள் உத்தமம். பெண் போகம் விரும்பினால் தின்ற மருந்து வீணாகிவிடும்.

## செந்தூர, பற்ப, இலேகிய, சூரண மருந்துகள்

ஆறுமுகச் செந்தூரம், அன்னபேதிச் செந்தூரம், வெடி அன்னபேதிச் செந்தூரம், அன்னபவளச் செந்தூரம், பொன்னிமிளைச் செந்தூரம், மண்டூரச் செந்தூரம், உலோக மண்டூரச் செந்தூரம், சித்த மண்டூரம், எ.்.குச் செந்தூரம், தங்கச் செந்தூரம், அயபூநாகச் செந்தூரம், அயத் தங்கச் செந்தூரம், வெள்ளி பற்பம், முத்து பற்பம், பவழப் பற்பம், தங்கப் பற்பம், மான் கொம்பு பற்பம், காந்த அயச் செந்தூரம், காந்த அயரசச் செந்தூரம், சுயமாக்கினிச் செந்தூரம் போன்ற மருந்துகளைத் தனித்தனியாகவேனும் அல்லது சிலவற்றைக் கலந்தேனும் நெய், தேன், அல்லது வேறு தகுந்த சூரணம், இலேகியங்களிலேனும் அனுபானித்துத் தக்க அளவில் காலை, மாலை கொடுத்துவர பாண்டு, சோபை, காமாலை முதலிய நோய்களைக் குணமாக்குவதோடு, உடலுக்கு நல்ல பலத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும்.

அன்றியும் அயகாந்தச் சூரணம், சுவர்ணபவளப் பற்பம், சுவர்ண, பவள முத்து, வெள்ளி ஆகியவற்றின் கலவை பற்பம், சீவலோகச் செந்தூரம், சீவலோக மெழுகு, பூரண சந்திரோதயம், திரிலோகச் செந்தூரம் (அயம், காந்தம் , அயக்கட்டம்), கரிசாலை இலேகியம், சிந்தாதி (சிஞ்சாதி) இலேகியம், அயதாம்பிரச் செந்தூரம், பஞ்சலோகச் செந்தூரம், நவலோகச் செந்தூரம், சண்டரசப் பற்பம், சாதிலிங்கப் பற்பம், இரசப் பற்பம், சுவர்ண வாலை ரசச் செந்தூரம், காளமேக நாராயணச் செந்தூரம், குராந்தகச் செந்தூரம், கந்தகச் சுண்ணம், வான் மெழுகு, கனகலிங்க மெழுகு, தங்க மெழுகு, மண்டூராதி அடைக் குடிநீர், வெண்பூசனி இலேகியம், நெல்லிக்காய் இலேகியம், நன்னாரி, நிலப்பனை, தண்ணீர் விட்டான் கிழங்கு, வல்லாரை இவற்றின் நெய். இவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது பல அவசியம் போல் குறிகுணங்களுக்கு ஏற்றவாறு அவ்வவற்றிற்குரிய அளவுப்படி எடுத்துக் கலந்து தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்துவர பாண்டு, சோபை, காமாலை முதலிய பிணிகள் நீங்கி தேகம் பலப்படும். மேற்கூறிய மருந்துகள் யாவும் பசித் தீபனம், செரிமானம், இரத்த விருத்தியை உண்டாக்கும்.

## தித்திப்பு பேதி மெழுகு

மிகவும் நல்லதோர் மலம் இளக்கிச் செய்கை உள்ளது.

செய்முறை

ரஸ்தாளி வாழைப்பழம் 1 அல்லது ஒரு பலம் எடை (35 கிராம்)

| | |
|---|---|
| கச்சூர் பழம் (பேரீந்து) | 1 பலம் |
| அங்கூர் திராட்சை | 1 பலம் |
| சீனாக்கற்கண்டு பொடித்தது | 1 பலம் |
| பாதாம் பருப்பு | 1 பலம் |
| தேன் | 1 பலம் |
| பசு நெய் | 1 பலம் |

சுக்கு, மிளகு, திப்பிலி, வெண்கடுகு வகைக்கு 1/2 பலம். இவைகளை முறைப்படி பொடித்துக் கல்வத்தில் இட்டு ஒன்று சேர்த்து மெழுகு போல் நன்றாய் அரைத்து எடுத்துக் குப்பியில் அடைக்கவும்.

அளவு: சுண்டைக்காய் அளவு அதிகாலையில் அல்லது படுக்கைக்குப் போகும்போது தினம் ஒரே வேளை சாப்பிட நன்றாய் மலம் கழியும், சிரமம் இராது. அதிகம் போனால் மோர் சாப்பிடலாம். அல்லது வசம்பு சுட்ட சாம்பல் ஒரு சிட்டிகையைத் தேனில் குழைத்துச் சாப்பிட உடனே பேதி கட்டுப்படும். அன்றியும் வயிற்றில் கிருமிகள் இருந்தால் அதனால் ஏற்படும் கிருமிப் பாண்டு நோயின் கிருமிகளைப் போக்குவதற்குக் கீழ்க்கண்ட முறைகளில் ஒன்றைப் பிரயோகிக்கலாம்:

- ❖ இளங்கொழுந்து வேப்பிலையை அரைத்து ஒரு நெல்லிக்காய் அல்லது கொட்டைப் பாக்கு அளவு மூன்று உருண்டைகள் உருட்டி, அதிகாலையில் மட்டும் மூன்று நாட்கள் தவிடு அல்லது கரும்புச் சர்க்கரையில் புரட்டி விழுங்க செய்யக் கொக்கிப்புழுவும் மற்ற குடற் கிருமிகளும் வெளியாகும். அதனால் ஏற்படும் வயிற்று வலியும் குருதிக் குறைவும் குணமாகும். ஆகாரம் மோரும் சாதமும் கொடுக்கவும்.
- ❖ சிற்றாமணக்கெண்ணெய் 30 மிலி. பசுவின் பால் 100 மிலி. சீனாக் கற்கண்டு சிறிது பொடித்துச் சேர்த்துக் காலையில் மட்டும் கொடுக்க, நன்றாய்க் கழிச்சல் உண்டாகும். களைப்பு இராது. கிருமிகள் வெளியாகும். மோரும் சாதமும் ஆகாரமாகக் கொடுக்கவும்.

- கடுக்காய்த் தோல் 2 கழஞ்சு, வேப்பலகு (வேம்பின் ஈர்க்கு) 10 கழஞ்சு இவற்றைப் பொடித்துச் சேர்த்துப் பிரண்டைச் சாறு விட்டு அரைத்து, அத்துடன் பசுவின் வெண்ணெய் சிறிது சேர்த்துக் காலையில் மட்டும் விழுங்கிடக் கிருமிகள் யாவும் வெளியாகும்.
- கடுக்காய்த் தோல் 4 பங்கு, காயம் 3 பங்கு, சுக்கு 2 பங்கு, உப்பு பற்பம் 1 பங்கு இந்த விகிதப்படி பொடித்துக் கலந்து ஒரு புட்டியில் வைத்துக் கொண்டு இதில் 1 முதல் 2 வராகன் எடை பொடியைப் பசுநீர் (கோமியம்) 2 முதல் 4 அவுன்சில் கலந்து காலையில் மட்டும் கொடுக்கக் கிருமிகள் வெளியாவதும் அல்லாமல், பழைய மலம், சீதம் யாவும் குணமாகும். மோரும் சாதமும் ஆகாரமாகக் கொடுக்கவும்.

## தேங்காய் இலேகியம்

சுத்தி செய்த பூரம், இரசம், இலிங்கம், கெந்தி இவை வகைக்கு இரண்டு வராகன் எடை

சுத்தி செய்த நேர்வாளம் பத்து வராகன் எடை

சுக்கு, திப்பிலி தேசாவரம், சித்திரமூலம் சன்னிநாயகம், பறங்கிச் சக்கை, சிவதை வேர், பெருங்காயம் இவைகளின் பொடி வகைக்கு இரண்டு வராகன் எடை

கொடிக்கள்ளிப் பால் ஒரு ஆழாக்கு

பனை வெல்லம் (சொல்லத்தக்க அளவு)

முற்றின தேங்காய் ஒன்று

முன் கூறிய மருந்துப் பொடிகளை ஒன்றாய்க் கலந்து கள்ளிப்பால் விட்டுக் கல்வத்தில் சற்று அரைத்து, தேங்காயை ஒரு கண் திறந்து உள்ளிருக்கும் தண்ணீரை வெளியாக்கி விட்டு மருந்துகளைத் தேங்காய்க்குள் செலுத்தி மீதி உள்ள கள்ளிப் பாலையும் தேங்காய்க்குள் விட்டு, வாய்க்கு ஆப்பிட்டு அடைக்கவும். அப்பால் தேங்காய் பூராவும் சாணத்தினால் ஒரு அங்குலம் கலசம் செய்து நன்றாய் நூறு வறட்டியில் புடமிடவும். மருந்தின் வாடை வெளியில் வீசினாலும், தேங்காயின் மேலோடு கருகினாலும் உடனே நெருப்பினின்றும் கலசத்தை வெளியில் எடுத்து ஆறவைத்துப் பிரித்து ஓடு நீக்கவும். தேங்காயுடன் உள்மருந்தையும் சேர்த்து அம்மியில் இட்டு நன்றாய் இலேகியம் போல் ஒன்றாய்ச் சேரும்படி அரைக்க வேண்டும்.

இலேகிய பதம் வருவதற்காகச் சம எடை பனை வெல்லம் சேர்த்து அரைத்து வழித்து அகல வாயுடைய புட்டியில் வைக்கவும்.

அளவு: 2 குன்றி முதல் 4 குன்றி அளவு காலையில் மட்டும் 1 முதல் 3 தினங்கள் கரும்புச் சர்க்கரையில் புரட்டி விழுங்கச் செய்யவும். சிறு சுண்டைக்காய் அளவு சாதாரணமாய்க் கொடுப்பதுண்டு. களைப்பின்றி நன்றாய் பேதி ஆகும். தட்டைப் புழு, கொக்கிப் புழு, மற்றுமுள்ள குடற் புழுக்கள் யாவும் வெளியாகும். அன்றியும் மகோதரம் (நீர்ப்பெருவயிறு), குறிப்பாகப் பிலீகம் (மண்ணீரல் நோய்), பாண்டு, சோபை, குன்மம், வயிற்றுவலி முதலிய பிணிகள் குணமாகும்.

## தசதீட்சைக் குழம்பு

முற்றின தேங்காய் ஒன்றின் கண் திறந்து நீரைப் போக்கி வைக்கவும். கொடிக்கள்ளிப் பால், சதுரக்கள்ளிப்பால் இவை வகைக்கு 30 மிலி.

சுத்தி செய்த கெந்தி, இரசப் பற்பம், காந்தச் செந்தூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, காயம், வெண்காரப் பற்பம், அல்லது பொரித்த வெண்காரம், கடுகுரோகணி இவை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடியாக்கி ஒன்றாய்க் கலந்து மேற்கூறிய பால் விட்டுக் கல்வத்தில் அரைத்து வழித்துத் தேங்காய்க்குள் செலுத்தி ஆப்பிட்டுச் சாணக் கவசம் செய்து உலர்த்தி, 75 வறட்டியில் புடமிடவும்.

முன் போல் மருந்து வாடை வெளி வீசினாலும் ஓடு கருகினாலும் உடனே கவசத்தை வெளியில் எடுத்து ஆறவிட்டுப் பிரித்து ஓடு நீக்கித் தேங்காயுடன் மருந்தையும் எடைக்குச் சமம் பனைவெல்லத்தையும் சேர்த்து மெழுகு அல்லது குழம்பு பதமாக அரைத்து வழித்து வாயகன்ற புட்டியில் வைக்கவும்.

அளவு: காசு எடை காலையில் மட்டும் ஒரே வேளை சர்க்கரையில் புரட்டி விழுங்க பேதி ஆகும். அதிகம் பேதி ஆனால் மோர் சாதம் கொடுக்கவும். வசம்பு சுட்ட சாம்பல் ஒரு சிட்டிகையைத் தேனிலோ அல்லது எலுமிச்சம் பழச்சாற்றிலோ கலந்து கொடுக்க, பேதி நிற்கும். புழுக்கள் யாவும் வெளியாகும். அன்றியும் பெரு வயிறு, பிலீகம், பாண்டு, சோபை, காமாலை, புண், கண் எரிவு, கை, கால் முடக்கு இவை யாவும் குணமாகும்.

வேறு: நன்றாய் முற்றின தேங்காய் ஒன்றை நெல் வேகவைக்கும் போது அதனுள் வைத்து வேகவைத்து, நெல் வெந்த பின் வெளியில் எடுத்து ஓடு நீக்கித் தேங்காயை மட்டும் காலையில் சாப்பிடச் செய்யவும். பேதியாகும். தட்டைப் புழுவுக்கு இது நேர் மருந்து எனக் கூறப்பட்டுள்ளது.

## கிருமி எண்ணெய்

சிற்றாமணக்கு நெய் 1/4 படி

பசும்பால் 1/4 படி

தேங்காய்ப்பால் 1/4 படி

காட்டெருமைப் பால் (சதுரக்கள்ளிப் பால்) 1/8 படி

சாணிப் பாலில் வேக வைத்துக் கழுவி மேல் தோல் போக்கி, முளை நீக்கி உலர்த்தி நெய் தெளித்து வறுத்தெடுத்தப் புரசம் விதைப் பருப்பு பலம் ஒன்று. இதனைப் பொடித்து முன் சரக்குகளுடன் எல்லாவற்றையும் தைலச்சட்டியில் இட்டு அடுப்பேற்றிச் சிறுதீயில் காய்ச்சிக் கடுகு திரள் பதம் வரும்போது தைலத்தை வடித்துப் புட்டியில் அடைக்கவும்.

அளவு: 1 முதல் 2 வராகன் எடை அளவு கரும்புச் சர்க்கரை அல்லது காப்பியுடன் கலந்து காலையில் மட்டும் கொடுக்க, எல்லா வகைக் கிருமிகளும் வெளியாகும். கழிச்சல் உண்டாகும். பால், முலைப்பால் ஏதேனும் ஒன்றில் அனுபானித்தும் இந்த எண்ணெயைக் கொடுக்கலாம்.

## மேனி எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய்-1/4 படி

குப்பைமேனியிலை - 1 பலம்

குப்பைமேனியிலையை எண்ணெய் நன்றாய்க் காயும் போது சிறிது சிறிதாகப் போட்டுப் பொரிந்த பின், கண்ணுக் கரண்டியால் பொரிந்த இலைகளை எடுத்து வைக்கவும். எல்லா இலைகளையும் பொரித்து எடுத்த பிறகு அந்த எண்ணெயைச் சிறிது சிறிதாக வார்த்து, பொரிந்த இலைகளை ஒரு மண்சட்டியில் இட்டு மத்துவினால் கடைந்து புட்டியில் அடைக்கவும்.

அளவு: 1/4 முதல் 1/2 பலம் மட்டும் கொடுக்கக் குடற் கிருமிகள் வெளியாகும்.

## குடற் கிருமி நாசினி

சுத்தி செய்த பலாசு வித்துச் சூரணம் - 2 பாகம்

வறுத்து இடித்தப் பெருங்காயச் சூரணம் - 1 பாகம்

வறுத்து இடித்த ஓமச் சூரணம் - 1 பாகம்

வறுத்து இடித்த வாய்விடங்கச் சூரணம்- 1/2 பாகம்

சர்க்கரை - 4 1/2 பாகம்

இவ்வைந்து சரக்குப் பொடிகளையும் முறைப்படி ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு மூவிரல் அளவு காலை, மாலை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குத் தேனில் கொடுத்து, அடுத்த நாள் காலையில் பேதிக்குச் சஞ்சீவி மாத்திரை, முருக்கன் வித்து மாத்திரை, வச்சிரகண்டி மாத்திரை, மேகநாத குளிகை அல்லது மேற்கண்ட எண்ணெய் ஏதேனும் ஒன்றைத் தக்க அளவில் கொடுக்கப் பேதியுடன் கிருமிகளும் மயங்கி வெளியாகும்.

ஆகாரம்: மோரும் சாதமும் கொடுக்கவும். சிறுவர்களுக்கு அளவைக் குறைத்துக் கொடுக்கவும்.

## சித்தாதி எண்ணெய்

இதில் 1/2 முதல் ஒரு தேக்கரண்டி அளவு காலையில் ஒரே வேளை சிறிது பசும்பால், நிசித்தண்ணீர், சோம்புக் குடிநீர் ஆகிய ஏதேனும் ஒன்றில் கொடுக்க, களைப்பு இல்லாமல் நன்றாய் பேதியாகும். கிருமிகளும் வெளியாகும். இது ஒரு பெரிய மருந்து. தகுந்த அளவில் மூன்று நாட்கள் காலையில் மட்டும் கொடுத்து வரலாம்.

ஆகாரம்: மோர் சாதம் கொடுக்கலாம். அதிகம் பேதியானால் வசம்பு சுட்ட சாம்பாலைத் தேனிலாவது எலுமிச்சம் பழச் சாறிலாவது கலந்து கொடுக்க, ஒரே வேளையில் பேதி நிற்கும். சீரகக் குடிநீர், பழச்சாறு, மோர் இவைகளும் பேதியைத் தணிக்கும்.

## குறிப்பு

கிருமிக்குச் சிகிச்சை செய்து முடிந்த பிறகு மண்ணுண்பாண்டு நோயில் திரிலோகம், பஞ்சலோகம், நவலோகம் ஆகியவற்றின் செந்தூரங்களில் ஒன்றைக் கரிசாலை இலேகியம், வில்வாதி இலேகியம், மகாவில்லாதி இலேகியம் தாது விருத்தி இலேகியம் முதலிய ஏதேனும் ஒன்றுடன் சேர்த்து, தக்க அளவில் ஒரு மண்டலம் வரைக்கும் காலை, மாலை கொடுத்துவர, எல்லாவிதப் பாண்டு நோய்களும் குணமாகும்.

சித்தாதி எண்ணெயினால் பல கொடிய நோய்கள் குணமாகும். இது ஒரு சிறந்த மருந்து. கவிசை (வயிற்றுக் கட்டி), சிரநோய், சூலை, நீராம்பல் கட்டி, மலக்கட்டு, சொறி, இரணம், கிரந்தி, மேகம், வாய்ப்புண், கண் எரிவு, தாகம், விக்கல், சர்த்தி (வாந்தி), அரையாப்பு, பயித்தியம், பறங்கிப் புண், சூதக வாயு, வளிநோய், வாயு, வயிற்று நோய், பூச்சி வெட்டு, எண்வகைக் குன்மம், நெறிவீக்கம், பவுத்திரம் ஆகியவை குணமாகும். புற்றுநோய், குறை நோய் (குட்டம்) இவற்றிலும் உபயோகிக்க நல்ல பலன் அளிக்கும்.

திரிகடுகு, எருமை மோர், வெள்ளாட்டு மோர், மண்டூரம், அயம், கொடிவேலி வேர்ப்பட்டை, பசுநீர் (கோமூத்திரம்), வாய் விடங்கம், முத்து, தேன், இருமஞ்சள் (கறிமஞ்சள், கஸ்தூரி மஞ்சள்), கடுக்காய், தான்றி, நெல்லி இவைகளும் வெளுப்பு நோயை நீக்கும் மறுந்துகளாம்.

## உணவு

பசியைத் தூண்டக் கூடியதும் உடலின் குருதியைப் பெருக்கக் கூடியதுமான உணவுப் பொருட்களைப் பெரிதும் கையாள வேண்டும். அன்றியும் கிருமிகளை அகற்றக்கூடிய அகத்திக் கீரை, பாகற்காய் ஆகியவற்றை அடிக்கடி சேர்த்து வரலாம். எளிதில் செரிக்கக்கூடிய உணவைக் கொள்ளல் வேண்டும்.

## கீரை வகைகள்

கரிசாலை, பொன்னாங்காணி, அறுகீரை, சிறுகீரை, மணத்தக்காளி, தாளிக்கீரை, முளைக் கீரை, பருப்புக் கீரை, எலிசெவிக் கீரை, முருங்கைக் கீரை, முருங்கைப் பூ ஆகியவைகளைத் தாராளமாய் உணவில் சேர்க்கலாம்.

## காய்கறிகள்

கத்தரிப்பிஞ்சு, வாழைக்கச்சல் (வாழையின் இளங்காய்) முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, வெண்டைப் பிஞ்சு, புடலம் பிஞ்சு, பீர்க்கம் பிஞ்சு, தக்காளி இவை போன்ற காய்கறிகளை உபயோகிக்கலாம்.

## மாமிச வகைகள்

வெள்ளாட்டுக்கறி, அதன் ஈரல், எலும்பு, போட்டி (தீனிப்பை) முதலியனவும், காடை, கவுதாரி, உல்லான், புறா, கோழி, உடும்பு முதலியனவும் உடலுக்கு ஊட்டத்தைக் கொடுத்துக் குருதிப் பெருக்கையும் உண்டாக்கும்.

உணவைச் செரிக்க வன்மை (சக்தி) இல்லாதவர்களுக்குக் கஞ்சி வகைகளையும் ஊனின் சத்து ரசத்தையும் (சூப்) கொடுத்தல் வேண்டும்.

## ஊன் வகைகளின் சத்து ரசம்

வெள்ளாட்டு ஈரலைச் சிறுசிறு துண்டுகளாகத் துண்டித்து, சம அளவு நீர் விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து, ஈரல் சற்று வெந்த சமயத்தில் இறக்கி (இரண்டொரு கொதி வந்தவுடன் இறக்கி), நன்றாய்ப் பிசைந்து பிழிந்து வடிகட்டிய நீரை எடுத்து, அத்துடன் பழரசங்களுள் கொடி முந்திரி, சாத்துக்குடி, ஆரஞ்சு, ஆப்பிள், தக்காளிப் பழம் இவற்றின் ரசத்தில் ஒன்றைக் கூட்டி தினம் ஒரு வேளை கொடுக்க, குருதிப் பெருக்கு உண்டாகும்.

வெள்ளாட்டின் தனி ஈரலைச் சிறுசிறு துண்டுகளாக்கி அரவைக் கருவியில் போட்டுப் பிழிந்தெடுத்த சத்து ரசத்துடன் முன்போல் பழரசம் கூட்டி ஒரு வேளை தினம் கொடுக்கலாம். இதில் ஈரல் துண்டுகளைப் பிழியும்போது தண்ணீர் சேர்க்க வேண்டாம். கொதிக்க வைக்கவும் வேண்டாம். தேவையானால் இளவெந்நீர் தெளித்துப் பிழியலாம். காலை நேரத்தில் இதனைத் தயாரித்துக் கொடுத்து வரக் குருதிப் பெருக்கை உண்டாக்கி, உடலைத் தேற்றவும் செய்யும்.

# 9

## காமாலை

### முன்னுரை

அழல் தாது கேடு அடையும் போது தோன்றும் நோய்களுள் இதுவும் ஒன்று. பித்துநோய், மஞ்சட்காமாலை, காமலா, காமிலா, மஞ்சள் நோய் என்பன இதன் வேறு பெயர்கள். இதனால் சிறுநீர், கண், நா, உடல் யாவும் மஞ்சள் நிறத்தைப் பெறும்.

### நோய் வரும் வழி

அழல் குற்றத்தை மிகுதிப்படுத்தக் கூடிய உணவை உட்கொள்வதாலும், குற்றமுள்ள நீரை அருந்துவதனாலும், பருவநிலை மாறுபாடு அடைவதினாலும் காமாலை வரும்.

யூகி வைத்திய சித்தாமணியில் பாண்டு நோய் முற்றி இருக்கும்போது பித்தப் பொருட்களை அதிகமாகப் புசித்தல், அளவுகடந்த கலவி ஆகிய காரணங்களால் காமாலை வரும் என்று கூறப்பட்டுள்ளது.

இதைத் தவிர பித்தக்குழலில் ஏற்படும் அடைப்பினால் பித்தநீர் குடலுக்குச் செல்லாமல் வந்த வழியே சென்று குருதியுடன் கலக்கும். பித்தக்குழலின் உள்ளே அடைத்திருக்கும் பித்தக்கற்கள், குடற்புழுக்கள், பித்தக்குழலின் சுவர்களில் ஏற்படும் சுருக்கம், புதிய வளர்ச்சிகள், பித்தக்குழலின் பக்கத்தில் இருக்கும் உறுப்புகளில் ஏற்படும் புற்றுநோய், கட்டி, கழலைகள், நிணநீர் நாளங்களின் வீக்கம் ஆகியவைகளின் காரணமாகப் பித்தக்குழல் அழுத்தப்படுவதாலும் பித்த நீர் ஓட்டம் தடைபடுகிறது.

பித்தக்குழலின் சிறு கிளைக் குழல்களில் ஏற்படும் அழற்சியின் காரணமாகவும் அடைப்பு ஏற்படும்.

சில வகை உலோகப் பாடாணங்கள் சேர்ந்த மருந்துப் பொருட்கள், உதாரணமாகத் துருசு, செம்பு, காரீயம், வெள்ளைப் பாடாணம் முதலியவை ஒவ்வாத நிலையிலும் கல்லீரலைத் தாபிதப்படுத்தி அழற்சியை உண்டாக்கி, அடைப்பை ஏற்படுத்தும்.

செவ்விலங்களில் குறைபாடுகள் சிலருக்குப் பிறவியிலேயே இருக்கும். அத்துடன் நளிர்சுரம், பாம்புக்கடிவிடம் இவற்றின் காரணமாகச் செவ்விலங்கள் சிதைவுறும். அந்நிலையிலும் காமாலை ஏற்படும்.

சில நிலைகளில் ஈரல் விலங்கள் அழற்சியுற்றுச் சிதைவுறும். அந்நிலைகளிலும் காமாலை வரும். அவை ஈரலைத் தாக்கும். மலேரியா, மஞ்சள்சுரம், சில வகை மருந்துப் பொருட்கள், கள், சாராயம் முதலியவற்றினாலும் காமாலை ஏற்படும். உடல்கட்டுகளில் செந்நீர் மிகுந்தாலும் காமாலை வரும்.

குறிஞ்சி நிலத்திலும், முல்லை நிலத்திலும் வசிப்பவர்களுக்கு ஈரல் நோய் உண்டாவதாகச் சித்தர்களா குறிப்பிட்டுள்ளனர்.

## முற்குறி

இந்நோயில் வாய்நீர் ஊறல், வாய் குமட்டல், நாக் கைத்தல், உணவில் வெறுப்பு, உண்ணிலும் செரியாமை, உடல் வறட்சி, தோல் சுருங்கித் தவளைத் தோலை ஒத்தல் என்னும் குறிகளைக் காட்டி; கண், நகக் கண், முகம், உடலின் தோல் முதலியவைகளும், சிறுநீரும் மஞ்சளிக்கும்.

அன்றியும் இதில் உள்ளங்கால், கை, முகம், கண், உடம்பு ஆகியவைகள் வெளுத்தல், கையும் காலும் சோர்தல், உடல் நடுக்கல், அடிக்கடி இளைப்புத் தோன்றல், எருக் (மலம்) கட்டுப்பட்டுத் தீய்ந்து வெளியாதல், முகம் மஞ்சளித்தல், உடல் வீக்கம், களைப்பு, காது கேளாமை, தலைகனத்தல் முதலியனவும் உண்டாகும்.

## நோய் வகை

சித்த மருத்துவ நூல்களில் இந்நோயானது வளிக்காமாலை, அழல் காமாலை, ஐயக்காமாலை, வளிஐயக்காமாலை, அழல்ஐயக்காமாலை, முத்தாதுக்காமாலை, பெருங்காமாலை, ஊதுகாமாலை, வறட்டுக்காமாலை, அழகுக்காமாலை, செங்கமலக்காமாலை, கும்பக்காமாலை, குன்மக்காமாலை எனப் பதின்மூன்று வகையாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றின் விளக்கம் வருமாறு:

## 1. வளிக்காமாலை

இந்நோயில் வயிறு பொருமல், விக்கல், வயிறு கழியாமல் கட்டுப்படுதல், உடல் வீங்கல், புறங்காலும் முகமும் ஊதல், உடல் எத்தொழிலையும் செய்ய முடியாமை, உடல் வலித்தல், உடல் மிக இளைத்துக் கை, கால்கள் வீங்குதல், கண்ணின் ஒளி குறைந்து பருத்தல், பசியும் தூக்கமும் இல்லாமை ஆகிய குறிகளைப் பெறும்.

## 2. அழல்காமாலை

இந்நோயில் உடலின் தோல் உலர்ந்தது போல் வறண்டு காணல், தூக்கம் இன்மை, சோம்பிப் படுக்கையிலேயே கிடத்தல், உண்ட சோறு செரியாமை, உடம்பு எல்லாம் நோதல், அடிக்கடி பெருமூச்செறிதல், வயிறு அடிக்கடி கழிதல், இரைதல், கையும் காலும் வன்மை அற்றிருத்தல் ஆகிய குறிகளைக் காட்டும்.

## 3. ஐயக்காமாலை

இதயத்தில் பிறந்த இந்நோயில் அறிவு அழியும். இடைவிடாது இருமல் வருதல், தலையும் முகமும் வியர்த்தல், நடக்க முடியாமை, நடக்கில் பெருமூச்செறிதல், கண் மிகவும் சிவத்தல், உடல் நடுங்கல், நெஞ்சு (மார்பு) கனத்திருத்தல் ஆகிய குறிகளைக் காட்டும். இந்நோயில் பாக்கை உண்டால் மயக்கம் வரும்.

## 4. வளிஐயக்காமாலை

இந்நோயில் உண்ட உணவு செரியாது. குணமாகாத செருமல் உண்டாகும். உடல், முகம், மூக்கு, கண் இவைகளில் வியர்வை உண்டாகும். வயிறு இரைந்து பொருமிக் கொள்ளும். நாவானது கைப்பதோடு, நாவும் கண்ணும் வெளுக்கும். விரைந்து நடக்கில் பெருமூச்செறியும். கண் வீங்கும். அதிக இருமல் உண்டாகும்.

## 5. அழலையக்காமாலை

இந்நோய் வாந்தி எழச் செய்யும். விடாது தலைவலித்து, நெஞ்சும் புண்பட்டுத் தளரும். வயிறு ஊதல், செரியாமை, நீர்வேட்கை, உடல் முற்றும் வீங்கல், முகம், கை, கால்கள் வெளுத்தல் ஆகிய குறிகளைத் தோற்றுவிக்கும்.

## 6. முத்தாதுக்காமாலை

இந்நோயில் அழல் கொண்டு உடம்பு எல்லாம் எரிச்சலாகி, அடிக்கடி தளர்ச்சியும் இருமலும் உண்டாகும். நீர்வேட்கை, உடல் முழுமையும் கடுத்தல், புளியேப்பம், நாப்புளித்தல், அடிக்கடி பொய்ப்பசி எடுத்தல், உடல் குளிர்தல், அடிவயிறு வீங்குதல், உடல் வியர்த்தல் என்னும் குறிகள் காணும்.

## 7. பெருங்காமாலை

இந்நோயில் சிறுநீர் மஞ்சளாகும். உடல் வீங்கி நோவு உண்டாகும். முகம், கால், கை, கண், உள்நாக்கு இவைகள் யாவும் மிகவும் மஞ்சளித்துக் காணும். முகம் மினுமினுக்கும். பசியின்மை இருக்கும். நோயின் கொடுமையைக் கண்டு மனச் சலிப்பும் பெருமூச்சும் வருத்தமும் உண்டாகும். ஆண்மைக் குறைவு, மலக்கட்டு ஆகிய குறிகளும் காணும்.

## 8. ஊதுகாமாலை

கண்களில் பீளை கசிதல், முகத்தில் பிசுபிசுத்து வியர்வை கசிதல், உடல் வீங்கி எங்கும் உளைதல், உடல் அழற்றல், உடல் உணர்ச்சி அறியாமை, உடலில் வெப்பு மிகுந்து ஐயத்தைப் பெருக்குதல், தியக்கம் உண்டாதல், உடல் வாடல், திமிர் உண்டாதல் என்னும் குறி குணங்களைக் காட்டி, உடலை மிக ஊதச் செய்யும்.

## 9. வறட்டுக்காமாலை

இந்நோயில் கால், கைகள் வற்றிப்போதல், நடக்கின் தத்துதல், ஓய்ச்சல், நீல நிறமாக எரு (மலம்) கழிதல், சிறுநீர் சிவந்து இழிதல், நீர் இழியும் போதெல்லாம் நீர்ப்புழை எரிச்சலாக இருத்தல், வயிற்றில் குத்தல் உண்டாவதுடன் உணவின் சுவை அறியாமை, மாலையில் கண் தெரியாமை, உடல் கறுத்தல் என்னும் குறிகளைக் காட்டும்.

## 10. அழகுக்காமாலை

இந்நோயில் கையும் காலும் அசதியாகும். புருவம், கண் இவைகள் கழற்கொடிக் காயைப் போல் பச்சை நிறம் அடையும். நீர் வேட்கை உண்டாகும். சிறுநீர் மஞ்சள் நிறத்தோடு வெளியாகும். நீர்ப்புழை எரியும். உணவு செரியாமல் வயிறு உப்பும். உடல் அனல் போல் வெதும்பும்.

## 11. செங்கமலக்காமாலை

தமரகம் (சுவாசக்குழல்) வன்மை அற்றதன் பயனாக உடலில் அழற்சி உண்டாகிச் சோம்பலைத் தரும். அன்றியும் சிறுநீர் வற்றிச் சிவந்த மஞ்சள் நிறத்தோடு வெளியாகும். உடலும் நகமும் வெளுத்துக் காணும். உடல் வற்றிச் சுரம் காயும். நாக்கும் உமிழ்நீரும் மஞ்சள் நிறம் அடையும்.

## 12. கும்பக்காமாலை

இதில் உடல் கனத்து அடிக்கடி களைப்பு உண்டாகும். சிறுநீர் மஞ்சளிக்கும். மாலைப் பொழுதில் உடல் வியர்க்கும். கண் சிவக்கும். அன்றியும் பூமாலை துவள்வது போல நோயின் கொடுமையால் நின்றுகொண்டே தூக்கம் வரும். சீதக் கழிச்சலில் வெளியாவது போல் அடிக்கடி எரு (மலம்) குதுக்கெனக் கழியும்.

## 13. குன்மக்காமாலை

இந்நோயில் வாய் வெளுத்து, கண் பசுமை நிறம் அடைவதுடன், சிறுநீர் மஞ்சளித்துக் குழம்பாய் வெளியாகும். உணவு செரிக்கும் பொழுது அடி வயிறு வலித்து வாந்தியாகும். மூக்கு மணம் ஒன்றையும் அறியாது. அடிக்கடி இருமி மூச்சு வாங்கல், பிணத்தைப் போல் அசையாது கிடத்தல், படுக்கையில் புரளல் என்னும் குறிகள் காணும்.

## தீரும் தீராதவை

மேற்கூறிய பதின்மூன்று காமாலைகளுள் அழல்காமாலை, மஞ்சட் காமாலை, ஐயக்காமாலை, ஊதுகாமாலை, வறட்டுக்காமாலை, வளிஐயக் காமாலை, அழலையக்காமாலை ஆகிய ஏழும் எளிதில் நீங்குவனவாகும். மற்ற கும்பக்காமாலை, குன்மக்காமாலை, முக்குற்றக்காமாலை, வளிக்காமாலை, செங்கமலக்காமாலை, அழகுக்காமாலை ஆகியவை எளிதில் தீராதாம்.

## மருத்துவம்

அழல் தாதுவைப் பெருக்கக் கூடிய உணவாதிச் செயல்களால் அழல் தாது தன்னளவில் மிகுந்து, ஐயத்தையும் துணை கொண்டு, அழல் ஐயமாகிப் பரவுகாலைத் (வியானன்) தன் தொழிலைப் புரியாதபடி கேடு அடையச் செய்து, குருதியின் வன்மையையும் கெடுக்கும். இதன் காரணமாக வலப்பாட்டீரல் தாக்கப்படுவதால் பித்த நீர் இயற்கை வழியில் செல்ல முடியாமல் தடைபட்டுக்

குருதியுடன் கலக்கும் பொழுது இந்நோய் தோன்றுகின்றது. வளித் தாதும் கெட்டு, அழல் வளியாக நோயைப் பிறப்பிக்கும். அன்றியும் மற்ற கால்களும் (காற்றுகளும்) கேடு அடையும். ஆதலால் மருத்துவரது கடமை யாதெனில் அழல் ஐயம், அழல் வளித் தாதுக்களைத் தன்னிலைப் படுத்தி, பித்த நீர் தனக்கேற்ற வழியில் செல்லுவதற்குரிய பரிகாரங்களையும், குருதியின் வன்மையைப் பெருக்கக் கூடிய பரிகாரங்களையும் செய்தல் வேண்டும். கேடு அடைந்த பரவுகாலையும், மற்ற வாயுக்களையும் ஒழுங்குபடுத்தி அதனதன் தொழிலைச் செம்மையாக்கவும் வேண்டும். பின் நோய்க்கான மருந்துகளைக் கொடுக்க வேண்டும்.

## வாந்திபேதிக்கு

வாந்தி செய்விக்கும்படி சித்த மருத்துவத்தில் கூறி இருப்பினும் பெரும்பாலும் மஞ்சள் நோயில் வாந்தியும் ஒரு குறி குணமாக இருக்கும். ஆதலால் அப்பேர்ப்பட்ட இனங்களில் வாந்தி செய்விக்க மருந்து கொடுப்பது வழக்கம் இல்லை.

மலத்தை வெளியாக்க எளிதில் மலம் கழிக்கக்கூடிய மருந்துகளாகப் பின்வருவனவற்றைக் கொடுத்தல் நலம்:

- ❖ சீமை சாமந்தி, ரோஜா மொக்கு, கொடி முந்திரிகை, சரக்கொன்றை-பட்டை, இலை, பூ, கீழ்க்காய்நெல்லி, திரிபலை, கடுகுரோகணி, சிவதை வேர், நீர்முள்ளிப்பூ, வேப்பம்பூ, சீந்தில், நெருஞ்சில் இவைகள் சேர்ந்த குடிநீர்களைக் கொடுக்கலாம்.
- ❖ மலக்குடார எண்ணெய் ஒரு தேக்கரண்டி அளவு சிறிது பாலில் கலந்து இரவு படுக்கைக்குப் போகுமுன் சாப்பிட, காலையில் தாராளமாக மலம் கழியும்.
- ❖ மலக்குடார மெழுகு ஒரு கழற்சிக் காய் அளவு முன்போல் இரவில் சாப்பிட, காலையில் மலங்கழியும்.
- ❖ தித்திப்பு பேதி மெழுகு சுண்டைக்காய் அளவு அல்லது தித்திப்பு பேதி இலேகியம் நெல்லிக்காய் அளவு இரவில் சாப்பிடக் காலையில் மலம் போகும். அல்லது தேவைக்கேற்ப காலை, மாலை இரு வேளையும் கொடுக்கலாம்.

- ❖ இவற்றால் மலம் சரியாகக் கழியாது போனால் சிறுவர்களுக்குச் சஞ்சீவி மாத்திரையில் இரண்டு மாத்திரை காலையில் வெந்நீருடன் கொடுக்க, நன்றாய் மலம் கழியும்.

- ❖ பெரியவர்களுக்கு வச்சிரகண்டி மாத்திரை, அட்டபைரவம், சுகவிரேசன மாத்திரை, சீவரத்தினக் குளிகை, விரேசன பூபதி, இலவங்காதி மாத்திரை இவைகளில் ஒன்றை இரண்டு மாத்திரை என்ற அளவில் காலையில் வெந்நீருடன் ஒரே வேளை கொடுக்க, நன்றாய் மலம் கழியும்.

- ❖ சஞ்சீவி மாத்திரையை இலைக்கள்ளியிலைச் சாற்றில் கொடுக்க இரண்டு அல்லது மூன்று தடவை வாந்தியையும், கழிச்சலையும் உண்டாக்கும். பித்த நீரும் கழியும்.

- ❖ மருக்காரைக் காயைச் செம்பிஞ்சாகக் கொண்டு வந்து எலுமிச்சம் பழச்சாறு, இலைக்கள்ளியிலைச் சாறுகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு நாள் ஊறவைத்து உலர்த்திப் பொடித்து, அரை முதல் ஒரு சிட்டிகை அளவு காலையில் மட்டும் ஒரு வேளை கொடுக்க, வாந்தியும் பேதியும் ஆகும்.

- ❖ சீந்தில், கரிசாலை, கீழ்க்காய்நெல்லி, சிவனார் வேம்பு, கடுக்காய், நெருஞ்சில், சரக்கொன்றைப் பூ, இலை, பட்டை இவைகளில் ஒன்றைக் கற்கம் ஆக்கிக் கொடுக்கலாம்.

- ❖ கீழ்க்காய்நெல்லியின் சாறு ஒரு ஆழாக்கில் 8 முதல் 10 வராகன் எடை பேதி உப்பைக் கூட்டி, சிறு தீ எரித்துச் சுடவைத்து, உப்பு கரைந்தவுடன் வடித்துக் காலையில் மட்டும் கொடுக்கக் கழிச்சல், வாந்தியை உண்டாக்கி அதில் பித்த நீரையும் கழிக்கச் செய்யும்.

- ❖ நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த்தோல், கடுக்காய்த் தோல் ஆகியவைகளில் வகைக்கு 3 கழஞ்சு வீதம் எடுத்து, ஒன்றிரண்டாக இடித்து, 2 படி சுத்த நீர் விட்டு அடுப்பின் மேல் ஏற்றி, உழக்காகும் வரை காய்ச்சி வடித்து, சுத்தி செய்த சிவதைவேர்ச் சூரணம் 2 கழஞ்சு சேர்த்து, மூன்று நாட்களுக்குக் காலை வேளையில் மட்டும் கொடுத்துவர, நன்றாகப் பேதியாகிக் காமாலையும் குணமாகும்.

❖ நீர்முள்ளிப்பூ, வேப்பம்பூ, நெருஞ்சில், கடுக்காய், தான்றி, நெல்லி வற்றல், சிவதை வேர் இவை சமன் எடை கொண்டு, எட்டு பங்கு நீர் விட்டு, எட்டில் ஒன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி, காலை, மாலை தக்க அளவில் கொடுக்கக் காமாலை நோய் நீங்கும்.

❖ கொன்றைப் பட்டை, வேப்பம் பட்டை, நெல்லிப் பட்டை, மரமஞ்சள், கறிமஞ்சள், கடுகுரோகணி இவை சமன் எடை கொண்டு முறைப்படி குடிநீராக்கித் தக்க அளவில் காலை, மாலை கொடுத்து வரக் காமாலை நோய் நீங்கும்.

## பற்பச் செந்தூரம், சுண்ணம்

இரும்புக்கிட்டச் செந்தூரம்

இரும்புச் செந்தூரம்

கற்பூரச் சிலாசத்துப் பற்பம்

வெடியுப்புச் சுண்ணம்

நவச்சாரச் செந்தூரம்

ஐந்துப்புச் சுண்ணம்

காளமேக நாராயணச் செந்தூரம்

போன்ற பற்பம், செந்தூரம், கண்ணம் முதலியவற்றைத் தனித்தும் சிலவற்றைச் சேர்த்தும் தக்க அளவில், தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்துவரக் காமாலை நோய் நீங்கும்.

வேண்டுமாயின் பித்த நீரைக் கழிக்கக்கூடிய குடிநீர்களில் ஒன்றில் கலந்து கொடுப்பது மிகவும் நல்லது. அல்லது கீழ்க்காய்நெல்லிச் சாற்றில் 1 முதல் 2 தோலா பேதியுப்பைக் கூட்டிக் கரைத்து வடிகட்டிக் கொடுக்கலாம்.

## கீழ்க்காய்நெல்லிக் கற்கம்

கீழ்க்காய்நெல்லிச் சமூலம் 1/4 பலம் அல்லது அரைத்தெடுத்த விழுது கொட்டைப்பாக்கு அளவு, அத்துடன் விரலிமஞ்சள்தூள், நற்சீரகம் வகைக்கு 4 சிட்டிகை கூட்டிப் பசுவின்பால், மோர், எருமை மோர், வெள்ளாட்டுப்பால், மோர்

ஆகிய ஏதேனும் ஒன்றில் கலக்கிக் காலை, மாலை 3 முதல் 5 அல்லது 7 நாட்கள் வரை கொடுக்கக் காமாலை நோய் தீரும். உப்பு இல்லாப் பத்தியம். சுரம் இல்லையாயின் தினந்தோறும் குளிக்கலாம்.

குறிப்பு: சிலர் விரலிமஞ்சள் தூளுக்குப் பதில் மஞ்சள் சுட்ட கரியைச் சேர்க்கிறார்கள். கற்கம் அரைக்கும் போது ஈர வெங்காயம் ஒரு பல்லை அத்துடன் சேர்த்து அரைக்கிறார்கள். யாவும் நல்ல குணம் தருகின்றன. இதே மாதிரி "கரிசாலைக் கற்கம்" "அவுரியிலைக் கற்கம்" முதலியவற்றையும் செய்து கொடுக்கலாம்.

## வேறு

கீழ்க்காய்நெல்லிச் செடி நான்கு, ஏலக்காயரிசி, சீரகம், கறிமஞ்சள் தூள் இவை வகைக்கு ஒரு காசு எடை சேர்த்து, பசுவின் பால் விட்டரைத்து மேற்கண்ட பால், மோர் ஏதேனும் ஒரு அனுபானத்தில் கலக்கிக் காலை, மாலை, கொடுக்க நிச்சயம் குணமாகும். ஈர வெங்காயம் ஒரு பல்லும் சேர்த்து அரைக்கலாம். இதனை எருமைத் தயிர் அல்லது மோர் அல்லது எருமைச் சாணிப்பால் வகைக்கு 2 ஆழாக்கு வீதம் கலந்து, அதில் கலக்கிக் கொடுக்கலாம். வெள்ளாட்டுப்பால், மோர் இவற்றிலும் கலக்கிக் கொடுக்கலாம். உப்பு இல்லாப் பத்தியம் இருக்க வேண்டும். எருமைச் சாணிப்பால் என்பது, எருமை சாணம் போட்ட நிமிடமே அதை எடுத்து ஒரு கெட்டித் துணியில் வைத்துப் பிழிய நீர் வரும். அதனையே சாணிப்பால் என்பர். அதனை மோர் அல்லது தயிருடன் சமன் கலக்கலாம்.

## அவுரியிலைக் கற்கம்

தனி அவுரியிலையைக் கொட்டைப்பாக்கு அளவு விழுதாக அரைத்துப் பசுவின் பாலில் கலக்கிக் காலை, மாலை முன் போல் கொடுக்கக் குணமாகும்.

## தேற்றான்கொட்டைக் கற்கம்

இளநீர் ஒன்றைக் கண் திறந்து நான்கு தேற்றான் விதைகளைத் தட்டி அதில் போட்டு இரவு வைத்திருந்து, காலையில் மேற்படி இளநீரில் ஊறிப் போயிருக்கின்ற தேற்றான் விதைப் பொடியை அரைத்து, இளநீரில் கலக்கிக் குடிக்கவும். மூன்று முதல் ஐந்து நாட்கள் காலை தோறும் இவ்விதம் சாப்பிடக் குணமாகும். உப்பு இல்லாப் பத்தியம் அவசியம்.

## ஆவாரை வேர்ப்பட்டைக் கற்கம்

ஆவாரை வேர்ப்பட்டையை எலுமிச்சங்காய் அளவு அரைத்துத் தேங்காய்ப் பாலில் கலக்கிக் காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கக் குணமாகும். உப்பு இல்லாப் பத்தியம் அவசியம்

## இரசப்பற்பத்துடன் கற்கங்கள்

மஞ்சள் காமாலையுடன் வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல் ஆகியன பருத்திருந்தால் உயர்ந்த மாதிரியில் தயாரித்த இரசப்பற்பம் 1/2 முதல் 1 அரிசி எடை எடுத்துப் பனைவெல்லத்தில் பொதிந்து காலை, மாலை விழுங்கச் செய்து உடனே மேலே கூறிய கீழ்க்காய்நெல்லிக் கற்கம் அல்லது அவுரியிலைக் கற்கம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பசுவின்பாலில் கலக்கிக் கொடுக்கவும். மூன்று முதல் ஐந்து நாட்கள் இவ்விதம் கொடுக்கவும். நோயின் பலம் மற்றும் நோயாளியின் பலம் அறிந்து நாள் அளவை நிதானித்து, மருந்தைக் கொடுக்க வேண்டும். உப்பு இல்லாப் பத்தியம் மேற்கொள்ள ஈரல் கட்டி கரைந்து, மஞ்சள் காமாலையும் குணமாகும்.

## முள்ளங்கியிலைச் சாறு

தனி முள்ளங்கியிலைச் சாற்றுடன் பால் சமன் கலந்து காலை, மாலை 3 முதல் 5 நாட்கள் கொடுக்க, மஞ்சள் நோய் குணம் ஆவதாகக் கூறப்படுகிறது. உப்பு இல்லாப் பத்தியம் அவசியம்.

## சிறு ஆமணக்குக் கொழுந்து

இதைச் சேகரித்துத் தட்டிச் சாறு பிழிந்து, வெள்ளாட்டுப் பால் கலந்து வைத்துக் கொண்டு ஆழாக்கு வீதம் வாரம் ஒரு முறை (ஞாயிறன்று) அதிகாலையில் கொடுக்கப் பேதியாகும். காமாலை நோயைத் தடுக்கும் முறையாகவும் குணப்படுத்தும் பரிகாரமாகவும் இதனைக் கொடுக்கலாம். உப்பு இல்லாப் பத்தியத்துடன் வெள்ளாட்டுப் பாலும் சோறும் கொடுக்கலாம். மறுநாள் உப்பு சேர்க்கலாம்.

## கரிசலாங்கண்ணி மாத்திரை

கரிசலாங்கண்ணி (கரிப்பான்) ஒருகைப் பிடி (ஒரு குத்து), கருஞ்சீரகம், அரிசித்திப்பிலி, மிளகு, பூண்டு இவை வகைக்குக் கால் பலம் எடுத்து முறைப்படி

நன்றாய் அரைத்துச் சுண்டைக்காய் அளவு மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்தி வாயகன்ற புட்டியில் போட்டுத் ததும்ப நயமான நல்லெண்ணெய் விட்டு வாய் மூடி, மூன்று நாள் வெய்யிலில் வைத்திருந்து, அப்பால் காலை, மாலை ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டுவர, சோபையுடன் கூடிய வறட்காமாலை குணமாகும். புளி, உப்பு நீக்கவும்.

## கீழ்க்காய்நெல்லி நெய்

கீழ்க்காய்நெல்லிச்சாறு ஒரு படி, பசு நெய் ஒரு படி, வால்மிளகு, சாதிக்காய், ஏலக்காயரிசி இவை வகைக்கு அரை பலம் வீதம் எடுத்துப் பால் விட்டு அரைத்து, எல்லாவற்றையும் தைலச்சட்டியில் கலந்து அடுப்பேற்றிப் பதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, உச்சிக் கரண்டி வீதம் காலை, மாலை கொடுக்க, காமாலை நோய் குணமாகும். உப்பு இல்லாப் பத்தியம் தேவை.

## கரிசாலை நெய்

கரிசாலைச் சாறு ஒரு படி. பசு நெய் ஒரு படி. முக்கடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) ஒரு பலம், குரோசாணி ஓமம் 1/4 பலம், வால் மிளகு 1/2 பலம் எடுத்து மேற்கூறியது போல் இதனையும் முறைப்படி காய்ச்சி வடித்துக்கொண்டு காலை, மாலை ஒரு உச்சிக்கரண்டி வீதம் கொடுத்துவர வறட்காமாலை நோய் நீங்கும். உப்பு இல்லாப் பத்தியம் கொள்ளவும்.

## தேக வன்மைக்குரிய மருந்துகள்

அயச்சம்பீரக் கற்பம், அயப்பிருங்கராஜ கற்பம், அயக்காந்தக் கரிசாலை உருண்டை, சீவலோகச் செந்தூரம், சீவலோக மெழுகு, கரிசாலை லேகியம், சித்த மண்டூரம் முதலியவற்றைப் பற்றி பாண்டு நோயில் கூறி இருப்பதைக் கவனிக்கவும். காமாலை நோயிலும் அவற்றைப் பிரயோகிக்கக் குணமாகும். அன்றியும் காந்த அயம், அயவீரம், அயக்காந்தம், அயத்தங்கம், காந்தச் சுவர்ணம், சுவர்ணப் பவழம், சுவர்ணம், முத்து, நற்பவழம், கொடிப்பவழம், லோகமண்டூரம், முத்துச்சிப்பி, பலகரை, கற்பூர சிலாசத்து, சங்கு ஆகியவை சேர்ந்த பற்பச் செந்தூரங்கள், சுயமாக்கினி, நவலோகச் செந்தூரம், திரிலோகச் செந்தூரம், சித்தர் நவலோகக் கற்பம், ஆறுமுகச் செந்தூரம், அன்னபேதிச் செந்தூரம், வானமா மெழுகு, கனகலிங்க மெழுகு, அபரஞ்சி ரேக்கு மெழுகு ஆகிய இவைகளில் ஒன்று அல்லது பல சேர்த்தும் அவசியம் போல் தக்க அளவில், தக்க அனுபானங்களுடன் கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை முதலிய

நோய்களைக் குணமாக்கிக் குருதியின் வன்மையையும் தேக வன்மையையும் பெருக்கி, உடலை நன்னிலையில் நிலைத்திருக்கச் செய்யும்.

## திராட்சைக் குடிநீர்

அங்கூர் திராட்சை (விதை, காம்பு நீக்கி) — 60 கிராம்

ஏலக்காய் (தோலுடன்) — 30 எண்ணிக்கை

வால்மிளகு — அரை தேக்கரண்டி அளவு

சீரகம் — ஒரு தேக்கரண்டி அளவு

ரோஜாப்பூ இதழ்கள் (புதியதாக)

கீழ்க்காய்நெல்லி வேர் (புதியதாக)

தண்ணீர் — 4 லிட்டர்

இவைகளைச் சட்டியில் இட்டுச் சிறு தீயில் காய்ச்சி நான்கில் ஒன்றாய் வற்றவைத்து, அப்போதைக்கப்போது வடிகட்டி வேளைக்கு வீசம் படி வீதம், ஒரு நாளைக்கு 2 அல்லது 3 வேளை சிறிது சீனாக்கற்கண்டு சேர்த்துக் கொடுத்துவர, எப்பேர்ப்பட்ட காமாலை நோயும் 3 முதல் 5 நாட்களுக்குள் வேகம் குறைந்து குணமாகிவிடுகிறது. காமாலைக்குரிய பற்பச் செந்தூரங்களுக்கு இக்குடிநீரை அனுபானமாக உபயோகிப்பது சாலச் சிறந்தது. இக்குடிநீருடன் கற்பூரச் சிலாசத்து பற்பம் சேர்த்துக் கொடுத்து வர விரைவில் காமாலை நோய் குணமாகும். உப்பு இல்லாப் பத்தியம் கொள்ளவும்.

## பற்ப மருந்து

வலப்பாட்டீரல் வீக்கத்துடன் சுரம், காமாலை முதலிய குறிகுணங்கள் இருப்பின் அடியிற் குறிப்பிட்ட பற்பத்தையும் குடிநீரையும் தயாரித்துக் கொடுத்து வந்தால் நிச்சயம் குணமாகும்.

கீழ்க்காய்நெல்லி, மணத்தக்காளி, பொற்றலைக்கையான் ஆகியவற்றில் ஒன்றைக் கொண்டு தயாரித்த பவழப் பற்பம் ஒரு பங்கு

கீழ்க்காய்நெல்லிச் சமூலத்தைக் கொண்டு தயாரித்த கற்பூரச்சிலாசத்து பற்பம், மான் கொம்பு பற்பம், பொற்றலைக்கையானைக் கொண்டு தயாரித்த அயமண்டூரச் செந்தூரம் இவை வகைக்கு 2 அல்லது 2 1/2 பங்கு

சொர்ணவாலை இரசச் செந்தூரம் — ஒரு பங்கு

உலாந்தாலிங்கக் கட்டுச் செந்தூரம் — ஒரு பங்கு

நயம் கத்தூரி செந்தூரம் — ஒரு பங்கு

இவற்றை முறைப்படி ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு இதில் 2 முதல் 4 சிட்டிகை வீதம் எடுத்துக் காலை, மாலை தேனில் குழப்பிக் கொடுத்து, ஏதேனும் ஒரு குடிநீரைப் பருகி வர குணமடையும். சுரம் தணியும். மலம், சிறு நீர் ஒழுங்காய்க் கழியும். ஈரல் வீக்கம் கரைந்துவிடும். மிகுந்த முயற்சி எடுத்து இம்மருந்துகளைத் தயாரிக்க வேண்டும்.

## பற்பத்திற்குரிய குடிநீர்

கீழ்க்காய்நெல்லிச் சமூலம் — 4,5 செடி

விட்டுணு கிரந்தி — ஒரு கைப்பிடி

கரிசாலை — ஒரு கைப்பிடி

சீரகம், ஏலக்காய், பறங்கிச்சக்கை,

சாதிக்கோட்டம் இவை வகைக்கு — அரை தோலா

அங்கூர் திராட்சை — 3 தோலா

தண்ணீர் — ஒரு படி

இவற்றை முறைப்படி சட்டியில் இட்டுக் காய்ச்சி, நான்கில் ஒன்றாய் வற்ற வைத்து வடிகட்டி காலை, மாலை அரை ஆழாக்கு வீதம் பற்பதத்துடன் கொடுக்கக் குணமாகும்.

## குறிப்பு

காமாலை நோயில் மேற்கண்ட எந்த மருந்தைக் கொடுப்பினும் புளி, உப்பு இல்லாமல் மோர் சாதம், பால், கஞ்சி ஆகியவற்றைக் கொடுப்பதே நல்லது. எத்தனை நாட்கள் பச்சிலை மருந்துகள், இரசப் பற்பம் முதலியவை கொடுக்கப்படுகிறன்றனவோ அத்தனை நாட்கள் பின்னிட்டும் மேல் பத்தியம் (மருந்து சாப்பிட்டு முடிந்த பின்னும் மீண்டும் அதே நாள் அளவு முன் கூறிய பத்தியத்தைக் கடைப் பிடித்தல் மேல் பத்தியம் எனப்படும்) வைப்பது நலமாய்

இருக்கும். பின் ஓமக் குளியல் ஒரு முறையும், பிறகு வால்மிளகு அல்லது பஞ்சகற்பூரக் (சாதிக்காய், கிராம்பு, தக்கோலம், ஏலம், கற்பூரம்) குளியல் மூன்று முறையும் அடுத்தடுத்துச் செய்யவேண்டும். மூன்றாவதாகக் கீழ்க்கண்ட தைலங்களில் ஏதேனும் ஒன்றில் வாரம் இருமுறை தலை முழுகி வரவேண்டும். இவ்வாறு தலை முழுகிவர, காமாலை நோயினால் ஏற்பட்ட சிரமங்கள் மாறி உடல் குளிர்ந்து (சூடு தணிந்து), உடல் வன்மை அடையும்.

## தைலங்கள்

நல்லெண்ணெய் இரண்டு ஆழாக்கு, கீழ்க்காய்நெல்லிவேர், கருஞ்சீரகம், நற்சீரகம் இவை வகைக்குக் கால் பலம் இவற்றைப் பசும்பால் விட்டு அரைத்து, கலக்கிக் காய்ச்சி வடித்துத் தலை முழுகி வரலாம். அல்லது

- ❖ கீழ்க்காய்நெல்லிச்சாறு கொண்டு தயாரிக்கும் தைலம்
- ❖ கரிசாலைத் தைலம்
- ❖ கையான் நெல்லிக்காய்த் தைலம்
- ❖ வெட்டிவேர்த் தைலம்
- ❖ அரக்குத் தைலம்
- ❖ மகா சந்தனாதித் தைலம்

ஆகிய ஏதேனும் ஒன்றில் தலைமுழுக நல்ல பலனைத் தரும்.

## காமாலைக்கு நசியம்

கரிப்பீர்க்கு விரைப்பருப்பைப் பொடித்து முடிச்சு கட்டி முலைப்பாலில் நனைய வைத்து, நாசியில் நாளைக்கு மூன்று வேளை, ஆறு நாட்கள் பிழிந்துவர, நாட்பட்ட காமாலை நோய் தீரும். நாசியைச் சிந்தச்சிந்த மஞ்சளாகப் பித்தநீர் வெளியாகும். உப்பு வறுத்துக் கூட்டவும். புளி நீக்கவும். 15 நாட்களுக்கு இந்தப் பத்தியம் தேவை. 7-ஆம் நாள் கொதிநீரில் முழுகவும். ஒரு மண்டலம் வரை மாதர்களைச் சேரக் கூடாது.

குட்டிவிளாயிலையைக் கசக்கிச் சாறு எடுத்துக் காலை தோறும் இரண்டு நாட்கள் நாசியில் பிழிய, இரண்டு நாட்களில் காமலை குணமாகும்.

பத்தியம்: அன்றைய தினம் மட்டிலும் புளி, உப்பு நீக்கவும். இரவில் புழுங்கலரிசிக் கஞ்சி சாப்பிடலாம். மறுநாள் புளி, உப்பு சேர்க்கலாம். மூன்றாம் நாள் முக்கூட்டு நெய் (நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், பசுநெய்) தேய்த்துத் தலை முழுகலாம்.

## பச்சிலைக் கட்டு

செவ்வாய் அல்லது ஞாயிற்றுக் கிழமையில், தைவேளை அல்லது மாவிலங்கு ஆகிய இரண்டில் ஒன்றுக்குத் தூபம் தீபம் காட்டி, நமசிவாய நசி, நசி என்று உரு செபித்து, இலையைப் பறித்துக் கசக்கித் துட்டு அகலம் வைத்து அதன் மீது அரையணாத் துட்டு அல்லது அது போன்ற ஒரு ஓட்டை வைத்துக் கட்டி விடவும். தோளுக்கும் முழங்கைக்கும் மத்தியில் கருவேல நரப்பின் மேலே வைத்துக் கட்டவும். ஆண்களுக்கு இடது கையிலும், பெண்களுக்கு வலது கையிலும் மேற்படி, பச்சிலையை மேற்கூறிய பிரகாரம் வைத்துக் கட்டவும். நோயாளி வலி தாங்க முடியாது துடித்திடுவார். மறுநாள் கட்டை அவிழ்த்துப் போடவும். கொப்பளம் உண்டாகி விரணமாகும். அதற்கு விளக்கெண்ணெயும் மஞ்சள் தூளும் கலந்து குழைத்துப் போட்டு வரவும். பதினாறு நாட்களுக்கு இந்த மருந்தை விரணத்தின் மேல் போட்டு வர, புண் ஆறிப்போம். காமாலையும் குணமாகிவிடும். அப்பால் கரப்பான் பதார்த்தங்கள் (மாமிசம், சோளம், கம்பு, தினை, வரகு, சாமை, கிழங்கு வகைகள், வாழைக்காய், மீன், கருவாடு, கத்தரிக் காய், தடியன் காய் முதலியன) உட்பட எல்லாப் பதார்த்தங்களையும் உணவில் சேர்க்கலாம். பதினாறு நாட்களும் கரப்பான் பண்டங்களைத் தள்ளுபடி செய்யவும்.

## காமாலைப் பொடி

மஞ்சள் கரிசாலை பாவனைச் சூரணம்

கீழ்க்காய்நெல்லிச் சமூல பாவனைச் சூரணம்

இவ்விரண்டையும் சமம் வைத்துக்கொண்டு 1/4 முதல் 1/2 தேக்கரண்டிஅளவு ஒரு நாளைக்கு 2 அல்லது 3 வேளை பசும் பால், மோர் அல்லது வெள்ளாட்டுப்பால், மோர் ஆகிய ஏதேனும் ஒன்றில் கலக்கிக் கொடுக்கலாம். அல்லது தேனில் குழப்பியும் கொடுக்கலாம். தனியாகவும் கொடுக்கலாம். வேறு காமாலை மருந்து அல்லது வேறு பற்பச் செந்தூரங்களுக்குத் துணை மருந்தாகவும் இதனை உபயோகிக்கலாம். வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல் நோயிலும் சிறந்த குணமளிக்கும்.

வேறு

கப்பு மஞ்சள் அல்லது கறிமஞ்சள் சுட்ட கரி — 1 பாகம்

வால்மிளகு வறுத்து இடித்த பொடி — 1 பாகம்

நற்சீரகம் வறுத்து இடித்த பொடி — 1 பாகம்

சீனாக்கற்கண்டு பொடி — 4 பாகம்

கற்பூரச்சிலாசத்து பற்பம் — 1 பாகம்

இவ்வைந்து சரக்குகளையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு 10 முதல் 15 குன்றி அளவு தினம் 2 அல்லது 3 தடவை பசும்பால், வெள்ளாட்டுப் பால், தேன், ஆரஞ்சு ரசம் ஆகிய ஏதேனும் ஒன்றில் அனுபாலித்துக் கொடுத்துவர, காமாலை நோய் குணமாகும். இந்தப் பொடியை வேறு காமாலை மருந்து அல்லது பற்பச் செந்தூரங்களுக்குத் துணை மருந்தாகவும் உபயோகிக்கக் காமாலை, பாண்டு, சோபை, வலப்பாட்டீரல் நோய் முதலியவை விரைவில் குணமாகும்.

## காமாலைக்குப் பூவரசு கொழுந்து இலைக் குடிநீர்

உருக்குச்சட்டியை அடுப்பில் வைத்து 8 கிராம் மிளகு போட்டுச் சிறிது வறுத்துக் கொள்ளவும். பின் சட்டியில் வைத்தே அதைப் பொடி செய்து கொள்ள வேண்டும். பின் அச்சட்டியில் பொடியின் மீது அரைப்படி இளநீர் விடவேண்டும். அது கொதிக்க ஆரம்பித்ததும் ஒரு குத்து (கைப்பிடி) பூவரசு கொழுந்து இலையைக் கையில் வைத்துக் கசக்கிச் சாற்றைப் பிழிய வேண்டும். சக்கையையும் அந்நீரிலேயே போட்டுவிடவேண்டும். சில நிமிடங்களில் 1/8 படி அளவு நீர் வற்றி விடும். பின் அடுப்பிலிருந்து சட்டியை இறக்கி நீரை வடிகட்டி ஆற வைக்க வேண்டும். இளம் சூடாக இருக்கும்பொழுது நோய் கண்டவர் அம்மருந்தை அருந்த வேண்டும். மொத்தத்தில் மூன்று பொழுது இம்மருந்தைத் தயாரித்து உண்டால் நோய் உடனடியாகக் குணம் அடைகிறது. இம்மருந்தைச் சாப்பிட்ட பின் உணவில் உப்போ, உரைப்போ கண்டிப்பாக (ஒரு நாள் முழுதும்) சேர்க்கக் கூடாது. இனிப்பும் குறைக்கப்பட வேண்டும். மருந்து சாப்பிடுவதற்கு முன் தேவையான உணவை உண்ணலாம்.

## சாப்பிடும் கால முறை

ஒரு நாள் மாலை 6 மணிக்கு ஒரு பொழுது சாப்பிட்டால், அடுத்த நாள் காலை 6 மணிக்கு இரண்டாம் பொழுது அருந்த வேண்டும். அன்று மாலை 6

மணிக்கு மூன்றாம் வேளை மருந்தை அருந்த வேண்டும். அன்று முழுவதும் உப்பு இல்லா அரிசிக் கஞ்சி மட்டும் சாப்பிடுவது நல்லது, அடுத்த நாள் காலை சிறிதளவு பசு வெண்ணெயைத் தலையில் தேய்த்து 1/2 மணி நேரம் கழித்துக் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். பின் தேவையான அளவு விரும்பிய உணவை உண்ணலாம். நீண்ட நாள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகள் ஒரு நாள் விட்டு மீண்டும் 3 பொழுது மருந்தைச் சாப்பிடுவது நல்லது. குழந்தைகளுக்கு அவர்களின் வயதைப் பொறுத்தும், உடல் வன்மையைப் பொறுத்தும், தன்மையைப் பொறுத்தும் மருந்தின் அளவைக் கணித்துக் கொடுக்க வேண்டும்.

## காமாலைக்கு நந்தியாவட்டைச் சூரணம்

அடுக்கு நந்தியாவட்டை வேரின் மேல்தோல், பாலில் வேகவைத்த சிவதை வேரின் மேல்தோல், கடுக்காய்த்தோல் இவைகளைச் சம பங்கில் எடுத்துக் காயவைத்துக் கல் உரலிலும் இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். இச்சூரணத்தை மூவிரல் கொள்ளும் அளவு எடுத்து, வெந்நீருடன் உட்கொண்டால் காமாலை, பித்தாதிக்கம், பாண்டு, சோகை முதலியன தீரும்.

## காமாலைக்குத் தேங்காய் மருந்து

ஒரு முற்றிய தேங்காயைக் கொண்டுவந்து அதன் கண்களைத் திறந்து, அதிலுள்ள நீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி விடவும். மூக்கிரட்டை வேரை மேற்படி இளநீர்விட்டு அரைத்து விழுதாக்கி, தேங்காய்க்குள் செலுத்திடவும். பின்பு தேங்காயின் கண்ணை அடைத்துப் பலமாக மண்கவசம் பூசி, காய்ந்தவுடன் 3 நாளைக்குப் பூமியில் புதைத்து விடவும். 4-ஆவது நாள் இதை எடுத்துக் கவசத்தை நீக்கித் தேங்காயை உடைத்து அதிலுள்ள மருந்தை 3 பங்குகளாகச் செய்து, தினம் ஒரு பங்கெடுத்து, எருமைத் தயிர் விட்டு நன்றாக அரைத்துக் குழப்பி உட்கொள்ளவும். பத்தியமாகக் கொழுப்பு இல்லா உணவை உட்கொள்ளவும்.

## காமாலைக்கு இரு மருந்துகள்

மணத்தக்காளியைச் சமூலமாக எடுத்தோ அல்லது கீழாநெல்லியைச் சமூலமாக எடுத்தோ அம்மியின் மேல் வைத்துச் சிறிது தண்ணீர் விட்டு அரைத்து எலுமிச்சம்பழப் பிரமாணம் எடுத்து, பசுவின் மோரிலோ அல்லது தயிரிலோ கொடுக்கவும்.

## கையாந்தகரைக் கற்கம்

கையாந்தகரைக் கொழுந்து, செருப்படைக் கொழுந்து, மஞ்சள், மிளகு ஆகிய நான்கு சரக்குகளையும் சமம் எடுத்து, அம்மியின் மேல்வைத்து அரைத்து, ஒரு எலுமிச்சம்பழப் பிரமாணம் எடுத்து, வெள்ளாட்டு மூத்திரத்துடன் கலந்து சாப்பிடவும். காமாலை, நீர்க்காமாலை (ஊது காமாலை) முதலியன தீரும்.

## காமாலைக்குச் சிகைக்காய் மருந்து

புதுச் சீயக்காயை எண்ணிக்கையில் 4 கொண்டுவந்து அதனுள் இருக்கும் விதையை நீக்கிவிட்டு, அக்காய்களைத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துப் பசுவின் பால் 1/2 லிட்டரில் குழப்பிப் பருகவும். பேதி ஆகில் மிகவும் நல்லது. 3 நாளைக்குக் கொடுக்கவும்.

பத்தியமாகப் பசுவின் பால் விட்டுச் சாதம் சாப்பிடவும். உப்பையும், புளியையும் நீக்கவும். எவ்விதமான காமாலை ரோகங்களும் தீரும்.

## வறட்காமாலைக்குப் பொன்னாங்காணி நெய்

பொன்னாங்காணியின் வேரை ஒரு நாரத்தங்காய் அளவு கொண்டு வந்து அம்மியின் மேல் வைத்து அரைத்துக் கொள்ளவும். அதை 4 லிட்டர் பசுவின் பாலுடன் குழப்பி அப்படியே தோய வைக்கவும். பின்பு மறுநாள் அதைக் கடைந்து வெண்ணெயை எடுத்து நோயாளி சாப்பிட்டுவர, வறட்காமாலை தீரும்.

## காமாலைக்குப் பிரண்டை மருந்து

பிரண்டைக் கொழுந்து, மிளகு, வசம்பு, சுக்கு இவைகளைச் சமன் எடை எடுத்து அம்மியின் மேல் வைத்து நன்றாக அரைத்து, அவ்விழுதில் ஒரு பாக்கு அளவு எடுத்துத் தவிட்டுடன் புரட்டிச் சாப்பிடவும்.

## காமாலைக்குக் கண் மருந்து

கழற்சிக்கொடியிலை, பூண்டு, வசம்பு, இவைகளை நசுக்கித் துணியில் வைத்து, காமாலை நோயாளியின் இரு கண்களிலும் பிழியவும். இது மிகவும் காரமுள்ள மருந்தாகையால் 1/2 துளி வீதம் இரண்டு கண்களிலும் விடவும். கண்களில் வீக்கம் ஏற்படில், அருகங்கொழுந்தைப் பசுவின் பாலில் அரைத்துக் குழப்பி 6 நாளைக்குக் கொடுத்து வரவும். காமாலை தீரும்.

## காமாலைக்கு அரித்ராதிச் சூரணம், பற்பம்

மஞ்சள், கடுக்காய்த் தோல் தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, இந்துப்பு, கடுகுரோகணி ஆகிய இவைகளைச் சம அளவு எடுத்துக் காயவைத்துக் கல்லுரலில் இடித்து, ஒரு வெருகடி (பூனையின் காலடி) அளவு தூள் எடுத்து நீருடன் குழைத்துச் சாப்பிடவும். காமாலை தீரும்.

சிற்றாமுட்டி இலை, கொன்றைப்பட்டை, நாகபட்டை, கொத்துமல்லி இலை, சுத்தி செய்த அரப்பொடி, அவுரி இலை இவைகளைச் சமன் எடை எடுத்துப் பற்பமாக்கிக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து வைத்துக்கொண்டு, சுண்டைக்காய் அளவு இம்மருந்தைச் சாப்பிட்டுவரக் காமாலை தீரும்.

## காமாலைக்கு ஆமணக்கிலை மருந்து

ஆமணக்குக் கொழுந்து, சாரணைக் கொழுந்து, சு[illegible]ந, வெள்ளை வெங்காயம் இவைகளைச் சமன் எடை எடுத்து அம்மியின் மேல் வைத்து நன்றாக அரைத்து எருமைத் தயிரில் குழப்பிச் சாப்பிடக் காமாலை தீரும்.

## காமாலைக்கு அரப்பொடி மருந்து

அரப்பொடியை மருதம் பட்டைச் சாற்றில் ஊறவைத்து வெய்யிலில் உலர்த்தித் தூள் செய்து, அத்துடன் விதை போக்கிய 40 கடுக்காய்த் தோலைக் கறுக வறுத்து இடித்து மேற்படி அரத்தூளுக்குச் சம அளவு கலந்து உண்டுவர, நீர்ப் பசலை நோயும் பாண்டு நோயும் காமாலையும் தீரும்.

## காமாலைக்கு அரிநெல்லி

அரிநெல்லியினை ஒரு புன்னைக்காய் அளவு அரைத்து, கால் படி புளித்த மோருடன் கலந்து கொடுக்கவும். இப்படி 3 நாள் காலையில் கொடுக்கக் காமாலை தீரும். வெள்ளாட்டுப்பால் விட்டுச் சாதம் உண்ண வேண்டும், உப்பு கூடாது.

## காமாலைக்கு எருமைச் சாணிப்பால்

எருமைச் சாணிப்பால், எருமைத் தயிர் இரண்டும் கலந்து சீரகம், வெங்காயம் சமன் சேர்த்து அரைத்து, எருமைப்பாலில் கலக்கிக் கொடுக்கவும். 6 அல்லது 7 வேளை கொடுக்கக் காமாலை நீங்கும்.

## காமாலைக்குக் குடிநீர்கள்

- ❖ இலுப்பைப் பூ, சீந்தில் கொடி, வேப்பன் ஈர்க்கு, ஆடாதோடை ஈர்க்கு, தேற்றான் கொட்டை, வெட்டிவேர் இவைகளைச் சம எடை எடுத்துக் கியாழம் (குடிநீர்-கசாயம்) வைத்துச் சர்க்கரை, நெய், தேன் இவைகள் ஏதேனும் ஒன்றில் கலந்து குடித்தால் காமாலை தீரும்.
- ❖ சிவநாதச் சூரணம் 70 கிராமைக் குளிர்ந்த நீரிலாவது, தேனிலாவது, திரிபலா கியாழத்திலாவது கலந்து உட்கொண்டால் காமாலை நீங்கும்.
- ❖ வெள்ளைச் சிவதை, சுக்கு, செம்முள்ளிவேர் இவைகளின் சூரணத்தைப் பசும்பால், சர்க்கரையுடன் கலந்து கொடுக்கலாம்.
- ❖ திரிபலைக் குடிநீர், சீந்தில் கொடிச்சாறு, மரமஞ்சள் குடிநீர், வேப்பம்பட்டைக் குடிநீர் இவைகளில் ஏதாவது ஒரு குடிநீரில் மேற்கூறிய சூரணத்தைப் போட்டு, தினம் காலையில் தேன் கலந்து சாப்பிட, காமாலை நோய் தீரும்.
- ❖ கீழாநெல்லி சமூலம் 50 கிராம், சுக்கு 10 கிராம் இவைகளை அரைத்து அல்லது குடிநீர் செய்து குடிக்கலாம்.
- ❖ கீழாநெல்லி, கடுக்காய் இவைகளைக் குடிநீர் செய்து அதில் சர்க்கரை கலந்து குடித்தாலும் காமாலை நீங்கும்.
- ❖ பொன்னாங்காணி வேர், அவுரி வேர், கடுக்காய், வெள்ளைப் பூசனிக் கொழுந்து இவைகளில் எதையாகிலும் வெள்ளாட்டு மோர் விட்டு அரைத்துக் கொடுத்தாலும் காமாலை நோய் போம்.
- ❖ அதிமதுரம், சீந்தில் சர்க்கரை, தேற்றான் கொட்டை, சந்தனம் இவைகளைக் குளிர்ந்த நீர் விட்டு அரைத்துக் கொடுத்தாலும் காமாலை ரோகம் நீங்கும்.
- ❖ திரிபலை, வேப்பம்பட்டை, நிலவேம்பு, ஆடாதோடை, சீந்தில்கொடி இவைகளைச் சேர்த்துக் குடிநீர் செய்து தேன்விட்டுக் கொடுத்தால் காமாலை, பாண்டு ரோகம் போகும்.

❖ நெல்லித்தோல், சுக்கு, திப்பிலி, மிளகு, மஞ்சள் இவைகளைச் சம எடை எடுத்துச் சூரணம் செய்து, அதில் அயச் செந்தூரம் கூட்டித் தேன், நெய், சர்க்கரை இவைகளில் கொடுத்தால் காமாலை நீங்கும்.

## அபோராஜாதி சூரணம்

சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விடங்கம், மஞ்சள், திரிபலை இவைகளைச் சமன் எடை எடுத்துச் சூரணித்து இத்துடன் சர்க்கரை கலந்தாவது அல்லது சிவதைச் சூரணத்தைச் சர்க்கரையுடன் கலந்தாவது அல்லது சிறுதேக்குச் சூரணத்துடன் சுக்குச் சூரணம், வெல்லம் சேர்த்தாவது அதில் அயச்செந்தூரம் கூட்டிக் கொடுத்துவரக் காமாலை தீரும்.

மஞ்சள், மரமஞ்சள், திரிபலை, கடுகுரோகணி இவைகளைச் சூரணித்து அத்துடன் மண்டூரச் செந்தூரம் சேர்த்து, தேன், நெய் கலந்து உண்டுவரக் காமாலை நீங்கும்.

கீழ்க்காய்நெல்லிச் சமூலத்தைக் கற்கம் செய்து கொட்டைப்பாக்கு அளவு எடுத்து அத்துடன் 300 மிகி. சங்குப்பற்பம் கூட்டி தினம் ஒரு வேளையாய்க் காலையில் மோருடன் அருந்தவும். இப்படி 3 அல்லது 5 நாள் உப்பு இல்லாப் பத்தியத்துடன் அருந்த காமாலை குணமாகும். சுத்தி செய்த சிலாசத்தைக் கோமூத்திரத்தினால் அரைத்துக் கலக்கிச் சாப்பிட்டாலும் ஊதுகாமாலை நிவர்த்தியாகும்.

## கரிசாலைச் சூரணம்

உலர்ந்த கரிசாலையிலைச் சூரணம் —35 கிராம்

கடுக்காய்த்தோல் சூரணம் —15 கிராம்

மிளகுச் சூரணம் — 10 கிராம்

மருதோன்றிவேர் சூரணம் — 10 கிராம்

இவைகளைக் கலந்து கல்வத்தில் இட்டு மெல்லிய தூளாக அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 2 கிராம் வீதம் எடுத்து அத்துடன் 200 மிகி. மண்டூரச் செந்தூரம் கூட்டி தினம் இருவேளையாக மோரில் அருந்திவர, 5 அல்லது 10 நாளில் காமாலை குணமாகும்.

## காமாலை நோய்க்கு உணவு

நோயாளியின் வன்மைக்குத் தகுந்தவாறு உப்பு இல்லாப் பத்தியம் வைப்பது குறிப்பிடத்தக்கது. புளி, உப்பு நீக்கிய கஞ்சி வகை நல்லது. இருமுறை வடித்த சோறு கொடுக்கலாம். நோய் வரும் வழியில் கூறியபடி பித்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டு, சீரணத்திற்குப் பித்த நீர் கிடைக்காத நிலையில் கொழுப்புப் பொருட்கள் சீரணமாகாது. எனவே நெய், வெண்ணெய், எண்ணெய் போன்ற கொழுப்புப் பொருட்களை நோய் முற்றிலும் குணமாகும் வரை நீக்குதல் வேண்டும். தாளிப்பு இல்லாத இளங் காய்கறிகள், கீரை வகைகள், பழங்கள், மோர், வெள்ளாட்டுப்பால் சேர்த்துக் கொள்ளலாம். பசித்தீயைத் தூண்ட இஞ்சி முதலியவற்றின் துவையல் சேர்க்கவும். உணவுடன் கரும்புச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சி முதலியவற்றைச் சேர்த்தும் கொடுக்கலாம். புகைப்பிடித்தல், புகையிலை, கள், சாராயம் போன்ற போதை தரும் பொருட்களை அறவே நீக்க வேண்டும். நோய் முற்றிலும் குணமாகும் வரை ஓய்வில் இருப்பது அவசியம்.

# 10

## பெருங்கழிச்சல்

### முன்னுரை

மிகுகழிச்சல், அதிசாரம் என்பன இதன் வேறு பெயர்கள். உண்ட உணவு செரித்ததும் செரியாததுமாகக் கழிவதும், சில வேளை கீழ்க்குடல் வெதும்பி இருப்பின் அங்குத் தங்க முடியாமையால் உடனே கழிந்துவிடுவதும், உடலுக்கு ஊட்டம் தருவதற்காக உண்ணும் உணவு குடலில் தங்காது வெளியாகி விடுதலும், உடலின் ஊட்டம் குறைந்து உடல் மெலிவடைவதும், உண்ட பொருள் அனைத்தும் அடிக்கடி பல முறை கழிவதுமான இயல்பை உடையதால் பெருங்கழிச்சல் எனவும்; உணவின் சாரத்தை உடலுக்கு அளிக்காது வெளிக்கொண்டு வருதலான இயல்பை உடையதால் அதிசாரம் எனவும் வழங்கப்படுகிறது.

### நோய் வரும் வழி

மாப்பண்டம், புலால், நெய், எண்ணெய் வகைகள் கூடிய உணவுகளை மிகுதியும் புசித்தல்; அழுகிய மீன், அழுகிய காய்கறிகள், ஊறிய பொருட்கள், எளிதில் செரிக்கக்கூடாத உணவுகளாகிய புலவு, கிச்சடி, வெல்லநீர் இவைகளை மிகுதியாக உண்ணல் முதலியவற்றாலும்; வயிற்றில் மந்தம் உற்றபோது புணர்தலாலும், பசித்தீக் கேடடைந்து, கீழ்நோக்குக்கால் (அபானவாயு) தூண்டப்பட்டு பெருங்கழிச்சல் நோய் உண்டாகும். அன்றியும் வயிற்றுப் புழு மிகுந்து இருப்பினும் இந்நோய் பிறக்கும் எனச் சித்த மருத்துவ நூல்கள் அறிவிக்கின்றன.

இரைப்பைப்புற்று நோயினாலும், இரைப்பையின் ஒரு பகுதியை அறுவை சிக்கிசை மூலம் நீங்கிவிடுவதாலும்,வெளுப்பு நோயைத் தொடர்ந்தும், இரைப்பை புண்பட்ட நிலையிலும், இரைப்பை சுரப்புகள் அதிகமாகச் சுரப்பதினாலும்,

சிறுகுடலில் ஏற்படும் இளைப்பு நோய், ஒட்டுண்ணிகள், நுண்கிருமிகள் இவற்றின் காரணமாகவும், சிறுகுடல் ஊட்டச்சத்தைச் சரிவர உறிஞ்ச முடியாத நிலையிலும், ஊட்டச்சத்துக் குறைவான நிலையிலும், சிலவகை உணவுப் பொருட்கள் ஒவ்வாத நிலையிலும், அடிக்கடி மலமிளக்கிச் செய்கையுள்ள மருந்துகளை உண்பதாலும், குடல் தாபிதமுற்ற நிலையிலும், குடல் புற்று நோயிலும் மிகு கழிச்சல் உண்டாகும்.

நாளமில்லா சுரப்பிகளின் மாறுபாட்டாலும் கழிச்சல் ஏற்படும். மனோ நிலை மாறுபடும் நிலையிலும், திடீரென்று ஏற்படும் வெப்பதட்ப மாறுபாடுகளினாலும், நாட்பட்ட வியாதிகளுக்கு நீண்ட நாள் மருந்து உண்பதாலும் மிகு கழிச்சல் ஏற்படும்.

அத்துடன் கணையத் தாபிதம், கணையப் புற்று, பித்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு, பெருங்குடல் தாபிதம் ஆகியவற்றினாலும் மிகு கழிச்சல் ஏற்படும்.

## நோய் வகை

இந்நோய் வளி, அழல், ஐயம், முத்தாது என்ற நான்கின் வழியாக வரும் எனக் கூறுவர் ஒரு சாரார். புள்ளினம் (பறவை) முதலியவற்றால் வருவதைத் தோடப் பெருங்கழிச்சல் என்பர். சுர நோயில் கழிச்சலாவதைச் சுரப் பெருங்கழிச்சல் என்பர். பயம், துக்கம் முதலியவைகளால் உண்டான மன அதிர்ச்சியால் வரும் கழிச்சல் துக்கக் கழிச்சல் என்று அழைக்கபடுகிறது. குடலில் உண்டான அதிர்ச்சியால் குடலில் ஏற்பட்டப் புண்ணிலிருந்து வடியும் குருதியைக் குருதிக் கழிச்சல் என்றும் கொண்டு மேற்கூறிய வளி முதலான நான்குடன் கூட்டி, பெருங் கழிச்சல் நோயை எட்டு வகையினதாகக் கூறும் முறையும் காணப்படுகிறது.

### 1. வளிப் பெருங்கழிச்சல்

இந்நோயில் வயிறு பொருமி நொந்து, சூலை நோய் போல் வலித்து, வயிற்றில் காற்றுக் கூடி இரையும். நீர் இறங்காது. அடிக்கடி கழியும். உண்ட உணவு சரிவரச் செரிக்கமால் மஞ்சளித்தாகிலும் கறுத்தாகிலும் மிக்க நாற்றத்தோடு கழியும். உடல் வெளுக்கும். உணவு சீரணிக்காமல் கழிதலோடு, புளித்து நெஞ்சில் தங்கி இருக்கும்.

## 2. அழல் பெருங்கழிச்சல்

அழல் தாது மாறுபாட்டால் பிறந்த கழிச்சல் மஞ்சளித்து, வறண்டு, நுரை கூடி, மிகுந்த காற்றுப் பறிந்து இழியும். உடல்,கை, கால் வீங்கிக் காய்ச்சலோடு, உடல் வெளுத்துத் தலை நொந்து வாந்தி உண்டாகும்.

அன்றியும் இந்நோயில் கொப்பூழைச் சுற்றியுள்ள குடல் முறுக்கி வலிக்கும். உடலைத் துவளச் செய்யும் வயிறும் கீழ்வாயும் கடுத்து, முதலில் கருமையாகவும் நுரையுடனும் கூடிக் கழியும். பின்பு குருதி குருதியாய்க் கழியும்.

## 3. ஐயப் பெருங்கழிச்சல்

இந்நோயில் மிகுந்த கெட்ட நாற்றத்துடன் நுரைத்து, வயிறு அடிக்கடி வலித்துக் கழியும். பேதியுடன் ஊனும் கழியும். இந்நோய்க்குத் துணையாய்ச் சுவையின்மை, இருமல், மார்புச் சளி,பெருமூச்சு,மயிர்ச் சிலிர்த்தல், எருவாய்க் கடுத்தல், உடல் முழுமையும் தினவு எடுத்தல் ஆகிய குறிகளும் தொடரும்.

## 4. முத்தாதுப் பெருங்கழிச்சல்

உட்காய்ச்சல்,வெளியில் குளிர்ச்சி, விக்கல், வாந்தி, இருமல், மேல்மூச்சு, வயிறு இரைந்து இரத்த சீதமாய்க் கழிதல்,உறக்கம்,உடல் கடுப்பு, மேல் வலி, உணர்ச்சியற்றிருத்தல் ஆகியன ஏற்படும்.

## 5. சுரப் பெருங்கழிச்சல்

இது சுர நோய்க்குத் துணையாக வரும் நோயாகும். இன்னும் இது சுர நோய்க்குக் கழிச்சலே பெருங்குறியாக உள்ள டைப்பாயிடு, டைப்பஸ் என்னும் நோயையும் குறிக்கும். இந்நோயின் குறி குணங்களைச் சுரப் பகுதியில் காணலாம்.

## 6. தோடப் பெருங்கழிச்சல்

இது சிறு பிள்ளைகட்குப் பறவைகளின் பார்வையால் உண்டாகும் கழிச்சல் எனக் கூறுவர்.

## 7. பயம், துக்கப் பெருங்கழிச்சல்

மிகுதியான பயம் அல்லது துக்கம் காரணமாக வளி முதலான தாதுக்கள் தம் இயல்பு நிலையிலிருந்து மாறி கழிச்சலை ஏற்படுத்துகின்றன. இதில் தாதுக்களின் நிலை அறிந்து அவற்றைத் தன்னிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் கழிச்சலைக் கட்டுப்படுத்தலாம்.

## 8. குருதிக் கழிச்சல்

இந்நோய் மிகுந்த காரம், புளிப்புக் கூடிய உணவுகளைக் கொள்வதாலும், இரசம், பாடாணம் கூடிய மருந்துகளைப் பெரு அளவிலேனும் அல்லது நாள் அளவில் மிகுந்தேனும் கொள்ளினும், அல்லது குன்றிமணி, சித்திரமூலம், சேங்கொட்டை, முசாம்பரம் போன்ற புண்ணாகக் கூடிய பொருட்களைக் கொண்டு செய்த மருந்துகளை உள்ளுக்குக் கொடுப்பினும் அல்லது இவை போன்ற உள்ளுக்குச் செய்தனவற்றை அளவறியாது கொடுக்கினும் அவைகள் குடலைத் தாபித்துப் புண்ணாக்கி, குருதிக் கழிச்சலை ஏற்படுத்தும். அன்றியும் சீதக் கழிச்சலைப் போலவே சீதம் அல்லது எருவின்றிப் பச்சைக் குருதி போன்று இழிவதையும் குருதிக் கழிச்சல் என்பர்.

### குறிகுணங்கள்

வாய் நீர் சுரத்தல், உணவில் விருப்பமின்மை, உண்ட உணவு செரியாமை, புளித்த ஏப்பம், விக்கல், வாய் குமட்டல், வயிறு நோதல், வயிறு இரைதல் என்னும் குறிகளைக் காட்டும். அடி வயிறு உப்பி இரைந்து, நொந்து செரித்ததும் செரியாததுமாய் அடிக்கடி கழிந்து, நாளுக்கு நாள் கழிச்சல் மிகுதியாகும். உடல் வன்மை குறைந்து வாடி வறண்டு போகும். உடலின் குருதி மெலிவடைந்து உடல் வெளுக்கும். கால் வீங்கி நீர்க்கோர்த்தல், ஊக்கமின்மை, மனம் தளர்தல், சோர்வு, வெகுளி, கைகால் சில்லிடல் என்னும் குறிகுணங்களையும் பெறும். தக்க மருத்துவம் செய்யாவிடின் கொறுக்கு வலி, நாடிதளரல் (வாதம் அடங்கல்) முதலியவை கண்டு, நீர்க்கட்டு உண்டாய் உயிரையும் போக்கும். புத்தி மட்டும் சாகும் வரை தன் நிலையில் நிற்கும்.

### அசாத்திய நிலை

மாமிசம் கழுவிய நீர் போல் மலம் மிகுதியாய்க் கழிந்தாலும், தேன் போன்ற நிறத்தைப் பெற்றிருப்பினும், மேன்மேலும் விக்கல், ஈளை, வீக்கம், வியர்வை ஆகியவை ஏற்படினும் அதிசார நோய் குணமாகாது.

கருவுற்ற பெண்கள், பிள்ளை பெற்ற பெண்கள் ஆகியவர்களுக்கு அதிகமாகப் பேதி உண்டாகில் மருத்துவம் பயனளிக்காது.

உண்ணும் உணவு செரியாமலும், உணவைச் சரிவர ஏற்றுக் கொள்ளாமலும், குடலில் வாயு அதிகரித்து, புரண்டு வலித்து, பேதி மிகுதியாயின் குணமாவது அரிது என்றும் அறியலாம். பிரமேகம், வாதசூலை, நீரிழிவு, குன்மம்,

சயம், சன்னி, காமாலை, பாண்டு, சோபை, கபரோகம், அந்திரவாயு, சூலை ஆகிய நோய்களில் அதிசாரம் சேர்ந்து உண்டானால் தீர்வது அசாத்தியமாகும்.

## பெருங்கழிச்சலுக்கு மருத்துவம்

உணவாதிச் செயல்களால் வளித்தாது அல்லது வளி அழல் தாதுக்கள் கேடு அடைந்து மிகுதியாகி மேல்நோக்குக்காலைத் (உதானன்) தூண்டி எழச்செய்து, அதன் காரணமாகச் செரியாமையை உண்டாக்கி வாய்நீர் ஊறல், விக்கல், ஏப்பம் முதலியவற்றையும் உண்டாக்கும். அதே காரணமாகக் கீழ்நோக்குக்காலும் (அபானன்) தூண்டப்பட்டு வயிறு புரட்டல், காற்றுச் சேரல், வயிறு இரைதல், கழிச்சல் ஆகியவற்றைப் பிறப்பித்து உடல் தாதுக்களில் இரசத்தாதுவையும், குருதித்தாதுவையும் கேடு அடையச் செய்வதால் குருதியின் வன்மை குறைந்து உடல் வெளுத்துக் கால்களில் வீக்கமும் உண்டாவதுண்டு. சிறுநீர் குறைந்து மஞ்சள் அல்லது சிவந்த நிறம் பெறும். மலம் நீர் நீராகப் பல நிறங்களோடு இருக்கும். மலம் குழம்பாகவும், அசீரணமாகவும், தண்ணீராகவும், இரத்த நிறமாகவும் இருக்கக்கூடும்.

ஆதலால் இந்நோயில் கேடு அடைந்த உயிர்த்தாதுக்களையும் வாயுக்களையும் தன்னிலைப்படுத்த வேண்டியது முக்கியமாகும். பசித்தீயைத் தூண்டுவதற்கான மருந்துகளையும், பேதியைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளையும், உணவாதிகளையும் கொண்டு, கேடு அடைந்த உயிர்த்தாதுக்களையும் வாயுக்களையும் ஒழுங்குபடுத்தினால், கழிச்சல் கட்டுப்பட்டு, சிறுநீரும் ஒழுங்காய் இறங்கும். பின்பு குருதியைப் பெருக்கி, உடல் வன்மையைத் தரக்கூடிய மருந்துகளையும் உணவுகளையும் கொடுத்தல் சாலச் சிறந்தது.

### குடிநீர் வகை

- மாதுளம் பழத்தோல், சுக்கு இவை வகைக்கு 20 கிராம்; தண்ணீர் 4 லிட்டர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடிகட்டி, 200 மிலி. குடிநீரில் சிறிது தேனும் கூட்டி காலை, மாலை கொடுக்கப் பெருங்கழிச்சல் நிற்கும்.
- அதிவிடயம், வில்வப்பழம், இருவேலி, கோரைக்கிழங்கு இவை வகைக்கு இரு கழஞ்சு; தண்ணீர் 2 லிட்டர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடிகட்டி, 300 கிராம் குடிநீரில் சிறிது

திப்பிலியும் சுக்கும் பொடித்துப் போட்டுக் காலை, மாலை கொடுக்க அதிசாரம், வாதசூலை இவை குணமாகும்.

- ❖ கோரைக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கோஷ்டம், நன்னாரி, சிறுதேக்கு, தேவதாரம், பற்பாடகம், தாமரைவளையம், சுக்கு, பங்கம்பாளை, ஓமம் இவை வகைக்கு ஐந்து கிராம்; நீர் ஒரு லிட்டர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாக்கி வடிகட்டி, 300 மிலி. குடிநீரில் சிறிது அதிவிடயம் பொடித்துச் சேர்த்துக் காலை, மாலை கொடுக்க, சுரத்தோடு கூடிய கழிச்சல் தீரும்.
- ❖ மாதுளைப் பிஞ்சு, அதிவிடயம், முத்தக்காசு, பெருமரத்தோல், சுக்கு, விளாங்காய்ச் சதை இவை வகைக்கு இரண்டு கழஞ்சு; நீர் 2 லிட்டர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாக்கி வடிகட்டி, 200 மிலி. குடிநீரைக் காலை, மாலை கொடுக்க, அதிசார சுரம் தீரும்.
- ❖ தொப்புளை முறுக்கி வலித்தல், இரத்தக்கடுப்பு, மலம் கறுத்து இளகி நுரையுடன் வீழ்தல் ஆகிய குறிகுணங்கள் இருப்பின் திப்பிலியாதிக் குடிநீர் கொடுக்கலாம் திப்பிலி, கொடிவேலி, வசம்பு, வெட்பாலை, உத்தாமணி வேர், இலந்தை வேர், கோரைக் கிழங்கு, அதிவிடயம், செவ்வியம், கடுகுரோகணி, கண்டுபாரங்கி, திரிகடுகு, பெருங்குரும்பை, வேப்பம் ஈர்க்கு, கடுகு, கருஞ்சீரகம், கீழ்க்காய்நெல்லி, விளாவேர், பெருங்காயம் இவை வகைக்குச் சம எடை எடுத்துப் பொடித்து வெருகடி (பூனையின் கால் அடி) அளவு பொடியை எடுத்துக் குடிநீராக்கிச் சாப்பிட்டுவர, பெருங்கழிச்சல், பொருமல், நாபிசூலை கடுப்பு, இருமல் இவை போம். பசி உண்டாகும்.
- ❖ மரமஞ்சள், மஞ்சள், அதிமதுரம், வில்வப்பழம், வெட்பாலை அரிசி இவை வகைக்கு 15 கிராம்; நீர் நாழி விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாக்கி வடிகட்டி, 200 மிலி. குடிநீரில் சிறிது அதிவிடயம் பொடித்துக் கூட்டிக் காலை, மாலை கொடுக்கக் கழிச்சல் வகைகள் நிற்கும்.

## பொடி வகை

### தயிர்ச்சுண்டிச் சூரணம்

மூவிரல் கொண்ட அளவு வெந்நீரில் காலை, மாலை கொள்ள அசீரணம், பேதி தீரும்.

### சுண்டை வற்றல் சூரணம்

இதில் மூவிரல் கொண்ட அளவு காலை, மாலை எருமைத்தயிரில் கொள்ள வயிறு பொருமல், மந்தம், இரைச்சல், கழிச்சல், மூலம், அதிசாரம், கிரகணி இவை தீரும்.

### அன்னப் பொடி (கறிவேப்பிலைச் சூரணம்)

5 கிராம் அல்லது மூவிரல் கொண்ட அளவு வீதம் காலை, மாலை ஆகாரம் சாப்பிடும் போது அன்னத்துடன் சாப்பிடலாம். அல்லது தேன், மோர், வெந்நீர் இவற்றில் கலந்தும் கொடுத்துவர அசீரணம், கழிச்சல், ஏப்பம், ஓக்காளம், பொருமல், அருசி, வாந்தி, இருமல், குமட்டல், பசியின்மை முதலான நோய்களைப் போக்கும். அன்னமய கோசத்தில் (உடம்பு) உண்டாகும் நோய்களைப் போக்குவதில் அன்னப்பொடி எனக் கூறப்படும் கறிவேப்பிலைச் சூரணம் மிகச் சிறந்த மருந்தாகும்.

### வடகம்

### தாளிசாதி வடகம்

சுண்டைக்காய் அளவு உள்ள தாளிச வடகம் ஒன்றைப் பொடித்துத் தேனில் குழப்பிக் காலை, மாலை கொடுக்க வாயு, கபம், கிரகணி, அலசம், வமனம், அதிசாரம், பக்கநோய் என்ற ஏழு நோய்களும் குணமாகும்.

### பிரண்டை வடகம்

இதில் ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை கொடுத்துவர பசித் தீபனம் உண்டாகும். உணவு சீரணமாகும். கிருமிகள் சாகும். சயித்திய வாயு, குன்மம் இவை நீங்கும்.

### வாழை வடகம்

இது சித்த மருத்துவத்தில் கழிச்சலுக்கு ஒரு மருந்தாகக் கூறப்படுகிறது. சில நூல்களில் இது பெரும்பாட்டுக்கும் சிறந்த மருந்தாகக் கூறப்பட்டுள்ளது.

### கறிவேப்பிலை வடகம்

இதனைக் காலை, மாலை ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டுவர வாயிலைப்பு, பசியின்மை, கழிச்சல் சீரணப்பிணிகள் முதலியன தீரும்.

## மாத்திரை வகை

### கபாட மாத்திரை

இதில் ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை தேனில் கொடுக்கக் கழிச்சலும் வாழைப்பூச்சாற்றில் கொடுக்க இரத்தக்கடுப்பு, மூலக்கடுப்பு, இரத்தக்கிராணி, சங்கரக் கிராணி, சீதக்கிராணி, சலக்கிராணி, மலக்கிராணி, வாயுக்கிராணி, சோறாக்கழிக் கிராணி, அதிசாரக்கடுப்பு ஆகியவை தீரும்.

### கட்டுவாதி மாத்திரை

இம்மாத்திரை சிறுவர்களது கழிச்சல் நோய்களுக்குப் பயன் அளிக்கக் கூடியது.

செய்முறை

சாதிக்காயைத் துளைத்து 200 மிகி. எடை அபினியை அதில் அடைக்கவும். வாயை அதன் தூளால் மூடி, மஞ்சளை அரைத்துக் கவசம் செய்து உலர்த்தி, 1 முதல் 1 1/4 எருவில் புடம் போட்டு எடுக்கவும். பின் கவசம் நீக்கி உள்ளிருக்கும் சாதிக்காய்க்குச் சமம் பேரீச்சங்காய் சேர்த்து, முலைப்பால் விட்டரைத்துப் பயறளவு மாத்திரை செய்து உலர்த்தி வைக்கவும். அதை குழந்தைகளுக்குக் காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் தேன் அல்லது முலைப்பாலில் கொடுக்கக் கழிச்சல் தீரும்.

வேறு முறை

சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம், அபின் இவை வகைக்கு 10 கிராம் எடுத்து நல்லெண்ணெயில் தோய்த்து இரண்டு சாமம் அரைத்து, சிறிய குன்றி அளவு மாத்திரை உருட்டி உலர்த்தி வைத்துக்கொள்ளவும். ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை, உச்சி நேரம் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை முலைப்பாலில் கொடுக்க, பேதி நிற்கும்.

### ஊழி மாத்திரை

இதில் ஒரு மாதிரையைத் தேனில் அல்லது வேறு துணை மருந்துகளுடன் காலை, மாலை கொடுக்க ஊழி, அதிசாரம், கிராணி முதலிய கழிச்சல்கள் போம்.

## வச்சிரகபாட மாத்திரை

இதில் ஒரு மாத்திரையைத் தேனில் அல்லது வேறு அனுபானங்களில் கொடுக்க, கழிச்சல்கள் யாவும் நின்று போம்.

## ஐந்துப்பு பற்பம்

இதில் 100 முதல் 200 மிகி. காலை, மாலை தகுந்த அனுபானத்தில் (நீராகாரம், புளித்த மோர் இவற்றில் அனுபானித்துக்) கொடுக்கக் குன்மம், வாதக் குடைச்சல், வயிற்றுக் கடுப்பு, அண்டவாயு, கிராணி, செரியாமை, மகோதரம் ஆகியவை குணமாகும்.

## உப்பு செந்தூரம்

இதில் 100 முதல் 200 கிராம் எடை அளவு காலை, மாலை நெய் அல்லது வெண்ணெயில் கொள்ள மூலம், உஷ்ணபேதி, சீதபேதி, கிராணி, அசீரணபேதி, வாந்திபேதி ஆகியன குணமாகும்.

## பவழப்பற்பம்

50 முதல் 100 மிகி. எடை வரை எடுத்துத் தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுக்க இருமல், ஈளை, கயம், சுரம் ஆகிய இந்நோய்கள் குணமடையும். சித்த மருத்துவத்தில் கழிச்சல் நோய்க்கும் இதனை உபயோகிக்கலாம் எனக் கூறப்படுகிறது. உஷ்ணம் சம்பந்தமான சீதக் கழிச்சலில் வெதுப்பிய எலுமிச்சம் பழத்தை அறுத்துச் சாறு பிழிந்து அதில் கலந்து தினம் 2, 3 வேளை கொடுத்துவர, சீதக் கழிச்சல் நிற்கும்.

## நத்தை பற்பம்

இதில் 100 முதல் 200 மிகி. எடை பற்பத்தைத் தக்க அனுபானத்தில் காலை, மாலை கொடுக்க மூலம், ஆசனக் கடுப்பு, குதம் வெளித்தள்ளல், கழிச்சல்கள் முதலியன குணமாகும்.

## நாகபற்பக் கலவை

இதில் 100 முதல் 200 மிகி. எடையைத் தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுக்க மூலம், கிராணி, சீதபேதி, மாந்த பேதி, ஆசனக் கடுப்பு, பெருங்கழிச்சல் முதலியன குணமாகும். தாது விருத்தியை உண்டாக்கும்.

## இலிங்கத்துவர் (படிகலிங்கச் செந்தூரம்)

இதில் 300 முதல் 500 மிகி. அளவு காலை, மாலை கொடுக்கச் சீதபேதி, இரத்த பேதி, பெரும்பாடு ஆகியவை நிவாரணமாகும். நெய், வெண்ணெயில் கொடுக்கலாம். தேனில் கொடுக்கக் கழிச்சல் தீரும்.

## முத்து பற்பம்

100 மிகி. காலை, மாலை வில்வயிலைச்சாற்றில் கொடுக்க அதிசாரம் போம். இதனைத் தக்க அனுபானங்களில் கொடுக்க அநேக நோய்களைப் போக்கும்.

## அன்ன பேதிச் செந்தூரம்

இதில் 100 மி. கிராம் எடை அளவு காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்கச் சுரம், சீதபேதி, பாண்டு முதலியன தீரும். தேனில் கொடுக்கக் கழிச்சல் போம்.

## இஞ்சி இலேகியம்

இதில் 5 கிராம் காலை, மாலை கொடுக்க வாயு, பித்தம், வாந்தி, சூலை வலி, அரோசகம், அன்னத்துவேசம், அட்டகுன்மம், பொருமல் ஆகியவை தீரும். இதனைக் கண்டாத்திரி இலேகியம் எனவும் கூறுவர். சித்த மருத்துவத்தில் இதனைக் கழிச்சலுக்கும் உபயோகிக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

## சாதிக்காய் இலேகியம்

இதில் ஒரு நெல்லிக்காய் அளவு காலை, மாலை கொடுக்கக் குரல் கம்மல், கண்ணெரிவு, கைகாலெரிவு, சோபை, விக்கல், க்ஷயமிருமல், தேக அசதி, உளைச்சல், காந்தல், உடம்புருகல், சோர்வு, ஊண்தள்ளல், தாது நட்டம், தாகம், வயிற்றுப் பொருமல், அக்கினி மாந்தம், மூலம், நீர்க்கடுப்பு, நீர்ச்சிறுப்பு, அதிசாரம், பித்தமயக்கம் முதலிய நோய்கள் ஒரு மண்டலத்தில் பூரண குணமாகிவிடும்.

கள், சாராயம், சேவல்கறி, மீன் ஆகியவை ஆகா.

செய்முறை

பசுவின் பால், இளநீர், தேங்காய்ப் பால், முருங்கைப்பூச் சாறு இந்நான்கும் வகைக்கு 2 லிட்டர்.

சாதிக்காய், சாதிப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை என்னும் இவ்வாறு மருந்துகளையும் வகைக்கு 35 கிராம் வீதம் எடுத்துப் பாண்டத்தில் இட்டுத் ததும்ப பசுவின் பால் வார்த்து, இரண்டு சாமம் ஊறவைக்கவும். பின் அவற்றை எடுத்து நிழலில் நன்கு உலர்த்தி, இள வறுப்பாய் வறுத்து இடித்துச் சூரணம் செய்யவும்.

கிராம்பு, ஏலக்காயரிசி, ஓமம், வால் மிளகு, கசகசா, விலாமிச்சு வேர் ஆகிய இவ்வாறு மருந்துகளையும் வகைக்கு 35 கிராம் வீதம் எடுத்து இள வறுப்பாய் வறுத்து இடித்துச் சூரணிக்கவும்.

ஆமையோடு பற்பம், பவளப்பற்பம், மான்கொம்பு பற்பம், கற்பூரச் சிலாசத்து பற்பம், பால் கருடப்பச்சைக்கல் பற்பம் ஆகிய ஐந்து பற்பங்களையும் வகைக்கு 35 கிராம் வீதம் எடுத்துக் கொள்ளவும்.

பனைவெல்லம் 350 கிராம்.

மேலே கூறிய பால், இளநீர் முதலியவற்றை ஒரு பாண்டத்தில் இட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி வற்றி வருகிற பாகத்தில் பனைவெல்லத்தைத் தட்டி அதில் போட்டுக் கரைத்துப் பாகு பதம் வரும் சமயம் இவற்றில் கூறிய சூரணங்களையும், பற்பங்களையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு சிறுகச்சிறுக போட்டுத் துடுப்பால் நன்றாய்க் கிண்டி, நாட்டுச் சர்க்கரை 500 கிராம் சேர்த்துக் கிளறி அப்பால் நயம் பசுநெய் 500 மிலி. விட்டுக் கிண்டி சட்டியைக் கீழே இறக்கி வைத்துக் கொள்ளவும். ஆறிய பிறகு நயம் தேன் 100 மிலி. சேர்த்துக் கிளறி, நெல்லிக்காய் அளவாக உருண்டைகள் செய்து புதுச்சட்டியில் வைத்துக் கொள்ளவும்.

காலை, மாலை ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டுவர, மேற்குறிப்பிட்ட நோய்கள் யாவும் குணமாகும்.

## சரபங்க வில்வாதி இலேகியம்

இதில் 5 கிராம் அளவாகக் காலை, மாலை உட்கொள்ள பித்தவெட்டை, பித்தப்பாண்டு, சயம், குன்மம், கிராணி, வாய்க்கசப்பு, வெள்ளோக்காளம், வாய்நீர் ஊறல், அக்கினி மாந்தம், சூலை, கைகால் எரிவு, பித்தம் ஆகியவைகள் ஒரு மண்டலத்தில் தீரும். புளி, கைப்பு, புகை, பெண் நீக்க வேண்டும்.

### மணப்பாகு வகை

வில்வ மணப்பாகு, குடச மணப்பாகு, செம்பருத்தி மணப்பாகு இவற்றில் ஒன்றை 1 முதல் 2 தேக்கரண்டி அளவு தினமும் 2 அல்லது 3 வேளை கொடுக்க, கழிச்சல்கள் நீங்கும் எனச் சித்த மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

## பேதி, வயிற்றுக்கடுப்புக் குடிநீர்

அத்திப்பிஞ்சு, கோவைப்பிஞ்சு, மாமரப்பட்டை, சிறுசெறுப்படை இவை வகைக்கு ஒரு பிடியாகத் தட்டிச் சட்டியில் இட்டு, வாழைக்கிழங்குச்சாறு நான்கு பங்கு விட்டுக் காய்ச்சி, நான்கில் ஒன்றாய் வற்றவைத்துக் காலை, மாலை சாப்பிட வயிற்றுக்கடுப்பு, கிராணி, பேதி முதலியவை குணமாகும்.

## மூதண்டலேகியம்

இதில் 3 கிராம் எடை அளவு காலை, மாலை சாப்பிட்டுவர அதிசாரம், கிராணி, சீதபேதி, விந்து நட்டம் முதலியவை தீரும். பசி எடுக்கும். அண்டவாதம் போம்.

### செய்முறை

சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, வால்மிளகு, அதிமதுரம், அக்கிராகாரம், சுத்தி செய்த கஞ்சா ஆகியவற்றில் வகைக்கு 35 கிராம் சூரணித்து எடுத்துக்கொள்ளவும். தேன் 500 கிராம், நெய் 200 கிராம் எடுத்துத் தேனைச் சற்று சுடவைத்து, சூரணங்களை ஒன்றாய்க் கலந்து தேனில் சிறிது சிறிதாகத் தூவிக் கிண்டி நெய்விட்டுக் கிளறி இறக்கி ஜாடியில் வைக்கவும். மேற்கூறிய அளவில் கொடுக்க அந்நோய்கள் தீரும். அன்றியும் மேகநோய், வாயுக்கள் குணமாகும். தேக திடம் உண்டாகும். பால் சாதம் கொடுக்கவும். சுகவாசிக்குப் பத்தியமில்லை.

## தான்றிக்காய் இலேகியம்

இதில் 3 முதல் 5 கிராம் வீதம் காலை, மாலை கொடுக்க அதிசாரம், கிராணி, இரத்த பேதி, மூலக்கடுப்பு, மூலநோய், உஷ்ண ரோகம், வாயுக்கள், வயிற்றுப் பொருமல், வயிற்றுக் கடுப்பு ஆகியவை தீரும்.

### செய்முறை

தான்றிக்காய்த் தோல் 1 கிலோ எடுத்து ஒரு சட்டியில் இட்டுத் தண்ணீர் 4 லிட்டர் விட்டு ஒரு இரவு ஊறவைக்கவும். மறுநாள் காலை காய்ச்சி எட்டில் ஒன்றாய்

வற்ற வைத்து வடிகட்டி இலேகியச் சட்டியில் இடவும். அதில் வெள்ளைச்சீனி 500 கிராம் சேர்த்துப் பாகு காய்ச்சி அதிவிடயம், சாதிக்காய், அபின், சுத்தி செய்த கஞ்சா இவை வகைக்கு 10 கிராம் வீதம் பொடித்து அந்தப் பாகில் தூவிக் கிளறி, நெய் 200 மிலி. விட்டுக் கிண்டி ஆறிய பின், தேன் 100 கிராம் சேர்த்துக் கிளறி ஜாடியில் வைக்கவும். மேற்குறிப்பிட்ட அளவில் கொடுத்துவர அந்நோய்கள் குணமாகும்.

## வசம்புச் சூரணம்

இதில் 1 முதல் 4 அல்லது 5 சிட்டிகை வரையில் முலைப்பாலில் காலை, மாலை கொடுக்கச் சீதளத்தால் உண்டான இரைப்பு, கபநோய்கள் மாந்தம், வாந்தி, வயிற்றிரைச்சல், பேதி முதலியன குணமாகும்.

பால் உண்ணும் குழந்தையாக இருப்பின் தாய் காரம், புளி நீக்கி உண்ணல் நலம்.

### செய்முறை

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, பெருங்காயம், ஓமம் இவற்றைப் பொன் மேனியாக வறுத்து, இடித்து வஸ்திரகாயம் செய்து வகைக்கு 10 கிராம் எடுக்கவும். வசம்பைச் சுட்டுக் கரியாக்கியது 700 கிராமையும் சேர்த்து கல்வத்தில் இட்டு நன்றாய் அரைத்துச் சீசாவில் இடவும். மேற்குறிப்பிட்டபடி இதனை உபயோகிக்க அந்நோய்கள் யாவும் தீரும்.

## பிரண்டையுப்பு

இதில் 100 முதல் 200 மிகி. அளவு எடை காலை, மாலை கொதிநீர் அல்லது புளித்த மோரில் கொடுக்க அசீரணம், பேதி, பசி மந்தம் போம். சிறு குழந்தைகளுக்கு வரும் மாந்தம், பிரளி, பால் போல் கழிதல் முதலியன குணமாகும்.

### செய்முறை

முற்றிய பிரண்டைக் கொடியின் கணுக்களை நீக்கி, கண்டங்களாக நறுக்கி, இடித்துச் சாறு பிழிந்து கோணியில் வடிகட்டி 1/2 படிச் சாறு எடுக்கவும் சட்டியிலிட்டு அத்துடன் கறியுப்பு 500 மிலி. சேர்த்து வற்றக்காய்ச்சி கீழே இறக்கி, மேல் மூடி சீலைமண் செய்து, 50 வறட்டியில் புடம் போட்டு எடுத்துப் புட்டியில் வைக்கவும். மேற்குறிப்பிட்ட அளவில் உபயோகிக்க அந்நோய்கள் போம்.

## மாதுளைத்தோடு சூரணம்

இதில் மூவிரல் கொண்ட அளவு காலை, மாலை வெந்நீரில் கலந்து கொடுக்கச் சுரப்பெருங்கழிச்சலும், எருமைத் தயிரில் அனுபானித்துக் கொடுக்க மற்ற வகை கழிச்சல்களும் குணமாகும்.

### செய்முறை

மாதுளம் பழத்தின் தோடு நிழலில் உலர்த்திப் பொடித்தது. சுக்கு, மிளகு திப்பிலி, திப்பிலிமூலம், நற்சீரகம், கருஞ்சீரகம், வாய்விடங்கம், ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, குரோசாணி ஓமம், நெல்லிப் பருப்பு, வில்வக்குடுக்கை, தான்றிக்காய்த்தோல், சுத்தி செய்த கஞ்சாப்பொடி, கஞ்சாவிரை, அபின், இலவங்கப்பட்டை, ஏலம், பெருமரத்துப்பட்டை, புளியம்விதைத் தோல், அதிவிடயம், வெட்பாலையரிசி இவை வகைக்குச் சம எடை சூரணம் எடுத்து எல்லாச் சூரணங்களையும் முறைப்படி ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ளவும். மேற்குறிப்பிட்டபடி இதனைக் கொடுத்துவர, அந்நோய் யாவும் குணமாகும்.

## பூபதி செந்தூரம்

இதில் 100 முதல் 200 மி. கிராம் எடை காலை, மாலை தேனில் கொடுக்கக் கிராணி, அதிசாரம் போம். மிளகுக் குடிநீரில் கொடுக்கச் சுரம், குளிர் சுரம் போம். திரிகடுகில் கொடுக்க, வாய்வுகள், மேக நோய்கள் போம்.

### செய்முறை

சுத்தி செய்த கெந்தி 35 கிராம், சுத்தி செய்த சாதிலிங்கம் 70 கிராம் இவற்றைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து ஒன்றாய்க் கலந்து இஞ்சிச் சாறு கொண்டு இரண்டு சாமம் அரைத்து, கல்வத்துடன் வெய்யிலில் உலர்த்தவும். பிறகு நாவற் பட்டை, மாம்பட்டை, அத்திப்பட்டை, மருதம் பட்டை இவை வகைக்கு 35 கிராம் வீதம் எடுத்து, அத்துடன் இத்திப்பட்டை பலம் ஒன்று, கிராம்பு 35 கிராம் இவற்றையும் சேர்த்து இடித்துச் சட்டியில் இட்டு, நீர் நான்கு படி விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து வடிகட்டி மேற்கூறிய மருந்துடன் சேர்த்து ஒரு சாமம் அரைத்து, விழுதைச் சட்டியில் வழித்துப் போடவும். மீதிக் குடிநீரையும் அதில் விட்டு அடுப்பேற்றி தீபாக்கினியாக (சிறு தீயாக) எரித்து, நீர்ச்சத்து முற்றிலும் வற்றிய பிறகு சட்டியை இறக்கி வெய்யிலில் வைத்து உலர்த்திப் பொடித்துப் புட்டியில் வைத்துக் கொள்ளவும். மேற்கூறியவாறு தக்க அளவில், தக்க அனுபானங்களில் கொடுக்க அந்நோய்கள் யாவும் தீரும்.

## மிளகாய் மெழுகு

இதனைக் கடலை அளவு காலை, மாலை தேன், சர்க்கரை இவற்றுடன் கலந்து கொடுக்க அசீரண பேதி, பெருங்கழிச்சல், ஊழிபேதி, வயிற்றுப் பொருமல் முதலியவை குணமாகும்.

### செய்முறை

விதை அடர்ந்து உள்ளதும் பொக்கை இல்லாததுமான நல்ல சாதி மிளகாய் வற்றல்களைக் காம்பு நீக்கித் தேன் விட்டுக் கருக வறுத்து, தேன்விட்டுக் கல்வத்தில் மெழுகு பதமாக அரைத்து வழித்துச் சிமிளில் வைத்துக் கொண்டு முற்கூறிய பிரகாரம் உண்ணக் கழிச்சல்கள் போம். ஊழி நோய்க்குச் சிறந்த மருந்தாகும்.

## கட்டுவாதி இலேகியம்

இதில் ஒரு சுண்டைக் காயளவு காலையில் மட்டும் மூன்று நாட்கள் கொடுக்க, சீதக் கழிச்சல், இரத்தக் கழிச்சல், மந்தம், அசீரணம் ஆகியவை தீரும்.

### செய்முறை

சீமை அதிவிடயம், கடுக்காய்ப்பூ, மாசிக்காய், மாதுளம் பழத்தோல் சாதிக்காய், இலவங்கப்பட்டை, போஸ்தக்காய் (கசகசா), மாங்கொட்டைப் பருப்பு, புளியங்கொட்டைத் தோல் வகைக்கு 150 கிராம்; அபினி, கோரோசனம் இவை 2 கிராம்; நல்ல வெல்லம் 150 கிராம்; நெய் 35 கிராம். நெய்யை அடுப்பேற்றி வெல்லத்தை அதில் கரைத்துச் சிறு தீயில் எரித்துப் பாகு பதத்தில் மற்ற சரக்குகளின் சூரணத்தைச் சிறுகச் சிறுகத் தூவிக் கிளறி இறக்கவும். இதில் தேன் சேர்க்கப்படவில்லை. மேற்கூறிய பிரகாரம் கொடுக்க அந்நோய்கள் யாவும் தீரும்.

## வெள்ளைப்பூண்டு கலிக்கம்

இளநீரைக் கண் திறந்து ஒரு சட்டியில் இட்டு, வேண்டிய அளவு பூண்டைத் தோலுரித்து அதில் போட்டு வேக வைத்து, வெந்த பின் அதனைப் பிசைந்து இளநீரில் கலக்கிக் கொடுக்க மூலம்,விக்கல், கழிச்சல், கிராணி ஆகியவை தீரும்.

### பத்தியம்

கழிச்சல் மிகுதியாக இருப்பின் இருமுறை வடித்த சோறும், நீரும் மட்டுமே கொடுத்தல் நன்று. பார்லி அரிசியை வேக வைத்து எடுத்த நீரைக் கொடுக்கலாம்.

நோயின் வன்மை குறைந்தபின் சிறுகச் சிறுக உணவின் அளவைப் பெருக்கி இருமுறை வடித்த சோற்றுடன் சிறிது மோர் கூட்டிக் கொடுத்து, அது செரிக்குமாயின் உணவை உயர்த்திக் கொண்டே வந்து காய்கறி வகையில் அத்திப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு போன்றவைகளைக் கொடுக்கலாம்.

## ஓமலேகியம்

இதில் 5 முதல் 10 கிராம் இலேகியத்தைக் காலை, மாலை சாப்பிட்டுவர அதிசாரம், கிராணி, பொருமல் ஆகிய இவை குணமாகும். அன்றியும் இதனுடன் அயச்செந்தூரம், இலிங்கக்கட்டுச் செந்தூரம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சேர்த்துக் கொடுக்கச் சீரணக் குற்றங்களை விரைவில் சரிப்படுத்தும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

## அதிசார நிவாரணிகள்

வட்டத்திருப்பி
வெட்பாலைவித்து
மாம்பருப்பு
மாம்பட்டை
வறட்சுண்டி
புளியின் வித்து
புளியின் வேர்
புளியின் புறணி
வறட்பூலா
மாதுளங்காய்
வில்வயிளங்காய்
தும்பியின்காய்
வாழைப்பூ
தென்னம்பூ
ஆத்தியின் பூ
இலவங்கப்பூ
கழற்சிவித்து
நீர்ப்பூலா

நீர்முள்ளி வித்து
வெட்டி வேர்
பாலையின் பட்டை
சாதிக்காய்
விடத்தேரிலை
வேங்கையின் பட்டை
நெற்பொரி
அஞ்சிலை
நொச்சித் துளிர்
வெள்ளறுகுவித்து
சீரகம்
பேரீந்து
திப்பிலி
வெள்ளிலோத்திரம்
கருங்காலி
நாவல்பட்டை
நாவல்துளிர்
கடுக்காய்
சிறுகாஞ்சொறி
பெருமரத்துப் பட்டை
சுக்கு
இலவம்பிசின்
பால்
நல்லெண்ணெய்
முத்து
ஓமம்
கடப்பம் பட்டை
கீழ்க்காய்நெல்லி
வெட்பாலைப் பட்டை

வெண்குங்கிலியம்

சடைக்கஞ்சா

ஆவாரையின் பட்டை

நெய்

தேன்

பசுந்தயிர்

அதிவிடயம்

தில்லை

வெள்ளாட்டுத்தயிர் ஆகிய இவைகள் எல்லாம் அதிசார நிவாரணிகளாகச் சித்த மருத்துவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## பெருங்கழிச்சலுக்கு உணவு

கழிச்சல் அளவு கடந்து போகையில் இருமுறை வடித்த சோறும், நீரும் கொடுத்தல் நன்று. பார்லி அரிசியை வேக வைத்த நீர், கூகைக்கிழங்கு மாவுக் கஞ்சி, நெற்பொரிக் கஞ்சி ஆகியவற்றையும் கொடுக்கலாம். நோயின் வன்மை குறைந்து வரும்போது சிறுகச்சிறுக உணவின் அளவைப் பெருக்கி, இருமுறை வடித்த சோற்றுடன் சிறிது மோர் கூட்டிக் கொடுத்து அது செரிக்குமாயின் உணவை உயர்த்திக்கொண்டே வரலாம். பதார்த்த குண சிந்தாமணியில் கூறியவாறு:

***மானே வயிறு கழிவார்க்கு***<br>
***வாழைக்கச்சல் அத்திக்காய்***<br>
***கானே திரியும் ஊர்க்குருவி***<br>
***காடை உடும்பு கவுதாரி***<br>
***தானே யாகும் . . . .***

வாழைப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, காட்டில் திரியும் ஊர்க்குருவி, காடை, உடும்பு, கவுதாரி ஆகியனவற்றை உட்கொள்ளலாம்.

***காராமணிக்கீரை காட்டுப்பறங்கியிலை***<br>
***பேராம் பெரும்பயிற்றின் பேரிலைகள்-சீரார்***<br>
***அகத்தியருங் கத்திரிக்காய் ஆயிழையே மீன்கள்***<br>
***பகைத்ததிக பேதியாகும் பார்***

காராமணிக் கீரை, காட்டுப்பறங்கியிலை, பெரும்பயறு இலை, அகத்திக் கீரை, கத்தரிக்காய், மீன் ஆகியவைகளைச் சேர்த்தால் பேதி அதிகமாகும்.

# 11

## நிணக்கழிச்சல்

### முன்னுரை

இதற்கு ஊன் கழிச்சல், பல நிறக் கழிச்சல், கொடிய கழிச்சல், நாறும் கழிச்சல், கிராணி பேதி என வேறு பெயர்களும் உள்ளன.

பசித்தீக் கேடு அடைந்து உண்ட உணவு செரிக்கப்படாமல் வயிற்றில் புளித்து, இடைவிடாது கழிச்சல் உண்டாய், அக்கழிச்சல் எளிதில் நீங்காமல் நிலைத்து, குடலைப் புண்படுத்தி அதிலிருந்து எரு (மலம்) நிண நீருடன் இழிவதால் நிணக்கழிச்சல் என்றும்; குடல் இற்று அதனுடைய ஊன் கழிச்சலுடன் கலந்து இருப்பதால் ஊன் கழிச்சல் என்றும்; குடல் சதை அழுகி இற்றுப் புலால் மணத்தோடு வெளிப்படுதலால் நாறும் கழிச்சல என்றும்; ஊன், குருதி முதலியன கலந்து பல நிறத்துடன் கழிவதால் பல நிறக் கழிச்சல் என்றும் பல பெயர்களால் வழங்கலாயிற்று. நாட்பட்டு நிலைக்கும் இக் கழிச்சல், வயிற்றின் மந்தத்தால் உண்ட உணவின் சாரத்தை உடலுக்கு ஊட்டுதலின்றி, செரித்தும் செரியாததுமாய்க் கீழ்க் குடலில் தங்கிப் புளித்துச் சேர்ந்து, முறைக்கு முறை பெரு அளவில் கழியும். இக்கழிச்சல் சில வேளை சற்றுக் கடினப்பட்டதாயும் சிலவேளை நீர் நீராயும், பல நிறப்பட்டதாயும், மிகவும் நாற்றமுடையதாயும் காணும்.

### நோய் வரும் வழி

பசித்தீ குறைந்த நிலையைத் தக்க மருந்துகளாலும் உணவு வகைகளாலும் போக்காமல் நீடிக்கவிடின், உண்ட உணவு உடலுக்கு ஊட்டத்தைத் தராமல் உடலை வாட்டி, உயிர்த்தாதுக்களை மிகுதிப் படுத்துவதனால் வருவது ஒரு விதம். பெருங்கழிச்சல் உண்டானபொழுது அதனைத் தக்கவாறு பரிகரிக்காமல் விடுவதால் குடல் புண்ணாகி வருவது மற்றொரு விதம். ஈதன்றியும் செரியாமை, சுவையின்மை முதலிய வயிற்றுக்

கோளாறுகளாலும், எளிதில் செரிக்கக்கப்படாத உணவுகளான மாப்பண்டம், சரிவர வேகாப் பொருள்கள், சுனை நீர், சுண்ணம் கலந்த நீர் முதலிய கடின நீர்களை உட்கொள்ளல் என்பவைகளாலும் பசித்தீக் கெட்டு, உண்ட உணவு செரியாது குடலில் தங்கிப் புளித்துக் குடலைப் புண்படுத்தி இந்நோய் உண்டாகும்.

அத்துடன் சிலவகை செயல்களினால் மனநிலை பாதிப்பு அடைந்தும் இந்நோய் வரலாம். முற்பிறவிப் பாவங்கள், சிவன் அடியார்கள் செய்யும் வேள்விகளைத் தடுத்தல், கடவுளுக்குச் செய்யும் பூசனைகளைத் தடுத்தல், உறவினரைப் பசிக்கவைத்து உண்ணல் முதலியவைகளாலும் இந்நோய் வரும் எனச் சித்த மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன.

மேலும் மலம் இளக்கி மருந்துகளை மருத்துவரின் ஆலோசனை இன்றி அடிக்கடி உண்ணலும் இதற்குக் காரணமாகும். பிற நோய்களைப் பரிகரிக்கும் பொருட்டு உட்கொள்ளப்படும் மருந்துகளாலும் கிராணி ஏற்படலாம். அவை குன்ம நோய்க்கான மருந்து, இதய நோய்க்கான மருந்துகள், உடலின் கொழுப்பைக் குறைத்து மெலிவடையச் செய்யும் மருந்துகள், கிரியை நோய்க்குத் தரப்படும் மருந்துகள், புற்று நோய்க்கான கதிர்வீச்சு மருத்துவம் ஆகிவற்றாலும் சிலருக்குக் கிராணி கழிச்சல் ஏற்படலாம்.

அத்துடன் குடல் மற்றும் பெருங்குடலைப் பற்றிய இளைப்பு நோய், குடல்வாத சுரம், குடல் பகுதியில் உறிஞ்சப்படும் சோடணிகள் பாதிப்பால் வரும் நோய்கள், குடல் இயக்கம் பாதிப்பு, குடல் பகுதியில் குருதி இயக்க மாறுபாடு, இரைப்பை மற்றும் குடல் தாபிதம், இரைப்பை, குடல், கடைக்குடல் பகுதிகளில் ஏற்படும் வன்கழலைகள், பெருங்குடலில் காணப்படும் குருதிக்கழலை, குடல் குருதிக் குழல் மாறுபாடு முதலியவற்றாலும், பெற்றோர் வழியாகவும் சிலருக்கு வரலாம்.

இரசகந்தப் பாடாணங்கள் சேர்ந்த மருந்துப் பொருட்களைச் சரிவர முடிக்காத நிலையிலும் நாள் அளவு, மருந்து அளவு ஆகியவற்றைச் சரிவர கடைப்பிடிக்காத நிலையிலும் கிராணி வரலாம்.

## முற்குறிகுணங்கள்

வயிறு மந்தமாய் இருத்தல், உண்ணாத போதும் வயிறு உண்டது போலவே இருத்தல், உண்டபின் உண்ட உணவு வயிற்றினின்று கீழ்நோக்காமல்

மிகுந்த நேரம் வயிற்றிலேயே தங்கி இருப்பது போல் தோன்றல், வாய் நீர் ஊறல், வாந்தி வருவது போன்ற ஓர் உணர்ச்சி, வயிறு கடுத்தல், ஏப்பம், விக்கல், புளித்த நீரெதிர்தல், அடி வயிறு ஊதல், இரைதல், நோதல், புரளல் என்னும் முற்குறிகளைக் காட்டி, வயிறு கொட்டும்.

## நோய் வகை

இக் கழிச்சல் நோயை உயிர்த்தாதுக்களின் அளவாக வளி, அழல், ஐயம், முத்தாது நிணக்கழிச்சல் என நான்கும்; தன்னளவில் மிகுந்த கால்களைக் (வாயுக்களைக்) கொண்டு கீழ்நோக்குக்கால் அடிக்குடலைப் பற்றிய போது ஏற்படும் அந்தரவாயுக் கழிச்சல் , மூலவாயுக் கழிச்சல், அழலும் வாய்வும் கூடிய உட்ணவாயுக் கழிச்சல் என மூன்றும்; பிள்ளைப் பேற்றுக்குப் பின்வரும் கழிச்சல், குன்ம நோயில் வரும் கழிச்சல் (கர்ப்பக் கிராணி, குன்மக் கிராணி) ஆகிய இரண்டும் சேர்ந்து கழிச்சல் ஒன்பது வகை என ஒரு சாரார் கூறுவர். எருவாயில் சிறிது கழிச்சலும் ஒட்டாமல் வெளியாகும் கழிச்சலை ஒட்டுவாய்க் கிராணி எனவும், கழியும்போது தாங்க முடியாதவாறு துன்புறுத்தும் கழிச்சலைச் சங்கரக் கிராணி எனவும் பேரிட்டு இவ்விரண்டையும் கூட்டிப் பதினொன்று என மற்றொரு சாரார் கூறுவர். இப்பதினொன்றையும் இங்கு விளக்குவோம்:

### 1. வளி நிணக்கழிச்சல் (வாதக் கிராணி)

நடு வயிற்றில் வலியும், பசியும் எடுக்கும். உடம்பு இளைக்கும். சீதக்கழிச்சல் உண்டாகும். மலத்துடன் காற்றும் அதிகமாகப் பிரிவதால் மலம் சிதறும். கட்டியாய் இருக்கும் மலமானது கறுத்து, பழைய வெல்லப் பாகு போல் இருக்கும்.

### 2. அழல் நிணக்கழிச்சல் (பித்தக் கிராணி)

நிணக்கழிச்சலில் நடு வயிற்றில் தாங்க முடியாத வலி உண்டாகிப் பலப் பல நிறத்துடன் வயிறு கழியும். உறக்கத்தைக் கொடுக்கும். நரம்பும் தளரும். இற்றுப்போன வயிற்றில் ஊன் வெளியாகும். கொடுக்கும் மருந்து பயன் அற்றதாகும். உணர்வு அற்றிருக்கும். பேன் தலையைவிட்டு வெளியேறும்.

### 3. ஐய நிணக்கழிச்சல் (கபக் கிராணி)

இந்நோயில் கழியும்போது எருவாய் சூட்டுடன் எரிதலன்றி, அக்கழிச்சல் கொடிய நாற்றமாயும் வெளுப்பாகவும் இருக்கும். கையும் காலும் தளர்ச்சி

அடையும். வெளியில் தெரியாமல் உட்காய்ச்சலாகக் காயும். கண்கள் இரண்டும் சிவத்தலுமான குறிகுணங்களோடு மூக்கு, நா இவைகள் வறண்டுபோகும். குடல் நைந்து (உரித்த பாம்பின் தோலைப் போல்) குடலின் மெல்லிய தோல் கழிச்சலுடன் கலந்து காணும். நினைவும் உடல் சத்தும் குறையும். கொடிய விக்கல் உண்டாகும்.

## 4. முத்தாது நிணக்கழிச்சல் (தொந்தக் கிராணி)

இதில் மிகுதியும் காய்ச்சல் உண்டாகி, கடல் ஒலி போல் இரைச்சலுடன் வயிறு கழிந்து குளிர், தலைவலி, நடுக்கல் முதலியன உண்டாகும். பால் போல் வெளுப்பாய்க் கழியும். மிகுதியாய்க் காற்றுப் பறியும். உடல் சூடு, எரிச்சல் ஏற்படும். கையும் காலும், புறங்காலும் வீக்கம் அடையும்.

## 5. அழற்கால் நிணக்கழிச்சல் (உஷ்ணவாயுக் கிராணி)

இந்நோயில் கீழ்நோக்கும் காலும், அழல்தாதும் தன்னிலையில் மிகுந்து காணும் ஆகையால் எரு (மலம்) தீய்ந்தும், கீழ்நோக்குக் கால் (அபானவாயு) மிகுதலால் வயிற்றில் மிகுதியும் காற்று சேர்ந்து வயிறு ஊதல், பொருமல் என்னும் குறிகளும் உண்டாகும். அவற்றோடு உண்ட உணவு செரியாமல் புளியேப்பம், வாய் நீர் ஊறல் என்னும் குறிகளைக் காட்டி, உடல் வன்மையைக் கெடுத்து, மெலிவடையச் செய்து, உடலைக் கறுக்கச் செய்யும். இவ்வாறான குறிகள் தோன்றிய மூன்றாம் நாள் தொடங்கி கணக்கின்றி கழியச் செய்யும்.

## 6. குடற்கால் கழிச்சல் (அந்தரவாயுக் கிராணி)

இந்நோயில் மேல்நோக்குக்கால் (உதானவாயு) தன் அளவில் மிகுந்து, கொண்ட உணவைச் செரியாதபடியும், கீழ்நோக்கிச் செல்லாதபடியும் அகட்டிலேயே நிலைத்துப் புளிக்கச் செய்யும். அதனால் புளித்த ஏப்பம், வாந்தி, சுவையின்மை, விலாப்பக்கம் வலி, நீர் வேட்கை, விக்கல் என்னும் கேடுகளை விளைவிக்கும். பின் கீழ் நோக்கச் செய்து, இடைவிடாது கழியச் செய்யும். உடலை மெலியச் செய்து, வெளுக்க வைக்கும்.

## 7. கீழ்க்கால் கழிச்சல் (மூலவாயுக் கிராணி)

இந்நோயும் கீழ்நோக்குக்கால் மிகுந்தமையால் வந்ததாயினும், கீழ்நோக்குக் கால் கீழ்க்குடலையும், கீழ்வாயையும் பற்றி வரும் நோய் எனக் குறிக்கப்படும். இதில் மிகுந்த அவ்வாயு கீழ்க்குடலில் தங்கி உடலை வாட்டி,

பசித்தீயைக் கெடுத்து, மந்தத்தை உண்டாக்கி, உணவைச் செரியாமற் செய்யும். செரியா உணவும் காற்றும் சேர்ந்து இரைச்சலையும் அடித்தொடையில் குத்தலையும் உண்டாக்கி, முளையை வெளித் தள்ளும். உடலைக் கிழத்தன்மை அடையச் செய்யும்.

## 8. குன்மக் கழிச்சல்

இது நெடுநாட்களாய்க் குன்ம நோய்வாய்ப் பட்டு உடல் மெலிவடைந்த நிலையில் உண்டாகும் நோயாம். இதனில் பேசமுடியாமை, கண் ஒளி இழந்து பீளை சார்தல், தலை வியர்த்தல், தலைகனம், உறக்கம், தலை நடுக்கல், உடல் எரிதல், வயிறு உப்பி இரைதல், ஒரு புறமாய் வலித்துக் கழிச்சலை உண்டாக்குதல் முதலிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

## 9. கர்ப்பக் கிராணி

இந்நோய் சில பெண்களுக்குச் சூல் அமைந்த சில திங்கட்குள் வாந்தி, வயிறு இரைந்து கழிதல் ஆகியவை உண்டாகும். வேறு சிலருக்குப் பிள்ளை பெற்ற சில தினத்திற்குள் வருவதும் உண்டு. இதில் வயிறு கடுத்துப் பல நிறமாகக் கழிச்சல் உண்டாகும். அடிக்கடி களைத்துப்போதல், கண் மஞ்சளித்தல், உடல் வெளுத்தல், கைகால் எரிதல், பெருமூச்சு, வாந்தி உண்டாதல் எனும் குறிகளும் தொடரும். இதனைப் பிரசவக் கிராணி என்பர்.

## 10. ஒட்டு நிணக்கழிச்சல்

நோயினர் படுக்கையே இதமாய்ப் படுத்திருத்தல், இளைப்பு, மிகுந்த வயிற்று வலி, மார்பு, விலா, முதுகு வலி முதலியன தோன்றும். ஒரே தடவையில் மலம் கழியாமல் முறைக்குத் துட்டு எடையாய்க் கழியும். கொப்பூழில் வளையம் போல் இழுத்துப்பிடித்து வலிக்கும்.

## 11. எரிச்சல் நிணக்கழிச்சல் (சங்கரக் கிராணி)

இந்நோயில் உண்ட சோறு செரியாமல் வயிறு பொருமும். கீழ்நோக்குக்கால் வெப்பத்தால் பெருகி, வயிறு இரைந்து கழிச்சலை உண்டாக்கும். அன்றியும் கீழ்வாயில் எப்போதும் ஈரமாக இருத்தல், உடலில் சிறு வியர்வை உண்டாதல், சுரம் காய்ந்து வாந்தியாதல், மனத்துயரமாதல், மார்பில் கோழை கட்டல், மயக்கம் உண்டாதல், கண்கள் குழி விழுந்து இருள் அடைதல் என்னும் குறிகளையும் காட்டும்.

## தீரும், தீராதவை

வளி, அழல், அழல்வளி, மேல்நோக்கு, கீழ்நோக்கு, ஒட்டு, சூல் முதலிய நிணக்கழிச்சல்கள் தீரும். மற்றவை தீராவாம்.

## நோயின் பொது இயல்பு

இந்நோய் பெரும்பான்மையும் செரியா உணவாலும், மற்றைய வேறுபாடுகளாலும் உண்டாகும். இது மருந்துகளுக்குக் கட்டுப்படாமல் நிலைத்து நிற்கும் இயல்பை உடையது. நாள் பல கடக்கினும் நோய் போகாமல் உடலை வாட்டும். சில வேளை வயது முதிர்ந்தவர்கட்குச் செரிக்கும் தன்மையும், குடல் வன்மையும் மெலிந்த நிலையிலும் இந்நோய் உண்டாகும். எருவாயில் எழும் புண், வெப்ப முளை இவைகளாலும் இந்நோய் வருதலுண்டு. ஈதன்றியும் இது மற்றைய நோய்களாகிய சுரக்கழிச்சல், இளைப்புநோய், வெளுப்புநோய் (பாண்டு), ஈரல் நோய்கள், பெருவயிறு முதலியவைகட்குத் துணை நோயாகவும் வருவதுண்டு.

இந்நோய் உணவில் விருப்பமின்மை, புசிக்கினும் செரியாமை, புளித்த ஏப்பம், விக்கல், அடிவயிற்றில் காற்றுச் சேர்ந்து வயிறு ஊதி இரைதல், வயிறு வலித்தல், அடிக்கடி கழிதல், அக்கழிச்சல் வேளைக்கு ஒரு நிறமாய்த் தோன்றல், சில வேளை மிகுந்த நாற்றத்துடன் இருத்தல் என்னும் குறிகளைப் பெறும்.

சீயோடு கூடிய நிணக்கழிச்சல் நோயில் வளி நாடியானது தன்னளவில் பொருந்தி நடக்கும். எரு (மலம்) அடிக்கடி இறங்குவதுமின்றி, பல நிறத்தோடு கழியும். அத்துடன் குடலின் சவ்வு இற்று, சீதம் போல் காணும். நீர் (மூத்திரம்) அளவில் குறைந்து எரிச்சலுடன் சிறிது சிவந்து இறங்கும்.

## நிணக்கழிச்சல் மருத்துவம்

இந்நோயில் உணவாதிச் செயல்களால் உடல் வன்மை குறைந்து அழல்தாது கேடடையும். அதனால் செரியாமை உண்டாகும். இதன் காரணமாக உணவு அகட்டில் தங்கிப் புளித்து மேல்நோக்குக்கால், கீழ்நோக்குக்கால், நடுக்கால், பரவுகால் ஆகியவைகள் மிகுதி அடைந்து அழல் தாது தூண்டப்பட்டு வாயுக்கள் மிகுந்த கேடு அடையும்.

மேல்நோக்குக்காலின் செயலால் புளியேப்பம், வாந்தி, விக்கல், நீர்வேட்கை, வாய்நீர் ஊறல் என்னும் குறிகுணங்கள் ஏற்படும். கீழ்நோக்கும் காலின் செயலால் வயிறு உப்பல், புரளல், நோதல், பேதி ஆதல் முதலிய

குறிகுணங்கள் உண்டாகும். பரவுகாலின் செயலால் உணவின் சாரத்தைச் சரிவரப் பரவ ஒட்டாமல் தடுத்து, உடலுக்கு ஊட்டம் அளிக்காதவாறு செய்து அதனால் உடல் வன்மை குன்றல், உடல் வெளுத்தல், கைகால் வீக்கம் முதலிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும். நடுக்கால் கேடு அடைவதால் மற்ற கால்களுக்கு உதவி புரிய இயலாது.

இங்ஙனம் தோன்றிய குறிகுணங்கள் நீங்காது நிலைத்திருப்பின் ஏற்கனவே கேடு அடைந்த தாதுவிற்குத் துணையாக மற்ற ஒன்று அல்லது இரண்டேனும் சேர்ந்து நோயினை வாட்டித் துன்பங்களை மிகுதிப்படுத்தி உயிரையும் போக்குவதுண்டு.

ஆகையால் மருத்துவர் முதலில் கவனிக்க வேண்டியது யாதெனில் கேடு அடைந்த அழல்தாது அல்லது தொந்த மிகுதி, கேடு அடைந்த வாயுக்கள் ஆகியவைகளைத் தன்னிலைப் படுத்தவேண்டும். கழிச்சலை நிறுத்தவும், பசித்தீயைத் தூண்டி உணவாதிகளைச் செரிப்பிக்கச் செய்யவும், குருதியின் வன்மையையும் நிறத்தையும் பெருக்கக்கூடிய மருந்துகளையும் உணவுகளையும் கொடுத்தல் வேண்டும். பின் படிப்படியாக நோயின் குறிகுணங்களை அறிந்து அவற்றிற்குத் தக்க மருந்துகளையும் உணவுகளையும் வழங்க வேண்டும்.

## குடிநீர் வகைகள்

- வேம்பு, கருவேம்பு இவற்றின் ஈர்க்குகள், சுக்கு, சீரகம், ஓமம் இவை வகைக்குச் சம எடை எடுத்து முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க நிணக்கழிச்சல், சீதக்கழிச்சல், கீழ்வாய் எரிச்சல் போம்.
- பீநாறிப்பட்டை, சாதிக்காய், சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து முறைப்படி குடிநீரிட்டு 1/2 ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்க நிணக் கழிச்சல் குணமாகும்.
- செம்பருத்திப்பிஞ்சு, பொடுதலைப்பிஞ்சு, ஓமம், புளியங்கொட்டைத் தோல், இலவங்கப் பட்டை இவை வகைக்கு ஒரு பலம், நீர் இரண்டு படி விட்டுக் காய்ச்சி உழக்காக வடித்து, 1/2 ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கும் போது, சிறிது மாசிக்காய்த்தூள் சேர்த்துக் கலக்கிக் கொடுக்கவும். நிணக்கழிச்சல் போம்.

- வில்வப்பழத்தோடு, விளா ஓடு, ஒதியம்பட்டை, அத்திப் பட்டை, நாவற்கொட்டை, கொம்பரக்கு, சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம், சிறுநாகப்பூ, இம்பூறல் வேர்ப்பட்டை இவை வகைக்கு ஒரு பலம், நீர் இரண்டு படி கூட்டிக் காய்ச்சி உழக்காக வற்ற வைத்து வடிகட்டி, 1/2 ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கும் போது, காவிக்கல் பொடி 2 சிட்டிகை கூட்டிக் கொடுக்க, குருதிக் கழிச்சல் தீரும்.

- நுணாயிலை, பொடுதலையிலை இவை வகைக்கு ஒரு பிடி கொண்டு குறுகத் தரித்துச் சட்டியில் இட்டுத் தேன் விட்டு வதக்கி இரண்டு படி நீர் விட்டு, அதில் ஆலம்பட்டை, வெள்ளுள்ளி, நற்சீரகம், மிளகு, இலவங்கப்பட்டை, குரோசாணி ஓமம் இவை வகைக்கு 1/2 பலம் பொடித்துப் போட்டு, கால்படியாக வற்றக் காய்ச்சி வடித்து, அரை ஆழாக்கு வீதம் எடுத்து, பொரித்துப் பொடித்த பெருங்காயம் ஒரு சிட்டிகை கலந்து காலை, மாலை கொடுக்க, சூட்டால் உண்டான வாயுக் கழிச்சல் போம்.

- நெல்லிமுள்ளி, அதிவிடயம், கூவிளம்பிஞ்சு, கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, மாதுளம்பிஞ்சு, முருங்கை ஈர்க்கு, வேப்பீர்க்கு, நாவற்கொழுந்து இவை வகைக்குப் பலம் இரண்டு சேகரித்து இடித்துச் சட்டியில் இட்டு, நீர் இரண்டு படி கூட்டிக் காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து வடிக்கவும். 1/2 ஆழாக்குக் குடிநீரில் கடுக்காய்ப்பூ, கடுக்காய்ப்பிஞ்சு ஆகியவற்றைப் பொடித்து அதில் இரு சிட்டிகை கலந்து காலை, மாலை கொடுக்க நிணக்கழிச்சல் போம்.

- சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம், சிறுநாகப்பூ, இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஓமம் இவை வகைக்கு ஒரு பலம்; சுண்டை வற்றல், பெருங்காயம் வகைக்கு 1/2 பலம்; பிரண்டை நன்றாய் உலர்ந்தது பலம் 2 கூட்டி; நீர் இரண்டு படி விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வடிக்கவும். 1/2 ஆழாக்குக் குடிநீரில் இந்துப்பு ஒரு சிட்டிகை சேர்த்துக் காலை, மாலை கொடுக்கக் குன்மக்கழிச்சல் தீரும்.

- பச்சைப்பிரண்டை, கொத்துமல்லிக் கீரை, கறிவேப்பிலை, வெந்தயக் கீரை இவை ஓரளவாய்க் கொண்டு இடித்துப் பிழிந்த சாற்றில் 1/2 ஆழாக்கு எருமை மோர் கூட்டிக் கலக்கவும். இதில் 1/2 ஆழாக்கு எடுத்து, பொடித்த பெருங்காயம் ஒரு சிட்டிகை சேர்த்துக் காலை, மாலை கொடுக்க நிணக்கழிச்சல் குணமாகும்.

❖ சித்திரமூலவேர்ப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம், சோம்பு, பெருமரப்பட்டை, பெருங்காயம், வெள்ளைப் பூண்டு இவை வகைக்குப் பலம் ஒன்று எடுத்து, நீர் இரண்டு படி விட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து வடிக்கவும். 1/2 ஆழாக்குக் குடிநீரில் இரண்டு சிட்டிகை கம்பியுப்பு பொடித்துக் கலந்து தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்கக் கர்ப்பக்கிராணி தீரும்.

## மெழுகு வகைகள்

### ஊழி மெழுகு

இதில் உளுந்து அளவு காலை, மாலை பனைவெல்லத்தில் அல்லது தேனில் கொடுக்க ஊழி நோய், கிராணி, வாதநோய், சன்னிபாதம் ஆகியவை போம்.

#### செய்முறை

சுத்தி செய்த இலிங்கம், இரசம், வீரம், சூடன், சாம்பிராணி இவை வகைக்கு சம எடை எடுத்து, முறைப்படி பொடித்து ஒன்றாய்க் கலந்து, தேன் விட்டரைத்து, மெழுகு பதத்தில் வழித்து வைத்துக்கொண்டு மேற்கூறியபடி உபயோகிக்க வேண்டும்.

### சாதிக்காய் மெழுகு

ஒரு குன்றி எடை காலை, மாலை தேனில் கொள்ள, கழிச்சல்களைப் போக்கும்.

### இலிங்க மெழுகு

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தேனில் கொடுக்க எல்லாவகையான கழிச்சல்களும் குணமாகும். நோய்க்கேற்ற அனுபானங்களை உபயோகிக்கவும்.

#### செய்முறை

சுத்தி செய்த இலிங்கம், கஞ்சா, அபின் இவை வகைக்குப் பலம் 1./2 எடுத்து மை போல் அரைக்கவும். இத்துடன் சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம், சிறுநாகப்பூ, வில்வப்பழச்சதை, இலவம் பிசின், ஊமத்தை விரை இவை வகைக்குப் பலம் 1/4 பொடித்து, வாழைப்பூச்சாறு கூட்டி மெழுகு போல் நன்றாய் அரைக்கவும்.

இதனைப் புளிப்பு மாதுளைப்பிஞ்சைத் துளைத்து அதற்குள் பொதிந்து வாய்மூடி, எருமைச் சாணத்தால் சீலை செய்து புடமிட்டு எடுத்துச் சீலை நீக்கி, காயோடு அம்மியில் இட்டு மெழுகு போல் அரைக்கவும். மீண்டும் கல்வத்தில் இட்டு எருமைத் தயிரின் தெளிவு விட்டு மூன்று நாட்கள் அரைத்து, மெழுகு பதமாக வழித்து எடுத்துப் புட்டியில் வைக்கவும். மேற்கூறிய பிரகாரம் கொடுக்கக் கழிச்சல் யாவும் குணமாகும்.

## பற்ப, செந்தூரங்கள்

### நாகப்பற்பம்

1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தேன், நெய், வெண்ணெய் இதில் ஏதேனும் ஒன்றில் அல்லது வேறு தக்க அனுபானத்துடன் கொடுக்க, எல்லா வகைக் கழிச்சல்களையும் போக்கும். அன்றியும் மூலம், பகந்திரம், வெள்ளை, வெட்டை தாதுநட்டம் முதலான நோய்களையும் போக்கும்.

### முத்துப்பற்பம்

இதில் 1/2 முதல் ஒரு அரிசி எடை தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுக்க அத்திசுரம், சோபை, அருசி, தேகம் குன்றல், கண்ணோய், பித்தாதிக்கம், சில்விஷம், சயநோய், கோழைகட்டல், இந்திரியநட்டம், மாலைக்கண், உட்டிணாதிக்கம், வலிப்பு நோய், மூலம், பித்தம், வாதம், அடிக்கடி மலம் போதல், உட்காய்ச்சல், வாந்தி, காசம், இரைப்பு, இரத்தப் பித்தம், தமரக நோய் முதலிய நோய்கள் குணமாகும். பொதுவாக முத்துப்பற்பத்தைப் பசுவெண்ணெய், நெய் இவற்றில் கொடுப்பது நல்லது. மலத்தைக் கட்டக்கூடிய வேறு பற்ப, செந்தூரப் பொடிகளை இத்துடன் சேர்த்துக் கொடுக்க, கழிச்சல் நோய்களை எளிதில் குணப்படுத்தி, உடலையும் தேற்றும்.

### பவளப்பற்பம்

இதனை 1/2 முதல் ஒரு அரிசி எடை காலை, மாலை தக்க அனுபானங்களில் கொடுக்க ஈளை, கயம் (சயரோகம்), விக்கல், சுரம், சுவாசம் முதலிய நோய்கள் குணமாகும். எலுமிச்சம் பழத்தைத் தணலில் வெதுப்பி அறுத்துச் சாறு பிழிந்து அதில் கலக்கி, தினம் இரண்டு அல்லது மூன்று வேளை கொடுத்துவர நிணக்கழிச்சல், கடுப்புக் கழிச்சல் குணமாகும்.

## அன்னபேதிச் செந்தூரம்

இதில் ஒரு குன்றிமணி அளவு காலை, மாலை தக்க அனுபானங்களில் கொடுக்கச் சுரம், சீதபேதி, பாண்டு முதலியன தீரும். பெரும்பாலும் கழிச்சல் நோய்களுக்கு எல்லாம் மற்ற மருந்துகளுடன் சேர்த்துத் தேனில் காலை, மாலை கொடுக்கக் குணமாகும்.

## நத்தை பற்பம்

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்கக் கழிச்சல்கள் குணமாகும். அன்றியும் மூலம், குதம் வெளித்தள்ளுதல், ஆசனக்கடுப்பு முதலியன குணமாகும்.

சித்த மருத்துவ நூல்களில் நிணக்கழிச்சலுக்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மருந்துகள் நீங்கலாக வேறு பல சிறந்த பரிகாரங்களும் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:

## சௌபாக்கிய சுண்டி

இதில் மூவிரல் கொண்ட அளவு காலை, மாலை நீராகாரம், மோர், வெந்நீர் இவற்றில் ஒன்றில் கொடுக்க நிணக்கழிச்சல், அசீரண பேதி, வயிற்றுவலி, பொருமல், பித்த வாயு, வாந்தி, விக்கல் ஆகியவை குணமாகும்.

### செய்முறை

தோல் சீவிய சுக்கு பலம் 8-ஐச் சிறு துண்டுகளாக நறுக்கி, செம்முள்ளிச்சாறு, செந்திராச்சாறு, முருக்கனிலைச்சாறு, கரிசாலைச்சாறு, சிறுசெருப்படைச் சாறு ஆகியவற்றில் வகைக்குக் கால் படி சாற்றில் முறையே ஊறவைத்து, வெய்யிலில் நன்றாய் உலர்த்திப் பொடித்து அத்துடன் தக்கோலம், வாலுளுவை, கூகைநீறு, கரியபோளம், விடங்கம், தான்றி, நெல்லி, திப்பிலி, திப்பிலி மூலம் இவை வகைக்கு ஒரு பலம் வீதம் சூரணம் சேர்த்து நன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு, முன் கூறிய அளவுப்படி கொடுக்க அந்நோய்கள் குணமாகும்.

## பிரண்டையுப்பு

இதில் 2 முதல் 4 குன்றி எடை காலை, மாலை கொதிநீர், புளித்த மோர் இவற்றில் ஒன்றில் கொடுக்க நிணக்கழிச்சல் குணமாகும்.

## உப்புப்பொடி

இதில் 2 குன்றி முதல் 3 குன்றி எடை காலை, மாலை பிரமிச்சாற்றில் கொடுக்க வாத, பித்த, கபக் கிராணிகள், மூலக்கிராணி, வாயுக்கிராணி, இரத்தக்கிராணி, சங்கரக் கிராணி, சீதக் கிராணி முதலான கிராணி வகைகள் குணமாகும்.

### செய்முறை

கறியுப்பு அல்லது செந்தூரம் எடுத்துக் கொள்க. வறுத்துப் பொடித்த பெருங்காயம், இந்துப்பு, வளையலுப்பு, வெள்ளைப்பூண்டு (தோலுரித்தது), சுக்குப்பொடி, திப்பிலி, மிளகு இவற்றை வறுத்துப் பொடித்துக்கொள்ளவும். அன்னக்காடி நீரில் பத்து முறை சுத்தி செய்த பூநீறு, சித்திர மூலப்பொடி, வறுத்துப் பொடித்த ஓமம் இச் சரக்குகளையும் சம எடை நிறுத்து ஒன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு முன் கூறிய அளவுப்படி பிரமிச்சாற்றில் காலை, மாலை கொடுக்க, கிராணிக் கழிச்சல்கள் யாவும் குணமாகும்.

## மதகசகண்டீரவ மாத்திரை

இதில் ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்கக் கிராணி, வயிற்றுவலி, அதிசாரம், வயிற்றுக் கடுப்பு ஆகியவை குணமாகும்.

### செய்முறை

சுத்தி செய்த கருநாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, சுத்தி செய்த இலிங்கம் (அல்லது மிகச் சிறந்ததாக இலிங்கக்கட்டுச் செந்தூரம் சேர்க்கலாம்), அதிவிடயம். இச்சரக்குகளைச் சம எடை எடுத்து முறைப்படி வறுக்க வேண்டியவைகளை வறுத்துப் பொடித்தும் மற்றவைகளைப் பொடித்தும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு கல்வத்தில் இட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து ஒரு குன்றி அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் முன் சொன்னபடி இஞ்சிச்சாறு அல்லது தேனில் கொடுத்துவரக் கிராணிக் கழிச்சல்கள் எல்லாம் தீரும்.

### வேறு

அத்திப்பிஞ்சு, கோவைப்பிஞ்சு, மாம்பட்டை, சிறுசெருப்படை இவை வகைக்கு ஒரு பிடி இடித்துப் பாண்டத்தில் இட்டு, 4 பங்கு வாழைக் கிழங்குச்

சாறுவிட்டுக் காய்ச்சி, நான்கில் ஒன்றாய் வற்ற வைத்து வடிகட்டி, காலை, மாலை கொடுக்க வயிற்றுக் கடுப்பு, கிராணி பேதி ஆகியவை போம்.

## கஞ்சாவாதி மாத்திரை

இதில் ஒரு மாத்திரை காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்கக் கிராணிகள் யாவும் தீரும்.

### செய்முறை

சுத்தி செய்த கஞ்சாப் பொடி, நாபிப் பொடி, காந்தச் செந்தூரம், அபின் ஆகியவற்றைச் சம எடை கொண்டு கல்வத்தில் இட்டு கரு ஊமத்தையிலைச் சாறு விட்டு அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை உருட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக் . கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டுவர பேதிகள் யாவும் குணமாகும்.

வேறு: விளாம்பிசின், அபின் இவை இரண்டையும் சம எடை கல்வத்தில் பொடித்துக் கஞ்சாயிலைச்சாறு அல்லது குடிநீர் விட்டு நன்றாய் அரைத்துப் பயறு அளவு மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை சாப்பிட, கிராணிகள் யாவும் போம்.

## சூதாதி மாத்திரை

இதில் ஒரு மாத்திரை காலை, மாலை தக்க அனுபானங்களோடு கொடுக்கச் சகல கிராணிகளும் தீரும்.

### செய்முறை

சுத்தி செய்த இரசம் (அல்லது இரசப்பற்பம்), சாதிக்காய், சாதிப்பத்திரி, சுத்தி செய்த இலிங்கம் (அல்லது இலிங்கக் கட்டுச் செந்தூரம்), சுத்தி செய்த காந்தம் (அல்லது காந்தச் செந்தூரம் எண்: 1) காரீயப் பற்பம், வறுத்து இடித்த சீரகப் பொடி, ஓமப்பொடி இவை சம எடை எடுத்துக் கல்வத்தில் ஒன்றாய்க் கலந்து கஞ்சாயிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து, மிளகு பிரமாணம் மாத்திரை உருட்டி, உலர்த்தி வைத்துக்கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை வீதம், அனுபானங்களில் கொடுக்கச் சகல கிராணிகளும் தீரும்.

## கிராணி கபாட மாத்திரை

இதில் ஒரு உருண்டை காலை, மாலை தக்கத் துணை மருந்துகளுடன் கொடுக்கப் பெருங்கழிச்சல், நிணக்கழிச்சல் யாவும் தீரும்.

செய்முறை

சாதிக்காய், இலவங்கம்,அதிவிடயம், அபின், சாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, தாளிசம் இவை வகைக்குச் சம எடை எடுத்துப் பொடித்து மாதுளங்காய்க்குள் பொதிந்து சாணத்தினால் கவசம் செய்து உலர்த்தி, இலகு புடமிட்டுக் கவசம் பிரித்து மாதுளங்காயுடன் கல்வத்தில் இட்டு கஞ்சா சாறு அல்லது குடிநீர் விட்டு அரைத்து, தூதுளங்காய் அளவு மாத்திரை செய்து உலர்த்தவும். இதில் ஒரு மாத்திரை முன் கூறியபடி கொடுக்கக் குணமாகும்.

## அயகெந்திச் செந்தூரம்

இதில் 1 முதல் 2 குன்றி எடை அளவு தக்க அனுபானங்களில் கொடுக்கக் கிராணி, பசியின்மை, புளித்த ஏப்பம், உள்மூலம், பாண்டு, சொறி, சிரங்கு, தடிப்பு காணாக்கடி முதலியன தீரும்.

செய்முறை

அரப்பொடி எடுத்துப் படிகாரத் தண்ணீரில் ஒரு நாள் ஊறவைத்துக் கழுவி, பிறகு எழுமிச்சம் பழச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்துக் கழுவி, உலர்த்தி எடுத்த அரப்பொடியில் 4 பலம், சுத்தி செய்த கந்தகம் பலம் ஒன்று, நவச்சாரம் பலம் 1/4. இவற்றைக் கல்வத்தில் இட்டு முறைப்படி ஒன்றாய்க் கலந்து கற்சுண்ணத் தெளிவுநீர் விட்டு ஐந்து நாட்கள் அரைக்கவும். ஒவ்வொரு நாளும் அரைத்து முடித்து எழுந்திருக்கும் போது மருந்து மிதக்கக் (ததும்ப) கற்சுண்ண நீர் விட்டு, கல்வத்தை மூடிவைத்துவிட்டுப் போகவும். மறுநாள் வந்து பார்க்கும்போது கல்வத்தில் விட்டு வைத்த கற்சுண்ண நீர் சுண்டி இருக்கும் (வற்றி இருக்கும்). மறுபடியும் அதே கற்சுண்ண நீரினால் அரைக்கவும். இங்ஙனம் ஐந்து நாட்கள் அரைத்து முடித்த உடன் மருந்திலுள்ள நீர் யாவும் சுண்டிய பிறகு ஒரு இரும்புக் கடாயில் வழித்துப் போட்டு வெய்யிலில் வைத்து ஒரு நீளக் கரண்டியால் மருந்தைக் கிளறவும். மருந்து நன்றாய் உலர்ந்தவுடன் தானே புகை கிளம்பும். அச்சமயம் சட்டியை அடுப்பேற்றி மூன்று விறகால் எரியிட்டு வறுத்துக் கொண்டிருக்கப் புகைந்து, அப்பால் புகை அடங்கும். மீண்டும் நன்றாய்ச் செந்தூரம்

சிவக்கும் வரைக்கும் வறுத்துக் கொண்டிருப்பது நல்லது. முடிவான செந்தூரம் அரப்பொடியின் எடை அளவு இருத்தல் நலம்.

## வான்மெழுகு

இதில் உளுந்து அளவு மெழுகைப் பனைவெல்லத்தில் பொதித்துக் காலை, மாலை கொடுத்து வர வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, வயிற்றுக் கடுப்பு இன்னும் அநேக நாட்பட்ட நோய்கள் போம்.

## வாழைப்பழச்சாறு

1/2 முதல் ஒரு ஆழாக்குக் காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கக் கிராணி தீரும்.

## ஈஸ்பா சிந்தாமணிச் செந்தூரம்

இதில் 1 முதல் 2 அரிசி எடையுடன் சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, குரோசாணி ஓமம், அதிவிடயம் ஆகியவற்றைச் சம அளவு வெதுப்பிச் சூரணித்து மூவிரல் கொண்ட அளவில் வைத்து, தேனும் கூட்டிப் பத்து நாட்கள் காலை, மாலை கொடுக்கக் குணமாகும்.

### செய்முறை

சுத்தி செய்த கெந்தி $2^1/_2$ பலம், இரசம் 2 பலம், இலிங்கம் ஒரு பலம், மனோசிலை $^1/_2$ பலம். இவற்றை முறைப்படி பொடித்து, அரைத்து ஒன்றாய்க் கலந்து பொற்றலைக் கையான் சாறு, மாதுளம் பூச்சாறு, முருக்கன் பூச்சாறு, பிச்சிப் பூச்சாறு இவற்றில் முறையே வகைக்கு இரண்டு சாமம் அரைத்து உலர்த்திப் பொடித்துக் குப்பியில் அடைக்கவும். குப்பியின் வாயைப் பொருத்தமான ஓட்டினால் மூடி அதற்குச் சீலை மண் செய்து உலர்த்தி முறைப்படி வாலுகையில் (மணல் மறைவில்) வைத்து, அடுப்பின் மேல் ஏற்றி முதல் நாள் தீபாக்கினி (சிறிய தீ), கமலாக்கினியாகவும் (மிதமான தீ); மறுநாள் கமலாக்கினி, காடாக்கினியாகவும் (பெரிய தீ); மூன்றாவது நாள் காடாக்கினியாகவும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரைக்கும் தினம் எரிக்கவும். இரவில் நெருப்பை எரிக்காமல் தணலில் வைத்திருக்க வேண்டும். ஆறிய பின் கவசம் பிரித்து அடிச்சட்டியில் இருக்கும் செந்தூரத்தை மட்டும் சேகரித்து வைத்துக் கொண்டு மேற்கூறிய அனுபானத்தில் பத்து நாட்கள் காலையில் கொடுக்கக் கிராணிகள் யாவும் குணமாகும்.

## நாகராதிச் சூரணம்

சரக்குகள்

சுக்கு
ஆடுதீண்டாப் பாளை
அதிவிடையம்
திப்பிலி மூலம்
இந்துப்பு
மாங்கொட்டைப்பருப்பு
குடசப்பாலைத்தோல்
இலவம் பிசின்
மாதுளம் பிஞ்சு
சாதிப்பத்திரி
விலாம்பழ ஈர்க்கு

செய்முறை

சரக்குகளைச் சம அளவு எடுத்துச் சுத்தித்து, காயவைத்து, இடித்து சலித்துக்கொள்ள வேண்டும்.

அனுபானம்: தேன், தயிர்.

தீரும் நோய்கள்: அதிசாரம், கிராணி, குன்மம்.

## கிராணி கபாட சூரணம்

சரக்குகள்

காட்டாத்திப்பூ
சுக்கு
அதிவிடையம்
கோரைக்கிழங்கு
வட்டத்திருப்பி வேர்

உலர்ந்த வில்வப்பழச்சதை
வெட்பாலைப் பட்டை
வெட்பாலையரிசி
உலர்ந்த மாதுளம்பழ ஓடு
இலவங்கப்பட்டை

செய்முறை

இவைகளைச் சம அளவு இடித்துச் சூரணித்து வைத்துக்கெள்ள வேண்டும்.

அனுபானம்: வேளைக்கு வெருகடி பிரமாணம் சர்க்கரை கலந்து நீரிலாவது அல்லது அரிசி கழுவிய நீரிலாவது தினம் 2 அல்லது 3 வேளை வீதம் கொடுத்துவரலாம்.

தீரும் நோய்கள்

கிரகணி, இரத்தமூலம், சீதபேதி, இரத்தபேதி முதலியன குணமாகும்.

## பூநாகச் சூரணம்

சரக்குகள்

| | | |
|---|---|---|
| பூநாகம் | : | 35 கிராம் |
| சுக்கு | : | 8.5 கிராம் |
| மிளகு | : | 8.5 கிராம் |
| திப்பிலி | : | 8.5 கிராம் |
| சீந்தில் கொடி | : | 17.5 கிராம் |
| தூதுவளைச் சமூலம் | : | 35 கிராம் |
| தான்றிக்காய் | : | 4 கிராம் |
| நெல்லிவற்றல் | : | 4 கிராம் |
| சிற்றரத்தை | : | 4 கிராம் |
| கற்கடக சிங்கி | : | 4 கிராம் |
| கடுக்காய்த் தோல் | : | 4 கிராம் |
| மூங்கிலுப்பு | : | 4 கிராம் |

செய்முறை

மேற்கூறிய 12 சரக்குகளையும் சூரணித்து, சம எடை சீனா கற்கண்டுடன் கண்டங்கத்திரியை அரைத்து அதன்பால் வைத்துப் பற்பம் செய்த பவழத்தில் 8.5 கிராம் கலந்து வைத்துக்கொள்க.

உபயோகம்

இச்சூரணத்தை வேளைக்கு 1/4 தோலா வீதம் இருநேரம் பசுவெண்ணெயில் அயச்செந்தூரத்துடனாவது, காந்தச் செந்தூரத்துடனாவது மத்தித்துச் சாப்பிட கிராணி, மூலம், குன்மம், இரத்தகாசம் தீரும்.

## காய்ச்சுக்கட்டி சூரணம்

சரக்குகள்

| | | |
|---|---|---|
| காய்ச்சுக்கட்டி | : | 105 கிராம் |
| இலவங்கப்பட்டை | : | 105 கிராம் |
| கிராம்பு | : | 70 கிராம் |
| சாதிக்காய் | : | 35 கிராம் |

செய்முறை

இங்குக் கூறப்பட்ட நான்கு சரக்குகளையும் தனிதனிச் சூரணங்களாகச் செய்து ஒருமிக்க யாவற்றையும் கலந்து வைத்துக் கொள்க.

உபயோகம்

வேளைக்கு 300 கிராமிலிருந்து 500 கிராம் அளவு வரை நெய், சர்க்கரை முதலியவற்றில் கலந்து தினம் 3 நேரம், 3 நாள் கொள்ள சீதபேதி, இரத்தபேதி குணமாகும்.

பத்தியம்: காரம் இல்லாமல் எளிதில் சீரணிக்கக்கூடிய கஞ்சி முதலியன.

## சீத, இரத்தபேதிக்குச் சூரணம்

சரக்குகள்

ஏலம்

இலவங்கப்பட்டை

கர்க்கடகசிங்கி

கிராம்பு

அதிவிடயம்

சிறுநாகப்பூ

கசகசா

வட்டத்திருப்பி

செய்முறை

வகைக்கு 10 கிராம் எடுத்து இலேசாக வறுத்துப் பொடிசெய்து வடிகட்டி, இத்துடன் கற்கண்டு தேவையான அளவும் சாதிக்காய் 2 எண்ணிக்கையும் கலந்து சூரணம் செய்து கொள்ளவும்.

உபயோகம்

கொட்டைப் பாக்களவு சூரணத்தைத் தேனுடன் கூட்டி இருவேளையும் கொடுக்கவும்.

## இலேகியங்கள்

இரசக்கட்டுவாதி இலேகியம்

சரக்குகள்

சாதிக்காய்

அதிவிடயம்

கற்கடகசிங்கி

கிராம்பு

சுக்கு

மாசிக்காய்

சன்ன இலவங்கப்பட்டை

மிளகு

காட்டாத்திப்பூ

குரோசாணி ஓமம்

கசகசா

செய்முறை

சரக்குகளைச் சம எடையாக எடுத்துக்கொண்டு நெய் தடவி பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து, 420 கிராம் பனைவெல்லத்துடன் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துப் பதப்படுத்திக்கொள்க.

உபயோகம்

காரசாரமான பதார்த்தங்களைத் தள்ளி, எளிதில் சீரணிக்கக்கூடிய ஆகாரங்களைக் கொடுத்து வருக. வியாதி கடினமான காலத்தில் பார்லி அரிசி, அரோரூட் மா இவைகளின் கஞ்சி, பால் முதலியவையே சிறந்ததாகும்.

## கிராணி கபாட இலேகியம்

சரக்குகள்

- சாதிக்காய்
- சாதிப்பத்திரி
- அதிமதுரம்
- சீரகம்
- ஓமம்
- குரோசாணி ஓமம்
- வாய்விடங்கம்
- மோடி
- சுக்கு
- பொரித்த காயம்
- மிளகு
- திப்பிலி
- கோஷ்டம்

ஆகியவை வகைக்கு 17. 5 கிராம்

| | |
|---|---|
| அபின் | 1 கிராம் |
| சுத்தமான எள்ளு | 70 கிராம் |
| பனைவெல்லம் | 105 கிராம் |

செய்முறை

முதலாவது பகுதியில் கூறப்பட்டுள்ள 13 சரக்குகளையும் நன்கு இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்க. அப்பால் எள்ளை நன்றாய்க் கழுவித் தேய்த்து மேல் தோல் போகப் புடைத்து எடுத்து ஒரு இரும்பு உரலிலாவது அல்லது கல்லுரலிலாவது போட்டுப் பனைவெல்லத்தைச் சேர்த்து இடிக்கவும். அப்போது அபினியைச் சிறிது சிறிதாகக் கிள்ளிப்போட்டு இடித்து எல்லாம் உறவான பதத்தில், முதலாவது பகுதியில் சித்தப்படுத்திய சூரணத்தை இட்டு இடிக்கவும். இவைகள் யாவும் ஒருமித்தபின் கல்வத்தில் இட்டு, தேன் சேர்த்து நன்றாய் உறவாகும் பரியந்தம் அரைத்து வழித்து எடுத்துக்கொள்ளவும்.

உபயோகம்

இந்த இலேகியத்தில் வேளைக்கு 4.2 கிராம் வீதம் காலை, மாலை கொடுத்து வரவும். இன்னும் அயகாந்தச் செந்தூரத்துடன் சேர்த்துக் கொடுக்க ஆறு வகையான கிராணிகள், வயிற்றில் உலவும் வாயு ஆகிய யாவும் தீரும்.

கைப்பு, புளிப்பு, பெண்போகம் முதலானவற்றைப் பத்தியமாகக் கொள்ள வேண்டும்.

## நாகராதி இலேகியம்

சரக்குகள்

மேல்தோல் சீவிய சுக்குத் தூள் - 35 கிராம்

கடுக்காய்ப் பிஞ்சுத் தூள் - 17.5 கிராம்

செய்முறை

இவ்விரண்டையும் எருமைத்தயிரில் ஊறவைத்து, வெண்ணெய் போல் அரைத்துக் கொஞ்சம் பசுவின் நெய்யில் இள வறுப்பாக வறுத்து எடுத்து, மறுபடியும் முன் போல் எருமைத்தயிரில் மூன்று மணி நேரம் ஊறவைத்துக் கொஞ்ச நேரம். அரைத்து, முன் போல் பசுவின் நெய்யில் வறுத்துக் கொள்ளவும். மூன்றாவது முறையாக மீண்டும் ஒரு முறை முன் போல் செய்து கொள்ளவும். இறுதியில் அம்மியில் வைத்து அரைத்து, 2 கிராம் எடை உள்ள உருண்டைகளாகச் செய்து, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்

நாள்தோறும் 1 அல்லது 2 உருண்டைகளை நெய் அல்லது தேனில் அனுபானம் செய்து உண்டுவர நிணக்கழிச்சல், மூலவாயு ஆகியன தீரும்.

## தான்றிக்காய் இலேகியம்

சரக்குகள்

| | | |
|---|---|---|
| தான்றிக்காய்த் தோல் | : | 3,500 கிராம் |
| சீனி சர்க்கரை | : | 350 கிராம் |
| நெய் | : | 280 கிராம் |

அதிவிடயத்தூள்

சாதிக்காய்த் தூள்

அபின்

தூய்மை செய்த கஞ்சாத்தூள் வகைக்கு 35 கிராம்

செய்முறை

தான்றிக்காய்த் தோலை இடித்துத் தூளாக்கி மண்பாத்திரத்தில் போட்டு, 8 லிட்டர் நீர் விட்டு 1 லிட்டர் குடிநீராகக் காய்ச்சி சுண்டவைத்து இறக்கி வடிகட்டவும். அதில் சர்க்கரையைச் சேர்த்துப் பாகு செய்யவும். அதிவிடயத்தூள் முதலிய நான்கு சரக்குகளையும் அம்மியில் வைத்துத் தண்ணீர் வார்த்து வெண்ணெய் போல் அரைத்து, அதில் கலக்கி நெய்விட்டு அடுப்பேற்றி, சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி, ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்

2 கிராம் முதல் 15 கிராம் வரை தினமும் கொள்ள, குருதிக்கழிச்சல், பெருங்கழிச்சல், கிரகணி, மூலநோய், அறுவகைக் கடுப்பு, பித்தநோய், வயிற்றுப் பொருமல், வயிற்றுக்கடுப்பு முதலியன குணமாகும். புகை, புளி, புணர்ச்சி கூடாது.

## அக்கினி குமார இரசம்

### சரக்குகள்

| | | |
|---|---|---|
| தூய்மை செய்த நெல்லிக்காய் கந்தகம் | : | 10கிராம் |
| தூய்மை செய்த ரசம் | : | 10 கிராம் |
| தூய்மை செய்த நாபி | : | 10 கிராம் |
| தூய்மை செய்த மிளகுத்தூள் | : | 21 கிராம் |

எலுமிச்சைச் சாறு அல்லது புளிப்பு மாதுளைச்சாறு தேவையான அளவு.

### செய்முறை

இரசத்தையும் கந்தகத்தையும் நன்றாய் அரைத்து, கறுத்தபின் மற்ற தூள்களைச் சேர்த்து மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்து (24 மணி நேரம்), குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

### உபயோகம்

1/2 மத்திரையை இஞ்சிச் சாறு அல்லது சுக்குக் குடிநீரில் அனுபானம் செய்து உண்டுவர, பலவகைக் கழிச்சல், செரியாமை, ஆகியவற்றைக் குணப்படுத்தி, பசித் தீயை அதிகப்படுத்தும்.

## கிராணி கபாட இரசம்

சாதிக்காய், சுத்தித்த ரசம், சுத்தித்த நாபி, கந்தி ஆகியவற்றைச் சம எடை எடுத்துக் கல்வத்தில் இட்டு மாம்பிஞ்சு ரசத்தினால் அரைத்துக் குன்றி எடை சாப்பிட்டால் சகல கிராணிளும், சகல மூலங்களும் நீங்கும்.

### வேறு

சுத்தி செய்த பாதரசம், கந்தகம், அதிவிடையம், கடுக்காய், அப்பிரகம் பற்பம் ஆகியன வகைக்கு 10 பங்கு. சுத்தித்த கஞ்சா 3 பங்கு. இவைகள் யாவற்றையும் கல்வத்தில் இட்டு எலுமிச்சம்பழச் சாற்றினால் இரண்டு சாமம் நன்கு அரைத்துக் குன்றி அளவு மாத்திரைகள் செய்து கொடுத்தால் கிராணி நிவர்த்தியாகும்.

## விடபேதி சங்காரணி

சரக்குகள்

| | | |
|---|---|---|
| இலிங்கம் | : | 10 கிராம் |
| அபின் | : | 10 கிராம் |
| பச்சை கோரைக்கிழங்கு | : | 100 கிராம் |
| சாதிக்காய் | : | 100 கிராம் |
| வெட்பாலையரிசி | : | 100 கிராம் |
| சூரத்துக் கற்பூரம் | : | 100 கிராம் |

செய்முறை

இங்குக் கூறிய ஆறு சரக்குகளையும் தனித்தனியே சூரணித்துக் கல்வத்தில் இட்டு, கஞ்சா குடிநீரால் 12 மணி நேரம் அரைத்து மெழுகு பதம் வந்ததும், 60 மிகி. அளவில் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக.

உபயோகம்

இம்மாத்திரையினை இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறையாகத் தேனில் குழைத்துக் கொடுத்துவர, வாந்திபேதி, அசீரணபேதி முதலியவைகள் தவறுதலின்றி குணப்படும். பேதி நின்றபின் மாத்திரை கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

பேதி முற்றிலும் நீங்கும் வரை கஞ்சியைத் தவிர, புணர்பாகம் வேறொன்றும் உட்கொள்ளல் கூடாது. புணர்ச்சியைத் தவிர்க்கவும்.

## கட்டுவாதி மாத்திரை

சரக்குகள்

| | | |
|---|---|---|
| இலவம் பிசின் | : | $1\,^1/_2$ கழஞ்சு |
| அதிவிடயம் | : | $1\,^1/_2$ கழஞ்சு |
| சாதிக்காய் | : | $1\,^1/_2$ கழஞ்சு |
| சாதிப்பத்திரி | : | $1\,^1/_2$ கழஞ்சு |
| வில்வப்பழம் | : | 3 கழஞ்சு |

| | | |
|---|---|---|
| காய்ச்சுக்கட்டி | : | $1\frac{1}{2}$ கழஞ்சு |
| கிராம்பு | : | $1\frac{1}{2}$ கழஞ்சு |
| இலவங்கம் | : | 2 பண எடை |

### செய்முறை

இவைகளைக் கல்வத்தில் இட்டு, ஊமத்தன் இலைச் சாற்றில் 3 மணி நேரம் அரைத்து, மருந்தை நிறை தூக்கி, 3 பங்கு நீர்முள்ளி விதையைக் கூட்டி மேற்கூறிய சாற்றில் மீண்டும் ஒரு மூன்று மணி நேரம் அரைத்து, 60 மிலி. அளவு மாத்திரை செய்க.

### உபயோகம்

தினம் காலை, மாலை ஒவ்வொரு மாத்திரை நெய்யில் கொள்ள, எவ்வித பேதியும் கட்டுப்படும். பரீட்சிக்க வேண்டுமாயின், ஒரு குடுவையில் இரண்டொரு துவாரங்கள் இட்டு நீர் விட்டு, ஒரு மாத்திரையைத் தூள் செய்து கரைத்துவிட நீர் கொட்டாது. அங்ஙனமே பேதியையும் நிறுத்துவது திண்ணம். பார்லி கஞ்சியைப் பத்தியமாகக் கொள்வது நன்று.

## மணிமந்திரச் சூரணம்

### சரக்குகள்

சீரகம்
ஆனைத்திப்பிலி
கருஞ்சீரகம்
சுக்கு
சிறுதேக்கு
குரோசாணி ஓமம்
மிளகு
வால் மிளகு
பொன்முசுட்டைவேர்
திப்பிலி
திப்பிலி மூலம்
இந்துப்பு

அபின்

வகைக்கு 35 கிராம்

செய்முறை

இளவறுப்பாக வறுத்து, இடித்து, சலித்துக் கொள்ளவும். அபினைச் சேர்த்துக் கொள்ளவும்

உபயோகம்

தினமும் தேனில் குழைத்து உண்டு வர, எல்லாவிதக் கழிச்சல்கள், அசீரணம், பேதி, கிராணி ஆகியவை தீரும்.

## கிராணி தீரச் சூரணம்

சரக்குகள்

| | | |
|---|---|---|
| ஓமம் | : | 15 கிராம் |
| குரோசாணி ஓமம் | : | 15 கிராம் |
| சாதிக்காய் | : | 5 கிராம் |
| ஏலம் | : | 5 கிராம் |

செய்முறை

பொடி செய்து சிதைத்து வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்

தினமும் 5 கிராமை எருமைத் தயிரில் அனுபானித்து 5 நாட்கள் உண்ண, கிராணி தீரும்.

## பிற மருந்துகள்

தயிர்ச்சுண்டிச் சூரணம், தாளிசாதி வடகம், மாதுளைத்தோடு சூரணம், மிளகாய் மெழுகு, வெள்ளைப்பூண்டு கற்கம், பூபதிச் செந்தூரம், படிகலிங்கச் செந்தூரம், கட்டுவாதி மாத்திரை, வசம்புச் சூரணம், கட்டுவாதிச் சூரணம், கிராணி கபாடச் சூரணம், கிராணி கபாட மெழுகு, கட்டுவாதி இலேகியம், பூரணாதி இலேகியம், மூதண்ட இலேகியம், தான்றிக்காய் இலேகியம், நாகப்பற்பக் கலவை, அன்னப்பொடி என்னும் கறிவேப்பிலைச் சூரணம், சுண்டை வற்றல் சூரணம், கறிவேப்பிலை வடகம், கபாட மாத்திரை, நத்தை பற்பம், ஓம இலேகியம் ஆகியவை

யாவும் நிணக்கழிச்சல் நோயிலும் நல்ல குணம் தரும். ஆதலால் அம்மருந்துகளையும் தாராளமாய் இந்நோயில் உபயோகிக்கலாம். ஆயில் புங்கு, பொடுதலைக்காய், அழிஞ்சில் வேர்ப்பட்டை, குழம்புவேர், வசம்பு, நவச்சாரம், சத்திச்சாரம், சித்திரமூலம், திரிகடுகு, சிறுமூலம், செவ்வியம், பற்பாடகம், கருவேம்பு இலை, சீரகம், பெருங்காயம், மூக்கிரட்டை, முட்காவேளை, காவட்டம் புல், நல்வேளை, புளியாரை, இந்துப்பு, கல்லுப்பு, காய்ச்சுப்பு, பொட்டிலுப்பு, கறுத்தவுப்பு, சாரணை, ஆவாரை, தக்கோலம், வெண்காரம், ஆரையிலை முதலியனவும் கிராணிக் கழிச்சலைத் தீர்க்க கூடியவையாகும்.

## குழந்தைகளுக்கு வரும் கிராணி

கழிச்சல், பெருங்கழிச்சல், கிராணி ஆகியவை குழந்தைகளுக்கு (மூன்று வயதுக்கு உட்பட்டவர்கள்) உண்டாகும்போது மாந்தக்கழிச்சல், கணை, பச்சை நிறமாய்க் கழிதல், பிரளி என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

## பரிகாரங்கள்

குழந்தைகளுக்கு நுரைத்தும் பால் திரண்டது போலும் பச்சையுமாய் அடிக்கடி கழியுமானால் பின் வரும் மருந்துகளைக் கையாளலாம்:

## அமுர்தாதிக் குடிநீர்

ஒரு மாத்திரையை முலைப்பால் அல்லது வேறு குடிநீரில் உரைத்துக் காலை, மாலை கொடுக்கக் குணமாகும்.

அன்றியும் இந்த மாத்திரையின் குணம் யாதெனில்: மாசிப்பத்திரிக் குடிநீரில் உரத்துக் கொடுக்க மாந்தமும், இலவங்கக் குடிநீரில் கொடுக்க மாந்த சுரமும் வாந்தியும், முலைப்பாலில் கொடுக்கக் குடற்படுவன், நீர்ப்படு மாந்தம், கரப்பான், நாவறட்சி, வயிற்றெரிவு, விடாச்சுரம், உப்பிசம், இருமல் முதலியனவும் தீரும்.

## ஆமையோடு பற்பம்

இதில் 1 முதல் 2 குன்றி எடை தேன் அல்லது முலைப்பால் அல்லது வேறு குடிநீரில் கொடுக்க, மேற்கண்ட கழிச்சல் குணமாகும். அன்றியும் மாந்த சுரம், கணைச்சூடு போம். பெரியவர்களுக்கு இப்பற்பத்தைக் கொடுக்க அசீரணபேதி, மூலம், மேக காங்கை ஆகியவை குணமாகும்.

## பிரண்டையுப்பு

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை கொதிநீர் அல்லது புளிப்பு மோரில் கொடுக்க மாந்தபேதி, அசீரணம் தீரும்.

## வசம்புச் சூரணக் கலவை

இதில் ஒரு சிட்டிகை முதல் இரண்டு சிட்டிகை வரை தேன் அல்லது முலைப்பாலில் காலை, மாலை கொடுக்கக் கழிச்சல் போம்.

## கோரோசனை மாத்திரை

இதில் ஒரு மாத்திரையைத் தேன் அல்லது முலைப்பாலில் காலை, மாலை கொடுக்கக் கழிச்சல், சுரம், தலைபாரம், இருமல், மாந்தம், சளிக்கட்டு முதலியன குணமாகும்.

## கட்டுவாதி மாத்திரை

இதில் 1 முதல் 2 மாத்திரைகளைக் காலை, மாலை தேன், முலைப்பால் ஆகிய ஏதேனும் ஒன்றில் கொடுக்கக் கழிச்சல் குணமாகும். ஓமக் குடிநீரிலும் அனுபானிக்கலாம்.

## மாந்த பேதிக் குடிநீர்

"போக்கை அடைக்கும் பொடுதலை" என்பது பழமொழி. குழந்தைகளது கழிச்சலுக்குச் சிறந்த பச்சிலை மருந்து இது. பொடுதலை ஒரு பிடி கொண்டுவந்து, ஒரு சட்டியை அடுப்பில் வைத்துச் சூடேற்றியவுடன் சிறிது ஓமத்தைப் போட்டுப் பொரியவிட்டு, பொடுதலையையும் வதக்கும்போது சிறிது முலைப்பால் அல்லது நீர்தெளித்து வதக்கி எடுத்து ஒரு துணியில் கொட்டிச் சாறு பிழிந்து, ஒரு சங்கு அளவு காலை, மதியம், மாலை மூன்று வேளை புகட்ட, கழிச்சல் நின்றுபோம். இத்துடன் தேவையானால் அமிர்தாதி மாத்திரை, கட்டுவாதி மாத்திரை இவற்றில் ஏதேனும் ஒன்றை உரைத்தும் கொடுக்கலாம்.

## பொடுதலைக் கூட்டுச் சுரசம்

பொடுதலையிலை, பேய்மிரட்டியிலை, வாய்க்கால் சடைச்சியிலை, முருங்கையிலை, பிரண்டையிலை, திருநீற்றுப் பச்சையிலை, துளசியிலை இவற்றில் ஏதேனும் சிலவற்றைப் பொடுதலையுடன் சேர்த்து வகைக்கு ஒரு கைப்பிடி வீதம் எடுத்துக் குறுக அரிந்து வைத்துக்கொண்டு முன்போல் ஓமத்தைப்

பொரியவிட்டுப் பச்சிலையைப் போட்டுச் சிறிது முலைப்பால் அல்லது நீர் தெளித்து வதக்கிச் சாறு பிழிந்து, ஒரு சங்கு அளவு சாறுடன் வசம்பு, பெருங்காயம் இவை இரண்டையும் சுட்டு உரைத்துக் காலை, மாலை புகட்டக் கழிச்சல் குணமாகும்.

## பல ஈர்க்குக் குடிநீர்

வேப்பீர்க்கு, கறிவேப்பிலை ஈர்க்கு, நுணா ஈர்க்கு, நெல்லி ஈர்க்கு, கறுவேலம் ஈர்க்கு இவை வகைக்கு ஒரு துட்டு எடை சேகரித்து, ஓமம் சிறிது ஒரு சட்டியில் பொரியவிட்டு, மேற்கண்ட ஈர்க்குகளைப் போட்டு வதக்கி நீர் 1/4 படி விட்டுக் காய்ச்சி, நான்கில் ஒன்றாய் வற்றவைத்து வடிகட்டி ஒரு சங்கு அளவு குடிநீருடன் வசம்பு, பெருங்காயம் சுட்டு உரைத்துக் காலை, மாலை கொடுக்கப் பேதி நிற்கும். சொருகல், மாந்தம் இவை குணமாகும்.

## கட்டுவாதிச் சூரணம்

இதல் 1 முதல் 2 சிட்டிகை அளவு தேனில் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை கொடுக்கக் குணமாகும். அல்லது வாந்தி நிவாரணப் பொடியில் ஒரு சிட்டிகையும் முன் சொன்ன கட்டுவாதிச் சூரணத்தில் ஒரு சிட்டிகையும் சேர்த்துத் தேனில் காலை, மாலை கொடுக்கக் குணமாகும். அல்லது ஓமம், பூண்டு இவற்றை முன்போல் சட்டியில் இட்டு வதக்கி, நீர் சேர்த்துக் குடிநீராக்கி, ஒரு சங்கு குடிநீரில் வசம்பு சுட்ட கரி உரைத்து, தினம் 2,3 வேளை கொடுக்க, வாந்தியும் பேதியும் நிற்கும்.

## எரி எண்ணெய்

வாய்க்கால் சடைச்சி ஒரு கைப்பிடி, சீரகம், வெங்காயம் இவை சிறிது சேர்த்து, தட்டிச் சாறு பிழிந்து வைத்துக் கொண்டு, நல்லெண்ணெய் 1/2 அவுன்சு ஒரு கரண்டியில் விட்டுக் கொதிக்க வைத்து எடுத்து அதில் மேற்படி சாற்றைக் கலந்து குலுக்கி, காலை தோறும் மூன்று நாள் கொடுக்கக் கழிச்சல்கள் யாவும் குணமாகும்.

குறிப்பு: குழந்தைகளுக்கு உண்டாகும் கணை, சீதபேதி ஆகியவற்றிற்கு மருந்து கொடுக்கும் போது ஒரு வருடத்திற்கு உட்பட்டவர்களுக்கு அபின், கஞ்சா சேர்ந்த மருந்துகளைக் கொடுக்கலாகாது.

பத்தியம்

கழிச்சல் உள்ள மட்டும் காரம் கூடிய உணவுகளைக் கொடுத்தல் கூடாது. சவ்வரிசி, கூகைக்கிழங்கு மாவு ஆகியவைகளின் கஞ்சியைக் கொடுக்கலாம். மணக்கத்தை, கார், குறுவை இவைகளின் கஞ்சியாகிலும் கொடுக்கலாம். அல்லது இருமுறை வடித்த சோறு, மோர் கொடுக்கலாம். வாழைப் பிஞ்சு, அத்திப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு இவைகளைக் காரம் இல்லாமல் சமைத்துக் கொடுக்கலாம். கசகசாவை அரைத்து நீரில் கலக்கிப் பால் பிழிந்து கொடுக்கலாம். மங்குஸ்தான் பழம் சாப்பிடலாம். மலைவாழைப்பழம், மாவுச்சீனி, பசுநெய் ஆகியவற்றையும் சாப்பிடலாம்.

# சொல்லடைவு

அ

அக்கரம் 101,103,105
அக்கி 59
அக்கிராகாரம் 30,164
அக்கினி குமார இரசம் 193
அக்கினி மாந்தம் 162
அகத்திக் கீரை 118,170
அகத்தியர்குரு நாடி 48
அகத்தியர் குழம்பு 75,76
அகத்தியர் சுர நூல்-300 69
அகில் 26,31,88
அங்கூர் திராட்சை 117,142
அச்சம் 5
அசாத்தியப் பித்தம் 21
அசீரணப் பித்தம் 16
அசீரணபேதி 161,167,181,194
அசீரணம் 159,196
அசுவகந்தாதி இலேகியம் 33
அசுவகந்தி இரசாயனம் 34
அசுவகெந்தி தைலம் 119
அஞ்சனக் கல் 29
அஞ்சிலை 169
அட்சரமாந்தச் சுரம் 106
அட்டகுன்மம் 162
அட்டசூதப் பற்பம் 102
அட்ட தீபாக்கினிச் சூரணம் 118
அட்டபயிரவம் 75,137
அட்ட பயிரவ மாத்திரை 91
அடிக்கடி கழிதல் 9
அடிப்பட்டு வரும் சுரம் 68
அடுக்கு நந்தியாவட்டை 147
அண்டவாயு 161
அண்ணாக்கு 110
அணுத்துவம் 1
அத்திசுரம் 180
அத்திப் பட்டை 26,166,178
அத்திப்பழ மணப்பாகு 118
அத்திப்பிஞ்சு 164,168,182,200
அத்திமரம் 89
அதிகாலைச் சுரம் 66
அதிசாரக்கடுப்பு 160
அதிசாரச் சுரம் 64,158
அதிசார நிவாரணிகள் 168
அதிசார நோய் 113
அதிசாரப் பித்தம் 19
அதிசாரம் 153,182
அதிமதுரக் குடிநீர் 111
அதிமதுர நெய் 106
அதிமதுரம் 25,27,29,30,31,39,75,82,106,150,158,190
அதிவிடயத்தூள் 192
அதிவிடயம் 81,83,89,157,178,186
அந்தரவாயுக் கழிச்சல் 173
அந்திரவாயு 157
அப்பிரகப் பற்பம் 92
அப்பிரகம் 193
அபரஞ்சி ரேக்கு மெழுகு 141
அபின் 160,179
அபோராஜாதி சூரணம் 151
அம்மான் பச்சரிசி 81
அம்மைசுரம் 70
அமிர்தாதி மாத்திரை 198
அமுக்கார கிழங்கு 34
அமுக்கார வேர் 31
அமுர்தாதிக் குடிநீர் 197
